உ

கணபதி துணை

# சீகாளத்திபுராணம்

கருணைப்பிரகாசசுவாமிகள்
சிவப்பிரகாசசுவாமிகள்
வேலையசுவாமிகள்
அருளிச்செய்தது.

இஃது,
திருக்கைலாசபரம்பரைப்
பொம்மபுரம்
ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீனத்துச்
சிதம்பரம்
**இராமலிங்கசுவாமிகளால்**
பரிசோதிக்கப்பட்டு,
**பா சோமசுந்தரசெட்டியார்**
உரைகோளினபடியியற்றியவசனரூபத்தோடு,
ஷை செட்டியாராலும்
**கா. ஞானசுந்தரஐயராலும்**

சென்னை:
மெமோரியல் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரிஞு கார்த்திகைமீ

*Register Copy-right.*

T. Swami Mudaliyar

# சிறப்புப்பாயிரம்.

பதினாறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கவிபுகழ்ச ரீகா ளத்திமான் மியத்திற் காப்புறு நற்பாயி
ரம் விடசங், கமச்சருக் கந்தென் கைலைநற் சருக்கங் கதித்த
பொன முகரியின சருக்கந்,—தவமிகு தருநான் முகச்சருக்
கஞ்சீ காளத்திச் சருக்கமிவ் வாறுந், தகுகரு ணைப்ர காச
மெய்த் தவனுங் கணப்பச் சருக்கமும் புலமை,—திவ
ளொளி நக்கீ ரச்சருக் கமுமே யுப்பிர காசமுன் னவனுஞ்,
செப்புகண வியர்தஞ் சருக்கமுஞ் சிலந்தி முதலமுற் கதைச்
சருக்கமுஞ்சீர்,— விலா ம் மேவலா யதவரி றுமே கவுரச
யிடந்தொறுந் துலங்க, ப் புலவர் தமக்கெலா மு
லகை நனுகிட நவி ரேதோ

யந்தை விர்ததிசெயது, எபபொழுது நமது குமாரனுகிய சுப்பிரமணியனேடெதிர்த்து யுத்தஞ்செயவாயோ அபபொழுதே இசசாபமநீஙகி, சின்னளிலே நம்முருவததையுமபெறுவாய." என்று அநுககிரகித்தனர்.

பினபு சங்குகனனர் பூமியிலே யோனிவாயபபடடுப பிறவாது, சிவநத சடையையும, குணடலமபொருநதிய காதையும, கலலாடையொடு விபூதிருததிராக்ஷம் சிவலிஙகம விளஙகும உறுபபுக்களையும், சினமுத்திரையொடுகூடிய வலககரத்தையும, விபூதிபபையையும மாத்திரைககோலையும தாஙகிய இடககரததையும, லஙகோடு கௌபீனம பொருந்திய திருவரையையும, திருபபுனமுறுவலோடுகூடிச சிவாகமத்தையுபதேசிததருளும் செவவாயையும, அஞ்செழுத்தை அகலாதுசசரிக்கும நாவையுமபெற்று, பதது வயதோடுவிளங்கும மானுடத்திருமேனிதாங்கி, ஞானசூரியனபோல மயூராசலத்துக்குச சமீபமாகக் கீழைசசமுததிரத்திலேயுதித்து, அநதசசமுத்திரதீரத்திலே ஓராசசிரமஙகணடு, அதில சிலசிததுக்கள்விளஙக சிவயோகசமாதியொடு எழுநதருளியிருநதுகொணடு, தமமிடத்து அனபுபூணடடைநத சி[illegible]ர்முதலிய அடியவர்களுக்கு வேதாகமஙகளிற்கூறப்படும ஞானசித்திகளையுபதேசித்து, சிலகாலம வீற்றிருந்து, பின்பு பெருமுக்கல்மலைமுதலிய பலமலைகளினும் வனஙகளினுஞ்சென்று, அஙகுள்ள சித்தர்கள் முதலாயினேர்க்கும் அநுக்கிரகித்து, அச்சமுத்திரதீரத்திலுள்ள ஆச்சிரமத்திலே மீளவும வநதிருநதார். பாலவயதோடு சமுத்திரத்தில் திருவவதாரஞ்செய்து சித்திகளில் வல்லரா

யிருந்தமையால், இவருக்குப் பாலசித்தர் எனனுந் திருநாம முண்டாயிற்று.

இவ்வாறு பாலசித்தர் அவ்வாச்சிரமத்தில் வீற்றிருக்கு நாளில் ஓர்நாள், சிவபெருமானது ஆஞ்ஞையின்படி திரிலோகங்களிலும் சஞ்சரிக்கின்ற நாரதமுனிவர் சித்தரிடம் வந்து, அவராற்செயயப்பட்ட உபசாரத்தைப்பெற்று மகிழ்ந்து, அவரைநோக்கி, "இவ்வாச்சிரமத்திற்கு மேற்றிசையிலே மயூராசலமெனறு ஓர் திவ்வியக்ஷேத்திர மிருக்கின்றது: அது, தனனையடைந்தவர்கள் வேண்டியவரங்களை வேண்டியவாறேபெறும்படி மயூரமானது மலையுருக்கொண்டு முருகக்கடவுளை வழிபட்டு வாகனமாகப் பெற்றது." எனறு குறிப்பால் விளக்க; சித்தர் "அச்சரித்திரத்தை விரித்துரைத்தல்வேண்டும்" எனறு வேண்டிக்கொண்டனர். முனிவர் "முனனே முருகக்கடவுளது வேலாயுதத்தினாற் கிழிக்கப்பட்டு யுத்தத்திலே மயிலுருக்கொண்ட சூரனானவன, பின்னே ஞானத்தையடைந்து, அக்கடவுளை வணங்கிநின்று, "சுவாமீ, அடியேனை வாகனமாகக் கொண்டருளவேண்டும்." எனப் பிரார்த்திக்க; கடவுள் "நீ இப்பிறப்பிற்செய்த பாவங்கள் ஒழியும்வணணம் தொண்டைநாட்டிலே பெண்ணைநதிக்கும் மாவிந்திய பர்வதத்திற்கும் நடுவிலுள்ள பூமியிலே தவஞ்செய்து சுத்தனானபின் நாம் அவ்வாறே கொண்டருள்வோம்." எனறு ஆஞ்ஞாபித்தனர். அதனால், அவன் அவ்விடஞ்சென்று, மயில்வடிவாயமைந்த மலைரூபமாயிருந்து, முருகக்கடவுளைக்குறித்து ஒருவருஷந் தவஞ்செய்ய; எம்பிரான எழுந்தருளிவந்து அவனை வாகனமாகக்கொண்

டருளி, இன்னும் வேண்டும்வரம் கேளென்று கட்டளையிட்டனர். உடனே சூரன் பணிந்து, "அடியேனை வாகனமாகக் கொண்டதனறியும் இம்மலை என்னுடைய அம்சத்தால் மயூராசலமென வழங்கவும் இதில் தேவரீர் எந்நாளும் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவும் வேண்டும்." என்று வேண்டிக்கொள்ள; கடவுள் "இம்மலையின்கண்ணே பாலசித்தன் என்பவன் சிவபெருமானாற் றனக்குக்கிடைத்த சாபத்தை நீக்கிக்கொள்ளுமாறு நம்மைக்குறித்துத் தவஞ்செய்வான்; யாம் அவனுக்கு அநுக்கிரகிக்கவேண்டி இம்மலையின்கண்ணேவந்து, அன்றுமுதல் எந்நாளும் நீக்கமின்றி வீற்றிருப்போம்." என்று திருவாய்மலர்ந்தருளினார். ஆகையால் அதனையடைந்து அருந்தவமியற்றில் எண்ணியகருமம் எளிதிற்கைகூடும்." என்றுணர்த்தி விடைபெற்றுக்கொண்டு சென்றனர்.

அப்பொழுதே மயூராசலத்தையடைந்து, அம்மலையினுச்சியிலேறி அங்குள்ள சுனையில் ஸ்நானஞ்செய்து, விபூதி ருத்திராக்ஷந்தரித்து சிவபூசைமுடித்து, பத்மாசனமாக இருந்து, முருகக்கடவுளைக்குறித்து முப்பத்தைந்துவருஷம் தவயோகமும், பின் பஞ்சாக்கினிமத்தியிலிருந்து சிலகாலங் கடுந்தவமும் புரிந்தும், கடவுள் பிரசன்னமாகாமையினால், அவருடைய தேவிமார்களைக்குறித்துப் பலநாள்தவஞ்செய்தார். அக்காலத்தில், வள்ளிநாயகி முருகக்கடவுளைநோக்கி, "நம்மைக்குறித்து நெடுங்காலமாகத் தவஞ்செய்கின்ற பாலசித்தனிடஞ்சென்று அநுக்கிரகிக்கவேண்டும்." எனப்பிரார்

த்திக்க; கடவுள் வள்ளிநாயகியைப்பார்த்து, "அப்பாலசித்தன சிவாபராதியாதலால் அவனுக்கு அருள்பாலித்தல் முறையன்று." எனக் கட்டளையிட்டும் மேலுமேலும் தேவியார்வேண்டல்கண்டு முனிந்து, "பெண்ணே நீ சிவாபராதியிடத்தில் இரக்கம் வைத்திருக்கின்றாயாகலின் நமதருகில் நில்லாது அகலுதி." என்று மேல்விளைவைநோக்கி மறுத்தருளினார். உடனே, தேவிமாரிருவரும் சித்தகன்னிகைகளாக வடிவங்கொண்டு சித்தருக்கு முன்வந்துநிற்க; அதுகண்ட சித்தர் முருகக்கடவுளுடைய தேவிமார்களே நம்மையாட்கொள்ள இவ்வுருக்கொண்டு எழுந்தருளினாரெனத் துணிந்து உபசரித்து, "நீயிர்யாவர்? இங்கு வந்தகாரணம் யாது?" என்று வினாவினர். அக்கன்னியர்கள் "இவ்விடத்தில் சித்தர்கள் இருப்பதையறிந்து நாமும் வசிக்கவிரும்பி வந்தேம்; நீர் எங்களைப் புத்திரிகளாகப்பாவித்து ஆதரிக்கவேண்டும்." என்று கூறி, அதற்கு அச்சித்தர் மனமகிழ்ந்து உடன்பட்டமைகண்டு, தேவதச்சனால் அம்மலையின்மேல் ஒருமாளிகை சிருட்டிப்பித்து, அதிலே தாம்வீற்றிருந்துகொண்டு, "யாவரினும் உள்ளேவிட வேண்டுவதில்லை." என்று சித்தனை வாயிற்காவலராகநிறுத்தி, அவரால் தினமுங்கொடுக்கப்பட்ட காய், கனி, கிழங்கு முதலியவைகளை உண்டுவந்தார்கள்.

தேவிமார் இங்ஙனமிருக்குநாட்களில், ஓர்நாள் முருகக்கடவுள் திருவுளங்கலங்கி இவர்களை எங்குந்தேடி இளைத்தவர்போல நடித்துக்கொண்டு மயூராசலத்தையடைந்து, அம்மலையின்மேலேறி, அதன்மேல் அதிவிசித்திரமாக நவமணிக

னால் அமைக்கப்பட்டிருக்கும் மாளிகையை உற்றுநோக்கி, அதனுள்ளேசென்று தேவிமார்களைப்பார்க்கவேண்டுமெனனும் ஆசையால் ஓர் அரசகுமாரவடிவங்கொண்டு, கையில் வேல் வாள் வில்முதலியவற்றையேந்தி அம்மாளிகையின வாயிலிலே நுழையப்போக; அத்தருணத்தில், காவலராக நின்றசித்தர் சிவபிரானறந்த சாபசம்பந்தத்தால் அவனை முருகக்கடவுளெனத் துணியாது, "இராஜகுமாரனே இம்மாளிகையில் சித்தகன்னியர்கள் வசிக்கின்றார்கள்: நீயோ யுத்தசந்நத்தனாய் வந்திருக்கின்றாய்: நின்னோடெதிர்த்துச் சமர்புரிவார் இங்கொருவருமில்லை; அன்றியும், மநுநீதியறிந்த அரசர்களுக்கு ஒத்தவரசர்களோடன்றிச் சித்தர்முதலியவர்களோடு யுத்தஞ்செய்வதும் அறமன்று: ஆகையால், இதைவிட்டுப்போவதேதகுதி." என்றார். இவ்வாறுரைத்தும், கேளாது கடவுள் உள்ளேசெல்லத்துணிதலை சித்தரறிந்து, உள்ளேயிருக்கும் தேவிமார்களைத்தியானித்து, அவர்களால் அத்திரசத்திர வித்தையுபதேசத்தோடு ஆயுதங்களையும் தேர்முதலியவற்றையும் சிருட்டித்தருளப்பெற்று, அவர்கள்கிருபையால் முருகக்கடவுளோடெதிர்த்து, அவரால்விடப்பட்ட ஆயுதங்களனைத்தையும் தடுத்தமையேயன்றி, அவர் விடுத்த வேலாயுதத்தையும் தேவிமார்தியானபலத்தால் கைப்பற்றினர். அக்காலையில், கடவுள் மிகுதியும் கோபமுடையவர்போல வில்யுத்தத்தைவிடுத்து, மல்லயுத்தந்தொடங்கிச் சித்தரது மார்பிலேயறைந்து கீழேதள்ளி, எலும்புகளொடியும்வண்ணம் குத்த; அதனால், சித்தர் மிகவும் சோப

த்தையடைந்தும், கடவுளைப்பரிசிக்கப்பெற்றதால் விரைவில் வருத்தம்நீங்கி, இவர் முருகக்கடவுளேயென்று உணர்ந்தெழுந்து நமஸ்கரித்துத் துதித்து, "சுவாமீ! அடியேன்செய்த இக்குற்றத்தைப்பொறுத்து, சாபத்தையும் நீக்கியருளல் வேண்டும்." என்று பிரார்த்தித்தார்.

முருகக்கடவுளும் அவ்வாறேயருள்செய்து உள்ளேயெழுந்தருளிச் சிங்காதனத்திலேவதிந்திருக்க; உடனே சித்தரும் தேவிமார்களையலங்கரிப்பித்து அழைத்துவந்து அவர்களோடும்வணங்கிநின்று, "அடியேன் புத்திரிகளாகப் பாவிக்கப்பட்ட இக்கன்னியர்களைத் தேவரீர் திருமணமுடித்து இத்தலத்திலேயே எந்நாளும் வீற்றிருந்தருளல்வேண்டும்." என்று வேலாயுதத்தையும் சந்நிதியில்வைத்து விண்ணப்பித்தார். கடவுளும் அதற்கியைந்து, சிவபெருமான் உமாதேவியாரோடும் கணங்கள்சூழ எழுந்தருளும்படி தியானிக்க; எம்பிரானும் அவ்வாறே தேவியாரோடுமெழுந்தருளி மயன்வகுத்த மணமண்டபத்திலே வீற்றிருந்தார். முருகக்கடவுள் சிவபெருமானுடைய ஆஞ்ஞையால் பிரமதேவர் திருமணச்சடங்குநடத்த, சித்தர் தத்தநீர்வார்க்க, கன்னியரிருவரையுந் திருமணம்புரிந்தார். அவ்வமையத்தில் சிவபெருமான் சித்தரைநோக்கி, "நம்முடைய சாபத்தினின்று நீங்கியநீ இந்தஸ்தலத்தில் நம்குமாரனாகிய சுப்பிரமணியனோடு இன்னும் ஐந்நூறுவருடமிருந்து உலகத்தில் சைவசமயத்தை விர்த்திசெய்து பின் நம்மிடத்திற் கலப்பாயாக." என்று கட்டளையிட்டு, தமது திருவருட்குறியாகிய ஓர்சிவ

லிங்கமும் அங்கேதோன்றும்படி அநுக்கிரகித்து எழுந்தருளினார்.

அவ்வாறே சித்தர் முருகக்கடவுளோடு மயூராசலத்திலிருக்கும்போது,ஓர்நாள் கடவுள் சித்தனைநோக்கி, "நீ நம்பெருமான் ஆக்கினைப்படியே பூமியிற்சென்று பக்குவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்து வரக்கடவை." என்று கட்டளையிட்டு, முத்துச்சிவிகைமுதலியவற்றையுங் கொடுத்து அனுப்பியருள; சித்தர் சிவிகையிலேறி, அடியார்கூட்டத்தோடும் பலதேசங்களினுஞ்சென்று, அங்கங்குள்ள அன்பர்களுக்கு வேதாகமங்களினுயர்ச்சியையும் அவற்றிற் கூறப்படும் சைவசமயத்தினருமையையும் அதற்குரிய விபூதி ருத்திராக்ஷ பஞ்சாக்ஷரங்களின்பெருமைகளையும் இவற்றைக் கைக்கொண்டு சிவபெருமானை வழிபட்டாலன்றி முத்திப்பேறில்லையெனபதையும் உபதேசித்து, தம்முடைய ஆச்சிரமத்தையடைந்து, அங்கே பிரசன்னராகவிளங்கும் முருகக்கடவுளை நமஸ்கரித்துநின்றனர். சிவஞானத்தை யாவருக்கும் உபதேசித்துவந்தமையால் சித்தருக்கு சிவஞானபாலசித்தர் என்னுந் திருநாமமுண்டாயிற்று. அவ்வேளையில், எம்பிரான் சித்தனைநோக்கி, "வேண்டியவரங்களைப் பெற்றுக்கொள்.,, என்று கட்டளையிட; சிவஞானபாலசித்தர் நமஸ்கரித்துநின்று, "ஐயனே, அடியேனாலுண்டாக்கப்பட்ட இந்தமடத்திலே அடியேனுடையசீடன் ஆசாரியாபிடேகம்பெற்று மாணாக்கர்களுக்கு ஞானோபதேசம்புரிந்துகொண்டு விளங்கும்படி தேவரீருடைய திருவருளைப் பதிவித்தல்வேண்டும்." என்றுவிண்ணப்பஞ்செய்துகொண்டார்.

முருகக்கடவுள், இதற்குமுன்னே * பச்சைக்கந்ததேசி கர்மரபிலே புத்திரப்பேறில்லாமல்வருந்திய அம்மவையெ னபவள் பெருமுக்கனமலையையடைந்து பாலசித்தர் திருவு ளப்பாங்கின்படியே தினந்தோறும் திருவமுது கொள்ளும் படி சதுரக்கள்ளிப்பாலைக் கறந்துகொடுத்துக்கொண்டிருக் க ஒருநாள் தயைகூர்ந்து அப்பாலசித்தரளித்த பாற்பிரசா தசேடத்தாலுதித்து அருகே தொண்டுபூண்டொழுகிநிற்குமப புதல்வனையழைத்து, சந்நியாசாச்சிரமந்தந்து, ஆசாரியாபி டேகமும் ஞானோபதேசமும்புரிந்து, தமது அம்சத்திலே ஓரம்சம் அவரிடத்திலேபதியும்படிசெய்து, "நீ பாலையுண வாகக்கொண்டு சீடபரம்பரையோடு சிவஞானதேசிகனென வாழ்வாயாக." என்று அநுக்கிரகித்து, மடத்திலிருத்தி, பின்பு சித்தரைநோக்கி, "பிரமநிலையுணர்ந்த நீ பாலவய தோடும் சித்தனாகத் தங்கியிருந்தமையால் இவ்வாச்சிரமத்

* இவ்வாசிரியர் கன்னடதேயத்திலேயவதரித்து, மல் லிகார்ச்சுனபருப்பதத்திலே சிலகாலந்தவம்புரிந்து, சிவா னுக்கிரகம் பெற்று, பின்னர் தென்றிசைநோக்கி வருங்கால் வழியிலே, சோமேசர் கட்டமுதளிக்க வுண்டு, மலையனூரை யடைந்து, அங்கே, சலத்திற்பதிந்துகிடந்த மரகதக்கடக மானது தானேவந்து தழுவுது திருமேனியிலே பச்சையொளி பரப்பிப் பிரகாசிக்கும்படி அற்புதங் காட்டியருளி. அதுக ண்ட அரசனால் யானைமுதலிய பலவிருதுகளுந்தந்து உபசரி க்கப்பெற்று, சிதம்பரத்தையடைந்து தெய்வீகமுற்று விளங் கியிருந்தவர்.

திற்கு *பிரமபுரமெனவும் பாலசித்தர்மடமெனவும் பெயர்வழங்குக." என்று திருவாய்மலர்ந்து, அவருடன் மயூராசலத்தையடைந்து, முன்னர் சூரனுக்கருளியவரத்தின்படியே தமது தேவிமார்களோடும் வீற்றிருந்தருளினார். சித்தரும் அம்மலையிலே சிலகாலமிருந்து மிதுனமாதத்தில் திருவாதிரை நக்ஷத்திரத்திலே அம்முருகக்கடவுளுடைய சந்நிதிக்குத் தென்பக்கத்தில்விளங்கும் சிவலிங்கமயமாயினார். †

சிவஞானதேசிகர் அதுகண்டு அற்புதமுடையராய் பலவாறு துதித்து, முருகக்கடவுளுக்கும் சிவலிங்கப்பெருமானுக்கும் நித்திய நைமித்திகங்களைக் காலந்தோறும் வழுவாமல் நடத்திக்கொண்டு மயூராசலத்திலும் பொம்மபுரத்திலும் சிலகாலமிருந்தனர். பின்பு காஞ்சிபுரத்தையடைந்து, ஏகாம்பரநாதரைத்தரிசித்து, அன்பர்கட்கு அருள்பாலித்து இருக்கும்பொழுது, விஷந்தீண்டியிறந்த ஒருவனை அன்பர் வேண்டுகோளின்படி உயிர்ப்பித்து, அவ்விடத்திலே எக்காலமும் விஷவாதனையில்லாதிருக்கவும அநுக்கிரகித்தனர். அதுகேட்டு அந்நாட்டையாளும் நபாபு வென்பவன், தன் மனைவிக்கு நேரிட்டிருக்கும் கொடிய சூலைநோயைத் தணிப்பித்துக்கொள்ளும் உத்தேசமுடையவனாய்ச் சந்நிதியையடைந்து வணங்கி விண்ணப்பஞ் செய்துகொள்ள; அவனை நோக்கி, "ஏகாம்பரநாதர் சந்நிதிமுதலியவற்றில் உன்னாற்

* பிரமபுரம் என்பது பொம்மபுரமென்றாகி பொம்மையபாளையமென மருவிற்று.

† இச்சரித்திரவிரிவை மயூராசலபுராணத்துட்காண்க.

குறைக்கப்பட்ட நித்தியநைமித்திகங்களை முனபோற் நடத்துவையாயின் இந்நோய்நீங்கும்.'' என்று கட்டளையிட்டு, விபூதியால் அந்நோயைத்தணித்து, ஆலயஞ்சூட்கு முன்னையினுமதிகமாக நிபந்தனைகளை நடத்துவித்து, அங்கே அவனால் விளைநிலமுதலியவைவிடுத்து கட்டுவிக்கப்பட்ட திருமடத்தில், அடியார்களால் மகேசுரபூசைமுதலியவற்றை நடத்திக்கொண்டு எழுந்தருளியிருந்தனர்.

சிலநாட்சென்றபின் அங்ககன்று, வழியிலுள்ள தலங்களைத் தரிசித்துக்கொண்டு * செய்யூரையடைந்து, அங்கே வேளாளரிற்சிலர் பரிசோதனையினிமித்தம் ஓர்புதுக்குடத்தில் நிறைத்து மறைத்துக்கொண்டுவந்த வெண்மணலைச் சருக்கரையாக்கி, யாவருக்குமளித்து, அவர்களால் நிலமுதலியவைவிடுத்து கட்டுவிக்கப்பட்ட திருமடத்தில் வதிந்திருந்து, பின்பு தக்ஷிணயாத்திரையைவிரும்பி, சிதம்பரத்தையடைந்து, ஸ்ரீநடேசப்பெருமானைக் காலந்தோறும் தரிசித்துக்கொண்டு சிலதினம் வசித்துநீங்கி, இடையிலுள்ளதலங்களையும் தரிசித்து, மதுரையையடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு தங்கியிருந்தனர். அக்காலையில், தையல்வேலைசெய்பவனொருவன் புதல்வற்பேற்றைவிரும்பி அதுகாரணமாக மீனாட்சியம்மையின்சந்நிதியிற் கட்டுதற்கு அறுபத்துநான்குதிருவிளையாடல்களையும் நெடுங்காலமாக தையலாற்சித்திரித்த ஒரு அரியபடாத்தை அந்த அம்பிகையின் கட்டளைப்படியே, சிவஞானதேசிகர் சந்நிதியில்வைத்து, மனைவியுடன்வணங்கி விண்ணப்பஞ்செய்துகொள்ள; உடனே

* சேயூரென்பது செய்யூரென வழங்குகின்றது.

அச்சித்திரபடாத்தைநோக்கி திருவுளமகிழ்ந்து, அவ்விருவருக்கும் மூப்பையகற்றி, இளமையைத்தந்து, புத்திரப்பேற்றையுமளித்து, அத்தலத்தினீங்கி, மற்றையதலங்களையுந்தரிசித்து விருத்தாசலத்தையடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு சிலநாள்வாசஞ்செய்து, பொம்மபுரியைச்சேர்ந்து, தெய்வீகசித்தியோடு விளங்கியிருந்தார்.

இங்ஙனம் விளங்குநாட்களில், ஜீவகருணையால், அநேகருக்கு விபூதியளித்து கூன குருடு முடமுதலிய அங்கவீனங்களையும், குடர்நோய் வெப்புநோய் காசமுதலிய கொடியவியாதிகளையும், மாந்திரிகர்களால் நீங்காதுவருத்தினறவலிய பேயமுதலியவற்றையும் நீக்கியருளினார். இவற்றை அடுத்த கூனிமேட்டிலிருந்த ஓர் மாந்திரிகன்கண்டு, பொறாமைகொண்டு செஞ்சியையடைந்து, திரியம்பகமகாராஜாவைக் கண்டு, "ஐயா! தங்களாளுகையிலமைந்த பொம்மபுரத்திலிருக்கும் சிவஞானதேசிகரென்பவர் மிகவும் சித்துடையவர்போல நடித்து சனங்களை வஞ்சிக்கின்றனர்: ஆகையால் அவரைப் பரீக்ஷித்து நமது நாட்டைவிட்டகற்றுவதே தகுதி." என்றனன். அதுகேட்ட அரசர் உடனே இளமைதொடுத்து நரைமுதிர்ந்தகூந்தலையுடைய தன்பெண்ணையும் அழைத்துக்கொண்டுவந்து சிவஞானதேசிகரையடைந்து, தன்கருத்தை அச்சத்தோடு விண்ணப்பஞ்செய்துகொள்ள; அப்பொழுதே திருநீற்றினால் அநரையைமாற்றுவித்தருளினார். அதுகண்டமாந்திரிகன் இவரை ஓர்வகையாகமருட்டி ஊரைவிட்டகற்றவேண்டுமென்னும் உத்தேசங்கொண்டு, அரசரைநோக்கி, "எங்களிருவருள் கடலினுள்ளேமூழ்கிக் கரையேறுபவ

ர்களே சித்தியில்வல்லவர்கள்." என்று வீண்வாதஞ்செய்ய; அரசர் ஞானதேசிகரநுமதிபெற்று; அவர்களோடு தோணியேறிச்சென்று, அவ்விருவரும கடலினுள்ளேமூழ்கியவுடன கரையையடைந்து, அதற்குமுன்னமே அங்குவந்துவீற்றிருக்கும்ஞானதேசிகரைக்கண்டு, அதிசயித்துவணங்கி, அம்மாநதிரிகன ஒருமீனால்விழுங்கப்பட்டதை அவ்வாசிரியராற் கேள்வியுற்று, மனம்வருந்தி, "ஐயனே! தேவரீருககு அபராதியாகிய அம்மாநதிரிகனை மீனவாயினின்றும் வரவழைத்தருளல்வேண்டும்." எனப் பிரார்த்தித்தார். அவ்வரசர வேண்டுகோளினபடியே அவனையுயிர்ப்பித்து, நல்லறிவு போதித்து, அடிமையாக்கிக்கொண்டருளினார்.

அப்பொழுது, அரசர் மனமகிழ்ந்து பொம்மபுரத்திலே ஒரு பெரியதிருமடங்கட்டுவித்து, அதிலே எவர்கள் எப்பொருளை விரும்பினும் ஈதற்குவேண்டும்சிலகிராமங்களைச சர்வமானியமாகச் சிலாசாசனமெழுதி நியமித்துவிட்டு, யானைமுதலியபற்பலவிருதுகளையுங் காணிக்கையாகக்கொணடு,ஞானதேசிகர்சந்நிதியையடைந்து, "எம்பெருமானே,இவற்றை அங்கீகரித்து அடியேங்களைச்சநததிபரம்பரையாக ஆட்கொண்டருள்வதுமல்லாமல் இப்பொழுது அடியேனுக்கு மிகுதியும் சத்துருக்களாயுள்ளவர்களைவெல்லும் ஆற்றலையும் தந்தளித்தல்வேண்டும்." எனவணங்கிப் பிரார்த்திக்க; தேசிகர் அவ்வாறேயென்று அரசாளும்படி ஆசீர்வதித்துத் திருநீறளித்து * அணுக்கத்தொண்டராகக்கொண்டு,அவரால் சில திவ்வியதலங்களில் அடியவர்கள் ஆராதனையின

* அணுக்கம் - சமீபம்.

பொருட்டுத் திருமடங்கட்டுவித்து, மயூராசலத்திலும் பொம்மபுரத்திலும் முருகக்கடவுளுக்கும் சிவபெருமானுக்கும் அடியவர்பூசைமுதலியவற்றிற்கும் வேண்டும் நிபந்தனைகளையேற்படுத்தியருளினார். அன்றியும், நடுநாட்டிலே சிலபாகத்தையாண்டுகொண்டிருந்த சிதம்பரபூபதியென்பவர், தமதரசுரிமையை வேற்றரசன கவர்ந்துகொண்டமையால், ஓர்வகைவெறுப்புத்தோன்றி, இனியிச்சையெடுத்துண்டு பெரியோர் பணியியற்றியுய்தலே தகுதியெனத்துணிந்து, பொம்மபுரத்தையடைந்து, இயன்றபணிகளை இயற்றிக்கொண்டிருக்க; ஒருதினம் தேசிகர் திருவருள்கூர்ந்து, அவர்பக்கத்திலிருந்த சிலசேனைகளைக்கொண்டே பகைவனைவென்று அரசாளும்படியாசீர்வதித்துத் திருநீறளித்து, இவரையும அடிமையாகக்கொண்டு, தாம் தம்மையடைந்த மாணாக்கர்களுக்கு ஞானோபதேசம்புரிந்துகொண்டு சிவயோகசமாதியில வீற்றிருந்தருளினார். இதுநிற்க.

காஞ்சிபுரத்திலே, ஏறக்குறைய இருநூற்றெண்பதுவருடங்களுக்குமுன தொண்டைமண்டலவேளாளர்க்குத் தீக்ஷாகுருவாகக் குமாரசுவாமிதேசிகர் என்பவர் ஒருவரிருந்தார். அவர், திருக்கார்த்திகைத்தரிசனத்திற்காகத் திருவண்ணாமலையாத்திரைக்குப்புறப்பட்டு, ஒருநாள் வழியில், ஒருநந்தனவனத்திற்றங்கிச் சிவபூசைமுடித்து, அன்றுசாயங்காலமே தாங்குறித்த அத்தலத்தையடைந்து, அங்குள்ள ஈசானியதீர்த்தத்திலே அநுட்டானஞ்செய்துகொண்டு, பூசைப் * பேடகம் எங்கே? என்று பரிசனர்களிடத்து வினவ;

* பெட்டகம் என்பதும் வழக்கம்.

அவர்கள், பகலிலேதங்கியிருந்த இடத்தில்வைத்து மறந்துவந்ததாக அச்சத்தோடு விண்ணப்பஞ்செய்தனர். அதுகேட்டு, மிக மனக்கலக்கமுற்று, அப்பரிசனர்களை பகற்றங்கியிருந்த நந்தனவனமவரையும் பரிசோதித்துவரும்படி அனுப்பிவிட்டுத் தாம் ஓரிடத்திற்போய், நம்முடைய ஆன்மார்த்தமாகிய உடையவரை விட்டுப்பிரியும்படி நேரிட்டதே! எனனும் வருத்தத்தால் அன்றிரவுமுழுதும் நித்திரையின்றிச் சிவத்தியானஞ்செய்துகொண்டிருந்தனர். அத்தருணத்தில், அவரது சிவபுண்ணியமுதிர்ச்சியினாலே திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான், ஓர் சங்கமத்திருவுருவங்கொண்டு, அவரிடத்திற்கெழுந்தருளி, தம்மெதிர்வந்து தமக்குநிகழ்ந்த ஆபத்தைத்தெரிவித்து அன்பொடுவணங்கி நின்ற அவர்மீது கிருபாநோக்கஞ்செய்து, "நீர் அங்கம்வேறு இலிங்கம்வேறாக இருந்தமையால் இவ்வாறு பிரியும்படி நேரிட்டது: இலிங்காங்கசம்பந்தியாயிருந்தால் இவ்வண்ணம் நேரிடுதலியலாது: உமது பூசைப்பேடகம் நாளையுதயத்தில் வந்துசேரும்: நீர் இதுமுதல் இலிங்கதாரணஞ்செய்துகொள்ளும்." என்று அநுக்கிரகிக்க; அவர், இச்செய்கை தமதுசீடர் பந்துக்கள் முதலானவர்களுக்கு விரோதமாக இருக்கும் என்பதை விண்ணப்பித்து நின்றனர். அதுகேட்ட சிவபெருமான், "அந்தச் சீடர்முதலியோரால் பெறப்படும் பயன் சிறிதுமில்லை: நமது கட்டளைப்படி நீர் சிவலிங்கதாரணஞ் செய்துகொண்டால் உமக்கு மூன்றுபுத்திரர்களும் ஒருபுத்திரியும் பிறப்பார்கள்: அவர்களால் இம்மை மறுமையின்பங்களும் முத்தியுஞ்சித்திக்கும். ஆதலால், இவ்வாலய

த்திற்குத் தெற்குவீதியிலுள்ள மடத்திலிருக்கும் குருதேவ ரிடத்திலே தாரணதீக்ஷைசெய்துகொள்ளும்." என்று வற் புறுத்தி ஆஞ்ஞாபித்து, வீரசைவ சமயாசாரநெறிகளையும் போதித்து, அவ்வாறே குருதேவருக்குங் கட்டளையிட்டு ம றைந்தருளினார்.

மறுநாட்காலையில், சிவபெருமானது திருவாக்கின்ப டியே பூசைப்பேடகம் வரப்பெற்று, ஸ்ரீகுருதேவராலனுப் பப்பட்ட அடியார்களோடு மடாலயத்தையடைந்து, குரு தேவரைத்தரிசித்து, அவராலே தாரணதீக்ஷைசெய்யப்பெ ற்று, திருக்கார்த்திகைத்திருவிழா நிறைவேறியபின் குருதே வரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, காஞ்சிபுரத்திற்குவ ந்து, தமது அநுட்டானப்படியே சீடர்களுக்குந் தாரணதீ க்ஷைசெய்துகொண்டிருக்க; அக்காலத்திலே, அவருக்கு அண்ணாமலையார் அநுக்கிரகித்தபடியே மூன்றுபுத்திரர்க ளும் ஒருபுத்திரியும் அவதரித்தார்கள். தந்தையாராகிய குமாரசுவாமிதேசிகர், களிகூர்ந்து அவர்களுக்கு, முறையே சிவப்பிரகாசம், வேலாயுதம், கருணைப்பிரகாசம், ஞானம் பிகை என்று நாமகரணந்தரித்து, முதன்மூவரும் கல்வி யிற்பயின்று வருங்காலத்தில், சிவலிங்கவயிக்கியமாயினார்.

பின்பு மூத்தவராகிய சிவப்பிரகாசசுவாமிகள், தமது சகோதரர்முதலியவர்களோடு திருவண்ணாமலைக்குப்போய் குருதேவரைத் தரிசித்து, அங்கே வாசஞ்செய்துகொண்டு, தமது கல்விமுயற்சியிற்றளராது வாழும் நாள்களுள் ஒரு நாள், அந்தச் சோணசைலத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து

வரும்போதே, சோணசைலமாலையெனப்பெயரிய நூறு செய்யுள்களால் அதனைத் தோத்திரம்பண்ணினார். பின்னும் பேரிலக்கணங்களைப் பெரிதுங்கற்கவிரும்பி, தமது சகோதரர்களுடனே தக்ஷிணதேசத்திற்குப் பிரயாணமுற்று, வாலிகண்டபுரத்திற்குத் தென்பாகத்திலுள்ள துறைமங்கலம என்னும் நகரத்தைச்சார்ந்த ஒரு நந்தனவனத்தில், சிவபூசைசெய்துகொண்டிருநதனர். அக்காலத்தில், அக்கிராமாதிபதியாயும் சிவலிங்கதாரியாயும் குருலிங்கசங்கமபத்தியிற் சிறப்புற்றவராயும் விளங்கிய அண்ணாமலைரெட்டியாரெனபவர், சிவப்பிரகாசசுவாமிகள்வரவைக் கேள்வியுற்று, அங்கடைந்து தரிசித்தமாத்திரத்தில், அவரிடத்தே அநுக்கிரகம் பெறவிரும்பி அடிமைபூண்டு, "சுவாமீ, தேவரீர் இவ்விடத்தில் வாசஞ்செய்தருளவேண்டும்." என்று பிரார்த்தித்து, அவரை உடன்படுத்தி, தங்கள் குருவாகிய சென்னவசவையர்மடத்திற்கு மேற்றிசையில் ஒருதிருமடங்கட்டி, அதில் சுவாமிகளை எழுந்தருளுவித்து,* அகோராத்திரம் பிரிவின்றி அணுக்கத்தொண்டராயமர்ந்திருக்க; சிவப்பிரகாசசுவாமிகள், அவருக்குச் சன்மார்க்கங்களைப் போதித்துக் கொண்டு, இரண்டுவருஷம்வரையில் அங்கே எழுந்தருளியிருந்தார்.

அதனபின்பு தாங்கொண்டகருத்தை நிறைவேற்றவிரும்பி, தக்ஷிணதேசத்திற்குச்செல்லல்வேண்டுமென்பதை அவருக்கறிவுறுத்தித் திருநெல்வேலியையடைந்து, தாமிரபர்ணிக்கிரத்திலிருக்கின்ற சிந்துபூந்துறையில் தருமபுரவாதீன

* அகோராத்திரம் - பகலிரவு.

த்து வெள்ளியம்பலவாணசுவாமிகள் இலக்கணவிலக்கியங்களில் அதிவல்லவர்களாய் இருக்கின்றார்கள் எனபதைக் கேள்வியுற்று, அவ்விடத்திற்சென்று சுவாமிகளைக்கண்டு, தாம் இலக்கணங்கற்கவேண்டி வந்தமையைத் தெரிவித்துக் கொண்டனர். அச்சுவாமிகள், சுவாமிகளுடைய இலக்கியப் பயிற்சியை அறிதற்பொருட்டு, "கு, என்பதை முதற்கொண்டு ஊருடையான், என்பதை இடைப்பெய்து கு, என்பதையே ஈற்றினுமகொண்டு முடியும்படி ஒருவெண்பாப் பாடுக." என்று கூற; சுவாமிகள்,

"குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழன
முடக்கோடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொளள
வூருடையா னென்னு மூலகு."

எனனும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளினர். மேலை வெண்பாவினுள் வடக்கோடுதேருடையான் என்று அமைத்தமையை அச்சுவாமிகள் வியந்துபாராட்டி, சுவாமிகளைத் தழுவித் தம்மருகிருத்தி, சுவாமிகள் சகோதரர்களாகிய வேலையசுவாமிகள் கருணைப்பிரகாசசுவாமிகள் என்னும் இருவருக்கும் ஒருபக்ஷத்துள் பஞ்சலக்ஷணங்களையும் பாடஞ்சொல்லிமுடித்தார். அதுகண்ட சிவப்பிரகாசசுவாமிகள் பேருவகையுற்று, அண்ணாமலைரெட்டியாரென்பவர் தங்களுக்கு வழிச்செலவிற்குபகரித்த முந்நூறுபொன்னையும் குருதக்ஷிணையாகவைத்து உபசரிக்க; அச்சுவாமிகள், "இது நமக்குவேண்டுவதில்லை: நம்மைத்தூஷித்தலையே இயல்பாகக்கொண்டு திருச்செந்தூரில்வசிக்கும் தமிழ்ப்புலவரொரு

வரைத் தங்கள்முன்னிலையில் வெற்றிகொண்டு அவர்வந்து நம்மைவணங்கும்படி செய்துகோடலை குருதக்ஷிணையாகும்." என்று பணித்தருளினர்.

அவர்கருத்தறிந்த சுவாமிகள் அதற்குடன்பட்டு, அவர்மாணாக்கரோடும் திருச்செந்தூருக்குப்போய், முருகக்கடவுளைத்தரிசனஞ்செய்து பிரதக்ஷிணம்வரும்போது; அச்சுவாமிகளாற் சுட்டப்பட்ட தமிழ்ப்புலவர், எதிர்ப்பட்டுச் சிவப்பிரகாசசுவாமிகளை யாவரென்று அவருடன்வந்த மாணாக்கரிடத்திற்றுனேவினவி, மேற்படிசுவாமிகளிடத்திற் பாடங்கேட்டசுவாமிகள் என்பதை அறிந்துகொண்டு, அவர்களைத் தமது வழக்கப்படியே தூஷிக்கத்தலைப்பட்டார். அப்பொழுது சுவாமிகளுக்கும் புலவருக்கும் கலகநேரிட; புலவர், சுவாமிகளை யாதனவகையாற்பாடி வெற்றிபெறுவோமெனத் துணிந்து, "நாமிருவரும் நிரோட்டகயமகம் பாடுவோம்: முன்னர்ப் பாடிமுடித்தவருக்கு அஃதியலாதார் அடிமையாவோம்." என்று வாக்குத்தத்தஞ்செய்தார். சுவாமிகள், தங்கருத்து நிறைவேறுதற்கு வாயில் இதுவே என்றுகருதி அதற்கிசைந்தருளி, அவரோடுபாடத்தொடங்கி உடனே, அத்தலத்து முருகக்கடவுண்மீது நிரோட்டகயமக வந்தாதித்தொடையாக முப்பதுகட்டளைக்கலித்துறைபாடி முடித்தருளினர். அதுகண்டபுலவர், தாம் ஒருசெய்யுளேனும் பாடிமுடியாமையையுணர்ந்து, சுவாமிகளுடைய திருவடிகளை வணங்கி, "அடிமையாயினேன்." என்று விண்ணப்பஞ்செய்ய; சுவாமிகள், தம்மடிமையாயமைந்த அப்புலவரை ஆதீனத்திற்கழைத்துவந்து அச்சுவாமிகளுக்கு அடிமையாக்கி

விட்டார். அச்சுவாமிகள் திருவுளமகிழ்ந்து, சிவப்பிரகாச சுவாமிகளைப்பார்த்து, "தாங்கள பாடியசெய்யுளில் சிவ பெருமானுக்குரியதலம் சிதம்பரமேயெனச்சுட்டிக் குறிப பால்விளக்கினமையால் அத்தலத்திலே சிலகாலம் வாசஞ் செய்தருளுக." என று விடைகொடுத்தனுப்பியருளினார்.

சுவாமிகள் அவ்விடத்தினின்றும் நீங்கி, சிவஸ்தலங்க டோறுஞ்சென்று சுவாமிதரிசனஞ்செய்து, துறைமங்கலத் தைச்சார்ந்து, முனபோலவே அண்ணாமலைரெட்டியா ரென் பவருக்குத் திருவருள்பாலித்து, அவரது வேண்டுகோளின் படி அவராளுகையிலமைந்த வாலிகண்டபுரத்தின் வடமே ற்பாகத்துள்ள திருவெங்கைமாநகரத்திலே, தம்பொருட் டு அவராற்கட்டப்பட்ட திருமடத்தில் வீற்றிருந்துகொண் டு, அத்தலத்திலுள்ள பழமலைநாதர்மீது திருவெங்கைக்கோ வை, திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா, திரு வெங்கையலங்காரம் என்னும் நான்கு பிரபந்தங்களை இய ற்றியருளினார். அக்காலத்தில் ஒருநாள், அவ்வூர்ப்பிடாரியா ரது உற்சவஇரதத்தால், அடியார்க்குபயோகமாகத் திரும டத்தெதிரிலிருந்த முருங்கைமரம் அழிந்தமைகண்டு,

"திருந்துதமி ழிலக்கணமவ் விணக்கோவை விருத்த கிரிச் செல்வற் கோதும், பெருந்தகைமை யுடையமயாம் விடுமோலை வெங்கைநகர்ப் பிடாரி காண்க, விரும்புவியி லொருமுருங்கைக் கொம்பொடியா மற்காத்திங் கிருக்கு நீநம், முருங்கைதனை வேரோடுங் களைந்தனையென் றுனு ன க்கு முறைய தாமோ."

என்னும் திருவிருத்தத்தை அருளியமாத்திரத்தே, அவ்வி ர

நம்' அழிந்தொழிய; தாம் சிலகாலமங்கிருந்து, துன்றூங்க லத்தையடைந்தருளினுர்.

அக்காலத்திலே, அண்ணுமலைசெட்டியாரொனபவர், சுவாமிகளை "தேவரீர் விவாகம்செய்துகொள்ளவேண்டும்." எனறு பிரார்த்திக்க; சுவாமிகள்,

"சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப், பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தானே, நோய் கொண்டா லுங்கொளலா நாறுவய தளவிருந்து, பேய்கொ ண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே." எனவும்,

"திட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்க ணிமலன் றூளைக், கிட்டையிலே தொடுத்துழுத்தி பெறுமளவும் பெரியசுகங் கிடைக்குங் காம, வெட்டையிலே மதிமயங்குஞ் சிறுவருக்கு மணம்பேசி விரும்பித் தாலி, கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டுங் கவலை தானே." எனவும்,

விடையளித்தருளினுர். சுவாமிகள்கருத்துணர்ந்து, பின்பு வேலையசுவாமிகளைப் பிரார்த்திக்க; அவர், சிவப்பிரகாசசுவாமிகளுடைய கட்டளை எவ்வாறுமோ என்னுங் கருத்தால் உடன்படல் மறுத்தலென்னும் இரண்டுமின்றி மௌனராயினுர். பினனர் யாத்திரையினின்றும் வந்த கருணைப்பிரகாசசுவாமிகளிடத்தில் தமது வேண்டுகோளை விண்ணப்பஞ்செய்தமாத்திரத்தில், அவர், அதற்குத்தரமாக,

"நாணி யென்பதை நாரியென் றுரைத்திடு நசையால்
வேணு வானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றூற்

காண் லீ்வதோ ருருவமெய்ந் நாரியைக் கண்டாற்
பூணு வார்மயல் காளையி லொன்பதும் புதிதோ."
எனனும் கலித்துறையைப்பாடித் தமதுகருத்தை உள்ளபடி தெரிவித்தார்.

சிவப்பிரகாசசுவாமிகள், தம்பின்னோராகிய இருவர்கருத்தையும்உணர்ந்து, அவர்களுக்குத் தாம் துறவறம்பூண்டமையைத் தெரிவித்து மணம்புரிவித்து, அத்தருணத்திலே யாவரும் பெருவகையுறும்படி விநோதமாக,

"ஐயநின் சென்னிமிசை யுறைகின்ற மடமங்கை யாரெனன வுமை வினவவு,மனனமொரு மடமங்கை யனறுவெண்டிரைகொழித் தழகொழுகு தண்புன லெனத், துய்யவொளியானனங் கரியவிழி காதுவாய் தோயத்தி லுண்டோவெனச்,• சொல்லருங் கமலமலர் காவிமலர் கொடிவள்ளை தூயசெங் குமுதமென்னப், பொய்யென நினைத்துநற் கொங்கையுங் கூந்தலும் புனலினிடை யுண்டோவெனப், புற்புதஞ் சைவலம தெனவே மறுதருப் புகன்றிடுதி நங்காயெனத், தையலவ ளேனென்ன நாணொடு வணங்கியென் றன்பிழை பொறுத்திடென்றே,சங்கர னுரைத்திடத் திருவுள மகிழ்ந் தசிவ சங்கரி யுமைக் காக்கவே." எனவும்,

"அரனவ ளிடத்திலே யைங்கரன் வந்துதாளையவென் செவியை மிகவு, மறுமுகன கிள்ளினு னெனறே சிணுங்கிடவு மத்தன்வே லவனை நோக்கி, விரைவுடன் வினவவே யண்ணனென் சென்னியில் விளங்குகண் ணெண்ணினனெ, வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யப்படி விகடமேன் செய்தா யென, மருவுமென் கைக்கீள முழமளந் தானென்ன

மயிலவ னகைத்து நிற்க, மலையரைய னுதவவரு முலையயவ
னை நோக்கிநின் மைந்தனைப் பாரா யெனக்,கருதரிய கடலா
டை யுலகுபல வண்டங் கருப்பமாப் பெற்ற கன்னி, கணப
தியை யருகழைத் தகமகிழ்வு கொண்டனள் களிப்புட னு
மைக் காக்கவே.'' எனவும்,

"அம்பிகை யரன்றன்னை நோக்கியுன னாபரண மரவ
மென வுமையை நோக்கி, யரியரவ சயனத்தை யரவுருவ
மானத்தை யறியாய்கொல் சிறிது மெனன, நம்பிமனை தொ
றுமிரந் துண்ணுமாண்டி நீயென்ன நான்றுத னறிவே னென,
நவையுறும் பொய்புகன் றீரெனப் பாரத நடந்ததே கரியா
மென, வெம்பியொரு வன்பிரம் பாலடித் தானெனன விளங்
கிழை யொருத்தி தாம்பால், வீசினது சொல்லென்ன வெண்
ணா யிரம்பெண்கண் மிருகற்பை நீக்கினை யெனப், பம்புகற்
பினிலோ ரிரட்டிப்பு நீக்கினது பதருமனீகே ளெனப், பர
மருட னிவ்வாறு விளையாடு பச்சைப் பசுங்கொடி யுமைக்
காக்கவே.'' எனவும்,

"அச்சுத னளிப்பனில முமதுநே யன்வித்தை யருளுவ
ன் பலபத்திர, னலமுதவு வன்சமன பகடிவ னந்தமக் கான
தோ ரொருது முண்டே, முச்சிர வயிற்படை யினைக்கொழுவ
தாக்குவோ மொய்ம்புட னிழுத் திறக்க, முந்திய வடக்கயிற்
றுடன்மற்று நமதன்பர் பூன்போ யிரந்து கொள்வோ, மி
ச்சையுடை நமதிளைய தனையனு கியகந்த னினிமையொடு
மாடு மேய்ப்ப, னினியுழுது பயிரிடுத னன்றுநன் றிதைவிட்
டிரந்துண்ப தீன மெனவே, கச்சுமுலை மாதுமை யுரைத்திடு
ம் புத்தியைக் கைக்கொண் டுளத்தி லிதுநற், காரிய மெனக்

கருதி மெத்தக் களித்திடுங் கண்ணுத லுமைக் காக்கவே."
எனவும்,

"கவுரிகேம லாயர னிரந்தசோ றுணவெனக் கமலைமண
கண்டேனெனக், காளையொன் றேயரற் கெனமாடு மேய்த்
ததைக் கட்டிடையனேரோ வெனச, சிவனொருவர் தூதென
ன் வத்தாஅு சென்றகதை செப்பிலொரு பாரதமெனச், சே
ரோடு திருடினைரனெனக் கட்டுண்ட செய்திநா மறிவோ
மென, வவையினட மாடினைரனென்ன வவ்வாட லரவம
றியாதோ வென,வாலமதை யுண்டன னரனென்ன மண்ணு
ண்ட வதனையறி யோமோ வென, விவரமொடு மலைமகளு ம
லர்மகளு மிவ்வாறு விளையாடு மிவர்க டுணையா, மேவிவரு
புத்ரமித் திரகளத் திரருடன் மேன்மேலு மிக வாழியே."
எனவும், சிலசெய்யுள்களால் ஆசீர்வதித்தருளினர்.

பின்பு தம்மிடத்தன்புபூண்ட அண்ணாமலைரெட்டியா
ரோடு சிதம்பரத்திற்கு எழுந்தருளி. அங்கே ஒரு திருமட
ங்கட்டுவித்து அதில் வீற்றிருந்து, சுவாமிதரிசனஞ் செய்து
கொண்டு, சிவப்பிரகாசவிகாசம், தருக்கபரிபாஷை, சதம
ணிமாலை, நால்வர்நான்மணிமாலை என்னும் பிரபந்தங்களை
ச் செய்தருளி, அத்தலத்தை அருமையாகநீங்கி, பிறதலங்
களையும் வணங்கி, திருக்காட்டுப்பள்ளியையடைந்து, சுவா
மிதரிசனஞ்செய்துகொண்டு தங்கியிருந்தனர். அங்கிருக்கும்
போது, கல்வியறிவிற்சிறந்த ஒருபெண் வீதியினிடத்தே உப்
புவிற்றலைதலைக்கண்டு, இரக்கமுற்றுத் திருநோக்கதீக்ஷை
செய்து, அவளது நல்லூழையும் பரிபக்குவத்தையும் உண

ர்ந்து, அவளுடைய புலமையைப் பிறர்க்குப்புலப்படுத்தத் திருவுளங்கொண்டு,

"நிறைய வுளதோ வெளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மா - னுறையுந்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு."

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளியமாத்திரத்தே, அப்பெண,

"தெனனேங்கு தில்லைச சிவப்பிரகா சப்பெருமான்
பொன்னேங்கு சேவடியைப் போற்றினே-மன்னேன்
றிருக்கூட்ட மத்தனைக்குத தெண்டனிட்டோந் தீராக்
கருக்கூட்டம் போக்கினேங் காண."

என்னும் வெண்பாவைப் பாடிக்கொண்டு, தரிசனவேதியி னெதிர்ப்பட்ட இரும்புபோல மனமுருகி மிக்க விரைவொடு விழுந்து நமஸ்கரித்தெழுந்து கூப்பியகரத்தினளாய்நிற்க; அப்பெண்ணிற்கு உண்மைஞானமுண்டாகும்படி கிருபாநோக்கஞ்செய்தருளினர்.

அதன்பின காஞ்சீபுரத்தைத் தரிசிக்கவிரும்பி அண்ணுமலைரெட்டியாரோடும் பிரயாணப்பட்டு வரும்போது, வழியிலே சாந்தலிங்கசுவாமிகளைக்கண்டு கலந்து, களிகூர்ந்தபின் அவரைநோக்கித் தாங்கள் பேரூரொன்னுந் திவ்வியதலத்தினின்றும் எதையுத்தேசித்து எழுந்தருளியதென்று வினவ; அவர், சிவஞானபாலையதேசிகரைத் தரிசித்தல்வேண்டுமென்னும் பெருங்காதலால் வந்தேன்.என்றுரைத்தருளினர். பின்னர்,இருவரும் பேருவகையுற்றுப் பொம்மையபாளை

யத்துக்குச் சமீபமாகிய புத்துப்பட்டு என்னும் நகரத்தையடைந்தவுடன், சாந்தலிங்கசுவாமிகள் சுவாமிகளை நோக்கி, "நாமிருவரும் சிவஞானபாலையதேசிகரைத் தரிசிக்கவேண்டியிருப்பதால் அவர்கண்மீது சிலதோத்திரங்கள் பாடுக." என்று பிரார்த்திக்க; சுவாமிகள், "நாம் நரஸ்துதி பண்ணுகிறதேயில்லை." என்று மறுத்துவிட்டு, சாந்தலிங்கசுவாமிகளோடு அவ்வூரிலுள்ள ஐயனார்கோயிலின்புறம்பில் அனறிரவு துயில்கொண்டார். அப்பொழுது, முருகக்கடவுள் மயில்வாகனரூடராய் எழுந்தருளி ஒருபாத்திரத்தில் விடுபுஷ்பங்களைவைத்து "இவற்றை மாலையாகத்தொடுத்து நமக்கு அணியக்கடவாய்." என்று திருவாய்மலர்ந்து மறைந்ததாகக் கனவுகண்டு, சாந்தலிங்கசுவாமிகளுக்குத் தெரிவிக்க; அவர், "சிவஞானபாலையதேசிகர் முருகக்கடவுளிடத்து அதிபத்திமைபூண்ட உள்ளத்தோடு விளங்கியிருத்தலால் அதுபற்றியே அக்கடவுள் தங்களுக்குச் சொப்பனத்தில் அத்தேசிகர்மகிமையை இவ்வாறுகப் புலப்படுத்தினர்." என்று வலியுறுத்தினர். அத்தேசிகர்மீது தாலாட்டு, நெஞ்சுவிடுதூது என்னும் பிரபந்தங்களைப்பாடி, சந்நிதானத்திலே அரங்கேற்றி, ஞானோபதேசம்பெற்று, அந்தஞானாசாரியரது கட்டளைப்படியே தமதுதங்கையாகிய ஞானம்பிகையைச் *சாந்தலிங்கசுவாமிகளுக்கு விவாகஞ்செய்துகொடுத்துவிட்டு தம்மை நெடுநாளாகப்பிரியாது அத்தியந்த அன்புடையராய் உடன்றொடர்ந்துவந்த அண்ணாமலைரெட்டியாரைத் துறைமங்

* சாந்தலிங்கசுவாமிகள் பின்னர்த் துறவுபெற்றவர்.

கலத்துக்குப் போகும்படி ஆஞ்ஞாபித்து,ஞானாசாரியரைத் தரிசித்துக்கொண்டு, அவ்விடத்திற்றானே இருந்தார்.

சிலகாலஞ்சென்றபின் ஞானாசாரியரிடத்தே விடைபெற்றுக் காஞ்சிபுரத்தையடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து அங்கிருக்கும்பொழுது, நிஜகுணயோகியெனபவராற் கன்னடபாஷையிற் செய்யப்பட்டிருந்த விவேகசிந்தாமணியின் ஓர் பாகமாகிய வேதாந்தபரிச்சேதத்துக்கு வேதாந்தசூடாமணியெனப்பெயர்தந்து அதனையும், இரேணுகரென்னுங் கணத்தலைவரால் அகத்தியமகாமுனிவருக்கு உபதேசிக்கப்பட்ட சித்தாந்தசிகாமணியையும், பிரபுதேவர்சரித்திரமாகிய பிரபுலிங்கலீலையையும் தமிழிற்பாடியருளி, ஞானாசாரியரைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேராசையால் அவர்மீது திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ் என்னும் இரண்டுபிரபந்தங்களையுஞ் செய்துகொண்டு,அங்ககன்று இடையிலுள்ள தலங்களைத்தரிசித்து, கூவமென்னுந்தலத்தையடைந்து, அங்குள்ள வேளாளர்கள்முதலியோர் வேண்டுகோளின்படி புராணம்பாடி அரங்கேற்றி, ஞானாசாரியரையடைந்து தரிசனஞ்செய்து, மேற்சொல்லிய பிரபந்தங்களனைத்தையும் சந்நிதியிலரங்கேற்றி, உடன்வசித்திருந்தனர். அந்நாளிலேஒருநாள், சாயங்கால அநுட்டானமுடித்துக்கொண்டு ஞானாசாரியரிடத்துத் தாம் ஏகாந்தமாயிருந்து, ஷடுஸ்தல இலிங்காநுபவமுதலியவற்றை ஆராய்ந்துகொண்டு இன்புறும்பொழுது, எதிரொழுந்த சந்திரோதயத்தைக் கண்டு,

"கடன்முரச மார்ப்பக் கதிர்க்கயிற்று லேறி
யடைமதி விண்கழைநின் றாடக் - கொடைமருவு

மெங்கள் சிவஞான போத விறைத்தமணி
நீங்கியவே தாரகைக டாம்."
என்னும் வெண்பாவை அருளிச்செய்தனர்.

பின்னர் ஞானாசாரியரநுக்கிரகித்தபடியே விருத்தகிரியையடைந்து, பழமலைநாதனையும் பெரியநாயகியம்மையாரையுந் தரிசித்து வணங்கி, அவ்விடத்திலே தம்பொருட்டு ஒருதிருமடமமைத்து எதிர்கொண்டு வணங்கிநிற்கும் சிதம்பரபூபதியைச்சிறப்பித்து,

"வெங்கைப் பழமலை யார்மீது கோவை வியநதுரைக்கு
மெங்கட் கினிய சிவஞான தேவ னிசைவுகொடு
இங்கட் பவனி யிருகான முதுகுனறர் சேர்மறுகின
மங்குற் சிதம்பர பூபதி நல்கு மடமிதுவே."

என்னும் கட்டளைக்கலித்துறையைப் பாடியருளி, அத்திருமடத்தடைந்து வீற்றிருந்து, பழமலையந்தாதி, பிக்ஷாடனநவமணிமாலை, கொச்சகக்கலிப்பா, பெரியநாயகியம்மை நெடுங்கழிநெடிலாசிரியவிருத்தம், பெரியநாயகியம்மை கட்டளைக்கலித்துறை என்னும் பிரபந்தங்களைத் திருவாய்மலர்ந்தருளினார். ஒருநாள், மணிமுத்தாநதியிலே ஸ்நானஞ்செய்துவரும் பொழுது, அதனருகிருந்த மாஞ்சோலையின் புறத்து வழிதே விழுந்துகிடந்த மாங்கனியைக்கண்டு, இது சிவலிங்கப் பெருமானுக்கு நைவேத்தியத்திற்கு உபகரணமாகுமென்று கருதியெடுக்க; அதுகண்ட அச்சோலைக்காவலாளன், மகிமையறியாது மடிபிடித்திழுத்து மனவருத்தஞ்செய்தனன. சுவாமிகள். அவன் சிவாபராதியாயிருத்தலின் அவனை தண்டித்துச் சுத்தனாக்கத் திருவுளங்கொண்டு,

"அடுத்தவருந் தொண்டனுக்கா வந்தகனைத் தாளா
லடர்த்ததுவுஞ் சத்தியமே யானு—லெடுத்தவொரு
மாஙகனிக்கா வென்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா நித்தன்வரத் தான்."

என்னும் வெண்பாவைப்பாடி, சூரியனுதயமானவுடன் உயிர் துறக்கும்படிசெய்து, நற்கதியிலடைவித்தருளினார்.

இங்ஙனம் இருக்குநாளிலே, சிவஞானதேசிகர் தமக்கு ஐந்நூறுவயது பூர்த்தியாயினமையால், உலகின்கணிருத்தலில் உவர்ப்புத்தோன்றி, அப்பொழுது சகலபற்றுக்களையும் ஒழித்துவிளங்கும் சிவப்பிரகாசசுவாமிகளுடைய சித்தவிரத்தியைத் தாமறிந்திருப்பதால், பரிபக்குவராகிய வேறோர் மாணாக்கருக்கு ஆசாரியாபிடேகஞ்செய்து, ஞானோபதேசம் புரிந்து, அவரைத் தமக்குப்பதிலாக நியமித்து விட்டு, வைகாசிமாதத்தில் பௌர்ணிமைத் திதியோடுகூடிய விசாகநக்ஷத்திரத்திலே, சிவயோகசமாதியிற்கூடி, சித்தியால் திருமேனியை விபூதிமயமாக்கியொடுக்கி, தாம் இஷ்டலிங்கபரசிவத்திலே கலந்தருளினார். இதனையறிந்த சிவப்பிரகாசசுவாமிகள் மனங்கலங்கி, பொம்மபுரத்தையடைந்து, ஆசிரியரொடுங்கிய குகையுட்சென்று, அடியற்றமரம்போல விழுந்து பலமுறை நமஸ்கரித்துத்துதித்து "கருணாநிதியே! இக்கடையேனையும் விரைவிலேதிருவடியிற்சேர்த்தருளுக." என்றுபிரார்த்தித்து, தாமியற்றியகலம்பகத்தையுஞ் சந்நிதியிலரங்கேற்றி, அக்குகையுள்ளே ஆசாரியரை பாவனரூபமாகவழிபட்டுக்கொண்டு, மூன்றும்பட்டத்துச்சுவாமிகளோடு தங்கியிருந்தனர். ஒருநாள் தனிமையாய்ச் சமுத்திரதீரத்

தையடைந்து அங்குள்ள நறுமணற்பரப்பிலே தாமெழுதிய நன்னெறிவெண்பாநாற்பதையும் எழுதிவரும்படி தம்பினரோகிய கருணைப்பிரகாசசுவாமிகளுக்குக் கட்டளையிட்டு, ஞானசாரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு திருப்பதிகம் பெற்ற திருத்தலங்கடோறும் யாத்திரைபுரிந்து வந்தனர். அக்காலத்திலே, அகராதிசெய்த வீரமாமுனிவ ரெனபவர் எதிர்ப்பட்டு யேசுமதமாகிய தமகொள்கையை நாட்டுதற் பொருட்டுத் தருக்கஞ்செய்ய; உடனே, அக்கொள்கையை மறுத்து, யேசுமதநிராகரணமெனப்பெயரிய ஓர் நூலை அருளிச்செய்து, ஒவ்வொருதலங்களையும் இவ்விரண்டுவெண் பாக்களாற் றோத்திரஞ்செய்துமுடித்து, நல்லாற்றூரையடைந்து, ஞானசாரியரது திருமடத்தில் வீற்றிருந்தார்.

இவரிடத்து விடைபெற்றுச்சென்ற கருணைப்பிரகாச சுவாமிகள், இஷ்டலிங்கவகவல் பாடிமுடித்து, சீகாளத்தி புராணத்தைப் பாடத்தொடங்கி சீகாளத்திசருக்கம்வரையும் தமிழில்மொழிபெயர்த்தருளி, திருவெங்கைமாநகரத்தில், பதினெட்டாம்வயதில், சிவலிங்கவைக்கிய மாயினர். அதனையறிந்தசிவப்பிரகாசசுவாமிகள், அவ்விடத்தேசென்று,

"மூன்னமொரு தமிழ்ப்புலவன் றனையுண்டு கண்டசுவை முதிர்ச்சி யாலே, தன்னியலை முழுதுமுனைத் தமையாமுன் னினைக்கவர்ந்து தடங்கா ளத்தி மன்னவனுண் டானென்று மாதவத்தின் வலிதீர மண்ணின் மீதே, யென்னுடன்வந் தவதரித்த விளங்கருணைப் பிரகாச னென்னுங் கோவே."

என்னும் விருத்தத்தைப்பாடியிற்க; வேலையசுவாமிகள்,

"ஆண்டதனுௌனையொவ்வாய் வித்தையினிற் றமையனினு மதிக மெனறே, பூண்டவுல கதனினுள்ளோர் புகல் வதுகேட் டிருந்துமென்ன புதுமை தானே, காண்டகுகண் மணியேநல் விளங்கருணைப் பிரகாசக் காளாய் நீதான், மாண்டனையென் றறிந்திருந்து முயிர்தரித்தேன யானுமிகு வன னெஞ்சனே."

என்னும் விருத்தத்தைப்பாடித் துக்கித்துக்கொண்டு, சுவாமிகளைப் பிரியலாற்றாது வருந்தினைறனர். அவரை ஒருவாறு தேற்றி நிறுத்திவிட்டு, தாம் நல்லாற்றூரையடைந்து, திருமடத்திலிருந்துகொண்டு, சிவநாமமகிமையும், இஷ்டலிங்கப்பெருமான்மீது அபிஷேகமாலையும், நெடுங்கழிநெடிலும், குறுங்கழிநெடிலும், நிரஞ்சனமாலையும், கைத்தலமாலையும, சீகாளத்திபுராணத்தில் கண்ணப்பச்சருக்கமும், நக்கீரசருக்கமும் செய்தருளி, சிவாநுபவச்செல்வராய்ச் சிலகாலம் வாழ்ந்திருந்து, முப்பத்திரண்டாம்வயதில், கன்னிமதியில, பௌர்ணிமைத்திதியில், இஷ்டலிங்க பரசிவத்திற் கலந்தருளினார்.

அப்பொழுது, வேலையசுவாமிகள்

"அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந் தறிகவிதை
சொல்லு மிருவரிடைத் தோன்றியயான்-முல்லை
யரும்பிற் பொலியு மணிமுறுவ னல்லாய்
கரும்பிற் கனுநிகர்த்தேன் காண்."

என்னும் வெண்பாவைப்பாடி அளவிடப்படாத அருந்துயர்க்கடலின்மூழ்கி, ஒருவாறு தெளிந்து, சிவப்பிரகாசசுவாமிகளதுசமாதிதரிசனஞ்செய்துகொண்டு, அவ்விடத்தினின்றும்

நீங்கி, நல்லூர்ப்புராணம், இஷ்டலிங்கக்கைத்தலைமாலை, கும்பகோணச்சாரங்கதேவர்சரித்திரமாகிய வீரசிங்காதனபுராணம், குகைநமச்சிவாயதேசிகர் சரித்திரமாகிய நமச்சிவாயலீலை, கிருஷ்ணசரித்திரமாகிய பாரிசாதலீலை, மயிலைத்திரட்டைமணிமாலை, மயிலத்துலா என்னும் பிரபந்தங்களைச்செய்தருளி, சீகாளத்திபுராணத்தையுமுடித்து, பெருமத்தூர் மடத்தில், எழுபத்திரண்டாம்வயதில், சிவலிங்கவைக்கியமாயினர்.

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

உ

## பிரசித்தபத்திரம்.

———:o:———

சிவப்பிரகாசசுவாமிகள் முதலிய மூவருமருளிய (சஉ.) பிரபந்தங்களையும் வெளிப்படுத்த உத்தேசங்கொண்டு ஒவ்வொன்றாக அச்சிட்டுவருகின்றோம்; ஆகையால், அச்சிடப்படாத பிரபந்தங்களில் ஏதேனும் கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் இத்தருணத்தில் அனுப்புவார்களாயின் மிகுதியும் பேருதவியாகும்: இதுவிஷயத்தில் பொருளைவிரும்பினும் இயன்றவளவு உபகரித்துப் பெற்றுக்கொள்ளுவோம். அறிவிக்குக.

இங்ஙனம்,

சென்னபட்டணம் முத்தியாலுபேட்டை தம்புசெட்டியார் வீதியில் மேலண்டைவாடை 180 - வது நெம்பர்வீடு

**கா - ஞானசுந்தரஐயர்.**

சிவசண்முகனறுணை.

# சிவப்பிரகாசசுவாமிகள்முதலிய

## மூவருமருளிய பிரபந்தங்கள்.

### இருபத்தெண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தெருள்சிவப்பிரகாசவடிகளருளியநூல்கள்சீர்ச்சோண
சைலமாலை, செந்திலந்தாதிவெங்கைக்கோவைவெங்கைக்க
லம்பகம்வெங்கையினுலா, செப்பரியவெங்கையினலங்கார
மேசிவப்பிரகாசநல்விகாசஞ், சேர்தர்க்கபரிபாஷைநால்வர்
நான்மணிமாலை திரிபில்சதமணிமாலையே,— யருளுறுஞ்சி
வஞானிநெஞ்சுவிடுதூதுதாலாட்டுபிள்ளைத்தமிழ்கலம், பக
மொடும்பள்ளியெழுச்சிகூவப்புராணம்பிரபுலிங்கலீலை, ய
மையும்வேதாந்தசூடாமணிசித்தாந்தச்சிகாமணி நல்பழமலை
யினந், தாதிபிக்ஷாடனநவமணிமாலையுட னறைகொச்சகக்க
லிப்பா,— மருளதனைமாற்றுபெரியம்மைக்கலித்துறைவளர்
நெடுவிருத்தம்யேசு, மதநிராகரணநன்னெறியோடுசிவநாம
மகிமைதலவெண்பாமுறை, வதியிஷ்டலிங்கவபிஷேகமாலை
யுநெடுங்கழிநெடில்குறுங்கழிநெடில், மாநிரஞ்சனமாலைகை
த்தலமாலையாமற்றுவேலையர்நூல்கள்,— வெருளில்கைத்த
லமாலைநல்லூர்ப்புராணமலர்விரிபாரிசாதலீலை, வீரசிங்காத
னபுராணமயிலாசலவிரட்டைமணிமாலையொடுலா, மிளிர்கு
கைநமச்சிவாயர்லீலை கருணைப்ரகாசர்நூலிஷ்டலிங்க, விதி
யகவல்சீகாளத்திப்புராணந்தனைவிரித்தனரிம்மூவருமரோ.

ஆக - ௪௨.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சீகாளத்திபுராணம்.

---

## கருணைப்பிரகாசசுவாமிகள் அருளிச்செய்தது.

## பாயிரம்.

காப்பு. கலிவிருத்தம்.

தருமஞ் சந்திகழ் தாமரை யோனபதங்
கருமஞ் சாதி கடுப்பவர் வாழ்பதந்
திருமஞ் சந்திரற் றோய்திருக் காளத்தி
வருமஞ் சந்தி மழைமத யானையே.

(இதன்பொருள்.) திருமம் சந்திரன தோய் திருக்காளத்தி வரும்—சோலைகள் சந்திரமண்டலத்தை அளாவப் பெற்ற சீகாளத்தியின்கணெழுந்தருளிய,— மழை மதம் அஞ்சந்தி யானை—குளிர்ச்சிபொருந்திய மதத்தைப் பொழிகின்ற அஞ்சந்தியென்னுந் திருநாமத்தையுடைய யானைமுகக்கடவுள்,—அஞ்சம் திகழ் தாமரையோன் பதம்—(தம்

---

* ஸ்ரீ காளஹஸ்தி என்னும் வடமொழி சீகாளத்தியெனத் தற்பவமாயிற்று; இதன்பொருள் ஸ்ரீகாளத்திச்சருக்கத்திற் காண்க.

மை வழிபடுபவர்கட்கு) அன்னவாகனத்தில் விளங்கும் பிரமதேவர் வீற்றிருக்கின்ற சத்தியலோகபதவியையும்,—கருமஞ்சு கடுப்பவர் வாழ் பதம்— கரியமேகத்தை நிறத்தாலொப்பவராகிய விட்டுணுமூர்த்தி வீற்றிருக்கின்ற வைகுண்டபதவியையும்,—அந்தி கடுப்பவர் வாழ்பதம்—செவ்வானத்தை நிறத்தாலொப்பவராகிய உருத்திரமூர்த்தி வீற்றிருக்கின்ற கைலாயபதவியையும்,—தரும்—தந்தருளுவர் என்றவாறு.

உத்தமாங்கம் யானைவடிவாதற் சிறப்புநோக்கி யானைமுகனென்றாராதலால் அதற்கியையத் தருமென்றார். வழிபடுபவர்க்கட்கு என்பது * அவாய்நிலையான வந்தது. மூப்பதவிகளையுந் தருவனெனவே, அக்கடவுள் திரிமூர்த்தி பரனென்பதையும், எப்பொருள்களையும் இனிதருள்பவ னென்பதையும் விளக்கியவாறாயிற்று. தம்மை வழிபடுதல் முடிதற்குமுன்னரே விரைந்து அருள்புரிபவனெனபது தோன்றப் பயனிலையை முற்படமுடித்தார். அனபர்க்குப் பிரசன்னரென்பார் தங்குமஞ்சந்தியென்னது வருமஞ்சந்தியென்றார். கருமஞ்சு கடுபபவர்வாழ்பதம், அந்திகடுப்பவர்வாழ்பதமெனத் தனித்தனி கூட்டிமுடிக்க.

காளத்திநாதர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீர்கொண்ட பொலம்பூங் கொன்றை செஞ்சடை வனைந்துடுத்த, சீர்கொண்ட புலித்தோற் கஞ்சிச் சென்றுபுக்

---

* அவாய்நிலை - ஒருசொல் மற்றொருசொல்லை அவாவிநிற்றல்.

கொளிப்பத் தாவு,மேர்கொண்ட வுழையி ளங்கன் றிலங்கிய
திருக்க ரத்துக்,கார்கொண்ட பொழிற்கா ளத்திக் கடவுளை
மனத்துள் வைப்பாம். (௧)

ஞானப்பூங்கோதையம்மை.

பூமக ளிறைஞ்ச நெற்றிப் புது*மணித் திலகந் தோய்ந்
து, தாமரை மருமு கத்தேர் தான்பெறப் பணிக ளங்க, மா
மதி புரையு மங்கேழ் வயங்குகிர் மலர்த்தாட் குன்றக், கோ
மக ளருண்ஞா னப்பூங் கோதையை வணக்கஞ் செய்வாம்.

விநாயகக்கடவுள்.

தாய்குறங் கேறித் தந்தை சடையிடை மதிகே துப்பே
ர்க், காய்சின வரவென றஞ்சிக் கடுக்கையுட் புகக்கை நீட்
டிப், பாய்புனன் முகந்து நின்று பழிச்சுநர் வாயி லீன்றோர்,
வாய்நகை தழைப்ப வீசு மழைமதக் களிற்றைத் தாழ்வாம்.

சுப்பிரமணியக்கடவுள்.

பன்னிரு கமலக் கையும் பற்பல தொழில்வி ளைப்பத்
தன்னமர் தாய்மு லைப்பா றுண்கவா னிருந்துண் ணுங்கான்
முன்னவ னகலந் தாழ்ந்த மொய்தலைத் தொடைபு ரட்டும்
பொன்னடி யிளைய சேயெம் புந்தியி னுலவு மன்றே. (௪)

வளர்செழுங் குருதிச் சூட்டு வாரணம் வலனு யர்த்த
வொளிகெழு பரிதி வைவே லொருபெருங் கருணை மூர்த்தி
களிமகிழ் சிறந்து தான்வாழ் கற்களி ஞெருகல் லென்றோ
வளியவென் மனத்தி னுள்ளு மகன்றில விருக்கு மன்றே.()

* மணி - நீலமணி.

வீரபத்திரக்கடவுள்.

அருவரைக் குலங்கள் பந்தி னடிபெயர்த் தருள வார்க்கும்
விரிதிரைக் கடல்பு ரண்டு வியனில முழுதும் போர்ப்பக்
குருமல ரன்ன வண்டங் குலுங்கிடச் சிறைய டிக்கொள்
சரபமாய் கரம டங்க றனையடர்த் தவனைத் தாழ்வாம. (௬)

திருநந்திதேவர். கலிவிருத்தம்.

செம்பொரு ளாகமத் திறநதெ ரித்தரு
நம்பவ மறுத்தநன னந்தி வானவ
னும்பர்த மணிமுடி யுரிஞ்சக் கனறிய
வம்பவிழ் மலரடி மனத்தி ருத்துவாம. (௭)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

மேற்படி வேறு.

மேவ ரும்பர மானந்த வீட்டினுட
டாவி னன்மணங் காணிய சார்ந்தவர்
யாவ ரும்புகு வித்தருள் செந்தமிழ்ப்
பாவ லனமலர்த் தாண்முதல் பற்றுவாம். (௮)

திருநாவுக்கரசுநாயனார்.

வேற்று ருக்கொள் விதியறி யாவரன
*ற்று வெண்பிறைக் கேழ்கிளர் செஞ்சடை
யாற்ற ணுச்சுவை யேற்று மருந்தமிழ்
மாற்ற ருந்தவத் தோனை வழுத்துவாம். (௯)

---

* ஆற்றணு - கட்டமுது.

### சுந்தரமூர்த்திநாயனார்.

மாத ரிற்கண் மழுவலத் தேந்திய
வாதி யைத்திரு மானு மறிகலாப்
பாத முற்றுஞ் சிவந்திடப் பண்டொர்கா.
தூது விட்ட புலவற் றொழுவமால். (௧௦)

### மாணிக்கவாசகசுவாமிகள்.

வஞ்சி நுண்ணிடை மால்வரை மங்கைபூண்
டுஞ்சு வெம்முலைத் தொய்யி லெழுதுகைக்
கஞ்ச வோவக் கடவு ளெழுதுமச்
செஞ்சு வைத்தமி ழோனடி சேர்குவாம். (௧௧)

### காரைக்காலம்மையார்.

தோற்ற மில்பரஞ் சோதிதன் வாய்திறந்
தாற்ற வன்புட னம்மையே யென்னுமோர்
பேற்றை முன்பெறப் பேயுரு வெய்திய
சாற்ற ரும்புகழ்த் தாயை வணங்குவாம். (௧௨)

### சேரமான்பெருமாணாயனார், காடவர்கோனாயனார்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெள்ளியங் குன்றத் தரன்முன் வீற்றிருந் தருள்வோன் கேட்பத், தெள்ளமு தனைய தீஞ்சொற் றிருவுலாச் செய்யுள் செய்தோன், றன்னுடம் பிழித்து முன்னோன் றலந்தோறும் புனைவெண் பாட்டு, வள்ளலென் றிவர்கள் செம்பொன் மலரடி வணக்கஞ் செய்வாம். (௧௩)

## தமிழ்த்தெய்வம்.

மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி, * யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே, யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ, டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம். (௧௪)

## பொய்யடிமையில்லாப்புலவர்.

தடவரை முனிவ னீன்ற தமிழ்க்கொழுங் குழவி தன்னைப், படர்வெயி லுமிழுஞ் சங்கப் பலகையந் தொட்டி லே

* இறைவர் தம்பெயரைநாட்டிச்செய்த இலக்கணமென்றது - மதுரைச் சோமசுந்தரக்கடவுள் இறையனாராய் எழுந்தருளியிருந்து பாண்டியன்பொருட்டு அருளிச்செய்த "அன்பினைந்திணை" என்பதுமுதலிய அறுபதுசூத்திரத்தையுடைய பொருளிலக்கண நூலே. இது இறையனாரகப்பொருளெனவும் களவியலெனவும் பெயர்பெறும். இதற்குக் கடைச்சங்கப்புலவர்கள் தாங்கள்தாங்கள் உரைத்தவுரையே நல்லதென்று மாறுபட்டுச் சோமசுந்தரக்கடவுளை உண்மையுணர்த்தும்பொருட்டுப் பிரார்த்திக்க; அக்கடவுளருளியபடியே, முருகக்கடவுளவதாரமாய் அவ்வூரில் வைசியகுலத்துதித்து ஐந்துபிராயத்தையுடைய ஊமைப்பிள்ளையாயிருந்த உருத்திரசன்மர், சங்கப்பலகையிலிருந்து, யதற்கேதாறும் கண்ணீர் பொழிந்து புளகமுற்று விளக்கியருளினமையால், நக்கீரதேவருரையே மெய்யுரை யென, யாவரும் பேருவகையுற்றுக் கைக்கொண்டனர்.

ற்றி; கடைவர வளர்த்த ஞால மனைத்தலை மறுகில் விட்ட, ம
டனறு புலமை யோனை மனத்தியா னினைத்து மன்றே.(க௫)

குருதேவர்.

புனிற்றிளந் திங்கள் வேய்ந்த புரிவளர் சடையு நெற்றி
க், கனற்றிரு விழியு மானுங் கரந்துவந் தென்னைப் பாச, ம
லத்தையு மறுத்தாட் கொண்ட வருட்குரு தேவ னென்னு
ந், தனிப்பெருங் கருணை வள்ள றன்னடி மனத்துள் வைப்
பாம். (க௬)

சிவப்பிரகாசசுவாமிகள்.

புனையெழில் வடிவி னானோர் பொதுமகட் கண்ட மை
ந்தர், மனமெனப் புலவர் நெஞ்ச மருளுமின் றமிழ்ப்பா
மாலை, சினவிடை யவற்கே சாத்துஞ் சிவப்பிரகாசனென்னு,
முனைவனெம் மடிகள்பாத முளரிகள் சென்னிசேர்ப்பாம்.()

எவனொரு கோடியி லொன்று மிசைத்ததோர் செய்
யுண் மற்றைக், கவிகள்பன் னாணி னைந்த காப்பியங் கட்கு
மேலா, மெவ * னிறை முதனா மத்தோ டியைதரும் விளக்
கப் பேரோ, னவனொரு பிறப்பெ மக்கீண் டளித்தபால் வா
ழ்க மன்னோ. (க௮)

---

* இறைமுதனாமத்தோடியைதரும்விளக்கப்பேரோன்-சிவப்பிரகாசமென்னும் திருநாமத்தையுடையோன்;கடவுள் அருவத்திருமேனியோடுகூடி நிகழுங்காலத்து வழங்குநாமமாதலாற் சிவமென்பது அக்கடவுளுக்குமுதனாமமாயிற்று.

## அவையடக்கம்.

நூற்றுறை பயின்று பெற்ற நுண்ணுணர் வுடைய் னல்லேன், சாற்றுமிப் போலிச் செய்யுள் சான்றவ ரிகழ்தல் செய்யார், மேற்படு முணர்வின் மூத்தோர் மெண்ணடைச் சிறுவர் செவ்வாய்ப், பாற்கடி கமழு மென்சொற் பழிப்பவ ருலகி லுண்டோ. (கக)

முரிதிரைக் கங்கை கீத்த முனையினஞ் சுமிழெ யிற்று, வெருவரு சினத்த பாம்பை வெண்டலை முழையிற் சேர்க்கும், புரிசடைக் கடவுள் வாழும் பொருவிறென் கயிலா யத்தின், பெருமையிற் சிறித நிந்த பெற்றிசெந் தமிழாற் சொல்வேன். (உ0)

## பாயிரமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - உக.

---

## சிறப்புப்பாயிரம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்றிகழ் சடிலப் புனிதனெம் பெருமான் * புலமலர்க் கோதையோ டமர்ந்த, தென்றிருக் கயிலைப் புகழுமு தனைத் தீங்கவித் தாளைபெய் தருவாற், குன்றலி லிசையார் சிவப்பிர காசக் கோதிலாத் தமிழ்க்கடன் முகந்தே, யென்று நின் றறவே பொழிதரு கருணை விளக்கமென் றியம்புமா முகிலே.

---

* புலமலர்க்கோதை = ஞானப்பூங்கோதை.

## ௨ - விடசங்கமச்சருக்கம்.

கலித்துறை.

கடலு டைப்பெரு மாநில மடந்தைக்குக் கவின்ற
சுடர்வி ழிக்கரு மணியினுட் பாவையாய்த் தோலா
விடையு யர்த்தவற் குட்புற மாகிய வியன்சீ
ரொடிவில் காளத்தி நகரணி யறிந்தவா றுரைப்பாம். (க)

மகர லயக்கட னிலவல யத்திடை வளங்கூர்
துகளில் சீர்த்திரு நாட்டினுட் டொண்டைநா டென்னத்
திகழ்ம ணிக்கணங் குயின்றொளிர் செம்பொனீண் மாட
நகரெ வற்றினுஞ் சிறந்தது காளத்தி நகரம். (௨)

ஒருவில் போகமும் வீடுமென் றிரண்டையு மொருங்கு
தருபெ ரும்புகழ்க் காளத்தி மாநகர் தனக்குப்
பொருவில் வீடொழித் துறழ்வுடைப் போகமொன் றுதவும்
விரிக டுஞ்சுடர்ப் பொன்னக ரொக்குமோ விளம்பின். (௩)

பொருபெ ருந்திரை யகழிசூழ் பொன்னெயில் வட்டம்
விரிக ருங்கட லுலகினில் விழைபொரு ளனைத்தும்
பெரிது துன்றிய வொருபரு மரக்கலம் பெயரா
தொருக யத்தினு ணிற்பதுண் டேலதை யொக்கும். (௪)

அகழு மிஞ்சியு மண்டத்தி னடிமுடி காறும்
புகுது மென்றதம் மாற்றலான் முரணுபு புகுதா
விகழும் வெஞ்சினச் சேடனே டிராகுவென் றலைக்கு
இகலில் பாம்புக ணெறியிடைக் காண்டலு மின்ற. (௫)

அரச வன்னங்கள் கமலத்தின் றஞ்சிறைப் பெடையோ
டுரிய வெற்றிறக் கராம்பகு வாயின்வந் தெய்தப்

புரிசை யுள்ளினின் றெழுமுடத் தாழைமுப் புடைக்காய்
களைபெ ரும்புன றளும்பவீழ் கம்பலைத் தகழி. (சு)

இருநி லத்தவர் கவர்ந்தன நம்பொரு ளெல்லா
மொருமு திற்சிறை யகத்துவந் துற்றன யாம்போய்த்
தருது மீற்றுமென் றறைகடல் வந்துவிண் டடவும்
புரிலசை * மூற்றிய தொக்குமாற் பொருதிரை யகழி. (எ)

வெங்க ளிக்களி றழக்கலின் விரிதிரை யகழிப்
பங்க யத்தம ரோதிமம் வெரீஇயிசை பறந்து
மங்கு லிற்புகு மணிமதின் ஞாயின்மேல் வதிவ
பொங்கொ ளித்தர ளக்குடை நிரைத்தன போலும். (அ)

தவழ்தி ரைப்புன லகழியிற் சிலதியர் தம்ம
குவிமு லைத்தடந் தாமரை முகிழொடு குலுங்க
வவிரொ ளிப்பொலங் குடங்களி னலைத்துநீர் முகவாச்
சுவன்மி சைக்கொளக் கழன்றுவீழ் பொலங்குழை சுடரும்.

புலவர் மன்னவன் வச்சிரப் படைவெரீஇப் பொருப்பின்
குலம டங்கலு மாரெயில் புகுந்தெனக் குளிர்வெண்
கலைநி ரம்பிய மதிமுகக் கொடிகளாற் கவின்ற
நிலைய பொன்னெடு மாடங்க ளெண்ணில நிலவும். (கO)

மாதர் மேனிலைக் கலவியின் வருந்திய வருத்த
மோது வெண்டிரை யகல்விசும் பியாற்றபொன் முளரித்
தாத ளைந்துதண் டுளியொடு சாள ரநுழையுஞ்
சீதமென்னடைத் தென்றல்வாண் முகத்துலைத் தீர்க்கும்.

---

* மூற்றல் - வளைத்தல்.

பரவை வெண்டிரைக் கருங்கடல் குறைபடப் பருகி
யிருவி சும்பெழூஉந் தெங்களும் பரந்தகின் றெழிலி
சொரித ரும்பெயற் பருவத்தின் மூனையின்வான் றேயும்
பொருவில் செம்பொனீண் மாடத்தின் மேனிலை புகுவார்.()

மூட்டி விண்ணுயர் மாடமேற் புலவியின் முனிந்த
மட்டு நின்றிழி கோதையர் மகிழ்நர்மேற் புழுகால்
விட்டெ றிந்திடப் பிழைத்தது விரிகதிர் மதிமேற்
பட்ட தன்றுகொல் களங்கமென் றுரைப்பது பகரின். ()

மாந்தர் யாவரு மறையினென் றினையவா வாய்விட்
டேந்து * காழின ரோடமுன் றொடர்கலி னெனவான்
றோய்ந்த நித்திலத் தோரணத் துணைக்கயாற் பரிந்து
காந்து வெஞ்சினக் களிறுலாய்த் தெருமதங் கமழும்,(கச)

புல்ன டர்ந்தற நூல்வழி யொழுகூஉப் புரிநூ
லிலைத ருந்திரு மார்பின ருமறை முதனூற்
பலவு நின்றகை லாதவெண் மாளிகைப் பரப்பு
கலைம டங்கதவெண் டாமரை மலரெனக் கவினும். (கரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வசையறு மறைநி ரம்பி மந்திர வேள்வி முற்றிப்
பசவுட லழித்து முக்கட் பதியுட லாகி நின்ற
விசையமு மந்த ணாள ரொழுகிலை யூட மெல்லா
மிசைநிலை புலவி னுள்ளோர் விருந்துணு மிடங்களாமால்.()

மறைவிரி கமலத் தோனிந் நகர்மறை யவர்போ லின்
கு, மறைகளு கவில நூற்றோன் வரன்முறை தனின வின்று,

* காழ் - மரவைரம்; அது உலக்கையை உணர்த்திற்று.

துலறபகல் வரைமுற் றுவென் றோர்ந்துணர்ச் தொருங்கு
நான்கும், குறையற நவிற்றற் கன்றோ கொண்டன னன்கு
செவ்வாய். (௧எ)

ஐங்கணைக் கிழவற் கன்றி யருவரை பகவெ றிந்த
பொங்கொளி வேலி னற்கும் புறக்கொடை பெறுத லாகா
வெங்கொலை மடங்க லாற்றல் வேந்தர்தம் வீதி யன்றோர்
தங்கழ லொலியின் முந்நீர்த் தடங்கட னிகர்க்கு மன்றே. ()

மழவுறழ் தோளி ராமன் முதலிய சிலைவ லாரிம்
மழைதவ ழெயிலு டுத்த வளநகர் மன்னர்க் கண்டு
குழைசிலை கற்க நன்றாட் கொண்டுகற் றுது னாட்பில்
விழியிமை யாத மிக்க வீரமெய் வாறு கற்பார். (௧௯)

பிறவுந்தம் பொருளே போலப் பேணிவா ணிகஞ்செய்
வாய்க, ரறமின்ற மனையின் முற்றத் தாடும்பே தையர்கொ
ழிக்கு, மறுவின்றி விளங்கு முத்தம் வடதிசைக் கிறைவன்
காத, லிறைகொண்ட மகளிர் கொம்மை யெழின்முலைத் த
டத்து மின்றே. (௨௦)

அகலிரு விசும்பி யங்கு மலகிறு ரகையுங் கோனு
முருதலை யடையா வண்ண மொருபெருந் துருவன் றாங்குந்
தகையென வுலகில் வாழ்நர்த் தாங்குதல் துழவர் மாடம்
வகைபடு பல்லு ளவும் வருநர்க்கு வழங்கு மன்றே. (௨௧)

படுகடை துலகை மேத்தும் பைங்கிளிப் பெயரி ஞானும்
கடையயிர் போல செஞ்சங் கலங்குபு தொடர்ந்து நோக்கின்
வடுவகி ரனைய வுண்கண் வருமுலை பகர்க்க் சேனி
யடுகுற வுயரி யோன்ற ணணிகை ரனைய தன்றே. (௨௨)

முற்றுபொன் மதிலிம் மூதூர் மூழுமடந்தையராம்வாட்கட்
சிற்றிடை மகளிர்ச் சுட்டித் தெரிந்தனை மகளி ரொன்று
சொற்றனர் பெயர றிந்தோர் சுடர்செய்விண் மாத ரார்க்கு
மற்றது மரீஇய தன்றே வழங்கர மகளி ரென்பேர். (உரு)

அடலயி ராவ தப்பே ரடுகளி றுதி யெட்டுக்
கடவுள்வா ரணமு மிவ்வூர்க் கண்ணதோர் பிடியி னோடேற்
றுடைதலி னேடித் திக்கிற் றுளித்துமின் றனவ வற்றைத்
தொடுகட லுலகி னுள்ளோர் சொல்பதிக் கயங்க ளென்றே.

கொண்டறோய் மணிசெய் மாடக் கோநக ரிதனி டத்த
வண்டமா றுகச் செல்வ வருவிலைப் பரிக டம்பாற்
கண்டவே கத்திற் காற்கூ றுடைமையைக் கருதி யனறே
பண்டையோர் காற்றி னுக்குப் பகர்ந்தனர் காலெ னும்பேர்.

கலிவிருத்தம்.

மலையி னுள்ளன வார்கட லுள்ளன
நிலவு நால்வகை நீணிலத் துள்ளன
பலவு நன்கு விளக்கலிற் பார்புகழ்
புலவர் காப்பியம் பேர்துமவ் வாவணம். (உசு)

மேற்படிவேறு.

ஒலிதிரைக் கடலினோ டெழு மாவணங்
கொலைமதக் களிறகந் தடர்த்துக் கூற்றென
மலையெனப் பிளிறுபு வரினு மன்பதை
நிலைபெயர்த் தடியிடா நெருக்கிற் றென்பவே. (உஎ)

தாளமின் றென்விலை சாற்று மின்களென்
றளிவையர் விளையவர்க் கவரொ யிற்றெழின்

மருள்பட மனத்தினை மயக்க வாணிகர்
வரிவளை மணியென மருண்டி ருப்பரால். (உஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரவுரி யனைய நுண்ணூ லந்துகின் மறைத்தி ருந்த
விரைவிரி கமலச் செங்கேழ் மென்முகிழ் விலைவ ளாந்து
தருதிரென் றுரைத்தமைந்தர் தமக்கலர் தொடுக்கு நல்லார்
பொருவில விவைதாம் விண்மேற் பூத்தன விலையிலெனபார்.

தேர்தரு செய்ய வாம்பற் றிருமல ரொன்று மீண்டி,
யார்தரும் விலைகொண் டொல்லை யெமக்களித் திடுமி னெ
ன்ன, வேந்தெழி லுடைய தோர்மெல் லீர்ங்கம லத்தோ ட
ல்லா, லூந்தனி பகரோ மென்று நன்னுதன் மகளிர் சொல்
வார். (௩௦)

இனையன பலதி றத்தா லெழில்வலித் தடந்தோண்
மைந்தர், புனைநறு மலர்மேல் வைத்துப் புகறரு முன்னற்
கேற்பக், கனைகட லமுத மன்ன கட்டுரை யெதிர்கொடுக்
கும்,வனைகுழன் மகளிர் கூல மறுகிற்கு விளக்க மாவார்.()

கலித்துறை.

மழைகி டந்துகண் படுநெடுஞ் சுடர்செய்பொன் மாடத்
தெழில்செய் பூங்கொடி நடங்குத விருநிலங் குளிரப்
பொழிதரும்பனி நிலாமதி மண்டலம் புகுதாக்
கழிபெ ருங்குளிர் கொண்டுட னடுக்குதல் கடுக்கும். (௩௨)

திங்கள் வாணுதற் றிருவனுர் பயிறலிற் சிறந்த
வங்கண் மாடத்தி னெடுங்கொடி வான்முகட் டசைதல்

செங்கை யானில் மடந்தைசெவ் வாய்ப்பெயர்ச் சிறுவன்
பொங்கு மாரழ னுடம்பினைத் தைவரல் போலும். (௩௩)

இனைய பல்வளங் கெழுதிருக் காளத்தி யென்னும்
வினையி றென்னக ருலைமையொடு வீற்றிருந் தருளி
முனிவில் பேரருட் டிறத்தினுன் முத்தொழி லியற்றும்,
புனையி ளம்பிறைக் கண்ணியஞ் சடைமுடிப் புத்தேள்.(௩௪)

முன்னொர் ஞான்றறை கடற்படை முழுமதிக் கவிகை
மன்னு மாபுகழ் யாதவ னெனும்பெயர் மனனன் [ட்
றன்னை யாட்கொளத் திருவுளங் கொண்டுமென நடந்தோ
பொன்ன வாஞ்சுணங் கிளமுலைப் பூங்கொடி புலம்ப. ()

நீற்று வெண்டிரி புண்டர நிகரில்கன் மணிகண்
மாற்ற ரும்பர லிவலிங்கந் தன்னுரு வயங்கச்
சாற்ற ரும்விட சங்கம னுகியத் தடந்தோ
ளாற்றன மனனு ராயண வளநக ரடைந்தான. (௩௬)

அடைந்த பேரருட் குன்றனு னகலிரு விசும்பு
தொடர்ந்த மாமணி மாடத்த தோரணத் தெருவி
னுடங்கு நுண்ணிடை மகளிர்கா ணருங்கடி நூறி
மடங்க லேறெனச் சென்றனன் கண்டவர் மருள. (௩எ)

இலங்கு பன்மணி மேகலை வளையுட னிழந்து
பொலஞ்சு ணங்கலர் கொம்மையம் புணர்முலை பசந்து
கலைகொள் கொம்பனு ரஞ்சனக் கண்மலர் பரப்பிச்
சிலம்பி னொண்மணி பொருதுகக் கடை தொறுஞ்செறிந்தார்

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தன்றிரு வுருவந் திரிந்துமா னிலத்திற் றனிவிளை யாடிய குன்றம், கொன்றலைவந் நுதிவேற் பூத்தலைச் சேவற் கொடிவல னுயர்த்தசெவ் வேளோ, வன்றிறல் லன்பர்க் கருளிய கடல்சூ ழகனிலத் தடைந்தசிற் றிளமான், கன்றொடு கனிசலிக கூர்ம்படை யெடுத்தகண்ணுதற்கடவுளோ வென்பார்.

விரிசுடர்ச் செக்கர் வானிறஞ் சமழ்ப்ப விளங்குகற் றோய்த்தபூந் தானை, சுரிவளைத் தடக்கைத் திருமறு மார்பு ன்றகிலினைக் கடக்குமா லென்பார், பொருமதக் களிற்றின் பிறைமருப் பீர்ந்து புனைந்தசெந் துகிர்த்திரள் குமிழின், றிருவடி நிலைதொட் டறைகழ லார்ப்பச் செல்லுத னமர்க்கரி தென்பார். (சு0)

· விளையடர் நீறு பூத்தவொண் ணுதலும் விரிசடைக் கடவுள்கண் டக்த, புனைமணி தரள மிடையிடுஉக் கோத்துப் பொலிவடங் குயல்வரு மார்புஞ், சினைமலர் தொடுத்த கண்ணிசூழ்ந் தியாத்துச் செவிமிசை தாழ்தருஞ் சியுரங், கனவினு ளேனு மினனுமோர் காளிற் காண்டரப் பெறுவமோ வென்பார். (சுக)

மெல்லிளம் பிணையின் செவியெழில் கடந்த வெள்ளிலை யடுக்கிடன் கையும், வில்லுமிழ் பசும்பொற் றகடுகொண் டியாத்து விளங்குபொற் கொடிப்பீரம் பேனை, யல்லியந் கமலக் கையினிற் பிடித்த வழகுமீத் தவிசிடைத் துளையும், கல்லுறழ் தடந்தோ ளழகுசெங் கள்ளன் கரும்பெறடு வைர்த் துன வென்பார். (சுஉ)

ஊடூல லொடுப்பக் கலையொடு பொலஞ்செ யொளிவளை
கவர்ந்துமா ழலைக்கட்,*பீரலர் வித்து மணிநெடுந் தெருவிற்
பெயர்ந்தெம துளத்தொடுஞ் செல்லு, மீரமின் மனத்திம்
மாயசங் கமனை யெதிர்ப்படி னெறிபெருந் திரைய, வார்கலி
யுலக மனைத்தையு மயக்கு மனங்களு மயங்குமற்றென்பார்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இன்னன கிளந்து காமத் தெரியக மகளிர் நிற்ப
முன்னவன் செல்லு மாங்கண் முழவுத்தோள் யாத வற்குப்
பொன்னியல்கலந்திருத்தும் பொற்கொடியிறைவன்றாளின்
மன்னுமன் புருவ மாய மடவரலெதிர்ப்பட் டாளால். (௪௪)

எதிர்தரு மடந்தை யைய னிணையடிக் கமலப் போதின்
மதியிளம் பிளவி னுக்கு வண்ணத்தி னாலு மொப்பப்
புலைதயிருண் மலம கற்றும் பொடியணி நுதலு ரிஞ்சத்
தலைமலர்க்கொடிநிலத்திற் றாழ்ந்தென விறைஞ்சிநின்றாள்.

எரிபடு மிழுதின் றன்மை யெய்திய மனத்தி னோடு
திருமுக மினித லர்ந்து செறிதொடிக் காந்தள் கூப்பி
யருவினைத் தொடர றுத்த வடிகளும் மடிகள் கண்டு
பெரிதுமிவ்வுடம்பெடுத்துப்பெறுபயன் பெற்றேனென்றாள்.

ஐயநின் கருணை தன்னா லடிச்சியேன் பொருட்டி ரங்கிச்
செய்யதா மலாம ருட்டுந் திருவடித் தலங்க ளோவப்
பையவென் மனைக்கட் போந்து பரிகலச் சேட மீந்தென்
வெய்யவல் வினைய றுத்து விடுகென மதித்துந் தாழ்ந்தாள்.

* பீர் - காமத்தால் வேறுபடுநிறம்.

அண்ணலு மருளி னோக்கி யன்பொரு வடிவெடுத்து
நண்ணிய தென்ன நின்ற நாமவேற் றடங்க ணல்லாய்
கண்ணுத லடியர்க் கன்பர்க் காண்டிடி னின்றெப் பாரின்
றெண்ணுதனைக் குறைப்பதொன் றுளதென்று சொன்னான்.

மற்றதை யைய செவ்வாய் மலர்ந்தருள் செய்க வென்னப்
பொற்றொடி மயிலே காமன் போரினுக் குடைந்த யானின்
சிற்றிடை மெலிய வீங்குந் திரண்முலை யரணஞ் சார்ந்து
சற்றுமஞ் சாதி ருப்பத் தருதியேல் வருவ லென்றான்.(௨௧)

என்றலு முவகை மீதூர்ந் திளநிலா வெறிப்ப நக்குப்,
பொன்றுத லியல்பிற்றுமிப் பொள்ளல்யாக் கையினைத்தோ
ய்தற், குன்றிரு வுளத்திற் கொண்ட தகம்பல கழிய யான்
செய், குன்றலி றவப்பேறன்றே குறித்தவா றாக வென்றாள்.

இசைந்தவண் முனைவன் றன்னை யில்வயிற் கொண்டுபுக்குப்
பசும்பொனின் கரக நீரிற் பாதபங் கயம்வி ளக்கி
யொசிந்தநுண் ணிடைம டந்தை யுயர்தவி சிருத்தி நெஞ்சங்
கசிந்துநல் லமுது பொன்னங் கலத்தினு ளருத்தி னாள்.

அருத்திய பின்செஞ் சாந்த மாகமுற் றணிந்து பாகுங்
கருப்புரச் சுண்ணந் தீற்று காமர்வெள் ளிலையுஞ் செந்தா
மரைத்திரு முகத்தி னல்க மாசிலான் கவுள டுத்து
விருப்புட னிருந்து * காமம் வெளிப்படு குறிகள் செய்தான்.

---

* பெருங்கருணைப்பிழம்பாகிய சிவபெருமான் விடசங்கமத் திருவுருவங்கொண்டு புரிந்த இத்திருவிளையாடல் இந்நங்கையினது அன்பையும், சீகாளத்தியின் சிறப்பையும் விளக்கி, யாதவமன்னனை ஆட்கொண் டருளுதற் பொருட்டு நடித்துக்காட்டியதொரு நாடகமாமெனத் தெளிக.

பெண்ணமு தினுக்குக் காமம் பெருகிய குறிப்பி னேக்கிக்
கண்ணுதல் கரந்த கள்வன் கதித்திறு மாந்து விம்மி
மண்ணிய மணிப்பூண் டாங்கும் வனமுலை நெருங்கப் புல்லி
யெண்ணரும் காம வெள்ளத் திடையவட் படிவித் தானல்.

மாதர்மென் கொம்ப ரன்னுண் மாயசங் கமன்வலைப் பட், டியாதவன் கடிந கர்க்குற் றேவலை மறந்தி ருப்பூத், நீதில்செங் கோன டாத்துந் திங்கள்வெண் கவிகை வேந்தன், கோதிலின் னமுத முண்ணக் குளிர்புனலாடிப்புக்கான்.

புனிதவெண் ணீறு சாத்திப் புரந்தரன் றிக்கு நோக்கி
மனனமர்ந் திருந்து தாலம் வைப்பவ ளின்மை கேட்டுக்
கனல்படக் கண்சி வந்து கைபிணைத் தருகு நின்றோர்க்
கனையவட் டருதி ரென்று ளுரைழற் கடவு ளொத்தான். ()

வெந்திறற் சிய மன்னன் வெருவரு மாற்றங் கேட்டோர்
சிந்தையிற் கடிது சென்று சினத்தொடு கழறிக் கூவக்
கொந்தழ லுருமு வீழ்ந்த குருமணிச் சுடிகைப் பாம்பிற் [ன்
பைந்தொடிமனந் துண்ணென்ற பனித்துடலுட னெழுந்தா

வானிறக் கலிங்க * மற்ற வரைக்குமாத் திரையு டுத்து, நீனிறப் புயன்மென் கூந்தன் ஞெரோலைச் செருகிச் செவ்வாய், தாணையிற் றுடைத்திட் டைய தணத்தலென் றிறைக்குரைத்து, மீனெனப் பிறழுங் கண்ணாள் விரைவினிற் புறத்துப் போந்து. (ருள)

வெளிப்படு வெளிப்ப டென்று வெருவர மூடுகி னின்று,
விளிப்பவர் தாழ்த்தற் கொத்த மென்மொழி பலவுங் கூறிக்,

* அற்றம் - இரகசியம்.

களத்திருண் மறைத்து வந்த கள்வன்மாட் டெழுந்த வன்
பு, மளப்பருஞ்செல்வன்றன்மாட் டச்சமுமனத்தையீர்ப்ப.

செயலையந் தளிர்க வற்றுஞ் சீறடிச் சிலம்ப ரற்ற, வுய
வுநுண் ணிடைந டுங்க வொளியுமி ழொருகாழ் முத்தந், து
யல்வரு குவவுக் கொங்கை துளும்பவா ணுதல்வி யர்ப்பக்,
கயல்பொரு கண்டு ளிப்பக் கடிதடி பெயர்த்துச் சென்றாள்.

யாமினி திருந்து வாழு மிருங்குழல் கலையப் பட்டுப்
போமினி யென்று நெஞ்சம் புழுங்குபு கலுழ்தல் போலக்,
காமரம் பயில்சு ரும்பு கதுப்பெழுந் தார்ப்பப் போகிப்
பூமக ணிலேஇய கோயிற் புக்குமன் னவன்முன் னின்றாள்.

நிற்றலு மரசர் கோமா னெருப்பெழ விழித்து நோக்கிச்
செற்றிவ டன்னை யின்னே தேமலரொடுமு டித்த
கற்றையங் குழலை நீவிர் களைவித்து விடுகென் றேவ
மற்றரு தடந்தோண் மைந்தர் வார்குழல் களைவித் தாரால்.

கடைகுழைந் திருண்டு நெய்த்துக் கார்க்கரும் புயலை நீலச்
சுடர்கெழு மணியைத் தேன்வாய்த் தும்பியைச் சைவலத்
மடிதிரை யறலை வென்று மலரொடு பழகி நீண்டு [தை
மிடைகுழ லிழந்து பீலி வீழ்த்திய மஞ்ஞை யொத்தாள். ()

தரவுகொச்சகக்கலிப்பா.

கண்ணீ ரொழுக்கிக் கதிர்மா முலைமலைக்குத்
தெண்ணீ ரருவியாச் செவ்வாய் மலர்திறந்து
பெண்ணா ரமுதம் பெரிதழுது கோமகனிற்
பண்ணார் மொழியார் பலரிரங்கச் சென்றனளால். (கஅ)

கண்டார்க் ளெங்தோ கலந்திருந்தாத் தப்பினுக்கே
யொண்டா தவிழ்ம்லர்த்தா ரோதி மழிப்பித்தான்
விண்டார் மருளுக்கரத்த வேல்வேந்தன வேறுமிகை
யுண்டாயி னெவ்வா றுறக்குமோ வென்பாரும். (சுச)

பூந்துகிலாற் பொன்னாற் பொதியின் மலைப்பிறந்த
சாந்தத்தாற் பன்மணியாற் சாலப் புனைந்தாலு
மேந்திழையார் தங்க ளெழிலெல்லா மெய்த்திருண்ட
கூந்தலா னின்றேற் குறையுங்கா ணென்பாரும். (சுரு)

* பெருமஞ் சிகனுக்கிப் பெய்தொடிதன் கூந்தற்
கருமஞ் செறிதருவான் கையெழுந்த தோவென்பா
ரரசன் பணித்தவா றுறல்ல தேயேனு
மொருவுந் திறமே துலகத்தார்க் கென்பாரும். (சுசா)

ஓவா வறுமை யுழந்தாலு மற்றொருவ
ரேவா துயிர்வாழ்ந் திருத்தலே நன்றுகுந்
தாவாத செல்வந் தருமேனுங் குற்றேவ
லாவா கொடிதுகொடி தென்பாரு மாயினார். (சுஎ)

இன்ன வகையே யிருமருங்கி னுள்ளோருஞ்
சொன்ன மொழியனைத்துந் துன்பத் தழன்மூட்ட
நன்னுதல்போய்த் தன்னில்ல நண்ணிப் பிறைதுறந்த
சென்னி யிறைவன் றிருவடியில் வீழ்ந்தழுதாள். (சுஅ)

கின்னரரும் விஞ்சையருங் கேட்டு மனமுருகி
யின்னிசையாழ் கைசோர வேழிசைநா ரதன்யாழ்

* பெருமஞ்சிகன்-நாவிதன்.

தன்னிசைபோய் வாயடைப்பத் தாங்கரிய துன்பத்தான்
மின்னனையாள் செங்கனிவாய் விட்டுப் புலம்பினாள். (சுக)

கொந்தார் மலரூழ்த்த கொம்பிற் புரள்வாளை
நந்தா மறைப்பொருளா நம்பெருமா னன்னுதால்
சிந்தா குலமொழிதி யென்றெடுத்துச் சென்னிமே
லந்தா மரைபோலு மங்கைத் தலம்வைத்தான். (எ0)

கலிவிருத்தம்.

வைத்தாங்கிறை கைக்கங்கண வடிவாய்மறை யரவ
முத்தாந்திரு நகையாண்முக முழுமாமதி யென்னாப்
பைத்தாங்கிய வாய்விண்டழல் படுகஞ்சொழுக் கியதே
யொத்தீர்ங்குழல் வளர்தந்தறிவ் வுலகத்தவர் மருள. (எக)

கனல்வெஞ்சுர னிடவங்தெழு கார்காண்மயி லெனவுந்
தினமும்பசி சுடகொந்தொரு தினமுண்பவ ளெனவும்
புனையுந்தொடர் பினிநுண்ணிய பொருள்கண்டவ ளெனவும்
வனைமென்குழ லுவகைக்கடல் வாய்மூழ்கின ளன்றே. (எஉ)

ஐயன்றிரு வடிதாழ்ந்தவ னருள்பெற்றுடன் மீளா
வெய்வெங்கணை விழிமாமயி லிறைமுன்புகு மளவின்
மையுண்கணி குழனவிதன் வாங்கிற்றில னென்னா
நெய்யுண்டெழு தீயிற்சின மீடத்துடி யிடையாள். (எஙு)

ஒன்னார்மணி மகுடத்திர ளூழுபொற்கழ லூரவோ
யுன்னுணைக டப்பார்களு முலகத்தினி லுளரோ
முன்னாள்களில் யானாற்றிய முதிர்மாதவ வசத்தா
லிந்நாளென தில்லத்துறை யீறில்லவ னடியான். (எச)

அருளான்மல ரங்கைத்தல மளியன்றலை வைப்ப
விருளார்குழ லிதுபெற்றன னென்னக்கழை சுளியும்
வளைமால்களி றுடையாதவ மன்னன்றிரு வுள்ள
மெரிபோற்கிளர் சினநீத்துட னிறும்பூதடைந் ததுவே. ()

துணைவிற்பல ரொடுபோய்மலர் துன்றுங்குழன் மடமான்
மனைபுக்கடி யவர்கற்பக மாறுவருண் மேகம்
வினையிற்றவர் நெஞ்சத்தொளிர் வீயாமணித் தீபந்
தனைதற்புத வுருநோக்கலுந் தாழாதடி தாழ்ந்தான். (எ௬)

மேற்படி வேறு.

எழுந்து கைதொழு தீர்மலர்க் குஞ்சிமேற்
றழங்கு பொற்கழற் றுமலை சூடியா
னுழந்த மாதவ முன்னையிங் குய்த்ததென்
றழுந்து பேரன்பி னூற்றப் பழிச்சினான். (எஎ)

விருப்பி னேத்தி விளங்கருட் குன்றநீ
யிருப்ப நோற்றநா டெத்திசைத் தெக்கிலை
வரைப்பு நீபுகு மாதவ மாற்றிய
துரைத்தி யென்ன வுரைதரன் மேயினான். (எஅ

ஞால மெய்ந்து நடந்து களிர்மதிக்
கோல வார்சடைக் கொன்றையங் கண்ணியோ
னேல வார்குழ லேந்திழை தன்னொடுஞ்
சால வாழுந் தலந்தொறும் வைகுவேம். (எ௯)

சுறங்கு தெண்டிரைக் கண்ணகன் ஞாலத்துச்
சிறந்த தண்ணறன் றென்கயி லாயமென்

றறிந்த நல்லவர் வாய்க்கேட் டடைந்தன
மறங்கொள் வேலவம் மாதலங் காண்வே. (அ0)

ஆயி டைக்கடு மாயிடற் றாழற்
சேய வார்சடைத் தேவர் பிராற்கமர்
கோயி லின்மைகண் டுள்ளங் கொதித்துவெந்
தீயி டைப்படு சிற்றயி ராயினேம். (அக)

உலக மெல்லா முடையாய்க் கிருப்பவோ
ரிலகு கோயி லெடுப்பவ ரில்லையோ
தலைவ வென்றவன் றண்மூத லேந்தியந்
நிலைமை யின்பா ணிகழ்த்திய வந்தனம். (அஉ)

தீய லாம ணிமிர்சடை யெம்பிரான்
கோயில் செய்பவ ரில்லெனக் கூறினன்
றீய பாம்பணி யுஞ்சிறு திங்களுந்
தூய நீர்ச்சடை யுந்துறந் தெய்தினேன். (அங)

சொன்ன வாசகங் கேட்டுச் சுடர்செய்வேன்
மன்னர் கோமகன் வார்குழல் பெற்றவப்
பொன்னு லாவும் புணர்முலைப் பூங்கொடி
யென்ன மாமகிழ் வெய்தினன் கூறுவான். (அச)

தூய னேனைத் திருவுளத் தெண்ணிநீ
வாய்ம லர்ந்ததென் மாதவ மாதலாற்
றூய நின்னருட் சொல்வழி நிற்பதே
நாயி னேற்கு நலமெனக் கூறியே. (அரு)

கொன்றை யஞ்சடைக் கூத்தப் பிரானமர்
தென்றி சைக்கபி லாயச் சிறப்பெலா

மின்றெற் ணக்கு மனங்கொள வெம்பிரான்
மன்றகன்று வருத்தினா யென்றனன். (அசு)

என்ற சொல்லினைக் கேட்டது மீறிலான
பொன்ற வில்கயி லாயப் புராணத்தை
வென்றி வேலவ வேட்டனை யாயிடி
னன்று சொல்லுது நாமெனச் சொல்லுவான. (அஎ)

மாசில் காட்சி வசிட்ட னகத்தியன்
வாச மாமலர் வகதோன் சிலக்கிபாம்
பாசில் யானை புளிந்த னருட்சிவ
கோசன் கீரன் குவளைக் கருங்கணூர். (அஅ)

ஆதி யாக வளவில ருண்டவன்
டீது தீர்த்தவ ரவ்வத் திருக்கதை
யோத வேண்டி லுகம்பல செல்லுமக்
காதை யுட்சில காவல கூறுவேம். (அக)

என்று சங்கம வேடத்தி னெம்பிரா
னன்று கூறின னன்னவன் சொற்படி
யின்றி யாறு மிசைக்குலும் தேன்வினை
கொன்ற கல்லவர் கொள்பவென் றெண்ணியே. (கூ0)

விடசங்கமச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ககக.

தொண்டைநாட்டிலே, நாராயணபுரத்திலே, யாதவ மஹாராஜா என்பவர் ஒருவரிருந்தார். அவர் அரசகுலத்திலேயவதரித்து, அதற்குரிய சகலகலைகளினும் அதிவல்லராகி, குருலிங்கசங்கமங்களிடத்துப்பேரன்பும் பிறவுயிர்களிடத்துப் பெருங்கருணையும் உடையராய், அந்நாட்டிலே அநீதிகலவாவண்ணம் அரசுசெலுத்திவந்தனர். அக்காலத்திலே கயாரணியமெனவும், வில்வாரணியமெனவும், தெனகைலாயமெனவும், சீகாளத்தியெனவும் பெயர்பெற்று விளங்கும் திவ்வியதலத்திலே, திருவருளையே திருமேனியாகக் கொண்டு வீற்றிருக்கும் சிவபெருமான் அவ்வரசர்பெருமானது சிவபுண்ணியமுதிர்ச்சியைநோக்கி ஆட்கொண்டருளத் திருவுளங்கொண்டு, விபூதி ருத்திராக்ஷம் சிவலிங்கதாரணமுதலிய சின்னங்கள் விளங்க, விடசங்கமத்திருவுருவந்தாங்கி, அந்நாராயணபுரத்திலுள்ள மங்கையர் பலரும் காதலித்துச்சூழும்படி வீதியிலெழுந்தருளினர். அத்தருணத்திலே, அவ்வரசர்பெருமானுக்கு போஜனவேளையில் ஸந்திருத்திவைக்கும் சிற்றேவலையுடையவளாயிருந்தும், அடியவர்பத்தியில் மிகச்சிறந்த ஒருபெண் அவரையெதிர்ப்பட்டு, பலமுறைபணிந்தெழுந்து, "ஐயனே, அடியேனது சிறுகுடிலுக்கெழுந்தருளித்திருவமுதுகொண்டுபரிகலசேடமளித்து, எனதுதீவினையைச் சேதித்தருளல்வேண்டும்." எனப் பிரார்த்திக்க; விடசங்கமேசர் திருவுளமிரங்கி, அவளிடத்திலே விரகமுடையவர்போலக்காட்டி, அவள்மனையையடைந்து, திருவமுதுகொண்டருளி, தாம்பூலந்தரித்து, கலவியின்பத்தைக் காதலித்தவர்போல நடித்துக்கொண்டு கலந்திருந்தனர்.

அப்பெண் அவரது மாயவிஞ்சையையுணராது மயங்கி, காமவசத்தளாய் அரசர்கோமானது குற்றேவலைமறந்திருப்ப; அவர் ஸ்நானஞ்செய்து நியதிமுடித்து,தியானத்திருந்தபின் கலந்திருத்திவைப்பவ ரில்லாமையைக் கேள்வியுற்று, கனல்பெருகக் கண்கள் சிவந்து, காவலரைத்தூண்டினர். அவர் கடுகிநடந்தழைத்தமையால், அவள்மருண்டெழுந்து, சங்கமேசரைத் தன்மனையிலிருக்கும்படிப் பிரார்த்தித்து நிறுத்திவிட்டு, விரைந்துவந்துநிற்க; அரசர்பெருந் தலைகமுனிந்து அவள்கூந்தலைக் களைந்துவிடும்படி கட்டளையிட்டனர். அவ்வாறே காவலர்முடித்தலால், அவள் கண்டவரிரங்கக் கவலையுற்றுச்சென்று, சங்கமேசரது திருவடியிலேவீழ்ந்தமுறையிட்டு,அவரால் அபயாஸ்தமளித்துச் சிரசிலே திருக்கரஞ்சூட்டப் பெற்றமையால், முன்புபோலவே கூந்தல்செழித்துவளரக் குதூகலமுடையவளாகி, அவரை வணங்கி விடைபெற்று, மீண்டுவந்து நிற்க; அதுநோக்கிய அரசர்குரிசில் நமதாஞ்ஞையின்படி இவள்கூந்தலைக் களையவில்லையெனக் கடுங்கோபங்கொண்டு, பின்பு உண்மையையறிந்து பெருவியப்புடையவராய், அப்பொழுதே அவள் மனையையடைந்து, அங்குவீற்றிருக்கும் சங்கமேசரது அற்புதத்திருமேனியைக் கண்டவுடனே பலகால்வணங்கித்துதித்து, பயபத்தியோடுநின்று, "எம்பெருமானே,தேவரீர் வீற்றிருந்தற்குத் தவஞ்செய்த நாடு யாது? இனி எழுந்தருளுதற்குத் தவஞ்செய்யும் தேசம் யாது?" என வினயத்தோடு வினவினர்.

அதுகேட்ட அண்ணலார் "யாம் இவஸ்தலங்கடோறும்.

வசிப்பேம்; தற்காலம் எத்தலங்களினும் மிகவுயர்ந்து தென்கைலாயமெனத்தேர்ந்து அத்தலத்தினையடைந்தேம்; அங்கே நம்பெருமானமர்தற்கு ஆலயமின்மைகண்டு, அப்பெருமானைநோக்கி, உலகமெலாமுடையவுமக்கு வீற்றிருக்க ஓராலயமமைக்குமன்பர் இல்லைகொல்லோ? என இரங்கி வந்தேம்: ஆகையால், சிவபத்தியிற்சிறந்த நீயே அத்திருப்பணியை முடிக்கக்கடவை." என வற்புறுத்தியருள; அது கேட்டு அவர் அடியேனுய்யுமாறு அத்தலமான்மியத்தை விரித்தருளவேண்டுமென விண்ணப்பஞ்செய்துகொண்டனர். சங்கமேசர் "அன்பனே, அத்தலத்திலே சித்திபெற்றோர் வசிட்டமுனிவர் அகத்தியமுனிவர் பிரமதேவர் சிலந்தி பாம்பு யானை கண்ணப்பநாயனார் சிவகோசரியார் நக்கீரதேவர் கன்னியரிருவர்முதலாக அளவிறந்தோருண்டு; அவ்வச்சரித்திரங்களைச் சொல்லத்துணிந்தால் பலயுகஞ்செல்லும்; ஆதலால், அவற்றுள்ளே சிலசரித்திரங் கூறுகின்றோம்: மனமமர்ந்து இனிதுகேட்பாயாக." என்று கூறத்தொடங்கினார்.

## தென்கைலாயச்சருக்கம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திங்களங் கண்ணி வேய்ந்த செஞ்சடைக் கருமி டற்றுச்
சங்கரன் றேவர் தம்முட் டலைவனு மாறு போல
வங்கண்மா ஞாலத் தன்ன லரும்பெறல் வீட ளிப்பத்
தங்கிய தலங்க டம்முட் காளத்தி தலைமைத் தாமால். (க)

கருமிடற் றிறைவன் வாழுங் காளத்தி பிறவி யென்னும்
பெருமதக் களிற்றி னுக்குப் பிறையெயிற் றரிமா னேறு
பொருவறு முத்தி யென்னும் புணர்முலைத் திருமகட்கு
விரைவிரி கமலச் செங்கேழ் மென்மலர்க் கோயி லாமால். ()

மதிதவழ் நீலக் குன்றம் வான்றொடு தூர்க்கை வெற்புங்
கதிர்முலை யாக்க வின்ற காளத்தி யணங்கைச் செம்பொற்
றிதலைவண் குவவுக் கொங்கைச் சேயிழை யுமையிற் சாலப்
புதுமதி மிலைந்த சென்னிப் புங்கவன் வேட்கு மன்றே. (௩)

அருமறை நவின்ற நாவி னந்தண ரிளைஞர் மூத்தோர்
இருநுதன் மகளிர் தீம்பாற் செருத்தலான் படிமத் தோர்க
ளிருமுது குரவர் நீத்தோ ரொன்றிவர் முதலி னோரை
வெருவரக் கொன்ற வர்க்கும் வீட்டுல களிக்கு மம்மா. (௪)

தவழ்வன நடப்ப நிற்ப தத்துவ பறப்ப நீர்வாழ்
விலைவயெலா மங்கண் முக்க ணிறைவனு ருருவ மாகு
* மவலுறு புனல்க ளெல்லா மகலிரு விசும்பிற் றீர்த்தஞ்
சிவபுர முலகின் மற்றத் திருத்தல மாகு மாதோ. (௫)

பிறந்தவர்க் காரூர் காணப் பெற்றவர் தமக்குத் தில்லை
யிறந்தவர் தமக்குக் காசி யெவ்விடத் தேனு நின்று
மறந்திலர் நினைத்த வர்க்கு வான்றொடு மருணை யாகுஞ்
சிறந்திறை வீற்றி ருக்குந் தென்னுபொற் கயிலைக் குன்றே.

ஏனைய தலங்க டோறு மிருபிறப் பாளர் கொள்ள
வானுயர் பசும்பொற் குப்பை வழங்குவுந் திருக்கா ளத்தி

---

* அவல் - சிறுபள்ளம்.

மீனுயிர் கவருந் தூண்டில் வேட்டுவன் றனக்கோ ரூசி
தானுத வுதலு மொப்பாச் சாற்றுவ ரயிந்த நல்லோர். (எ)

கருமிடற் றிறைவன் வாழுங் காளத்தி யின்பேர் கொண்ட
வொருவனைவிளிக்குங்காலவ் வொப்பில்பேர்செப்புவோரும்
பரிதிவெங் கதிர்க டோய்நுண் பனியெனப் பாவ கோடி
யிரிதரத் தூப்ப வொன்று லெத்தல மதற்கொப்பம்மா. (அ)

மேற்படி வேறு.

யாவ னொருவன் விளையாட்டி னிடத்தா யினுந்தென் கயிலைக்குப், போவ னென்றே ரடியிடுவா னவனறன் கழற்காற் பூங்கமலந், தேவர் மகுட நிரையுரிஞ்சத் திகழ்வ னென்றுன் மனமொத்துத், தாவில் கயிலைக் கேகுவார் தம்பே றியாவர் சாற்றுவார். (கூ)

மேற்படி வேறு.

மற்றொரு தலத்திற் பன்னாண் மரபுளி நோற்று நெஞ்சஞ்,செற்றறை தனுங்கா ளத்தித் திருநக ரதனு ளோர்நாட், பொற்றொடி மகளிர் மென்றோள் புணர்ந்துறை தலுமொப் பெனப, கற்றவ ரிதுபட் டாங்கு கட்டுரையன் றுவேந்தே. ()

கடவுண்மா திருக்கா ளத்தி கயா ரணி யப்பேர்க் காடாய்
நெடுநில வரைப்பின் மிக்க * நேமியங் கட † றி ரத்தி
யொடுபெயரியகா டாதி யொப்புமைக் குடைய வோங்கு
மடலரி மாறோ டொப்பா யா ரதன் சிறப்புச் சொல்வார். ()

---

* நேமியங்கடறு - நைமிசாரணியம்,

† இரத்திக்காடு - வதரிவனம்.

ஒளிர்மலர சோகந் தேமா வுயர்சினைத் தமாலங் கோளி
சுளையக முட்பு றக்காய் தூங்குகோட் டுயர்வ ருக்கை
வளரகில் சண்ப கம் * யா மணங்கம ழாரந் தேக்கு
கிளைமுத லிவை வன்றிக் கெடலருங் குளிர்கொண் டன்றே.

முடங்குளை யரிமா னெண்கான் முழுவலிச் சரப மா
மான், கடம்படு கவுட்கூர்ங் கோட்டுக் களிறுவல் லுளியங்
கேழல், கொடுஞ்சினப் பிறையு கிர்த்தாட் கொடுவரி வேங்
கை யாதி, யிடைந்துவில் லுழந் துண் வாழ்க்கை வேட்டுவக்
குடியு லடைத்தே. (கரு)

பூநின் று புவன மாக்கும் புங்கவன் புகழ்க் காட்டிற்
றீநின் று சுடவெ டித்த சேண்டொடு நெடிய வேயின்
வாய்நின் று தெறித்த முத்தம் வான்பதிந் தவற்றை யன்றோ
மீநின் று விளங்கு மீனென் றுலகெலாம் விளம்பு மன்றே.

திங்கட னருகு மீக்கட் சென்றிடப் பிறையெ யிற்று
மங்குலி னிறத்துப் பன்றி மண்கிளைத் தடியி னிற்பப்
பொங்கொளி விரிக்குஞ் சோதிப் புதுமர னிற்றன் மாலும்
பங்கயத் தவனுந் தேடப் படுதழற் பிழம்பை யொக்கும். ()

மேற்படி வேறு.

மழைஞூழ் சோதி மரந்தனது மருங்கின் விலகி யிடை
விட்ட, தழைஞூழ் கொம்பொன் றனையபுன்னைத் தடங்கொ
ம் பொன் றன் மிசைக்கிடப்பக், குழைஞூழ் பொ தும்ப ரிடை
நிற்றல் களிற்றி னுரிபோர்த் தவன்றிருமா, லிழைஞூழ் லக
யின் மிசைத்தன்லகை யேற்றி நின்றூற் போ னுமால். (கசு)

---

* யா - ஓர்மரம்.

### மேற்படி வேறு.

இருள்படத் தழைந்த வேயி னிடைப்படர் சோதி வல்
லி, பொருவளிக் கசைந்து மெல்லென் புதுத்தழை பெயருந்
தோறும், விரிகதிர் பரப்பித் தோன்றி யிடைத்தழை மறையுந்
தோற்றம், பெருகொளி மின்னு மின்னிப் பெயன்மழை ம
றைதல் போலும். (௧௭)

கோணின்ற நிலையை முட்டிக் குனிந்தொரு பசிய வேய்
தன், றாணின்ற நிலையைத் தொட்டுத் தலையிற்றே னொழுக நி
ற்றல், சேணின்ற வில்லெ டுத்துத் தேவர்கோ னரிது பெற்ற,
நாணொன்று கொளீஇநி லத்தி னட்டுவைத் தனையதம்மா. ()

### தரவுகொச்சகக்கலிப்பா.

முருகுவிரி மலர்க்கொடிகண் மூங்கின்மிசைப் படர்ந்து
போய்ப், பொருவரிய துறக்கத்துப் புகுந்துவளர் கற்பகமா,
மரமுழுதும் படர்ந்துலவும் வளர்மதியின் மேலாய, பெரி
யவரை யடைந்தொழுகப் பெறிற்றுறக்கம் புகலரிதோ. ()

மரகதநன் மணிக்கதிரின் வளர்பசும்புற் கொடிமேய்ந்து
திரைபொருநீர்க் கான்யாற்றுத் தீம்புனலுண் டாமாக்க
ளரிமணல்பா யிளம்புன்கி னணிநிழற்கீழ் வாய்குதட்டிப்
பொரியனைய பூவுதிர்ந்து புறம்புதையக் கிடக்குமால். (௨௦)

மணிமலர்கொள் பலசாயல் மருங்குடுத்துச் சினைமுழுது
மணிமலர்கொ டுணர்சுமந்த வசோகமொன்று கடுத்தல்
பிணியவிழு நறியசெச்சைப் பிணையரும் தோன்றுமுருகன்
பணியடரு நெடுந்தோகைப் பறவைமிசை யிருந்தற்றே, ()

அறுபதுவண் டினங்குறுகி யறியாத சண்பகங்க
ணறவொழுக விதழ்விரியு நறுமலர்பூத் துறுதோற்றங்
குறைபெறுந ரடைந்தறியாக் குறை *யிவறன் மாலையான்
பெறலரிய பெருஞ்செல்வம் பெற்றிருத்தல் போலுமால். ()

கலிவிருத்தம்.

பற்பல வகிலழல் படவெ ழுந்தவிப்
பொற்பமை வனத்திடைப் புகையுண் டன்றுகொல்
கற்பகப் பொலமலர் கமழ்வ தன்றெனி
லெற்படு பொன்னிடத் தியாது நாற்றமே. (உ௩)

மேற்படி வேறு.

தொக்க நன்மரச் சூழலு ணிற்குமாற்
றக்க மேலவர் தம்மு ளெவற்றினு
மிக்க கல்வி வெறுக்கையு ளொன்றுமின்
மக்கள் போன்மென வற்றன் மரங்களே. (உ௪)

மேற்படி வேறு.

வளர்கரி நெடுங்கையால் வானந் தோய்சினை
தளர்வொடுள் வளைந்திடுந் தகைமென் கொம்புகள்
களிதரு கரிகர லீலை யாற்கடி
தெளிதினுட் குழைந்திட லியற்கை யன்றுகொல். (உ௫)

விரிசிறைப் புட்குல விருந்து செய்கலா
தருள்பழங் கரிபொர வுதிர்க்கும் வெள்ளில்க
ளிரவலர்க் கீந்திடா வீகை கொண்டுகொல்
லரசர்கள் பெறச்சொரி யறிவி லார்கள்போல். (உ௬)

---

* இவறன்மாலை - உலோபத்தன்மை.

மகவுட லொடுக்கிய வயிற்று மந்திக
ளுகண்மலர்க் கொம்பினின் றொழுகுந் தேறல்வான்
றிகழ்தரு கங்கையுட் டெய்வத் தாமரை
நிகரறு பொலங்கல நிறைக்கு மென்பவே. (உஎ)

வேய்த்தலை வானரம் வேழம் பக்குலக்
கூத்தரி னாடிய கூத்த ரம்பையர்
பார்த்தன ரவற்றின்மேற் பரிசின் வீசிய
தூத்திரண் மணிவடஞ் சுடரு மெங்குமே. (உஅ)

கலித்துறை.

இன்ன வாரண வனத்திடை யெம்பிராற் கண்டு
முன்ன மைந்தடர் வசிட்டமா முனிவினை யறுத்து
மன்னு நன்கதி யடைந்தமை வகுப்பலென் றெறிநீர்ச்
சென்னி யந்தணன் வேந்தனுக் கொருகதை தெரிப்பான். ()

மூந்து மாமறை முழுதுணர் வசிட்டமா முனிதான்
றந்த மைந்தர்க ளூற்றுவர் தாவில்சீர்க் * காதி
மைந்த னுயிர் துறத்தலின் மனத்தையுள் ளழுத்தி
யுந்து வெந்துயர்க் கடலகத் துணர்வெலா முகுத்தே. (௩௦)

மருளு நெஞ்சமுந் தானுமோர் வான்றொடு குடுமி
வரையி லேறிநின் றெய்ஞெயன விழுந்தனன் மண்ணி
லரித பெற்றதம் முடம்பின்மேல் வெறுப்புடை யவரு
மொருவ வல்லரோ மக்கண்மே லுற்றதோர் வேட்கை. ()

* காதிமைந்தன் - விசுவாமித்திரமுனிவர்.

வீழும் வேலையின் மணிகொழித் தெறிதிரை வேலை
சூழு மாநில மடந்தைதன் றுணைக்கையா லேந்தி
யாழு மாரணூர்க் கடலினின் றகற்றநற் கேள்வித்
தாழும் வார்சடை முனிவர நினக்கிது தகவோ. (௩௨)

மலையி லேறிமண் வீழ்தரின் மாளுமோ துன்பங்
கலைகு றைந்தவெண் மதிமுடிக் கடுக்கையங் கண்ணித்
தலைவ னாருள் பெறுதியேற் றுன்பமுந் தனைப்பல
தொலைவின் முத்தியும் பெறுகுவை யாதலாற் றூயோய். ()

அடியர் வேண்டிய வேண்டியாங் கருளிருண் மிடற்றுக்
கடிகொள் கொன்றையஞ் செஞ்சடைக் கடவுளை நோக்கி
யொடிவின் மாதவஞ் செய்தியென் றுரைத்தனன் முனிவ
னெடிய வெந்துய ரளக்கரி னீந்தினன் றென்றான். (௩௪)

கண்ண கன்கட லுடைப்பெரு நிலத்திடைக் கவின்ற
புண்ணி யத்திரு வனத்தினுண் மேலெனப் புகன்ற
தண்ணென் மென்புனல் வேட்டெழு கலையெனத் தரியா
னண்ண லங்களிற் றடவியை யடைந்தன னன்றே. (௩௫)

அடைந்த மாமுனி சிறந்துழி யகனமர்ந் திருந்து
கடும்பு லப்பகை யைந்தையுங் கொன்றுபூங் கடுக்கை
மிடைந்த செஞ்சடை யந்தணன் றிருவடி விடாது
தொடர்ந்து நெஞ்சின னாகியூண் யாவதுந் துறந்து. (௩௬)

கனலி வெங்கதிர் பெருமழை குளிர்பனி கடுங்கால்
சினவி லங்கென விவற்றினால் வருந்துயர் சிறிது
நினைத லின்றிமுச் சவித்தலை வகன்றபன் னெடுநாள்
வினைகெ டுத்தவ முழந்தனன் யாவரும் வியப்ப. (௩௭)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொன்னவிவ் வகையி னேற்குந் தூயவற் கருளல் வேண்டி
முன்னவன்பணைப்பெருந்தோண்முத்துறழ்முறுவற்செவ்வா
யன்னமுங் குடவ யிற்றி னைந்தலைக் களிற்றுக் கன்றும்
பன்னிரு தடந்தோட் சேயும் பரிசன கணமு மின்றி. (௩௮)

அருமணிச் சுடிகை யைவா யாடர வுருவத் தோடு
பரசிவ லிங்க மாகிப் படுபுன லிறைவன் றிக்குத்
திருமுக மாய கத்துத் திமிரமுங் கெடவி ளங்கி
விரிசுடர்க் கனலி தன்முன் மினமினி யாக நின்றான். (௩௯)

கண்ணுத லண்ண னிற்பக் காணடா லோடு நெஞ்சந்
துண்ணென நடுந டுங்கித் தொகுமயிர் சிலிர்த்தெ ழுந்து
மண்ணிடை வளிபெ யர்த்த மரமெனத் தாழ்ந்து முக்கட்
பண்ணவ னெழுக வென்னப் பயமொரீஇ யெழுந்து நின்று.

கையிணை யுச்சி கூப்பிக் கண்களி னருவி பாய
வெய்யசெந் தழலிற் பட்ட மெழுகென வுருகநெஞ்சம் [ய்ந்த
பொய்யில்வாய்குழறக்கொன்றைப்பொலமலர்க் கண்ணிவே
செய்யவார் சடில முக்கட் செல்வனைப் பழிச்ச லுற்றான். ()

மேற்படி வேறு.

இம்மா நிலத்தோர் நின்னெடுமைத் தென்னப் பட்ட திருமாலுஞ், செம்மா மலரி னரசிருக்குந் தேவு மறியப் பட்டாயென்று, வெம்மா பிறவி நெடுங்கடல்வா யலமந் தறிவு கெடுத்துழலு, மெம்மா லறிதற் கெளியாயோ வெளியோ டாடும் பெரியோயே. (௪௨)

எல்லாக் கலைக்கு முதலாகி யாவுந் தரிக்கும் பொய்ப்
பொருண்மை, புல்லைப் பொருளி னருமறைக்கும் புகழ்தற்
கெளியை யல்லையென்றாற், கல்லாக் கழிமா மடனுடையே
ன் கண்டாங் குரைக்குஞ் சிறுபுன்மைச், சொல்லாற் புகழ்த
ற் கெளியாயோ துறந்தோ ருளத்திற் சிறந்தோயே. (௬௩)

உடம்பு முதலாந் தொடர்பனைத்து மொழித்துப் புலன்
கள் கரந்துமன, மடங்கி யருநோன் புழந்தவர்க்கு மடை
தற் கரியை யென்றக்கா, லொடுங்க லில்லா வவாக்கடலு
ளுய்க்கும் புலத்துக் காட்பட்டேன், தொடர்ந்து பெறுதற்
கெளியாயோ தொலையாக் கயிலை மலையோயே. (௬௪)

கலிவிருத்தம்.

எனப்ப ழிச்ச விறைவன் கருணைகூர்ந்
தனக்கு வேண்டிற் றுதவதுஞ் சொல்கென
மனத்த டக்கரு மாமகிழ் வெய்தினோன்
சினக்க ளிற்றுரிச் செம்மற் குரைசெய்வான். (௬௫)

பத்தி *நாறரும் பாறைம னத்தென்மேல்
வைத்த பேரரு ளாலெளி வந்தவிவ்
வித்த கத்திரு மேனியொ டென்றுநீ
யித்த லத்தி லிருப்பது வேண்டினேன். (௬௬)

தேங்கு பேரருட் செல்வ தூன்றுநீ
யோங்கு தத்துவ முள்ளவெ லாங்கடந்
தாங்கு நின்ற வசைவி னிலைமைதாண்
வீங்கு ஞானமும் வேட்டன னென்றனன், (௬௭)

---

* நாறுதல் — தோன்றுதல்.

அன்ன லவ்வுரை கேட்டலு மன்பநீ
யெண்ணி யாங்கா கெனவங் கிருந்துபின்
விண்ணு யர்ந்த வியன்சிலை யாலடித்
தெண்ணி லாச்சடைத் தென்றிசை மூர்த்தியாய். (சஅ)

வீற்றி ருந்து விரைமலர் தூயடி
போற்றி நின்ற புனிதமா ணுக்கனை
யேற்ற ஞாங்க ரிருத்தி மனங்கொளச்
சாற்ற ரும்பொருள் சாற்றுதன் மேயினன். (சகூ)

பிறத்தல் சாதல் பெருகல் சுருங்கலே
துறத்தல் கூட றயர்தல் களித்தலே
வெறுத்தல் வேண்டல் வெகுள லுவத்தலே
மறத்த லுள்ளன் மயங்க றெளிதலே. (ருo)

இனைய பல்குண மின்றியி யற்கையாய்
வினையி னீங்கி விளங்கிய ஞானமாய்
நினைவ ரும்பர மானந்த நித்தமாய்த்
தனைய றிந்தவர் தங்கட் கபேதமாய். (ருக)

பூவி னுண்மணம் போலுல கெங்கணு
மேவி நிற்பினும் வேறு யுயிர்த்தொகைக்
கோவின் மெய்யு மொழிந்தவுந் தக்கவா
றீவ தாயொருங் கியாவு முணர்வதாய். (ருஉ)

ஆதி வேதமுஞ் சொல்லற் கரியதோர்
சோதி யாய்மன முற்றொட ராததாய்
மீது யர்ந்ததன் றன்மையு மெய்தனைக்
கேதந் தீர்தன திச்சையி னுயதும். (ருங)

* மாயை மூன்றினு மாயிரு ஞாலமுன்
னாய தத்துவ மெல்லா மமைத்தலுந்
தூய சத்தி விளங்கிய தொல்லுயிர்க்
கேயு முத்தி யளிக்கு மியற்கையும். (௫௪)

விரித்து நன்கு விளம்பினன் செஞ்சடைக்
கருத்த னவ்வெலாங் காசின் முனிவனுட்
டரித்து ஞானந் தலைப்பட் டனரெலா
மிரித்தெ ழுந்தபே ரின்பத் தழுந்தினான். (௫௫)

தந்தை தாண்மலர் தாழ்ந்து விடைபெறீஇச்
சிந்தை யெண்ணிய தேயத் தடைந்தன
னந்தி வானிறத் தண்ணலு மவ்வுழி
வந்த வன்ன வடிவொடு நின்றனன். (௫௬)

மேற்படி வேறு.

அப்பொழு துமைப்பெய ரரிக்கரு நெடுங்கட்
செப்பிள முலைக்கொடி சிவன்பிரிவு தந்த
வெப்பவிர கத்தழல் வெதுப்புதல் பொறாளா
யொப்பிலி யிருந்தருளு மொண்கட றடைந்தாள். (௫௭)

ஆங்கோதை நீர்விட மயின்றருள் சடுக்கைத்
தேங்கோதை மார்பனொடு சோந்தினி திருந்தே
தீங்கோதை நன்கழை செறுத்தொளிரு ஞானப்
பூங்கோதை யென்றுதிசை போழ்பெயர் படைத்தாள். ()

மழைமத முகக்கட வயிற்றுமகன் வெஞ்சூர்
வழியற வறுத்தவருண் மைந்தனடல் வீர

* மாயைமூன்று - சுத்தமாயை, அசுத்தமாயை,
பிரகிருதிமாயை.

னழிவில்வடி கக்கடவு ளையன்விடை யண்ணல்
குழுமிய வுருத்திரர்கள் கோதில்கணநாதர். (௫௯)

என்றிவர்க ளாதியர்கள் யாவரு மெழுந்து
துன்றியுமை யம்மையொடு சோதியுறை கின்ற
மன்றன்மத யானை வனம் வல்விரைவி னெய்திக்
கொன்றைமுடி யண்ணலருள் கொண்டினி திருந்தார். (௬௰)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விளங்கொளிக் கயிலைக் குன்றம் விரிசடை யிறைவன்
றன்னைத், துளங்கலில் குடும்பத் தோடு துறத்தலிற பயந்
தோர் கீத்த, விளஞ்சிறு ொனக்க லங்கி யீகையங் குன்றத்
தோடு, வளங்கெழுகளிநல்யானைவனட்புகவெழுந்ததன்றே.

இருணிற விருவி சும்பி னெழுந்துதென் றிக்கிற் செல்லும்
பெருகொளிக் கயிலை வெற்பும் பிறங்கியசெமபொற்குனறந
திரையெறி கடறுங காற்றின சேயையு மண்ட கோடி
விரல்கொடு தெறிக்கு மாற்றல் வீரவா குவையு மொத்த. ()

கூற்றுறழ் வெருளி வேழங் கொண்டுவிண் படரு மூழிக்
காற்றெறி சிறைப்பே ராற்றற் கண்டபே ரண்டப் புட்கள்
போற்றிரையுவரிசூழ்பூம் * பொழிலெலாமருளவிண்போய்ச
சாற்றரு மலையி ரண்டுந் தானமா வனத்த டைந்த. (௬௩)

தோடவிழ் கடுக்கை வேய்ந்த சுடர்மணிச் சுடிகை யையவர
யாடர வுருவத் தன்னைற் கயிந்திர திசையின் வெள்ளிக்
கோடுயர் வரைநின் றன்ற குருமணி யருவி சூடி
நீடிய குடுமி மேரு நின்றதங் கதன்வ டக்கே (௬௪)

* பொழில் - உலகம்.

அன்றுதொட் டுலக மேத்து மண்ணைலங் களிற்றுக் காடு
மன்றதென் கயிலை யென்னும் வான்பெயர் பெற்ற தம்ம
பொன்றலி லதன்சி றப்புப் பொருபுல னரவ வேந்து
நின்றதன் னாயுள் காறு நிகழ்த்தினு * மூலத்தற் பாற்றே.

வியனிலம்போல விண்ணும் வெள்ளத்துளழுந்து மஞ்ஞான்
றுயர்தரு மண்ட கோளத் துறநிமிர் கயிலை யென்னும்
பெயருடைப் பரமா னந்தப் பெறலரு முத்தி வைப்பா
மயலெறி திருத்த லக்கு மற்றைய தலங்க ளொப்போ. ()

ஒலிசீர்த் தெனாது வெள்ளி யோங்கலி னான்கு திக்குங்
காவத வளவுட் பட்ட கன்மர முதலா யுள்ள
தாவர மக்களாதி சங்கம மெல்லா முக்கட்
சேவுயர் கொடியி னான்றன் றிருவுரு வாகு மன்றே. (௬௭)

† புலிபுலி யதனு டுக்கும் பொருசரி கரித்தோல் போர்க்கும்
வலியவா னானே றேறும் வாளரா வரவம் பூணு
மெலியியன மான்மா னேந்தும் வெந்திறற் சீயஞ் சீயத்
தலைபுனை தருந்தென் வெள்ளிச் சயிலத்தினிறக்கின மன்றே.

---

* உலத்தல் - முடிதல். † புலியிறக்கின் புலியதனுடுக்கும் என இங்ஙனம் தனித்தனி ஒவ்வொன்றையுஞ் சொன்னயம் பற்றிக் கூறினாரேனும், சிவசாருபத்திற்குரிய பிறசின்னங் களையும் பெறுமென்பதே நூலாசிரியர்கருத்து. சிவபெருமானுக்குச் சிங்கத்தோலையன்றி அதன்றலையும் உண்டென்பதை "ஏனையோர்க் கிறைமை யின்மை காட்டி, முடங்குளைமடங்கன் முன்னுடக் கோத்த, வெண்டலை மாலை கண்டவர் வெருவத், தண்டாது கிடக்குந் திண்டோட் பொருப்பன்." என்னும் இஷ்டலிங்கவகவலானும் உணர்க.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்று தென்கயி லைப்பொ ருப்பின இயல்ப னைத்தையு
மெம்பிரா, னன்று கூறலு நெஞ்சு வந்தொளிர் நாம வெள்
ளிலை வேனெடுங், குன்றி னோடுறழ் பிறைம ருப்புயர் குஞ்ச
ரப்படை யாதவன், மன்ற நன்கதை யின்னு மொன்று வழ
ங்கு கென்றுவ ணங்கினான். (௬௯)

கலிவிருத்தம்.

ஆதியங் கயிலையி னடைவு கூறினாந்
தீதில்பொன் முகரியின் செய்தி கூறுதும்
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான். (௭௰)

தென்கைலாயச்சருக்க முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் - க௱க.

---

சிலயுகங்களுக்குமுன்னே, சூரியகுலத்திலுதித்த மித்திரசகனென்னுமரசனை வஞ்சிக்கவெண்ணிய ஓரரக்கன் அவ்வரசனிடத்தே மடைத்தொழில்பூண்டிருக்குநாளில், நரமாமிசத்தைச் சமைத்துவைக்க; அதை அரசனுணராது வசிட்டமுனிவருக்குப்படைத்து, அக்குற்றங்காரணமாக அம்முனிவராற் சபிக்கப்பட்டு, உதிரனென்னும் பெயரையுடைய அரக்கனாகி உழன்றிருந்தனன். அக்காலத்திலே, விசுவாமித்திரமுனிவர் வசிட்டமுனிவர்பால் வைத்திருக்கும் உட்பகையினால் அவர்சந்ததியை அழிக்கத்துணிந்து, சத்திமுனிவர்முதலிய நூற்றுவரையும் மாய்த்துவிடும்படி அவ்வுதிரனென்பவனுக்குப் பணிக்க; அவன் அவ்வாறே முடித்தலா

ல், வசிட்டமுனிவர் புத்திரசோகமேலிட்டு, தமது உயிரை விடுக்கவெண்ணி, ஒருமலையினது உச்சியிலேறி, விரைந்து விழுந்தனர். அதுகண்ட பூதேவியானவள் அவரிறவாவண்ணம் தன்னுடைய இரண்டுகரங்களாலும் தாங்கிக்கொண்டு, அவரைநோக்கி, "முனிவனே, நீ இவ்வாறு செய்தலால் உனது துன்பம் நிவர்த்தியாகுமா? சிவபெருமானை வழிபட்டுத் திருவருளைப்பெறுவையேல், இத்துன்பம் நிவர்த்தியாகப்பெறுவதுமன்றி முத்தியையும் பெறுவாய்." என்றுரைக்க; முனிவர் அதையங்கீகரித்து, தமது சித்தத்திலே கயாரணியமே எவற்றினும் சிறந்ததலமெனத் துணிந்துசென்று, ஒரு சிறந்ததானத்திலே யிருந்துகொண்டு, உணவாதிகளை விடுத்து, ஐம்புலன்களையு மடக்கி, சித்தத்தைச் சிவபிரான் திருவடிக்கண்ணேபதித்து, எவற்றாலும் சலிப்பின்றி, அருந்தவம் புரிந்துகொண்டிருந்தனர்.

சிவபெருமான் திருவுளமிரங்கி, ஐந்தலையரவ வுருவத்தோடு பரசிவலிங்கமாய் மேற்குத்திருமுகமாகி, சோதிமயமாய்த் தரிசனந்தந்தளிக்க; முனிவர் நடுநடுங்கி, மயிர்சிலிர்த்து, காற்றினாற் பெயர்க்கப்பட்ட மரம்போல வீழ்ந்துபணிந்து, அக்கடவுளெழுகவென்றபின்னர் பயமகன்றெழுந்து, பலவாறு துதித்து நின்றனர். அப்பெருமான் திருவருள்கூர்ந்து, முனிவரை நோக்கி, "உனக்குவேண்டியவரம் யாது?" எனவினவ; அம்முனிவர் "தேவரீர் எக்காலத்தும் இத்தலத்திலே இத்திருமேனியோடு வீற்றிருந்துகொண்டு ஆன்மாக்களுக்கு இஷ்டசித்திகளையளிக்கவும், சிறியேனுக்கு ஞானோபதேசம் பாலித்தருளவும் விரும்பினேன்." என வின்,

ணப்பஞ்செய்துகொண்டனர். அக்கடவுள் அவ்வரமளித்து, கல்லாலவிருக்ஷத்தடியிலே தக்ஷிணாமூர்த்தமாய் வீற்றிருந்து, பதிபசுபாசலக்ஷணங்களை ஐயந்திரிபற விளக்கியருள; அம்முனிவர் உண்மைதெளிந்து, ஞானமுதிர்ச்சியுடையராகி, பேரின்பம்பெற்றனர்.

அத்தலத்திலே, அக்கடவுள் அம்முனிவர்க்கருளியவண்ணமே எழுந்தருளியிருத்தலால், உமாதேவியாரும் பரிவாற்றூது, விநாயகக்கடவுள் முருகக்கடவுள் வீரபத்திரக்கடவுள் வைரவக்கடவுள் ஐயனார் நந்திதேவர் உருத்திரகணங்கள் கணநாதர்கள் முதலியோர் பின்றொடர்ந்துவர, அத்தலத்தையடைந்து, ஞானப்பூங்கோதையம்மை என்னும் திருநாமத்தோடு தங்கியிருந்தனர். இதுகண்ட கைலைமலையானது மேருமலையோடு, தானும் பரிவாற்றூது அங்கடைந்து, தனக்கு வடக்கே அம்மேருமலை தயங்கும்படி தான சந்நிதிக்குக் கீழ்த்திசையிலே தங்கியது. அதனால், அன்றுமுதலாக அத்தலம் தென்கைலாயமெனத் திருநாமமுடையதாகி, அண்டருலகமுமழியும் அக்காலத்தும் அழிவில்லாததாய், நிகரின்றிவிளங்குகின்றது. அத்தலத்திலிருக்கும் சராசரங்களெல்லாம் சிவரூபமாகும்: என்றுரைத்தருளி, அவ்வரசர் வேண்டுகோளின்படியே, பொன்முகரிநதியின்வரலாற்றைப் புகலத்தொடங்கினர்.

## ௪ - * பொன்முகரிச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மணிமிடற் றிறைவன் முன்னம் வானொடு பனிக்குன் றத்தி
னணிநகைப் பூணைப்பெ ருந்தோ ளம்பலைத் தரிப ரந்த [த்த
பிணையெழிற் கருங்கட் செவ்வாய்ப் பிறைநுதற் சுணங்கு பூ
புணர்முலைக் கருமென் கூந்தற் புனிதையை வேட்பவந்தான்.

கருடர்கந் தருவர் † தாரா கணந்தயித் தியர்கள் விச்சா
தரரிராக் கதரோ சித்தர் தாபத ரசுர ரோகிம்
புருடர்கின் னரரி யக்கர் பூதர்வே தாளர் தேவ
ருரகரா காச வாச ரொடுபோக புவியு ளாரே. (௨)

விரிசடை முனிவ ரீட்டம் வெந்திறற் கணேச வெள்ளந்
திருமறு மார்பத் தண்ண றிசைமுகத் தலைவ னின்றே
ரொருவரு மொழிந்தி ராம லொருதனிக் கடவு ளோடும்
பரவினர் வந்து விண்டோய் பனிவரை மருங்கி றுத்தார். ()

தெய்வத வெள்ள மெல்லாந் திரண்டவட் குழீஇயவாற்றால்
வையகந் தெற்கு யர்ந்து வடதலை தாழ்ந்த தாக
மையொளிர் மணிமி டற்று வானவன் கடத்து வந்த
வையனை யருகு வாவென் றழைத்தரு ணோக்க ளித்தே.(௪)

மன்னிலஞ் செம்மைத் தாக மாதவ நீதெற் கேகி
மேனிமிர் மலைய வெற்பின் மேவுதல் வேண்டு மன்றே
ஞானவில் புலவ நாமே கொடிசெலத் தக்க தென்றான்
வானுயர் புகழி னானும் வணங்கிவாய் புதைத்து நின்று.(௫)

---

* பொன்முகரி என்பது ரகர லகர வொற்றுமை
யால் பொன்முகலி எனவும் வரும்.

† தாராகணத்தைப் பிறர் அந்தரரெனவும் வழங்குப.

திருமறு வணிந்த மார்பன் றிசைமுகன் முதலோர் நிற்பக்
கருணையங் கடலே நாயிற் கடையனேன் றன்பால் வைத்த
வருளினாற் பணித்த வேவ லாற்றுவ லருளி னென்று
விரைமல ரடியிற்றாழ்ந்து விடைபெறீஇவிரைந்துசென்றான்.

கலிவிருத்தம்.

ஆதார மெய்ப்பொரு ளறிந்தசிவ யோகி
மாதார வெம்முலை வடுக்கொளகன் மார்பன்
றாதார வுண்டளிகள் சாதாரி பாடுங்
கேதார மென்றுபுகழ் கேடில்வரை கண்டான் (எ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருந்திறற் பிறவி மாவி னாவியுண் டுளிக்கோல் சிந்தும்
பெருஞ்சிலை யாகி முத்திப் பிறைநுதற் றிரும கட்கு
மருங்குநின் றிரட்டும்வெண்சா மரைகளாய் விளங்காநிற்குந்
தரங்கவான் கங்கை சூழ்போந் தனியவி முத்தங்கண்டான்.

இயலிய மொன்றனாமத் தியாறுசூழ் முரண்வி ழிப்பேர்
வியனகர் வடவெ ழுத்து மெய்களு ணடுவு மீறு
முயிர்களுண் முதல யற்றோ டுயிர்த்துமுன் னின்ற ராமப்
பெயர்நக ரொழுவா யான பெரும்பெயர்ப்பதிகள் கண்டான்.

(இதன்பொருள்.) இயல் இயம் ஒன்றன் நாமத்து யாறு சூழ் - அழகுபொருந்திய பலவகைவாத்தியங்களுள் ஓர் வாத்தியத்தின் பெயரையுடைய ஆற்றினாற்சூழப்பட்ட,— முரண் விழிப் பேர் வியன் நகர் - மாறுபட்டகண்ணின்பெயரைக்கொண்ட பெரியபட்டணமும்,—வடவெழுத்து மெய்களுள்-கீர்வாணபாஷையிலுள்ள முப்பத்துமூன்றுமெய்களு

ள்,—நடுவும் ஈறும் - (முதற்ககரமுதல் இரண்டாவது தக ரம் வரையுமுள்ள முன்பதினேழு மெய்களும், நான்காவது தகரமுதல் க்ஷகாரம் வரையுமுள்ள பின்பதினேழுமெய்க ளுநிற்க) நடுநிற்பதாகிய மூன்றாவது தகரமெய்யும், ஈற்றெ ழுத்தாகிய க்ஷகாரமெய்யும்,— உயிர்களுள் முதல் அயற் றோடு உயிர்த்து - உயிரெழுத்துக்களுள் முதலெழுத்தாகிய அகாரத்தினது பக்கத்திருக்கின்ற ஆகாரவுயிரோடு சேர்ந் து,—முன் நின்ற ராமப் பெயர் நகர்-முன்னே நிற்கப்பெற்ற ராமவென்னும்பெயரையுடைய பட்டணமும்,— எழுவா ய் ஆன பெரும் பெயர் பதிகள் கண்டான-முதலான கீர்த்தி பெற்ற அனேகந்திவ்வியதலங்களை அகத்தியமகாமுனிவர் தரிசித்தனர். என்றவாறு.

ஓர்வாத்தியமென்றது ஈண்டுப் பம்பையென்னும் வா த்தியம்; அப்பெயர்கொண்ட யாறு பம்மையாறு: முரண் என்றது விரூபம்; விழியென்றது அக்ஷம்; இப்பெயர்கொண் டபுரம் விரூபாக்ஷபுரம்: எனவே, பம்பையாற்றிறாற் சூழப்ப ட்ட விரூபாக்ஷபுரமெனப் பொருள்கொள்க. விரூபாக்ஷம் - மேனோக்கினகண்.

வடவெழுத்துமெய்களுள் நடுநிற்பதாகிய தகரவொற் றும் ஈற்றெழுத்தாகிய க்ஷகரவொற்றும் ஆகாரவுயிருடன் சேர்ந்து முன்னே நிற்கப்பெற்ற ராமவென்னும் பெயரை யுடைய நகரொனவே, தாக்ஷாராமபுரமெனப் பொருளுரை த்துக்கொள்க. (க)

தனதுயர் முடியைக் கண்டோர் தாமரை முடியைக் கண்ட, வினையிலர் பெறும்பே றெய்த வேழம்பாய் தேத்தி

ருல்கண், டனையதற் கொத்த திங்க ளஞ்சுபு நடக்கும் வெ
ற்பாய்ச், சினவிடை யுயர்த்தோற் றூங்குஞ் * சிலாதரன் பு
தல்வற் கண்டான். (௧௦)

அறக்கட லிறைவன் றங்கு மகனகர் பலவுங் கண்டு, ம
றப்பண்ட மறலி † யாசை வருமுனிக் கெதிர்தோன் றிற்றாற்,
பிறப்புவன் றொடரா றத்துப் பெறலருங் கதியைக் கண்டோர்,
பெறத்தரு தெனுது வெள்ளிப் பெருவரைக் குடுமி தானே.

காண்டலுந் தொழுதி றைஞ்சிக் கண்டுளி சொரிய மெய்யி
லீண்டிய மயிர்பொ டிப்ப வேத்துபு வடமீன் வென்ற
மாண்டகு கடவுட் கற்பின் மனையொடு கயிலைக் குன்றின்
சேண்டிகழ் சிறப்புக் கூறுத் திருநக ரொல்லை புக்கான். (௧௨)

புக்கவ னுப்பா லோடும் புனிற்றிளங் கன்று போலச்
செக்கரஞ் சடையி னன்றன் றிருமுன்னர் விரைவி னெய்தி
நெக்குநெஞ் சுருகக் கண்க ணீரரு தொழுக வுச்சிக்
கைக்கம லங்கள் கூப்பிக் கரணங்க ளடங்கிநின்றான். (௧௩)

நெடும்பொழு துடறம் பித்து நின்றபின் னவச நீங்கிக்
கடுங்கதி ராழி யேந்துங் கரியவன் முதலோர் மௌலி
யிடைத்தொளிர் மணித்த ழும்பு விளங்கிய கழற்காற்றெய்வ
மடங்கலை நாத்த ழும்ப வழுத்திய தொடங்கி னானே. (௧௪)

அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பா.

உலகெலாம் படைத்துக்காத் தொழித்துமறைத்தருள்செய்
மலகிலாத் திருவிளையாட் டாடுவான் குறிகுணமற் [யு

* சிலாதரன்புதல்வன் - நந்திபருப்பதம். † ஆசை-திக்கு.

நிலகுலை யதுகிற்ப வீநிலரு ளுருவெடுத்துக்
கொலைகெழுவே லரிநெடுங்கட் குமுதவாய்க் குவிமுலையம்
புலியனைய முகஞானைப் பூங்கோதை யொடுகயிலை
மலையில்வீற் றிருந்தருளு மதிமுகிழ்நீர்ப் பெருஞ்சடையோய்.

இது ஆறடித்தரவு.

அலங்குளைய பரிமாளே வமுதனைய திருமொழியோ
விலங்குபுகழ் பலவுமெடுத் தேத்துமிகல் வந்திகரோ
லலங்கொளரு மறைநான்கு நாடரிய நிலையாய்க்கே.

தரியலரா ருயிருண்ணுந் தனிக்கணையோ கூர்ங்கோட்டு
வரையனைய மழவிடையோ மலர்சாத்து மடியாளே
விரிகதிர்மா மணிவண்ணன் வியனுலக முடையாய்க்கே.

சுடர்விழியோ வெழிலுடம்போ தூச்சிறையோ திமமுயர்த்த
கடிமலரோன் செலுத்துநிலக் கண்ணகன்றே ருருளேயோ
படரொளியாயி ரங்கதிரோன் பல்லுயிரும் படைத்தாய்க்கே.

இவைமூன்றும் மூவடித்தாழிசை.

வெருவருங் கூற்றம் வீழ்தரச் சிறிது
விரனிமிர்ந் தன்றுநின் மென்மலர்த் திருவடி.
முரணின ரரண மூன்றும்வெந் தவிய
வெரிதழ லுமிழ்ந்தன் றிறைவநின் விளநகை.

இவையிரண்டும் நாற்சீரடியம்போதரங்கம். பேரெண்.

கனல்பட விழித்துக் காமற் காய்ந்தனை,
மனைவி வேண்டலின் மதித்தவற் றந்தனை,

யருவரை பெயர்த்த வரக்கனை நெரித்தனை,
புரிகரம் பின்னிலைச புகன்றவற் கருளினை.
இவை நான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம். அளவெண்

அழித்தனை சிறுவிதி யாக, மசைத்தனை யுடையென மாக,
முரித்தனை புகர்முக நாக, முயர்த்தனை மழவிடை * மேகம்.
இவைநான்குமுச்சீரோரடியம்போதரங்கம். இடைஎண்.

புண்ணிய மூர்த்தியை, புகலருஞ் சீர்த்தியை,
யெண்ணருஞ் சிறப்பினை, யில்லாப் பிறப்பினை,
யவாவிலா மனத்தினை, யடற்கரி வனத்தினை,
தவாத்திரு வருளினை, தலைமறைப் பொருளினை.
இவைஎட்டும் இருசீரோரடியம்போதரங்கம். சிற்றெண்.

எனவாங்கு, இது தனிச்சொல்.

அரும்பெற லொருவநின் றிருந்தடி வணங்குது
மைம்புல விலங்கு வெம்பட ரறுத்து
மாறாப் பிறவிக் கானங் கடந்து
கருதரு மின்ப முத்திப்
பொருவின்மா நகரம் புகுதரற் பொருட்டே.
இது ஐந்தடிநேரிசையாசிரியச்சுரிதகம். (௧௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இன்னண நாக லிங்க மேத்திய பின்ன ராவின்
மன்னிய கடவுட் போற்றி வாரண முகத்தோற் றாழ்ந்து

* மேகம் - ஈண்டு விட்டுணு.

பன்னிரு தடந்தோட் சாமி பணிமல ரடிப ழிச்சி
யன்னைஞா னப்பூங் கோதை யடிபணிஇ வலம்வந் தானால்.

பலமுறை வலஞ்செய் தையற் பணிந்துபின் னரிதி னீங்கி
வலிகெழு மகிடற் காய்ந்த வருமுலை யணங்கு வாழு
மலைமிசை யேறி யன்னாள் மணியரிச் சிலம்ப ரற்று
மிலவித ழெழில்க டந்த விணையடி தொழுது மீண்டான். ()

அவ்வயின் விளங்கித் தோன்று மதிசயம் பலவுங் கண்டு
செவ்விய மனத்தன் றெண்ணீர்த் திருநதி யின்மை காணூஉ
விவ்வயினதியொன் றின்மை குறைவென வெண்ணியாமோர்
கவ்வைகொ ளிருநீர் யாறு கடிதினுட் டருது மென்று. ()

ஐந்தவித் தாண்டு வைகு மருந்தவ முனிவர் பாற்போய்
வெந்துயர்ப் பிறவி கொன்ற மெய்யுண ரடிகள் யாறொன்
றிந்தநற் றலத்த ழைப்ப வெனக்கரு ளுதிரென் றன்னார்
தந்தமுற் றருள்பூண் டுள்ளந் தடநதி முயற்சி யுந்த. (கக)

ஐயதென் கயிலை நீங்கி யதற்குநான் கியோச னத்தில்
வெய்யவா ணிருதி திக்கில் விளங்கொரு பொருப்பி லேறிச்
செய்யதா ணுவின்ம னத்தைச் சிக்கயாத் தைந்துஞ் செற்று
மெய்தசை கெடவூண் யாதும் விட்டரு நோன்பு ழந்தான்.

மூல்லைசான் மனையு லோபா முத்திரை யருகு நீங்கா
தெல்லியும் பகலு நின்றே யேற்றநற் பணிகள் செய்ய
கல்லியற் புலவர் கோமா னதிபெறு தவமு ழந்து [றான்.
செல்லுநா ளுள்வி திப்போன் றிருகோட் * டுதளிற் சென்

* உதள் - மேடராசி.

நனந்தலை யுலக மெல்லா நலிபனிப் பகையி ரிந்து
பொனங்குவட் டிமயத் தேறப் பொருந்துதன் றுணைவ னுய
வனங்கவே ளாக்க மெய்த வஞ்சிறைக் குயிற்புரண் வாழ
மனங்கவர் வேனில் வேந்து மாநிலத் திறுத்த தன்றே. ( )

முள்ளரை முருக்கு மந்தி முளையிளந் திங்கள் காட்டுங்
கள்ளக முகிழ்ப்ப லாசங் கடிமல ரவிழ்த்த தோற்றந்
தள்ளலில் சிறப்பின் வேனி றண்பனிப் பகையி ருந்த
வொள்ளெழினகரமெல்லாமொருங்கெரியூட்டிற்றொக்கும்.

மருமலர் வாளி வேந்தன் வருமுலை யரித்த டங்கட்
டிருநுத லணங்கோ டாடத் தென்றலந் தூதன் முன்னி
விரைமலர்த் துணர்க ளானு மெல்லிளந் தளிர்க ளானும்
பொருகடல்வரைப்பி னுள்ள பொழிலெலாமணிவித் தானால்.

மாதர்மென் பொதும்ப ரெல்லா மணவணி மகளி ரொத்த
காதலங்கொழுநர் தம்மைக் கலந்தமா மதிமு கத்துப்
போதரி நெடுங்க ணல்லார் பூஞ்சிறைக் குயில்க ளொத்தார்
கோதையர்துணை துறந்தார்மடமயிற்குழாத்தை யொத்தார்.

இந்நில வரைப்பி னுள்ளோர் யாவர்க்குங் கேள்வி யின்பந்
தன்னொடு பிறந்த வந்தீந் தமிழ்கொடுத் தாங்கு விண்ணோர்
பொன்னக ரணவுகோட்டுப் பொதியமீன் குழவித்தென்றன்
மன்னிய வுயிர்கட் கூற்றின் வருமின்பம் விளைத்த தன்றே.

மாந்தளிர்க் கவசம் புக்கு மணங்கமழ் கைதை யந்தோ
ட், டேக்கெழு முடைவாள் வீக்கி யீர்ம்மலர்க் கணைபெய் பி
ண்டிப், பூந்தளி ராவந் தாங்கிப் பொருகழைச் சிலையெ டுத்
துச்,சேந்தவாய்க்கிளிமான்பூண்ட தென்றலந்திருத்தேரேறி

கருங்குயிற் றொழுதி யென்னுங் காகள மிரங்க,* வடு, சுரும்புதேன் ஞிமிறென் றெண்ணுந் தொலைவினூற் படையுஞ் சூழ, வருந்துணை வசந்தன் றன்னோ டனங்கவேடாது நுண்டூள்,. விரிந்திரு விசும்பு போர்ப்ப விரகர்மேற் படையெ ழுந்தான். (௨௮)

இன்னிள வேனில் செல்ல விருங்கடல் சுவற விண்டோய்
சென்னியங் குன்றமெல்லாந் திசைமுகமழற்றச் செங்கேழ்ப்
† பன்னிரு சுடரு மொன்றாய்ப் பகற்கதிர் பரப்பி யாங்கு
மன்னுயிர்த் தொகைவெ தும்ப வந்தது முதிய வேனில். ()

உருகெழு ‡ காலச் செந்தீ யுருத்திரன் றலையெ டுத்து
வெருவர விழித்து நோக்க வெந்தழல் கொழுந்து விட்டுப்
பரவைமா நிலத்தில் வந்து பற்றிய தென்ன வெய்யோ
னெரிபடு கதிர்ப ரப்ப விருநிலங் கொதித்த தன்றே. (௩௦)

வெந்தழ லிலத்து வெண்டேர் மென்புன லெனம யங்க
விந்திர சாலஞ் செய்த தெறிவளி மரமுந் தீய
நந்தலில் பெருஞ்சி றப்பு நல்குகண் ணோட்ட மில்லாச்
சிந்தையர் கடுஞ்சொல் லென்னத் தீமுகந் திறைத்ததன்றே.

---

* வண்டு சுரும்பு தேன் ஞிமிறு - கருவண்டு பொறிவண்டு தேன்வண்டு பொன்வண்டு என்னும் வண்டின்பேதங்கள்.

† பன்னிருசுடர்கள் - தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவச்சுவான், பூடன், சவித்திரு, துவட்டன் என்போர்.

‡ காலச்செந்தீயுருத்திரன் - காலாக்கினியுருத்திரர்.

நீடழல் வெஞ்சு ரத்து நீரின்றி நாவு லர்ந்து
வாடுபு நிழல்பெ றாது வருந்துபு திரியு மான்கள்
கோடிய கோல னாகிக் குடிகெட வலைக்குங் கல்லார்க்
கூடிய வறனில் வேந்தன் குடைபெறாக் குடிக ளொத்த. ()
நெடுநெறி மரங்க ளெல்லா நீணிதி யோடு சுற்றத்
தொடர்புடை யவர்போன்மக்கட் டொகுதியாற்சூழப்பட்ட
தொடுகழல் கிழிக்குங் கூர்ங்கற் சுடுபர லொடுவி ராய
வடுதழற் சுரங்க ளெல்லா மாள்வழக் கற்ற வன்றே. (௯௩)

கலிவிருத்தம்.

இனைய வாய விருவகை வேனிலு
மனல்செய் நாள்களி னாரழ லைந்தினுட்
புனலெ னுஞ்சொலும் போக்கித் தளர்விலா
முனிவ ரோறு முழுத்தவ மாற்றினன். (௯௪)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குயினொலா மன்ன மென்னக் குரைகட னுடிச் சென்று
வயினிரு புடையும் விம்ம வாய்மடுத் துண்டு தோகை
மயில்கள்போற் குன்ற நாடி வந்துநீள் சிமய முற்றி
வியனிரு விசும்பெ ழுந்து விரிகட லுமிழ்ந்த மன்னோ. (௯௫)
அருவரைக் குலங்க ளெல்லா மருவியந் தும்பை சூடிக் [கள்
கருவிமா மழைத்தோ லேந்திக் கடுமின்வாள் விதிர்த்துத்தங்
கிரிசிறை யறவெ றிந்த விண்ணவன் றன்னோ டேற்றப்
பொருதர முயல வன்னான் பூஞ்சிலை வளைத்தா னன்றே. ()
தடங்கடல் குறைய வுண்ட * தழங்குரற் கொண்டல்
வான, மடங்கலுங் கவிந்து விண்டோ யடுக்கல்கள் புதைய

* தழங்குகுரல் என்பது தழங்குரலெனத் தொக்குநின்றது.

நின்று, சூடங்கொடு சொரிவ தென்னக் குளங்கள்கோ டு
டைய வெய்யோன், கடுங்கதி ருலகம் வேட்பச் சோவென
ச் சொரிந்த தன்றே. (௩எ)

கொடிநுடங் கொளிசெய் மின்னுக் கூத்தியர் வான ரங்கத்
திடிமுழா முழக்கம் விம்ம வெழில்பட வாடி யாடிப்
படுகடல் குறைய வுண்டு பாய்புய லெழினி யுள்ளாக்
கடிதுபுக் கொளித்தன் மௌவல் கண்டிள முறுவல் பூத்த.

கருமுகிற் பட்டு டுத்துக் கடுக்கைமா மலர்ப்பொன் பூண்டு
குருதிமெய்க் கோபச் செய்ய குருமணி யணிந்து முல்லைத்
திருநகைக் காந்த ளங்கைத் தீம்புனற் குமிழிக் கொங்கைப்
பொருவினற் கார்ம டந்தை புவிக்கொரு செவிலி யானாள்.

வரைமிசை மேகம் போல மனைகண்மேற் றூமஞ் சூழ்ந்த
வருவியங் குன்ற மென்ன வானைக ணனைந்து நின்ற
பரிதியம் பறவை போலப் பற்றுடைத் துணைபி ரிந்த
தருமலர் நெடுங்க ணல்லார் குவிமுலை சுகமி ழந்த. (௪௦)

கலிவிருத்தம்.

சீதநுண் டுளியெனுந் தீய தண்டமும்
பாதக வடங்கைவன் பாச முங்கொடு
காதலர் துணையொரீஇக் கலங்கு வோர்கண்மேற்
கூதிரொன் றொருபெயர்க் கூற்றி றுத்ததே.

வருமுலை மகளிரும் வரைகொண் மார்பரும்
பிரிவென வுரைத்தற்கும் பெரிது முள்ளஞ்சிப்
புணர்பட முயக்கொடு பொழுது போக்கினர்
விரிசிறை யன்றிலின் மிதுன மென்னவே. (௪௨)

உடலலை குளிரினுக் குடைந்த வில்லவர்
தடவிினு ணெருப்பினைத் தணத்த லஞ்சினார்
கடவுளர் பசிப்பிணி களையும் வேள்வியிற்
சுடரழல் பிரிகலாத் தொழுகு லத்தர்போல். (௪௩)

தண்டையஞ் சிறடித் தருண மைந்தரும்
வெண்டயிர் வெண்ணெய்மோர் வெறுத்து வேட்டன
ருண்டொறும் வெய்யன வுணவு நீரிடங்
கொண்டன வுயிர்களுங் குளிர்க்கு வடந்தவே. (௪௪)

எரிசுடர் நெருப்பைநீ ரொன்ன வேட்டனர்
தருகுளிர் நீரினைத் தழலி னஞ்சினா
ரிருசெவி களுந்துகி லிறுகச் சுற்றுபு
விரணிலா மலறபட மெய்ப்பை புக்கனர். (௪௫)

மேற்படி வேறு.

இன்ன வாகிய காலமி ரண்டினு
மன்னர் நீழ னளிர்சுனை யுட்புகா
மன்னு மாதவன் வாயள வும்புன
றுன்ன நின்று துளங்கல ஞேற்றனன். (௪௬)

மேற்படி வேறு.

திருமலர் முதலிய் இலைப்பப் புன்புலம்
வருவன பயிர்சில மகிழ வந்தன
விருபனி யிருதுவும் யாவர் யாவர்க்கு
மொருங்கிகர் நடையின ருலகிற் றேரினே. (௪௭)

கன்னைக லுலிசெலிசன் கலைவுறிய தண்பனி
விண்ணுயர் வரைகளும் வேலை ஞாலமு

மண்ணனீ டிமயமு மதனைச் சூழ்தரு
மண்ணுமா யினவெண் மருளச் செய்ததே. (சஅ)

வளர்பசும் புற்செறி வயின்றொ றும்பனித்
துளிசுட ரிளங்கதிர் தொடவி ளங்குவ
வொளிர்மர கதத்தக டுறவ ழுத்திய
நளிகொள்செம் மணிகளை நகுதல் செய்யுமே. (சக)

தரவுகொச்சகக்கலிப்பா.

இவ்வகைய பனிப்பருவ மிரண்டினுந்தண் பனிக்குளிர்மெய், வவ்வுபொழு தலைபுரட்டும் வான்புனலி னின்றுமெல்லின், வெவ்வெயில்கூ ரமயத்து வெந்தழலி னிடைநின்று, செவ்வியமெய்ப் பொருளுணர்ந்தோன் றிருந்தியமா தவம்புரிந்தான். (ருo)

கலித்துறை.

இன்ன வாறருந் தவஞ்செய விந்திரன் முதலோ
ரொன்ன தோமுனி கருத்தெனத் தெருமர லெய்தி
யன்ன வூர்தியை யடைந்தன ரவனவ ரோடுஞ்
சென்னி வான்றொடுங் கயிலைமால் வரையிடஞ் சேர்ந்தான்.

நந்தி வானவ னருள்பெறீஇக் கோயிலி னடவா
வந்தி வானிறத் தண்ணறன் பேரவை யணுகிச்
சந்த மாமலர்த் திருவடி பலமுறை தாழ்ந்து
முந்து மாரண மொழிகளாற் பழிச்சுதன் முடித்தே. (ருஉ)

ஐய வென்கொலோ கருதிய தினைத்தென வறியேன்
செய்ய வார்சடைக் குறுமுனி செடும்பகல் செல்ல

வெய்ய நோன்புசெய் கின்றனன் மழைமதா வேற்கட்
டையல் பாகமற் றவற்கரு ளெனவுரை தந்தான். (௫௩)

தோட லர்ந்ததா மரையினோன் சொல்லுதல் கேட்டுக்
கோடல் வெண்பிறைக் கண்ணியோன் கூறுமற் றொன்று
நாடி னானல னகத்திய னமதுதென் கயிலைக்
கோடு நீர்நதி வேண்டின னருந்தவ முழக்கும். (௫௪)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விண்பயில் கடவுட் கங்கை விடுக்குது மவன்பா னீபோய்க்
கண்களி கொள்ள நின்று கருதியாங் கதனை யீதி
தண்கம லத்தோ யென்று சாற்றினான் விடைகொள் வேதா
வண்சிறை யன்ன மூர்ந்து வந்தனன் முனிமுன் னின்றான்.

நிற்றலு மெழுந்தி றைஞ்சி நீள்சடை முனிவ னேத்தப்,
பொற்றட மலரி னானீ புகல்பொரு ளுரைத்தி யென்ன, விற்
றிலாநதியொன்றைய வேண்டினன் கயிலைக்கென்றான், சொ
ற்றனி ரியறன்கேள்வன் சுடர்பயில் விசும்பைப்பார்த்தான்.

பொலங்கர் முனிதவத்துப் பொங்கழல் சுடக்க லாந்
து, மலைமிசை யொழுகிற் றென்ன மணிமிடற் றிறைவன்
சென்னி, யலைபுன லிதழிப் பொற்றா தளைந்திழிந் தென்னப்
பொன்மை, குலவிய நீர்விண் ணின்று குன்றின்மேற் குதித்
த தாங்கே. (௫௭)

ஒலிகெழு தீர்த்தங் கண்ட வுறுதவக் கிழவன் பன்னாள்,
மலடிருந் தரிது நோற்று மணிமகப் பெற்ற தாய்போ, லல
கில்பே ருவகைக யானா னதற்கயன் பொன்மை யோடு, கலி

யுடைமையிற்பேர் பொன் * மு கரியென வுரைத்துப் போ
னான். (௫௮)

மலையிளந் தகிறேக் காரம் வழைகழை திலகம் வேங்கை
பலவுசண் பகமா ரஞ்சேப் பனைமுத லியபெ யர்த்துக்
கொலைகெழு விலங்கி னீட்டங் கொன்றுபன் மணிவ ரன்றி
யொளிபட விழிந்து நீத்த மொழுகிய திருந தித்தே. (௫௯)

கலிவிருத்தம்.

மன்றன்மெய்ப் பொருள்புணர் மனத்த ரேற்றலி
னன்றுதொட் டவ்வரை யகத்தி யாசல
மென்றொரு பெரும்பெய ரெய்திற் றென்பவாற்
குன்றுறழ் புகர்முகக் கொலைவல் யானையோய். (௬0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

துடிவயிர் தொண்ட கம்வே ஞெடுகணை வரிவில் லாவங்
கடியுடைப் பார்வைப்பன்மா களிற்றுவெண் மருப்புலக்கை
யிடிபடு கறங்கா மூரத் தெழிலுரன் முதல வெளவி
வடிமுனைப் பகழி வேடர் வாழிட மழித்த தன்றே. (௬௧)

அரிதொரு வகைய னுய்ந்த வாய்ச்சியர் சுலவி நின்று
வரிவளைக் காந்த ளங்கை வருமுலை புடைத்தி ரங்க
வெருமலி மறுகி னண்ட ரிடம்படு மணிமி டற்று
நிரையொடு கவர்ந்து காட்டு நிலமெலாம் பரந்த தன்றே.

விரிதலை நிலங்க டந்தோன் வேங்கடத் தருக டைந்து
பரசுரா மேச்ச ரத்தின் பாலடைந் தெழிற்கா ளத்தித்
திருமகட் கார மென்னச் சிறந்துநீத் திசைதி ரும்பிப் [றே.
பொருவிலோங் கார மூதூர் புகுந்துபோய்க் கடல்டுக் கன்

* முகரி - ஒலியையுடையது.

### கலிவிருத்தம்.

குறுங்குட முனிவரன் குன்றி ழிந்துநீள்
கறங்கலை மாநதிக் கரையி லண்ணறன்
சிறந்தநல் லுருவமாஞ் சிவலிங் கம்பல
நிறைந்தபே ரன்பொடு நெறியிற் றாபித்தான். (௮௪)

வீழ்துணை யொடுநதி வேந்தின் றாயசீர்
மூழ்குபு கயிலையின் முக்க ணனடி
தாழ்பவ னொருசிலா தலத்தி ருந்தனன்
சூழ்சடை முனிவரர் துவன்றி யேத்துவார். (௮௫)

ஐந்தழ னடுவணின் றரிது நோற்றிவட்
சிந்தரும் பிறவிநோய் தெறும ருந்துநீ
தந்தனை யுய்ந்தனந் தமிய மாதலா
லெந்தைநின் னருளினுக் கெல்லை யுண்டுகொல். (௮௬)

இருசுடர் வழக்கற வெழுந்த விந்தமாங்
கருவரை புழுதிமேற் * கழலி னாழ்த்தினை
மூரிதிரைப் பெருங்கடன் முழுது முண்டனை
பெருமநின் னாற்றல்யாம் பேச வல்லமோ. (௮௭)

கண்ணுத றனக்குநர் கணாதி பர்க்குமற்
றெண்ணரும் யாவர்க்கு மிணையென் றுன்கணே
மண்ணிலை நிறுத்துதல் வைத்திட் டானெனி
லண்ணனின் பெருமையா மளக்கற் பாலமோ. (௮௮)

கனவிலு நின்னலாற் லைதொ ழாதுநின்
னினைவினி லொழுகுமிக் கிரில் கற்பினு

---

* கழல் - கழற்காய்.

டனைமனை யாப்பெற்ற தாவில் சீர்த்தியோய்
மனையற நினைதலான மற்றொன் றுண்டுகொல். (௬௯)

இற்றைநாள் வரையிவ ணிருந்த நன்மையாற்
பெற்றனங் காண்டரப் பெரும நின்னடி
யுற்றன முடமையி னுறுதி யென்றனர்
சொற்றமிழ் முனியவர்த் துதித்தன மேயினன. (௭௦)

மறைமுடிப் பொருளது வரம்பு கண்டநல்
லறிவுடை யடிகளும் மருளி னனறுகொல்
பெறலரு நதியிது பெற்ற தனறெனிற்
சிறியனேற் கிதுபெறு திறமு முண்டுகொல். (௭௧)

முடிச்சடை முனிவிர்நீர் முன்னி னஃதொரு
† கடிப்பகை யாயினுங் கடவுட் குன்றமா
ம்டுககலு ‡ மையவி யாகு மன்னனும்
மிடத்தலைந் தனியனு மிறப்ப மேம்பட்டேன். (௭௨)

கொன்றையஞ் சடையருட் குன்றந் தெய்வமாத்
தென்றிருக் கயிலைவாழ் தேய மாப்பெற்ற
மின்றிகழ் சடையிர்நும் மேன்மை யல்லுகஞ்
சென்றிட வேத்தினுந் தீர்தற் பாலதோ. (௭௩)

எனவவர்ப் புகழ்ந்துபி னிந்த மாநதிப்
புனலினுட் படிந்தவர் புனித மூர்த்தியங்
கனைகட லெழுந்தவர் கண்ணு தற்பிரான்
றனதரு ளொழுக்கமே தாங்க மாநதி. (௭௪)

---

† கடிப்பகை ‡ ஐயவி - கடுகு.

பரம்பொருள் யோகியைப் பசுவை யீருயிர்க்
கருங்குழன் மகளிரைக் கடவு ளேற்றினைப்
பெருங்கொலை புரிந்தவ ரேனும் பேணியிவ்
விரும்புனற் றோய்வரோ விருப்பர் தேவராய். (௭௫)

சிறந்தவிந் நதித்துறை சென்று மூழ்குந
ரிறந்தபிற் றலையினீ ரேற்றங் கொள்பவிப்
பிறங்குநீர் தோய்ந்தபுட் பெறுமெல் லோதிம
மறங்கெழு கலுழனும் வாக னங்களே. (௭௬)

தன்னிடை மீன்களைத் தலைய கன்றவான்
மன்னுமீ னுக்குமிவ் வயங்கு மாநதி
நன்னர்நீர் விடாதுதோய் நலம்பெற் றீர்கணி
ரன்னது பாவியே னடைந்தி லேனென்றான். (௭௭)

இன்னண மதன்சிறப் பெடுத்துக் கூறியம்
மின்னுறழ் சடையர்பால் விடைபெற் றூரமு
தன்னதீந் தமிழ்வள ரடுக்க லெய்தினான்
கன்னன்மென் மொழியொடு கலச யோனியே. (௭௮)

ஆடக முகரிதா னுண வப்பெயர்
நீடிய வழுக்கற நீக்கு நீரதாய்ப்
* பாடிமிழ் பனிக்கடற் பரவை மாநிலத்
தொடைமா களிற்றினொ டொழுகு மென்பவே. (௭௯)

கடவுணற் பதிகளுட் களிற்றுக் காடென
வுடைதிரைக் கடனிலத் தொழுகும் யாற்றினுண்

---

* பாடு - ஓசை.

முடிவில்சீர்க் காஞ்சன முகரி மிக்கதா
லடையலர்த் தேய்த்திகூ ரலங்கல் வேலினாய். (௭௦)

கலித்துறை.

வேழ வெண்மருப் பாதிய புறப்பொருண் மேவிக்
கேழ்கொ டாமரை முதலிய் வகப்பொருள் கெழுமித்
தாழ்வில் சீர்புணர்ந் தின்னொலி படநடை தந்து
வாழி நாவலன் செய்யுளிற் றிகழுமம் மாநீர். (௭௧)

தரளம் பொன்மணி சந்தன மலரிவை தாங்கி
வரைந றுங்கடல் வயிற்படர் கடுவிசை வானீர்
பெரிதும் பொற்புற வணிந்துதாம் பிறந்துழி நின்று
மருவுங் காதலர் பாற்புகு மகளிரை மானும். (௭௨)

கவரி வெண்மயிர் சுமத்தலி னெறிதிரைக் கங்கை
யவிழ்ந றுந்துண ரசோகலர் விரித்தலி னரவத்
தவழ்பெ ருந்திரைச் சோணைமென் பீலிக டரலாற்
குவல யம்புகழ் யமுனையொத் தொழுகுமக் குளிர்நீர். (௭௩)

திரைகொண் மெல்லுரு வளைந்துதன் வாய்நுரை சிந்திப்
பெரித லைந்திரு முதலையும் வயின்வயிற் பெருக்கி
வரவு கண்டவர் மிகக்க மலர்தலை யுலகிற்
பொருவில் பொன்முக ரிப்பெயர் மூதியவள் போந்தாள். ()

செய்ய குங்குமத் தான்முலை நிலமெழில் செய்து
வெய்ய தித்திலத் தோடிரு மருங்கினு மிளிர
வைய பொற்குரு கிரங்கமா தரங்கங்க ளசையத்
தைய லாடக முகரிதா னடக்குமித் தலத்து. (௭௫)

நிறையு டைப்பொல முகரிதான் செலவினி னீங்கா
துறமு வர்ப்பொடு நிலைத்தலை தனைபதி யுடனே
ரிறைவெ றப்புமின றொழுகுமா னிலைபெயர் வில்லாச
செறிகு லத்துதித் தார்க்கது புதுமையோ தெரியின. (௮௬)

முதிர்க லைப்பெரு மதியவெண் குடையுடை முடியிற்
றதைப சுந்தழை வேய்க்கொடி தழங்கும்வெள் ளருவிப்
புதிய நீள்பெருஞ் சாமரை யகத்தியப் பொருப்பாளு
சிதைவி றேர்க்கொரு வடமெனத் திகழும்பொன் முகரி. ()

தத்து வங்கடந் தொளிர்கின்ற முக்கணன் றன்னோ
டொத்த செந்தமிழ் முனிவரன பற்பக லுழந்த
மெய்த்த வந்தர வந்தவிவ் வாற்றொடோர் வேந்த
னுற்ற னோனபிவட் டாதவோர் கங்கையோ வொக்கும். ()

குடதி சைக்கட லுடைந்தொரு வழிக்கொடு குணாது
கடல்வ யிற்புக வெழுந்தென வெழுந்தவிக் கடுநீ
ருடனெ ருத்தனுண டஞ்செவி யொழுக்கிய நீருங்
கொடிக விழ்த்தசெங் நீருமோ நிகர்ப்பன கூறில். (௮௯)

இடன கன்றவிவ் வாறுதன் கட்படா விறந்த
முடிவில் வெஞ்சினக் குஞ்சர முதலிய வலற்றி
னுடலை வெண்டிரைக் கருங்கட லுய்த்துமன் னுயிரைக்
கடவுள் வெள்ளியங் குன்றின்மே லேற்றிடுங் கடிது. (௯௦)

உலகி லெங்கணு மில்லதோ ரதிசய மொன்றித்
தலைமை கொண்டபொன் முகரியுட் டாழ்ந்தவர் யாருந்
தொலைவி றுன்பங்கள் யாதருஞ் சூழ்வினைப் பிறப்பா
மன்னெடுங்கடற் கரையினை யெறுவ ரன்றே, (௯௧)

இன்ன வாறுபொன் முகரியின் சிறப்பினை யிசைத்துக்
கன்னல் வார்சிலை மதநிறெறு கனல்விழி கரந்தோ
னென்ன லார்தமக் கசனியே றனையவே லுரவோய்
மன்னு தீர்த்தமி தன்றியு முளவென வகுப்பான். (௯௨)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இருவினை மலைதொலைக்கு மிந்திர தீர்த்தம் பாவ
வரவடர் மயூர தீர்த்த மாரணூர்ப் பிறவி யென்னு
முருகெழு புரந்தி யூட்டு முருத்திர தீர்த்தம் பேழ்வாய்
வெருவரு தழற்கட் கூற்றம் வெல்லுமார்க் கண்ட தீர்த்தம்.

அரகர தீர்த்தம் யாரு மவாவுமோ கினிதீர்த் தம்வெண்
டிரையெறி தருமா காள தீர்த்தமென் றிவைமுன் னாய
பரமபுண் ணியதீர்த் தங்கள் பலபடிந் தவரை விண்ணோர்
சிரந்தொழ விருத்தல் செய்து திலவுமாற் புலவு வேலோய்.

இனையதீர்த் தங்க டம்மி லீகையங் கலுழி தன்னிற்
கனலியை மதியைப் பாம்பு கவருநாண் முதலா யுள்ள
தினவிசே டத்தின் மூழ்கல் செய்தவர் பெறுப வாலந்
தனவிடை நெடுநா ளேற்று மடைதரப் படாத வின்பம். ()

என்றுபொன் முகரி யாற்றி னியல்பொடு மற்று முள்ள
மன்றன்மா மலர்த்தீர்த் தங்கள் வகுத்தன னிறைவன் கூற
வென்றிவேற் குரிசி லுள்ள மிகமகிழ்ந் தையவின்னு[ தான்.
மொன்றுநன் கதைதொழும்பற்குரைத்தருளென்னத்தாழ்ந்

கலிவிருத்தம்.

தீதில்பொன் முகரியின் செய்தி கூறினும்
வேதியன் கதையினி விளம்ப லுற்றனம்

யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான். (கூஎ)

பொன்முகரிச்சருக்கமுற்றிற்று,
ஆகத்திருவிருத்தம் - உஎ௮.

சிவபெருமான் பார்ப்பதியைத் திருமணமுடித்தற்பொருட்டு, காலாக்கினியுருத்திரர், கூஷ்மாண்டர், ஆடகேசர், வைரவர், வீரபத்திரர், ஐயனார், ஏகாதசருத்திரர், புத்தியட்டகர், அட்டமூர்த்திகள், குண்டோதரர்முதலிய கணத்தலைவர்களும், பிரமவிட்டுணுக்களும், இந்திரன்முதலிய தேவகுழாங்களும், அகத்தியர் காசிபர் கௌதமர் பாரத்துவாசர் வசிட்டர் விசுவாமித்திரர்முதலிய முனிபுங்கவர்களும், நந்திதேவர்முதலிய பரிசனங்களும் புடைசூழ்ந்துவரவும், விநாயகக்கடவுள் பூதகணங்களோடு முன்னேசெல்லவும், இடபவாகனத்திலெழுந்தருளி, மங்கலவாத்தியமுழங்க, பர்வதராஜன் எதிர்கொண்டுபணிய, இமயமலையையடைந்து, அவரவரையும் தக்கவாறிருக்கும்படிபணித்து, சிங்காசனத்தில்வீற்றிருந்தருளினார். அங்கே எவ்வுலகத்திலுமுள்ள கணங்களெல்லாம் ஒருங்குநெருங்கலால், தென்பூமியுயர்ந்து வடபூமிதாழ்ந்ததாக; அப்பெருமான் அகத்தியமுனிவரை அருகழைத்து, அருட்பார்வையளித்து, "மாதவனே, இப்பூமியானது சமப்படும்படி நீசென்று, பொதியமலையிலே தங்கவேண்டும்; அல்லையேல், நாமே நொடிக்குள்ளே செல்லல்வேண்டும்." என்று கட்டளையிட்டருளினார்.

அதுகேட்டமுனிவர்வணங்கி, வாய்புதைத்துநின்று, "கருணையங்கடலே, திருமால்முதலிய தேவர்கணிற்கவும்

நாயிற்கடையேனிடத்துவைத்த திருவருட்பெருக்கினாற் பணித்த ஏவலை அத்திருவருள்கொண்டுமுடிப்பேன்." என மீட்டும்வணங்கி, * விடைபெற்று, தமதுமனைவியாகிய உலோபாமுத்திரையோடு புறப்பட்டு, திருக்கேதாரம் காசி விரூபாக்ஷம் தாக்ஷாராமபுரம் சந்திபருப்பதமுதலிய தலங்களைத்தரிசனஞ்செய்துகொண்டு, வரும்வழியிலே, தென்கைலையெதிர்ப்பட, ஆராமையால் நமஸ்கரித்துக்கொண்டு, பசுவைக்கண்டுபாய்ந்தோடும் கன்றுபோல நாகலிங்கப்பெருமான் சந்நிதியை விரைந்தடைந்து, நெஞ்சநெக்குருக, கண்களிலே நீராறுதொழுக, புளகமுற்று, கரங்களைக்குவித்துக் கொண்டு நெடுநேரம் பரவசப்பட்டு நின்று, தெளிந்து, பலவிதமாகத்துதித்துநீங்கி, தக்ஷிணாமூர்த்தி ஐஞ்சந்திவிநாயகர் முருகக்கடவுள் ஞானப்பூங்கோதையம்மைமுதலிய மூர்த்திகளைத் தரிசித்து, பலதரம்வலம்வந்து, தர்க்கைமலையிலேறி, அத்தேவியையும் தரிசனஞ்செய்து திரும்பினர்.

பின்பு அவ்விடத்திலே விளங்கித்தோன்றும் அதிசயங்களனைத்தையுங்கண்டு, பேருவகையுற்று, இவ்விடத்திலே நதியொன்றில்லாமையே குறையெனத்துணிந்து, ஆங்குவசிக்கும் அருந்தவமுனிவர்பாற்போய், "சுவாமிகாள், இத்தலத்திலே நதியொன்றழைக்கும்படி எனக்கருளுவீராக." எனப்பிரார்த்தித்து, அவர்களுடைய பூரணகிருபையைப்பெற்று, அத்தலத்திற்கு நான்குயோசனைதூரத்திலே நிருதிதிக்கிலுள்ள ஒருமலையிலேறி, உணவனைத்துந்துறந்து, வேனிற்

* இம்முனிவர் திருமணக்கோலமகோற்சவம் தரிசிக்கப் பெற்றோமில்லையே எனவருந்தி சிந்தித்ததலங்கடோறும் காட்டியருளப்பெற்றமை அவ்வத் தலபுராணங்களுட்காண்க.

காலத்திலே பஞ்சாக்கினிமத்தியிலும், மழைக்காலத்திலும் பனிக்காலத்திலும் வாயளவுஜலத்திலுமிருந்துகொண்டு, பஞ்சேந்திரியங்களை யுமடக்கி, சிவபிரானைக்குறித்துச் செயற்கரியமாதவம் செய்துகொண்டிருந்தனர். அதுகண்டஞ்சிய இந்திரன்முதலியோர் முனிவர்கருத்து யாதோவெனக் கலக்கமுற்று, பிரமதேவனையடைய; அவரும், தெளியாதுஐயுற்று, அவர்களோடு கைலையைச்சேர்ந்து, நந்திதேவரருளால்சிவபெருமான்சந்நிதியை அணுகி, திருவடிகளிற்பலமுறைதாழ்ந்து பரவிநின்று, முனிவரதுநிலைமையை விண்ணப்பஞ்செய்தனர். அக்கடவுள் அவரைநோக்கி, "அகத்தியன் நமது தென்கைலைக்கு நதியொன்றையேவிரும்பி நற்றவம் புரிகின்றான்; அவன்பொருட்டு ஆகாயகங்கையை விடுப்பேம்; நீமுற்சென்று அதனையளிப்பாயாக." என்று ஆஞ்ஞாபிக்க; அவ்வாறேவந்துநின்ற பிரமதேவரை முனிவர்வணங்கி, தமதுகருத்தையறிவித்தனர்.

உடனே அப்பிரமதேவர் ஆகாயத்தைநோக்கி, அங்குநின்றும்வந்த கங்கையானது பொன்னிறத்தோடு முழக்கத்தையும் உடையதாயிருத்தலால் அதற்கு, "பொன்முகரி" எனப் பெயரிட்டுச்செல்ல; அந்நதியானது அகத்தியமுனிவர் தவஞ்செய்தலால் அகத்தியாசலமென்னும் பெயர்பெற்ற அம்மலையினின்றுமிழிந்து, திருவேங்கடம் பரசுராமேச்சரம் என்பவற்றினருகேசென்று, சீகாளத்தியென்னும் திருமகளுக்கு ஆரம்போலச்சிறந்து, அக்கினிதிசையாகத்திரும்பி, ஓங்காரமென்னுந்தலத்தையடைந்து, கடலிற்கலந்தது. அதுநோக்கிய அகத்தியமுனிவர் ஒருபெண் புத்திரப்பேறின்

• றி மலடியாக நெடுநாளிருந்து அரியவிரதங்களையனுட்டித்து ஓர் புதல்வனைப்பெற்றாற்போலப் பெருங்களிப்படைந்து, அம்மலையினின்றுமிறங்கி, உலோபாமுத்திரையோடு ஸ்நானஞ்செய்து, அந்நதிதீரத்திலே பலசிவலிங்கங்களை ஸ்தாபித்து, பேரன்பினால்வழிபட்டு, நாகலிங்கப்பெருமானைவணங்கிக்கொண்டு, ஒருமலையிலே தங்கியிருந்தனர்.

அங்குள்ளமுனிவர்கள் அவரையடைந்து, "எந்தையே, ஐந்தழலினிடையேநின்று அரிதுநோற்று, பிறவிப்பிணிக்கு மருந்தாக இந்நதியைத் தந்தளித்தீர்; இதனாலே யாங்களுய்ந்தனம்; உம்முடைய திருவருளுக்கு அளவும் உண்டுகொல்லோ? விந்தமலையினது வீறையடக்கினீர்; பெருங்கடல்முழுமையும் ஒருங்குபருகினீர்; தென்பூமியைச்சமமாக்கச் சிவபிரானருளப்பெற்றீர்; இங்ஙனமாகிய உமதுபுகழை எங்ஙனம் அளவிடுவேம்: யாம் இன்றளவும் ஈண்டுவசிக்கப்பெற்றேமாதலால் உம்மைத்தரிசித்து இவ்வுடம்பின்பயனையுற்றேம்." எனப் பெரிதும் புகழ்ந்துகொண்டாடினார். அகத்தியமுனிவர் அவர்களை நோக்கி, "வேதமுடிபையுணர்ந்தசுவாமிகாள், உங்களுடைய திருவருளினாலன்றோ இந்நதிகிடைக்கப்பெற்றேன்; அன்றேல்,சிறியேனுக்கு இதுபெறுதற்குரிய திறமையுமுண்டுகொல்லோ? இந்நதி சிவபெருமானது திருவருட்பெருக்காக இருத்தலால் இதில் ஸ்நானஞ்செய்வோர் முத்தியையடைவர்; கொலையாதிபுரிந்தோரும் மூழ்குவரேல் அப்பாவத்தினீங்கித் தேவராவர்; இதிற்குடைந்தவிலங்கு பறவைமுதலிய பிறவுயிர்களும் இயன்றபதவிகளைப் பெறும்; இத்தன்மையுடைய இத்தீர்த்தத்திலே இடைவி

டாததோயும் புண்ணியம்புரிந்துள்ளீர்கள் நீங்கள்: அப்புண்ணியத்தைப் பாவியாகியநான் புரிந்தேனில்லை." என்று அந்நதியின்சிறப்பைக்கூறி, அவர்கள்பால்விடைபெற்று, ஆராமுதன்ன நீந்தமிழ்வளரும் பொதியமலையையடைந்தருளினார்.

யாதவமஹாராஜனே, பகீரதமன்னனது தவங்காரணமாக வந்தமையால் பகீரதியெனவும், பூமியிலேவருங்கால் சன்னுமுனிவரது யாகசாலையின்வழியாய்வர அம்முனிவருண்டு காதின்வழியாகவிட்டமையால் சானவியெனவும் பெயர்பெற்ற கங்காநதியும், விநாயகக்கடவுள் காகவுருக்கொண்டு சையகிரியையடைந்து இவ்வகத்தியமுனிவரது கமண்டலத்தினின்றும் கவிழ்க்கப்பட்ட காவிரிநதியும், இவைபோலும் பிறநதிகளும் தனக்கிணையாகாவண்ணம், இந்நதியானது சிவபெருமானைநிகர்த்த செந்தமிழ்முனிவர் பலபகலருந்தவம்புரிந்து, பரிந்தழைக்கப்பட்டமையால், ஆன்மாக்களினுடைய ஆணவமலவழுக்கை அகற்றிவிளங்குகின்றது. இங்ஙனஞ்சிறந்த இத்தீர்த்தத்திலும், அத்தலத்திலுள்ள இந்திரதீர்த்தம் மயூரதீர்த்தம் உருத்திரதீர்த்தம் மார்க்கண்டதீர்த்தம் அரகரதீர்த்தம் மோகினிதீர்த்தம் மாகாளதீர்த்தம் பாரத்துவாசதீர்த்தமுதலிய பிறதீர்த்தங்களிலும், சூரியகிரகணம் சந்திரகிரகணமுதலிய விசேடகாலங்களில், ஸ்நானஞ்செய்வோர் பஞ்சாக்கினிமத்தியிலே நெடுநாளிருந்து கடுந்தவம் புரியினும் அடையப்படாத இன்பத்தையடைவர்; என்றருளிச்செய்து, அவ்வரசர்வேண்டுகோளின்படியே பிரமதேவர் சரிதத்தைக் கூறத்தொடங்கினார்.

# நான்முகச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகெலாம் படைக்கும் புத்தே ளொருபகற்றனுதலோகத்
திலகொளி விரிக்குஞ் செம்பொ னெரிமணிக்கோயிலுள்ளா
லலர்தரு மாயி ரந்தோட் டாடக மலர்ப்பொ குட்டிற்
பலர்புகழ் நார தாதி படிமத்தர் மருங்கு சூழ. (க)

அடல்கெழு குலிச வைவா ளாயிரக் கண்ணன் முன்னுங்
கடவுள ரிரும ருங்குங் கைகட்டி நிரைந்து நிற்ப
வடிவுடை யியக்கர் விஞ்சை மன்ன *ரீ ரிருகூற் றும்பர்
சுடர்மணி யுரகர் சித்தர் சுற்றினர் நெருங்கி நிற்ப. (உ)

ஏழிசை யுருக்கொண் டன்ன வெழில்கொள்கந்தருவவேந்தர்
யாழிசை யமுத மூற்ற வீர்க்கிடை புகாத கொங்கைத்
தாழிருங் கூந்தற் செவ்வாய்த் தளிரியன் மகளிர் தீம்பா
லாழிவெண் டிரைம ருட்டு மலங்குவெண் கவரி வீச. (ங)

மின்னுறழ் பொற்பி ரம்பு விளங்கிய கையர் முன்னின்
றின்னரென் றுரைத்துக்காட்ட விறைஞ்சல்செய்குநரைக்கா
தன்னரு ளவர வர்க்குத் தக்கவா றீந்து நான்கு [ணுத்
சென்னியம் பொற்குன்றென்னச் சிறந்தினி தரசி ருந்தான்.

அவ்வமை யத்தி னூர்க்கு மலைவிரி கடற்பி றந்த
திவ்விய வமுதுந் திங்கட் செல்வனுண் கலையுங் கூடி

---

*ஈரிருகூற்றும்பர் - ஆதித்தர் உருத்திரர் வசுக்கள் மருத்துவர்; இவர்கள் முறையே பன்னிருவர் பதினொருவர் எண்மர் இருவராகக் கூறபட்டுத் தனித்தனி கோடியராய் முப்பத்துமுக்கோடிதேவர் எனப்படுவர்கள்.

யெவ்வமி லுருக்கொண்டன்ன வெழில்கனிந்தொழுகுமேனிக்
கொவ்வையங் கனிவாய் வாட்கட் குவிமுலைப்பனுவலாட்டி.

இழையிள வெயிலெ றிப்ப விணையடிக் கலன்களார்ப்ப
மழைவள ரைம்பாற் செய்ய வாயர மகளிர் சூழ
விழைதரு கணவ னூர்தி வெள்குமென் னடையால் வந்து
கொழுநனோ டிருந்தாள்செம்பொற்குருமலர்த்தவிசின் மீதே.

இருந்தவ ளவய வத்தி னெழினலங் கண்களார
வருந்திநெஞ் சடங்காக் காதற் கனைகட லுறவ ழுந்தி
மருங்குநின் றவரை யெல்லாம் வல்விரைந்தொருங்குநீக்கிக்
கருங்குழல் வெள்ளை மேனிக் கலைமகட்கொன் றுரைப்பான்.

எனதுகா வமுதே நின்மே லெழுபெரு வேட்கை தீர்த்த
னுனதுரு வொன்றின் மூற்று துயிருடை யோவ மேசெங்
கனியித ழன்ன மேயென் கண்மணிப் பாவாய் பூவாய்
வனமுலை மயிலே நூறு வயங்குருக் கொள்ளா யென்றான்.

பாமகள் கணவன் வேட்ட படியெழு கின்றே னென்னத்
தாமரை மலர்மு கத்துத் தளிரியல் பொற்குன் றன்ன
மாமுலை யரித்த டங்கண் மழையொடு மூரலு மைம்பால்
வாமமே கலைய ணங்கு வடிவொரு நூறெ டுத்தாள். (௯)

பாரதி பதிற்றுப் பத்துப் படிவமு நாலி ரண்டு
கூர்விழியொடுநோக்கிப்பொற்குடத்தினைவறுமையுற்றான்
யாருமி றனியி டத்தி லெதிர்ந்தெனக் களிசி றந்து
தார்மலி குழலி னாரைத் தனித்தனித் தழுவிக் கொண்டான்.

ஆலிங்கனம். எழுசீரடியாசிரியவிருத்தம்.

ஒருத்தியான் முலையா லிங்கனங் கொள்ளு மொருத்தி
பாற் றெரூஉத்தழா லடையு, மொருத்திபாற் சகனு லிங்க
ன மேவு மொருத்திபா னுதன்முயக் கெய்து, மொருத்தியா
ற் றிலதண் டுலமெனக் கலக்கு மொருத்திபாற் பாலினீர்
செய்யு, மொருத்தியான் மரஞ்சூழ் வல்லியிற் புல்லு மொரு
த்திபாற் குதிரையேற் றுறுமால். (கக)

சுவைத்தல். அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஒருகொடி யிதழ்மற் றோர்கொம் பொளிநுத லொருமா
ன் கண்க, ளொருகிளி நாவோர் மஞ்ஞை யொண்கவு ளோ
ர்மின் கண்ட, மொருபிடி மார்போ ரன்னங் கையடி யோர்
பொன் கொங்கை, யொருகரும் பல்கு லோர்தே னுந்திதந்
தளிக்க வுண்ணும். (கஉ)

நகக்குறி.

விளங்கிழை யொருத்தி பொம்மல் வெம்முலை யினுமிடற்று
மிளம்பிறை புலிநகத்தோ டிருத்துமோர்பொன்னம்பாவை
வளர்ந்துயர் நிதம்பத் தின்கண் மண்டல நிறுத்துமோர்மா
துளங்கவர் முலைப்பொ ருப்பி னுறத்துமான் மயூர பாதம்.

ஒருகிளி மழலை யாடன் றெளிர்சுணங் கணிந்த கொம்மைத்
திருமுலை முகட்டிற் றீட்டுஞ் சிறுமுய லடியொ ருத்தி
பெருமுலை யினுமொ ருத்தி பிற்புறத் தினுமொ ருத்தி
யுருவளர் கடித டத்து முற்பல தளம்பூப் பிக்கும். (கச)

பற்குறி.

இலங்கிழை யொருத்தி செய்ய விதழின்மு டகமு மற்றோர்
பொலங்கொடிக்கவுளினுற்கு னகமுமோர்பூங்கொம்பன்னு.

ளலங்கெழிற் கபோலத் தங்க ணக்குகிர் மணியும் வேறோர்
சிலம்படி மயிலி தழ்க்கட் சிறந்தவிக் ழுவுஞ்செய் கிற்கும்.()

பண்ணமர் மொழியி னாளோர் பாவைதன் கைம்மூ ல
த்து, நுண்ணிடை யொருத்தி திங்க ளுதலினு மொரு * வடி
க்க, ஒண்ணுத ளொருடையின் கண்ணு மொருமணி விளக்கி
னைஞ்சின், கண்ணுநன்கணியுமிக்ககவின்மணி மாலைதானே.

கலிவிருத்தம்.

இருடுன்னிய கருமென்குழ லேவன்னகட்கனிவா, யொ
ருபைந்தொடி துடிநுண்ணிடை யொடியப்புடை விம்மூந்,
தரளந்துயல் வருபொன்னுரை தனையொத்தொளிர் திதலை
வருகொம்மைவெம் முலையிற்கரு மாவின்கடி செய்யும். ()

கரணபேதமுதல. அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஒருவர்கட் செய்த தொன்றை யொருவர்கண் மீது செய்யா
துறைதரு கரண பேத முள்ளன வெல்லாஞ் செய்யு
மரிகுயின் மஞ்ஞை செம்போத் தனம்புறாக் காடைகோழிக்
குரலென வொலிசெய் வித்துக் கூடுமூன் னின்ப மோங்க.

அமுதங்கொண் டிருக்கு மங்க மறிந்ததன் றெழிலி யற்றுங்
குமுதங்கொள் வாய்க தப்புக் குவளையங் கண்கண் முத்த
வமைவென்ற தோள்க போல மணிமுலை யிவற்றிற் கன்னல்
கமலஞ்செங்கயல்கள்போலக்கவின்பெறத்தொய்யிறீட்டும்

அஞ்சன மெழுதுங் கண்கட் கலரொடு குழன்மு டிக்கும்
பஞ்சிமெல் லடிகட் கூட்டிக் கிண்கிணி பாட கம்பொற்

* வடி - வடுவகிர்.

செஞ்சிலம் பணியு மம்பொற் றிருமணிக் கலாபஞ் சூழும்
பிஞ்சிள மதிநு தற்குப் பிறங்கெழிற் றிலகந் தீட்டும். (௨௦)

ஊடலுவகை. கலிவிருத்தம்.

தன்னுட னூடுழித் தன்ன லாதொரு
பொன்னனை யாண்முகம் புகன்று நோக்கலிற்
கொன்னவில் படைவிழி சிவந்து கொவ்வைவா
யின்னிசை மொழிகொடா திருக்கின் றாளையும். (௨௧)

உற்றதென் னினக்கென வுறவி லாதுநெஞ்
சிற்றுறை கின்றன மெமைத்தொ டேலெனப்
பற்றிய மலர்க்கையைப் பறித்துப் பேரொலி
சிற்றடி யணிதரச் செல்கின் றாளையும். (௨௨)

தொண்டையங் கனியிதழ் சுவைப்ப வூக்கலுந்
தண்டளிர்க் கையினுன் முகத்தைத் தள்ளிநின்
ஞெண்டொடி யாருள்யா னொருத்தி யல்லனப்
பெண்டிர்பாற் செல்கெனப் பெயர்கின் றாளையும். (௨௩)

ஆடமைத் தோளியோ ரணங்கின் வெம்முலைக்
கோடுமு தழியுரக் குங்கு மத்தொடுங்
கூடிய விழைந்துதற் குறுக நெஞ்சழன்
றோடரி நெடுங்கண்முத் துகுக்கின் றாளையும். (௨௪)

இழைவளர் தன்முலைக் கெழுது தொய்யிலிற்
குழன்மொழி யொருத்திதன் குவவுக் கொங்கைமே
லெழுதிய தழகுவாய்த் திலங்கக் கண்டுதன்
னழகுசெய் தொய்யிலை யழிக்கின் றாளையும். (௨௫)

புலந்தன ளாடகப் பொன்செய் முத்தரிச்
சிலம்பொடு தவளைவாய்ச் செம்பொற் கிண்கிணி
கலந்தொலி யெழவடிக் கமலங் கன்றநீ
ளலம்பொரு தடம்புயத் தூதைக்கின் றாளையும். (உசு)

கூரயில் கவற்றிய குவளைக் கண்சிவந்
தார்கலி முகந்தகா * ரனுக்கு மீர்ங்குழற்
றார்பல சிதறபு தளர்வில் கொங்கைமுத்
தேர்கிளர் வடம்பரிந் தெறிகின் றாளையும். (உஎ)

இளந்தளிர்ச் சீறடி யிறைஞ்சித் தைவந்திட்
டுளங்கொளப் பொய்த்திற முரைத்துச் சூள்பல
கிளந்தினி துணர்த்தினன் கிளைமென் றோடமீஇ
விளம்பரும் பேரின்ப வெள்ளத் தாழ்ந்தனன். (உஅ)

பொலமலர்த் தவிசினோன் பொன்னம் பாவைபோ
லிலங்கிழை நூற்றுவ ரிடத்துஞ் சொற்படாத்
தொலைவறு மரும்பெற லின்பந் துய்த்தனன்
மலர்பல வற்றினு மணங்கொள் வண்டுபோல். (உகூ)

காலமுங் கருதிலன் காண்டற் கொத்ததோர்
வேலையின் றமரரும் வெய்து யிர்ப்பொடு
கோலநீள் கடைத்தலைக் குழீஇயு ணங்கத்தன்
வாலிழை மடந்தையர் வலைப்பட் டானரோ. (௩௦

ஒருமுதற் கடவுளென் றுலகை மேத்துமப்
பெருகறி வார்மலர்ப் பிராற்கும் பெண்மய

* அனுக்குதல் - வருத்தல்.

லொருவல்கூ டாதெனி னுலகர் யாவரே
யரிமதர் நெடுங்கணா ராசை மாற்றுவார். (௩௪)

வஞ்சித்துறை.

இவ்வா றயன்வே, ெறுவ்வா வின்பந்
துவ்வா விளையா, டவ்வே லையினே. (௩௨)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாளொடு பலகை யேந்தி மலைகிளைத் தன்ன கையர்
தீளெரி யிணரி னன்ன நெறித்தகுஞ் சியர்பு லிங்கக் [பல்லர்
கேள்பயில் சுழல்செங் கண்ணர் கிளர்பிறைக் கொடுங்கூர்ம்
மூள்சின முருக்கொண் டன்னார்முடியிருவிசும்புதோய்வார்.

உருமிடிக் குரல ராழி யுண்டெழு பருவக் கொண்மூப்,
புரைகரு நிறத்தர் செம்பொற் பொருப்பினை யெடுக்கு மாற்
றல், வெருவரு மரக்கர் மூப்பா னயிரர் வெய்ய கூற்றும்,
வெரிதுட னடுக்கங் கொள்ளப் பிறந்தனரொருங்குமன்றே.

கலிவிருத்தம்.

பிறந்த தீயர் பெருந்தகை தாண்மல
ரிறைஞ்சி யையமற் றேழ்பெருந் தீவமுஞ்
சிறந்த தீப்பசி தீர்தர வுண்குமோ
கறங்கு மோரேழ் கடலுங் குடித்துமோ. (௩௫)

மேரு வாதிய வெற்பம் மலைகளா
வார வாரத்தொ டாடு மோசுடர்த்
தார கைக்குல மெல்லாந் தடக்கையால்
வாரி வாரியெம் வாயிடைப் பெய்துமோ. (௩௬)

காலநாகங்க ளெட்டொடு காழூரற்
கால நாகங் கலக்கிமு தற்றிசா
பால னாகமும் பாழ்செய்து மோவிழிப்
பால னாகம்வெண் பந்தெனக் கோடுமோ. (௩எ)

(இதன்பொருள்.) கால நாகங்கள் எட்டொடு - வாயுவையுணவாகவுடைய அட்டநாகங்களோடு,— காழ் உரல் கால நாகம் கலக்கி - வைரம்பெற்ற உரல்போலுங் கால்களையுடைய அட்டயானைகளையுங் கலங்கச்செய்து,— முதல் திசாபாலன் நாகமும் பாழ்செய்துமோ—முதற்றிக்குக் கதிபனாகிய இந்திரனது விண்ணுலகத்தையும் பாழ்படச்செய்வேமோ,— பாலம் விழியன் நாகம் வெண்பந்தெனக் கோடுமோ—நெற்றிக்கண்ணையுடையவராகிய சிவபெருமானது கைலைமலையை வெள்ளியபந்துபோலக் கொள்ளக்கடவேமோ - என்றவாறு.

விழிப்பாலனென்பது பாலவிழியனென விகுதிபிரித்துக்கூட்டப்பட்டது. இவ்வாறு பிரித்தற்குவிதி பிரயோகவிவேகநூலுட்காண்க.

மேற்படி வேறு.

அரிதனை மலைத்துமோ வழலொடு லைத்துமோ
தருமனை யொறுத்துமோ தருவர்க் கோறுமோ
வருணனைப் படுத்துமோ வளிகெடுத்துமோ
விருநிதி தேய்த்துமோ வீசற் சாய்த்துமோ. (௩அ)

எந்தைகுற் றேவலொன் றெமக்குச் சொல்கெனக்
கந்தநாண் மலரினோன் கால மன்றியிக்

கொந்தல ரோதியர்க் கூட லாலிவர்
வந்தன ரிவணென மனத்தி லெண்ணினன். (நகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எண்ணிய கமல யோனி யெறுழ்வலி வரைத்த உந்தோ
ட், கண்ணழற் புதல்வர் தம்மைக் கண்மலர் பரப்பி நோக்கி,
விண்ணக டணவு கோட்டு விந்தத்தி லிருமினென்றான், புண்
ணுறு வாட்கை யாரப் பொருப்பின்மேற் றெக்கிருந்தார்.

விண்முழு தளிக்கு நூறு வேள்வியங் கடவு ளாதி,யெ
ண்மரு மிரியப் போரி னேற்றவர் பணிந்து தந்த, வொண்ம
ணிக் குப்பை செம்பொ னுறுசினக் களிறு வாமான், றிண்ம
ணிப் பொலந்தேர் மூன்றூந் திறைகள்பெற் றினிதிருந்தார்.

தடையிலா துலக மெல்லாந் தமதுபே ராணை செல்லக்
கடவுள ரியக்கர் பூதர் கருடர்கந் தருவர் நாகர்
மிடலுடை யசுரர் சித்தர் விஞ்சையர் கின்ன ரோச
ரடிதொழு தேவல் கேட்ப வரக்கராண் டரசிருந்தார். ()

படர்சடை முனிவர் நோன்மைப் பல்லுகக் கவுள்பு டை
த்தார், மடவரன் மகளிர் கற்பின் வாயிடை மண்ண டித்தா
ர், வடுவிலங் தணர்யா கத்தை மரபொழிந் திடவு தைத்தார்,
கடவுளர் சிறப்பை யெல்லாங் காட்டிடை புகத்து ரந்தார்.

கடிகையொன் றினிலோர் வைகற் கடனெலாங் கடிதி
யற்றிச், சடைகுலைந் தாட வோடித் தனித்தனி யரக்கர் பா
ற்போய்க், கெடலருஞ் செல்வ மேன்மேற் கிளர்கென * வா

---

* வாயின்வாழ்த்தல் இங்கே மனவொற்றுமையின்றி
வாழ்த்தலின்மேற்று.

யின் வாழ்த்தி, மடனறுங் காட்சி யையர் வைகலுந் திரிய வன்றே. (சுசு)

அவரவர் செவ்வி நோக்கி யவரவர் வயிற்போய் * வேந்தன், சிவனடி வணங்கு மாபோற் சேணிடை வணங்கி யென்ன, தவறில ணேற்றி நம்மைத் தழல்படச் சிவப்பரோ வென், றவமனில் வெருக்கொடுந்தீ யுள்சுட வொடுங்கிநிற்பான்.

தனித்தனி யரக்கர் கேட்டுத் தலைவிடு மளவும் யாழும்
வனப்பமை மிடறு மொன்று மனங்கொளப் பாடிப் பாடிக்
கனைத்துவண் டிமிர்தார்ச் சேடி காவல ரயர்வு யிர்க்கத்
திளைத்துணைப் பொழுது மின்றித் திரிபவான் மிடறு கம்மி.

பூத்தொசி பொலங்கொம் பன்ன போதரி நெடுங்கட் டெய்வக், கூத்தியர் பாட்டி னுைங் கூத்தினும் புணர்ச்சி யானுந், தீத்தொழி லவர்கைப் பட்டுத் தீர்ப்பரும் வருத்தங் கொண்டார், காத்திரிசிறு குரங்கின் கைப்பட்ட மாலைபோல.

இவ்வகை யும்பர் துன்ப மெய்தவா ளரக்கர் வாழத்
தெவ்வடு குலிச வைவேற் றேவர்கோ னொருநாட் கஞ்சச்
செவ்வல ரமர்ந்த புத்தே டிருவடி யடைந்து போற்றி
வெவ்வலி யரக்கர் தந்த மிகுதுய ரனைத்துஞ் சொன்னான்.

கேட்டலுங் கமலத் தண்ணல் கிளர்ந்தெழு வடவை யென்ன, வாட்டிறற் புதல்வர் தம்மேன் மாற்றருஞ் சீற்றங் கொண்டான், றேட்டல ரலங்கல் விண்ணோர் துயர்கெடவுக்கி ரப்பேர்ச், சேட்டிளஞ் சிங்க வேறச் சீற்றத்தி னெழுந் தன்றே. (சுஙு)

* வேந்தன் - இந்திரன்.

அன்னவன் றன்னை நோக்கி யருந்திற லரக்கர் தம்மை
முன்னவ னொன்று நெஞ்சின் முன்னலை தனைவிற் போர்ந்து
மன்னுயி ரவுணா வெளவி வானவர்க் காத்தி யென்று [ன்.
துன்னரி மான்றேர் தெய்வச்சுடர்ப்படைகொடுத்துவிட்டா

தந்தைதாய் மரைம லர்த்தா டலையினால் வணங்கிப் பூத்தா
யிந்திரா தியர்க ளேத்த வீர்ஞ்சடை முனிவர் வாழ்த்த
வெந்திற லரிமான் றேரில் விண்டொடு முதயத் துச்சி
வந்தெழு பரிதி யென்ன வேறினன் வலவ னுய்த்தான். ()

தன்னிடை யிருக்குந் தேவர் தமக்கிடர் பலவி யற்றுங்
கொன்னவில் படைய ரக்கர் குழுவினுக் கிடங்கொ டுத்த
மின்னுடை முகிற்றோய் கோட்டு விந்தத்தோ டமர்கு றித்துப்
பொன்னகம் வருதல் போலப்பொருப்பினையடுத்ததத்தேர்.

நாற்றிதழ்க் கமலக் கோயி லூன்மகள் கணவன் மைந்த, னாற்றல்சால் பொலந்தே ரீர்க்கு மலங்குளை யரியொழுங்கு, தோற்றமிக் குயர்ந்த செம்பொற் சுடர்செய்மால் வரையீர்த் தெய்தும், பாற்றிரை யெறியுந் தெய்வப் படுபுனற் கங்கை போலும். (ருக.)

ஆயிர மரிமான் பூண்ட வரவத்தேர்க் காலிற் றோன்றி
மீயுய ருலக மெல்லாம் விழுங்கிய துகளி னீட்டம்
பாயொளி மணிசெய் மாடப் பசும்பொனி னுலக மெல்லா
மாயிரு நெடுநீர் சூழ்ந்த மண்ணுல காக்கிற் றன்றே. (ருச)

கலிவிருத்தம்.

கரும்பியிர் தும்பையந் தொடைய லுக்கிரன்
வருந்திற மனைத்தையும் வழாம லொற்றிய

வருஞ்செய லொற்றர்க ளாடல் வாட்படைக்
கருங்கழ லரக்கர்பாற் காலி னோடினார். (ருரு)

கடிதடி வணங்கினார் கறைகொள் வேலினீர்
முடியுடை யமரர்போய் முறையிட் டார்களாற்
றடமலர் நக்கையோர் தனயற் றந்தனன்
மிடலுடை யவனை நும் மேல்விட் டானரோ. (ருசு)

பீடுடை யவன்பெயர் பேசி னுக்கிர
னாடக வரையுற வாடுந் தோளினா
னீடிய சினமெனு நெருப்பு நெஞ்சினன்
பாடிமிழ் கழலினன் பரிதி வேலினான். (ருஎ)

கந்தடு புகர்முகக் களிற்றின் வெம்பகைப்
பந்திபூண் டீர்க்குமோர் பைம்பொற் றேரின
னந்தரத் தவர்குழா மனைத்துஞ் சூழ்தர
வந்தன னிவனென வகுத்துக் கூறினார். (ருஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொல்லிய வொற்றர் மாற்றஞ் செவிப்புலந் துன்னு முன்ன
மெல்லையில் சினத்தீ யுண்ணின் றெழுந்தெனக் கன்சி வந்த
வில்லுறழ் புருவ நெற்றி மேற்சென்ற விதழ்து டித்த
பல்லிதழ் கறித்த வானோர் பகைஞர்கட் குடற டித்த. (ருகூ)

இளையவ னொருவ னம்மே லெழுந்தன னமருக் கென்று
ளெளியவர் நாம லாதில் விருநிலத் தியாவ ரொன்ற
துளிமுகி லுருமி னக்குத் தொடியுடை முன்கை கேளவிக்
* குளிறறங் கடலினார்த்துக் கொம்மென வெழுந்தா ரன்றே.

---

* குளிறல் - ஒலித்தல்.

மணங்கமழ் தும்பை வேய்ந்து மருங்குடை வாள சைத்திட்
டிணங்கிய கோதை கீட்டி யெறழ்விரற் புட்டி லிட்டு
வணங்கிய வூரிவில் லேந்தி வடிக்கணைத் தூணி தாங்கிக்
கணங்கொணாற் படையி னேடுங்கதுமென நிலத்திழிந்தார்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

விண்ணு ரிஞ்சுயர் விந்தமால்வரைவேந்துதன்கணரக்கர்பா
ணண்ணும்வன் றுணையாகவிட்ட நடக்குமால்வரைபோல்வன
கண்ண கன்றிரை யாழி யொத்த கறங்கு மாழிய சாரதி
யெண்ண மேயுரு வாய மாவின வெங்குமோடுவதேர்களே.

கலித்துறை.

பிளிறொலி யிடியாப் பெருமத மழையாப் பிறைக்கோட்டி
னொளிறணி மினலா வுய்த்திடு பாகே யுறுகாலாத்
தளிதரு புயலா யினநிழல் சுளிவ தறுகண்ண
வீளர்பனை புரைகை யினகறை யடிய மதயானை. (சுஙு)

கலிவிருத்தம்.

மண் * ணுமழல் வானின்றியொர் வங்கூழ்கொடு கமலத்
தண்ணார்மல ரோன்றந்தன தரையிற்செலன் முனிவ
கண்ணுடரும் வேகத்தின கதியைந்தின செம்பொற்
பண்ணார்ந்தன நுரைவாயபல் பகைவென்றன குதிரை. ()

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அசிபி லேந்த வடுவி லங்கு மார மாய மார்பர்செங் [மே
தசைபொ திந்த வுடன்மு னிந்து தீரவில் கீர்த்தி யாக்கை
னசைபு ரிந்த குமரர் நெஞ்சு ணாட்பு வேண்டி வாடினார்.
விசய மங்கை குடியி ருந்த வேலர் கோலர் வீரரே. (சுரு)

* ஆம் - அப்பு.

கலித்துறை.

இனைய வாகிய நாற்பெரும் படையிலே டெரிகால்
சினவு வேற்படை யுருமிடித் தன்னசொற் றீயோர்
புனையும் வார்கழ லுக்கிரன் றனக்கெதிர் புகுந்தார்
கனலி வான்புத முதலிய தூளியாற் கரப்ப. (௬௬)

அண்ட * ரண்டர்தம படைத்துகட் படலம்விண் ணளவு
மண்டி மேலெழுந் தமருல கனைத்தையு மறைத்துக்
கொண்ட பேரொளி கெடுத்ததோர் குடிவழி யவர்க்கவ்
வெண்ட குங்குடிக் குணம்வரல் புதுமையோ வெண்ணின்.

பிடிக ளார்த்தன வார்த்தன பிறைமருப் பொருத்தல்
கொடிக ளார்த்தன வார்த்தன கொய்யுளைப் புரவி
துடிக ளார்த்தன வார்த்தன துளைபடு வளைக
ளிடிக ளார்த்தன வார்த்தன பல்லிய மெங்கும். (௬௯)

ஆழி யேழுமொன் றாயெழுந் தன்னவா ளரக்கர்ச்
சூழும் வெம்படைத் தொகுதியு மெரிவிழிச் சுடர்வேற்
பாழி யுக்கிரன் றனிமையும் பார்த்துளம் பதைத்தா
ரேழை விண்ணவ ரென்கொலோ விளைவதென் றெண்ணி. ()

தோம ரம்பர செழுவுமுற் கரத்தொடு சுடர்வா
ளூம முத்தலை பிண்டிபா லங்கதை நகைவே
னேமி வச்சிர முதலிய படைகொடு நிருதர்
மாம லர்த்தவி சுறையின்ற புதல்வனை வளைந்தார். (௭௦)

வளைதல் கண்டுநக் குக்கிரன் வரிசிலை வணக்கித்
தளர்வி லொண்குண மொலிபடத் தெறித்தனன் சமரம்

---

* அண்டர் - பகைவர்.

விளைய நின்ற * தா ரவ்வொலிக் குடைந்தது விசும்பிற்
குளிறு நீயுரு மேற்றினுக் குடையராக் குழப்போல். (௭௧)

அலகை யீட்டங்க ளுணவுபெற் றனமென வாட
விலகு வாட்படை யரக்கரா ருயிருண வேக்கூற்
றுலையு நாமவேற் கூற்றத்தின் வேணவா வொழியப்
பலசி லீமுக மெய்தன னொருதொடைப் படுத்தி. (௭௨)

எய்த வம்பினிற் சுடுதலாற் றேனின மிரியுஞ்
செய்தி யாமென விரிந்தது தூசியச் செய்தி
கைத யங்குவிற் றிவாந்தக னென்பவன் கண்டு
மொய்த ழைந்ததோ ளுக்கிரற்கெதிர்ந்தனன்மொழிவான்.

அண்ட கோடிக ளடுக்குபே ராற்றலம் பலர்யாங்
கொண்ட தோள்வலி யில்லைநீ தமியையெங் குற்றாய்
தொண்டர் தம்பொருட் டெம்மொடிவ் வாறமர்தொடுத்தே
பண்டை யூழ்வழி யிறக்கவந் தாயெனப் பகர்ந்தான். (௭௪)

மாற்ற மங்கது கேட்டலு முக்கிரன் மடவோ
யாற்ற லில்புலி யொன்றினுக் காற்றன்மான் கணங்க
டோற்றல் கண்டிலை போலுநீ யிதுநிற்க துனைவி
னேற்ற ருஞ்சம ருழத்திநீ வல்லையே யென்றான். (௭௫)

என்ற வாசகங் கேட்டவ னெரிபடக் கொதித்துத்
தன்ற வாவலி வில்வளைஇச் சரம்பல தொடுத்தான்
குன்ற வாம்புயத் துக்கிர னெய்தவை குறைத்துத்
துன்ற வாயிரங் கோடொடுத் தவனுட றுளைத்தான். (௭௬)

* தார் - தூசிப்படை.

குருதி பாய்ந்திழி யுடம்பின னனையன்மேற் கோல்கள்
வரையின் மேற்சொரி மழையெனச் சொரிந்தனன் மற்றப்
பொருகணைக்குலம் பட்டகாலையுமதே போன்ற
பரிதி வேலவ னவன்சிலை யிருதுணி படுத்தான். (௭௭)

மற்று மோர்சிலை வளைத்தவன் வார்கணை தொடுப்ப
வெற்றி வேள்சிலை குழையவீர்த் தொருகணை விடுத்தான்
கொற்ற வாட்படை நிருதனு ருயிரையக் கொடுங்கோ
லற்ற நோக்குவெங் கூற்றினுக் கருத்திய தன்றே. (௭௮)

அவனி றத்தனுஞ் சயோத்துங்க னென்னுமோ ரரக்கன்
கவன வாம்பரித் தேர்கடாய்ப் போர்முகங் கலந்து
தவல ருஞ்சிலை வளைத்தனன் சரம்பரம் பரையாப்
புவனம் யாவையும் படைத்தவன் புதல்வன்மேற்றொடுத்தான்.

ஐய னங்கலை யறுத்தவ னடற்சிலை பிடித்த
கைய றும்படி யடுகணை விடுத்தனன் கயவன்
மொய்கொ டிண்கதை யாலெறிந் தானதை முருக்கிச்
செய்ய கோறொடுத் தண்ணலங் கவனுயிர் செகுத்தான். ()

அக்க ணத்துநீ லாங்கனு மடுதிற லரக்க
னுக்கி ரத்தனி வீரனே டெதிர்ந்தன னுருத்துத்
தொக்கவெங்கணை முறைமுறைதொடுத்தவை தொலைத்துச்
சக்க ரப்படை யொன்றுவிட் டானுளந் தருக்கி. (௮௧)

நீண்ட தண்டினு லாழியை நெடுந்தகை யடித்தான்
மீண்டு சென்றவன் சென்னிவீழ்த் தியதது விசையான்
மாண்டு போகுமூ ழுற்றதேன் மருவலர் படைகள்
வேண்டு மோதன தடுபடையடாது கொல் விரைவின். (௮௨)

அலகை பூண்டதேர்ச் சமரகே சரியெனு மரக்கன்
மலரி னோன்மகன் றனையொரு கடிகையில் வானோர்
குலம னுங்கவெல் குவனெனச் சூள்பல கூறிப்
புலவு நாறுவெங் கணைமழை பொழிந்தெதிர் புகுந்தான். ()

வீர னவ்வெலா நிலம்பட வீழ்த்தினன் விரைகோன்
மாரி யிற்பல சொரிந்தன னவனவை மாற்றிக்
கூர்மு கக்கணை பலதொடுத் துக்கிரன் கொடிஞ்சித்
தேரு ருண்டிரண் டியோசனை பின்னிடச் செய்தான். (அசு)

சேவ கன்றடந் தேரினை முன்னுறச் செலுத்தி
மேவ லன்கொள்பேய்த் தேரது வேனில்வாய்ப் பேய்த்தேர்
வீவ தாமென வீதரக் கணைபல தொடுத்தான்
றேவ ரார்த்தன ரரக்கரோ டினர்களெண் டிசையும். ()

தேர ழிந்தெனக் கனல்படச் சீறுபு சண்ட
மாரு தம்புகுந் தெனப்புகுந் தாளித்தேர் வாவிப்
போர்செ யுக்கிரன் றோண்மிசைத் தண்டினாற் புடைத்தான்
வீர னக்கண மரக்கனை வெட்டிமண் வீழ்த்தான். (அஅ)

ஆய வேலையி லெரிசினந் தலைக்கொளா வழற்கட்
சீய மன்னவன் மூடங்குனை மடங்கலந் திண்டேர்
காய முற்படை யரக்கர்தந் தானையுட் கடவிப்
போய திர்த்தினன் மான்குழாத் தகவயிற் புலிபோல். (அள)

அதிர்த்த வவ்வொலி யாலுரு மேற்றினுக் கரவம்
பதைக்கு மாறென நிலத்திடைப் பற்பலர் பதைத்தார்
சிதைக்கு மூழிவெங் காலின்முற் பூளையந் திரள்போ
லெதிர்த்து நின்றனர் சிலர்திசை தொறும்பல ரிரிந்தார். ()

கலிவிருத்தம்.

பாழித்திரள் புயவெற்றிசெய் படையுக்கிர வுரவோ
ஞழிப்பொலி தேரிற்செறி யாளித்திரள் காணுத்
தாழ்கைப்புகர் முகமிக்கிழி தானக்கவு ணெடுங்கல்
வேழக்கண மிரிவுற்றன வெருவித்திசை தோறும். (அக)

துரகம்பல மிதிபட்டன தொடையெனபுக ளொடிய
விரதம்பல சிதைபட்டன வெரிசிந்துற கணிசா
சரரும்பலர் துகள்பட்டனர் தழல்வெம்படை யுடனே
கரடம்பொழி மதகுஞ்சர கணமோடிய வழியில். (கo)

அக்காலையொ ரடல்வேலவ னரிலுண்டவ னென்பான்
புக்கான்மல ரிறைவன்றரு புதல்வன்முனம் விளைவிற்
கைக்கார்முகம் வளைத்தேயடு கணைமாரி சொரிந்தான்
மைக்கார்கடை நாளிற்பொழி மழைபோன்மென வன்றே.

அரவக்கழ லடலுக்கிர னவைமுற்றையு மழியா
விளைமைக்குழல் விசயத்திரு விழை * யப்பினம் விட்டா
னுரவுத்திணி யுவரிக்கட லுருவத்தவ னுருடேர்
துரகத்தொடு துவசத்தொடு துகள்பட்டது துணைவில். ()

தேரிற்றனு மவன்மற்றொரு தேர்புக்கொரு கோடி
வார்வைத்தலை யம்புக்கிரன் † வையத்தரி பலவுஞ்
சோரக்கடி தெய்தானுற தூவற்கணை பலதூய்த்
தார்மற்புய னம்போடுயர் சாபத்தை யொடித்தான். (கக)

சிலையிற்றனு மவன்மிக்கெழு சீற்றத்தின னாகிக், கொ
லையிற்கொடுங் கூற்றன்னதொர் கூர்வாட்படை கொண்டு,

* அப்பு வலித்தல்விகாரம். † வையம் - தேர்.

நிலனுற்றெதிர் வரவுக்கிர னெடுங்தேர்விடுத் தெரிகால், புல
வுச்சுடர் வாள்கொண்டெதிர்புலிப்போத்தெனப்புகுந்தான்.

மேற்படி வேறு.

பலகைதிண் டோளொலி படப்பு டைத்தன
ரிலகுமின் வாள்விதிர்த் திருவர் வீரரும்
வலிகெழு மிறுதிநாள் வளியிற் கொட்புறு
மலையின்வட் டணைமுறை வருதன் மேயினர். (கூரு)

உறுவலிப் பலகையு ளுருவொ டுங்கிநின்
றெறிபடை தடுத்தெதி ரெறிவர் சூள்பல
வறைகுவ ருருமென வதிர்ப்பர் தம்முளே
முறைமுறை வியப்பர்கண் முடிவி சைற்றலார். (கசு)

இன்னணம் பொலங்கழ விலங்கு வேற்படைத்
தன்னிகர் சாமியுக் தருவர் வேந்தனு
மென்னவா ளடுசம ரியற்றி னாரரோ
மின்னுவாள் போழ்ந்தபுண் மிடைந்த மெய்யினர். (கஎ)

ஒருவரி னொருவர்மிக் கூடற்றும் போர்வயி
னெரிசினந் தலைக்கொளீஇ யிலங்கு வாளினாற்
கரியவன் செய்யவன் கையிற் கேடக
மிருதுணி படுத்தினு னேங்க விண்ணுளோர். (கஅ)

அக்கணத் தாழிவா ளனலிற் சீறின
னுக்கிரன் வெய்யவ னுடல மெம்பிரான்
மிக்கொளிர் வேலினால் வெற்பு பேர்ந்தெனக்
கைக்கதிர் வாளினாற் கடிது போழ்ந்திட்டான். (கக)

போழ்ந்தவவ் வேலையிற் புலவர் பூமழை
வீழ்ந்தது நிசிசர வெள்ள மோடிற்றாற்

றூழ்ந்தன ராயினுந் தானை காவலர்
சூழ்ந்ததம் மானத்தாற் றெக்கு முனனின்றார். (க00)

நிற்றலு முக்கிர னிருதர் தங்குல
மிற்றிட முடித்துமென் றெண்ணித் தந்தைபாற்
பெற்றவத் திரத்தினைப் பேணி விட்டனன்
மற்றதவ் வரக்கரை வதைத்தன மேயிற்றே. (க0க)

கலித்துறை.

வேக வெய்யவன் கடுங்கதிர் விரித்தலிற் பசுமை
போகு நீளரில் வனத்திடைக் காட்டெரி புகுந்தாங்
காக வம்புரி யரக்கருட் புகுந்தடர்த் தனறே
வாகை யம்புயத் துக்கிரன் விடுபடை வடவை. (க0உ)

எரிகள் பட்டன கண்ணவர் பட்டன நீர்க்கும்
பரிகள் பட்டன வலவர்கள் பட்டனர் பஃறேர்க்
கிரிகள் பட்டன புகர்முகக் கிம்புரிக் கோட்டுக்
கரிகள் பட்டன பட்டன கொய்யுளைக் கடுமா. (க0ங)

வேல்க ளிற்றன தோமர மிற்றன வில்லின்
கால்க ளிற்றன நாண்களு மிற்றன கடிய
கோல்க ளிற்றன தூணிக ளிற்றகைக் கொண்ட
தோல்க ளிற்றன விற்றன கவசத்தின் றொடர்பே. (க0ச)

கரந்து ணிந்தன வெறழ்வலித் தோளெனுங் கணைய
மரந்து ணிந்தன குறங்குக டுணிந்தன மலர்வேய்
சிரந்து ணிந்தன வடியிணை துணிந்தன தேர்தா
ரூரந்து ணிந்தன துணிந்தன வுறுப்பெலா மொருங்கே. ()

அரண மூன்றையுஞ் செஞ்சடைக் கருமிடற் றண்ண
லெரிகொ ளுத்தியோர் கணத்தினி லழித்தவா றென்ன

முரண ரக்கர்தம் படையெலா நொடிவலா முடித்துப்
பரவு நல்லிசை யுக்கிரற் சேர்ந்ததப் படையே. (௧௦௬)

ஓடி னார்சிலர் திசைதொறு முக்கிரன் புகழைப்
பாடி னார்சிலர் குதித்தல்செய் தார்சிலர் பல்கா
லாடி னார்சிலர் விண்ணவ ரரும்பெறன் முத்தி
கூடி னாரென வுவகையங் கடல்வயிற் குளித்தார். (௧௦௭)

ஐய மன்னதோ னுக்கிரன் சயமக ளிருப்பச்
செய்ய கம்பலம் விரித்தெனச் செம்புன னீத்தம்
வைய மெங்கணும் பரந்துபோய்ப் புகுந்தது மறியு
மைய தெண்டிரைக் கருங்கடல் செங்கட லாக. (௧௦௮)

கலிவிருத்தம்.

பேயி னங்கள் குழுமிப் பிணக்குவா
றீய தம்பசி தீரிய வுண்ணுவான்
மாயி ருங்களிற் றின்குழை வார்செவி
மேய பேரிலை யாகவி ரித்தரோ. (௧௦௯)

குடரி னோடு கொழுந்தசை வல்சியா
வடரு மூளையு மீருளு மாதிய
விடுசு வைக்கறி யாமிக விட்டரோ
கடிது நெஞ்சங் களித்துட னுண்டவே. (௧௧௦)

வெள்ளெ லும்பும் விரல்களும் வற்றலா
வுள்ளு வந்து கறிப்பவு மொண்ணிண
மள்ளி யள்ளி யகடுநி றைப்பவு
மெள்ளி யூன்கவ ளீருள்க டின்பவும். (௧௧௧)

பின்னை கான்மேற் பெறலரி தின்னலுண்
மெள்ள மெள்ள வருந்தி விலாப்புடை

கொள்ள வுண்மின் குடிமின் குருதிநீர்
தள்ளன் மின்னெனச் சாற்றுதல் செய்பவும். (௧௧௨)

மெய் யெலாம்வயி றுக்கி விரிகடல்
வெய்ய தீயின் மிகும்பசி வைத்துணல்
செய்ய வாய்பல செய்யா தொழிந்தவவ்
வைய மாமறை யையனை வைபவும். (௧௧௩)

நின்ற ழற்றுநந் நீள்பசி நீக்குமுண்
குன்ற டர்த்த குருதிவேற் சாமியா
லன்று பெற்ற மதன்பினிவ் வண்ணலா
லின்று பெற்றன மிவ்வுழி யென்பவும். (௧௧௪)

பச்சை போய பதலையுட் பெய்துமுன்
வைச்ச செம்புனல் வாய்மடுத் துண்பவு
முச்சி மட்டு நிறைந்திட வுண்டபி
னெச்சி லோரிக் கெறிபவு மாயவே. (௧௧௫)

மேற்படி வேறு.

ஆடுஞ்சில சுழலுஞ்சில வடலுக்கிர வீரம்
பாடுஞ்சில பணியுஞ்சில பரவைக்கள மெங்கு
மோடுஞ்சில வுகளுஞ்சில வுடலந்தொடர் குடரான்
மூடுஞ்சில கனல்வெம்பசி முழுதுங்களை கணமே. (௧௧௬)

தலையம்மனை யாடுஞ்சில தடமால்வரை யனைய
கொலை மும்மத கரியேறபு குருதிப்புனன் மடுவுட்
சிலதுண்ணென விழுமாழிய தேளைக்கல மெனவே
யொலிமல்கிய கறையாற்றினு ளுய்க்குஞ்சில கடியே. ()

கலித்துறை.

கொட்டும் பதலைகள் கோடுக ளூதுஞ் சிலபேய்கள்
கட்டும் புண்ணீ ரோரிக ளிற்றூற் சிலபேய்கண்
முட்டும் யானை மொய்தலை யூடே சிலபேய்க
ளெட்டுங் கையா லிரதமு ருட்டுஞ் சிலபேய்கள். (கக௭)

கலிவிருத்தம்.

பொங்கு தீப்பசி போக்கிய பேய்க்கண
மங்கை கொட்டியு மாடியும் பாடியுந்
தங்க ளூக்கின மாய்த்தமைச் சூழ்தர
வெங்கு மாடின வெண்ணில் கவந்தமே. (ககஅ)

நிறைசெ ழுங்குரு திப்புன னீண்டகைப்
பிறையி கழ்ந்தகோட் டியானைப் பிணமெலா
மெறித ரங்கத் திருங்கட லுய்த்ததா
லுறுதி மிங்கில முண்டுக ளிக்கவே. (கஉ0)

காமர் தாமரை காம்பில பொற்குடை
யாமை தோற்பர மைங்கதி மாக்களின்
சாம ரைக்குலஞ் சைவல மாக்கறை
நாம மீனெதி நன்று சிறந்ததே. (கஉக)

சிறைவி ரித்தகல் சேணினெ ருங்கிய
பறவை வாய்க்கொள் பசுங்குடர் நால்வது
விறன்ம கட்கு விதானம்வி ரித்துமே
னறும லர்த்தொடை நாற்றிய தொத்ததே. (கஉஉ)

காக நாய்நரி பாறு கழுகினம்
பேய்க ளென்றிவற் றூர்ப்புப் பெருகியே

வேக வேழ மிடைந்த பறந்தலை
பாக சாதனற் கும்பயஞ் செய்யுமே." (கஉ.ங)

இன்ன செங்களத் தெல்லையி கந்துபோய்த்
துன் னும் வானவ ரோத்தினர் சூழ்வரப்
பொன்னி னூடு புகுந்தட னுக்கிரன்
றன் * னை சேவடித் தாமரை தாழ்ந்தெழா. (கஉச)

எந்தை நீபணித் தாங்கவர் யாரையு
நந்து வித்தன னென்னவந் நான்முகன்
மைந்தர் மாண்ட துயரான் மனங்கொதித்
துந் து சீற்றத்தி னுக்கிரற் பார்த்தனன். (கஉரு)

பார்த்த காலைப் பரிதிவே லுக்கிரன்
போர்த்த நால்வாய்ப் பொருகளிற் றீருரித்
தீர்த்த வார்சடைச் செம்மல் விழித்தநாட்
பூத்த வைங்கணை யானெனப் பொன்றினான். (கஉசா)

பொன்றல் கண்டவன் புத்திரர் யாரையுங்
கொன்று நின்ற கொடுமையு மனறியிந்
நின்ற மைந்தனை யும்முயிர் நீக்கினே
னென்று நெஞ்சத் தெழுந்துய ரெய்தினான். (கஉஎ)

அக்கடுந் துய ரோர்வகை யாறிய
செக்கர் மென்மல ரோனுளந் தேறபு
மக்க ளின்மையு மக்கட் கொலையினு
மிக்க பாவமுந் தீர்த்திடல் வேண்டியே. (கஉஅ)

---

* ஐ - பிதா.

அன்னதன்ன மனைத்தினு மேலதா
வென்னு தென்கயி லைப்பொருப் பெய்தியே
புண்ணி யப்புன லாடிப் புரிசடைக்
கண்ணு தற்பிராற் கண்டு வணங்கினான். (கஉகூ)

பின்பு தென்கயி லாயப் பெருவரை
பொன்ப ரந்தொளி பொங்குயர் நீலவெற்
பென்ப வற்றி னிடையிருந் தேவினைத்
துன்ப நீக்குநன் ஞானெபுதொ டங்கினான். (கஙo)

பொறிக ளைந்தையும் புல்லா துளத்தினைக்
கறைமி டற்றிறை காலி லடக்கிவாக்
கிறைவி நோன்பினுக் கேற்றன செய்துதன்
குறிவ ழிப்படக் கூர்தவ மாற்றினான். (கஙக)

அரிய நோன்பிற் கருள்செயல் வேண்டினன்
கருணை யேயுரு வாயநங் கண்ணுதல்
வரத னவ்வழி மால்விடை யூர்திமேற்
சுரிக ருங்குழ லோடெதிர் தோன்றினான். (கஙஉ)

தோன்றல் காண்டலுந் துண்ணென வேயெழுந்
தான்ற மெய்ப்புள கத்த னருவிநீர்
கான்ற கண்ணன் கரைந்துரு நெஞ்சினன்
றேன்ற யங்கலர்ச் சேவடி தாழ்ந்திட்டான். (கஙங)

எழுந்து கைதலை யேற்றி முகிழ்த்துநாத்
தழும்ப வேத்தினன் றண்ணில வெண்மதிக்
கொழுந்த ணிந்தவிற் குன்றின னென்னைநீ
விழைந்த தென்ன வினவி விளம்புவான். (கஙச)

கருணை வள்ளல்யான் காலம்வி சாரியா
தரிம தர்க்க ணரிவைதோ டோய்தல்ான்
முரணு மாற்றலர் முப்பதி ஞயிர
மிருத ஞழி நெருப்பெனத் தோன்றினர். (கநடு)

அன்னர் யாவரும் விந்தத் தடைந்திருந்
தின்னல் செய்தன ரிவ்வுல குக்கெலா
மன்னும் வானவர் மற்றச் செயலெலாந்
துன்னி யென்னொடு சொல்லி யிரங்கினர். (கநசு)

அந்த வேலை யழல்படு வெஞ்சினம்
வந்த தென்வயின் மற்றத னூடொரு
மைந்த னுக்கிர னென்பவன் வந்தியான்
றந்த வேவ றலைக்கொடு போகியே. (கநஎ)

விந்த மால்வரை வெய்யரைக் கொன்றவன்
வந்து நின்றனன் மக்களி றத்தலா
னொந்த சிந்தையி னேக்கினன் பாவியேன்
வெந்தொ ழிந்தனன் மற்றவ் * விடலையே. (கநஅ)

மூக்க ணல்லற மூர்த்திமற் றுதலான்
மக்க ளின்மையு மக்கட் கொலையுமா
மிக்க பாவம் விளைந்தன வுற்றவை
செக்கர் வேணிய தீர்த்திடல் வேண்டினேன். (கநகூ)

என்று வேத னியம்பலு மெம்பிரான்
றென்றி ருக்கயி லாயச் சிகரமீ

---

* விடலை - உக்கிரன்.

நன்று கண்டனே யாதலி னான்முக
கொன்ற பாதகங் கொன்றனே மன்றவே. (கசO)

நமது தென்கயி லாய நகத்துயர்
சிமயம் யாவர்கண் டாரவர் தீவினை
கமல நாதன கனைகதிர் காண்டருந்
திமிர மென்னச் சிதையுஞ் சிதையுமே. (கசக)

எனவி சைத்துமற் றெந்தை பினுஞ்சொலுந்
தனையன் வேண்டுதி யாயிற் சராசரம்
வனையு நான்முக மாசி மகத்துநாட்
கனலி கீழ்பாற் கடற்படு காலையில். (கசஉ)

அந்தண் பொன்முக ரிப்புன லாடியிந்
நந்தொ ளிச்சிவ லிங்கத்தை நண்ணியே
மூந்து நூற்றெட்டெட் டாரு முறைவலம்
வந்தி றைஞ்சனு மற்றத் துணைசெயா. (கசங)

ஐந்தெ ழுத்தையு மத்துணை யோதியே
மைந்த நீமறு மாசி மகத்தின்க
ரிந்த நல்விர தத்தை யியற்றினுற்
சிந்தும் வல்வினைச் சேயைப் பெறுதியால். (கசச)

பிரம நின்னள வன்றிதிப் பெற்றியே
இரித லின்றிவண் செய்தவர் யாவரு
மருமக ப்பே றடைவ ரெனச்சொலிக்
கருணை வள்ளல் கரந்தன னென்பவே. (கசரு)

விரத மவ்வகை வேதிய னாற்றலும்
பொருவின் ஞானயோ கத்திற் புராரிதன்

னருளி னாற்பே ரறிவுடை யோர்மகன்
வரிநெ டுங்கணு மங்கைகட் டோன்றினான். (கஅசு)

வஞ்சிவிருத்தம்.

மல்லன் மைந்தனை வாணியு, மல்லி மென்மல ரையனு,
மெல்லெனுச்சிவிரும்பிமோந், தெல்லையின்மகிழ்வெய்தினர்.

அரிவை பாகனு மவ்வழித், தெரிய வந்து சிறந்ததா,
மரையி னான்பெறு மைந்தனுக், கிரிபு வென்பெயரிட்டனன்.

அணியு மாடர வானவற், கிணையின் மாமறை யீறுசொல்,
புணர்த லுதொரு பூரண, முணரு மெய்யுணர் வுதவினான்.()

எந்தை யேகின னிளையவன், றந்தை தாயடி தாழ்ந்தனன்,
சிந்தை யின்மகிழ் செய்தவர், தந்தி டும்விடை தான்பெறா.

வனமும் யாறுகல் வரையுமாம், புனிதநல்லிடம்போயிராச்,
சனக * னாதியர் தங்களுக், கனக மெய்யுணர் வருளினான்.()

---

இரிபு என்பவர் நிதாகருக்கும் அவர் சனகனாதியர்களுக்கும் மெய்யுணர்வருளினர் எனக்கொள்க. இதனை "விசயங்கள் பரம ஞானம் விளங்கிய ரிபுவு மேனாள், வசையில் சீர் நிதாக னென்னு மறையவன் றனக்கு வந்திங், கசைவிலா வனைய ஞான முபதேசித் தருள்செய் தேகத், திசைபுகழ் நிதாகன் றானுஞ் சனகனா தியர்க்குச் செப்ப, அன்னவர் தாமும் வானோர்க் கருளுட னுணர்த்தா நிற்பச், சொன்னவிம் முறையே ஞானஞ் வழிவழி தொடர்ந்து போந்த, தின்னதோர் பெருமைத் தாய வித்தலமெவைக்கு மேலா, முன்னருஞ் சேவை செய்வார்க் கெளிதினி லுய்தற் பாற்றும்." என்னும் திருக்காளத்திபுராணச் செய்யுள்களானுமுணர்க. இத்திருக்காளத்திபுராணம் சூதமுனிவர் நைமிசாரணியமுனிவர்களுக்கு உபதேசித்தது.

மணங்கொடாமரை வானவ, னணங்க ராவணி யண்ணருள், வணங்கி நுண்ணிடை வாணியோ, டிணங்கு தன்னுல கெய்தினான். (கருஉ)

பகவன் வாழுமிப் பதிமிகப், புகழும் புண்ணிய பூமியின் மிகவு யர்ந்ததால் வேந்திறு, முகம னென்றுநீ முன்னலை.()

என்று ருக்கிரந் தெய்திறை, நன்று கூறலு நாமவேற் குன்றனுன்மகிழ் கொண்டவன், றன்று ணைக்கழறுழ்ந்தனன்.

ஐய வின்னுநின் னருளினுன், மையில் வாரண வனத்திறை, செய்ய காதைகள் செப்பென, வெய்ய வேலவன் வேண்டினுன். (கருரு)

### கலிவிருத்தம்.

ஆதிநான் முகன்கதை யறைந்திட் டோமினி
யோதுதஞ் சிலந்திபாம் பொருத்த வின்கதை
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான். (கருசு)

நான்முகச்சருக்க முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - சகூச.

---

பிரமதேவர் சத்தியலோகத்திலே ஒருபகல் நாரதர்முதலியமுனிவர்களும் இந்திரன்முதலியதேவர்களும் கைகட்டிநிற்கவும், கந்தருவர்கள் யாழிசைபரப்பவும், அரம்பையர் வெண்கவரிவீசவும், பொற்பிரம்பேந்தியகஞ்சுகிகள் முன்னேநின்று இவர் இன்னாரின்னாரென்று காட்டுங்கால் வணங்குபவர்களுக்குத் தக்கவாறு அருள்பாலித்துக்கொண்டு ஆயிரமிதழ்த்தாமரையாசனத்திலே அமர்ந்திருந்தனர். அவ்வே

ளையிலே, பாற்கடலமுதமும் பனிமதிக்கலைகளும் ஒருருக் கொண்டாலொத்த சரஸ்வதியினது அழகின்பெருக்கை விழிகளாற்பருகி, கரையிலாக்காதற்கடலினுளாழ்ந்து, அருகுவாரனைவரையு மனுப்பிவிட்டு, அக்கலைமகளை நோக்கி, "எனதுநாவமுதே, எனக்கு நின்பாலோங்கிய ஆசையைத்தவிர்க்க நினதுருவொன்றால் முடியாது; ஆகையால் நூறுவடிவம் கொள்வாயாக." என்றுரைத்து, அவ்வாறேகொண்ட வடிவங்களனைத்திலும், ஆலிங்கனமாதி அறுபத்துநான்குகலைகளோடும் கலந்தனர்.

அப்போது யாவருமஞ்ச ஆயுதபாணிகளாய் முப்பதினாயிரம் அரக்கருதித்து, அப்பிரமதேவனை வணங்கி, "தந்தையே, யாங்கள் தீப்பசிதீரும்படி ஏழுதீவுகளையும் உண்டு ஏழுகடலையும் குடிப்பேமா? மேருவாதிமலைகளை அம்மனையாக ஆடுவேமா? தாரகைக்குலங்களைத் தப்பாதுவிழுங்குவேமா? அட்டயானைகளையும் அட்டநாகங்களையும் அட்டதிக்குப் பாலகர்களையும் வெல்லக்கடவேமா? எங்களுக்கு ஓர் குற்றேவலை இசைப்பீராக." என்றுகேட்க; அதுகேட்ட பிரமதேவர் நாம் பகற்காலத்திலே இம்மங்கையைச் சேர்ந்ததால் இவரரக்கராக உதித்தனரெனத் துணிந்து, அவரை நோக்கி, "விந்தமலையிலிருப்பீராக." என ஆஞ்ஞாபித்தார். அவர்கள் அங்கடைந்து, இந்திராதிதேவர்முதலியோர்ஏவல் கேட்கக் கொடுங்கோலுடையராகி, முனிவர்தவங்களை முற்றமுருக்கியும், மகளிர்தங்கற்பின் வன்மையைத் தவிர்த்தும், அந்தணர்யாகமனைத்தையுமழித்தும், தேவர்கள்சிறப்பைச் சிலதவுறச்சிதைத்தும், அரசபுரிந்திருந்தனர்.

அந்நாளிலே, முனிவர்கள் அவர்களாணைக்கஞ்சி, ஒரு நாழிகைக்குள்ளே, நித்தியகடன்களை முடித்துக்கொண்டு, சடைகுலைந்தாடவோடி, தனித்தனியவர்களிடஞ்சென்று, இவர்கள் விரைவில் அழியவேண்டுமென்று சிந்தித்துக்கொண்டே, "உங்கட்குச் செல்வம் மேன்மேற்பெருக." என்று வாயால்வாழ்த்தி, நாடோறும் திரிந்துவர; இவர்களோடு வருந்தியுழலும் இந்திரன் ஓர்தினம் பிரமதேவரையடைந்து, வணங்கித்துதித்து, இவற்றையெல்லாமறிவித்தனன். அவர் அதுகேட்டு, மிகவும் கோபித்தவழி, அதினின்றுமுதித்த உக்கிரனென்னும் புதல்வனைநோக்கி, "முதியவரக்கர்களை முன்னவனொன்றுகருதாது வதைத்து வானவரைக்காப்பாயாக." என்றுகட்டளையிட்டு, சிங்கம்பூண்ட ஓர்தேரும், அக்கினியாஸ்திரமும் அளித்தனுப்ப; அவ்வுக்கிரன் தந்தை தாயைவணங்கித் தேரிலேறி, இந்திராதியரேத்த, இருடிகள்வாழ்த்த,விந்தமலையைநோக்கிநடந்தனன். அவ்வுக்கிரனது வன்மைகளையெல்லாம் ஒற்றராலுணர்ந்த திவாந்தகன் சயோத்துங்கன் நீலாங்கன் சமரகேசரி அரிலுண்டவன் முதலிய அரக்கர்கள் கோபக்குறியுடையராய், பலவித ஆயுதங்களையும் கைக்கொண்டு, சேனைகள்புடைசூழத் தேரிலேறியெதிர்த்து, வீராவேசங்கொண்டு, கடுஞ்சமர்புரிய; உக்கிரன் தக்ககணைகளைத்தவறுதுபொழிந்து, தனித்தனிமாய்த்து,மற்றைச்சேனாதிபதிமுதலிய அரக்கர்மீது அக்கினியாஸ்திரத்தைவிடுத்து, அவரனைவரையும் ஒருநொடியிற்றகித்து, தேவர்கள் பூமழைபொழிய, முனிவர்கள் ஆசீர்வதிக்க, யுத்தகளத்தினீங்கி, பிதாவையடைந்து வணங்கி, "எந்தை

யே, தேவரீர்பணித்தவாறே யாவரையும் முடித்துவந்தே ன்." என்று விண்ணப்பஞ்செய்தனன்.

அதுகேட்டபிரமதேவர் மைந்தர்மடிந்த வருத்தத்தால் மனங்கொதித்துநோக்கியவழி, அவ்வுக்கிரனும்மடிந்தொழிய, அவர் பெரிதுங்கலங்கி, அப்புத்திரரையேயன்றி இவனையும டித்த இப்பாவத்தையொழித்து ஒரு சற்புத்திரனையும் பெ றவேண்டுமெனச் சிந்தித்து, தென்கைலைமலையையடைந்து, நாகலிங்கப்பெருமானைத் தரிசித்து, அம்மலைக்கும் நீலமலை க்குமிடையே யிருந்துகொண்டு விடயவுணர்ச்சிகளையகற்றி, அம்பிகைபாகனைக்குறித்து, அரியநோன்புபுரிந்து, அப்பெ ருமான் தரிசனந்தந்தளிக்கவணங்கி, தங்கருத்தைவிண்ணப் பஞ்செய்தனர். அக்கடவுள் "நான்முகனே, நமது தென்கை லைச் சிகரத்தைத் தெரிசிக்கப்பெற்றோரது தீவினை சூரியகிர ணத்தைக்கண்ட இருள்போல நீங்கும்; ஆகலின், நினது கொலைப்பாவமும் நீங்கிற்று; இனி மாசிமாத மகநக்ஷத்தி ரத்திலே சூரியோதயகாலையில் பொன்முகரியிலே மூழ்கி, இச்சிவலிங்கத்தை நூற்றெட்டுதரம் வலம்வந்து, அத்தனை முறை நமஸ்கரித்து, அவ்வளவே பஞ்சாக்ஷரத்தையும் உச் சரித்து, மறுமாசிமகமளவும் இங்ஙனம் அநுட்டித்துவரு வையேல், நற்புத்திரனைப்பெறுவாய்: இது நினக்குமாத்தி ரமன்று; இவ்வாறே அநுட்டித்தோர் யாவருமே புத்திரப் பேறடைவர்." என்று கட்டளையிட்டு மறைந்தருளினர்.

அவர் மனைவியோடு அவ்வாறே அநுட்டித்துவருங்கா ல், ஒரு அரிய புத்திரருதிக்க; அப்பொழுது சிவபெருமான் பிரசன்னராகி, ரிபு எனத்திருநாமந்தரித்து வேதமுடியிற்

கூறப்படும் தமது பரிபூரணத்துவத்தை ஐயமறத் தெளியும் தத்துவஞானத்தையும் அநுக்கிரகித்துவிட் டெழுந்தருளினர். அந்த ரிபுவும் மாதாபிதாக்களை வணங்கி, அவரிடத்திலே மிக்க மகிழ்ச்சியோடு விடைபெற்று, வனம் நதி மலை முதலிய சுத்தஸ்தானங்களிலே போயிருந்துகொண்டு, நிதாகரென்பவருக்கனுக்கிரகித்து, அவரைக்கொண்டு சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் முதலிய முனிவர்களுக்கு தத்துவஞானத்தைப் பாலித்து வீற்றிருக்க; பிரமதேவர் பெருங்களிப்படைந்து, நாகலிங்கப்பெருமானை நமஸ்கரித்துக் கொண்டு தன்னுலகத்தையடைந்தார். ஆதலால், யாதவமஹாராஜனே இத்தலம் புண்ணியபூமிகளனைத்தினும் மிகவுயர்ந்தது. என்றுபதேசித்து, அவ்வரசர் வேண்டுகோளின்படியே சிலந்தி பாம்பு யானைகளின்சரித்திரத்தைக் கூறத் தொடங்கினர்.

---

## சீகாளத்திச்சருக்கம்.

---

தரவுகொச்சகக்கலிப்பா.

மணியிமைக்கு மார்பவெழு வாயுகத்தி லொருசிலம்பி
புணருமுதற் பிறப்புணர்வாற் பொன்முகரிப் புனன்மூழ்கி
யிணையிறிருக் கயிலாயத் திறையைவழி படவெண்ணித்
தணிவிலன்பிற் கோயிறன்வாய்த்தந்துவினாற்சமைத்தன்றே.
மாமதிலுங் கோபுரமு மண்டபமு மாளிகையுந்
தோமில் * கருப் பெயர்த்தலமுஞ் சூளிகையு முதலாய

---

* கருப்பெயர்த்தலம் - கருப்பக்கிருகம்.

காமர்திருக் கோயிலெலாங் களிச்சுரும்பு விளையாடுந்
தேம்லர்த்தா ரகன்மார்ப செய்ததாற் சிறுசிலந்தி. (௨)

இருந்தொர்தினை யளவேனு மிளைப்பாறப் பொழுதின்றிப்
பரிந்தொழிந்த விடமெல்லாம் பண்டுபோ னூலிழைத்து
வருந்திநெடு நாளாக வழுவாது பயிலுநாட்
சுருங்கலிலா வதனன்பு சோதித்தற் கெம்பெருமான். (௩)

முன்னெரியுந் திருவிளக்கை முழங்கிமே லெழச்செய் தான், மென்னூலின் றிருக்கோயில் வெந்தொழிந்த தொரு கொடியிற், பொன்னுடை மால்யானைப் புகழ்வேந்த வீது கண்டு, தன்னாவி யிழந்ததுபோற் றலைப்பட்ட தச்சிலந்தி.

அன்னோவித் திருக்கோயி லழல்பற்றி யவிந்ததுதான்
முன்னாளில் யானாற்று முடிவிறீ வினைச்செயலோ
வென்னாவிக் கொருதுணையா மெம்பிரான் றனக்கிந்த
புன்னூலின் றிருக்கோயில் பொருந்தாமை யோவறியேன்.

ஆயிரநா ளுடல்வருந்தி யலாயிருளுந் துயிலாது
வாயினால் வயிற்றிருந்து வளர்நூல்கள் பலவிழைத்துத்
தீயினா லழிந்திடற்கோ செய்தேனித் திருக்கோயி
ருயனையான் றிருவருளுந் தமியேன்பா லிவ்வளவோ. (௪)

என்றுபல தவவிரங்கி யெம்பெருமா னமர்கோயில்
பொன்றியது கண்டுமுயிர் போக்காமை பொல்லாதென்
றொன்றியவன் புடைச்சிலந்தி யொளிவிளக்கின் வீழ்ந்திறப்ப
லென்றெழுந்ததிது கண்டானடியர் துயர்பொறுக்கறியான்.

வெளிநின்ற திருக்கையால் விளக்கில்விழா வகைவிலக்கி
யளவின்றி யெழுகம்பா லன்புடைய சிலந்தி

யுளமொன்று வேட்கையினை யுரைதருது நாமென்று
ஞெளிநின்ற நின்னடிக்கீ ழுறுவிப்பா யென்றதே. (அ)

மறைமீறு நஞ்குணர்ந்து மாதவத்தின் றுறைநின்ற
கறைதீர்ந்த பெரியவர்க்கும் கிடையாத காற்கமலத்,
தறவாழி யந்தணன்று னமர்வித்தான் மற்றவன்றன்
குறையாத வருட்பெருமை யாவரோ கூறவல்லார். (௯)

வஞ்சித்துறை.

இதுசி லந்தியின், கதைக டும்பணி
மதவெ றும்பியின், கதைவி ளம்புதும். (௧0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரவொன் றிரண்டா முகத்தீற்றி லருமா மணிகள் கொ
டுவந்து, விரியும் புகழ்த்தென் கயிலைவரை விமலற் பூசித்
தொழுகிடவவ், வரதன் றன்னைப் பூசிப்ப வலாபோ னெடு
ங்கைப் பிறைக்கோட்டு, முரண்வெங் களிறுன் றடைந்தத
வண் மூன்று முகத்தின் றுடக்கத்தே. (௧௧)

முழங்கு திரைப்பொன் முகரிநீர் மூழ்கிக் கையாற் புன
ன்முகந்து, குழந்தை மதிய முடித்தபிராற் குறுகிப் பாம்பு
புனைந்தமணி, விழுந்து சிதறத் தள்ளியந்நீர் விழைவி னூட்டி
க் கூவிளத்தின், செழும்பல் லவங்கள் கொடுவந்து சென்னி
மேலிட் டேகிற்றால். (௧௨)

மறுநா ளிரவி யெழும்பொழுது வந்து பாம்பு திருமு
டியி, னுறுகூ விளத்தின் பசுந்தழைகண் டொளிகான் மணி
கள் விழச்சிதறி, யிறையோன் முடியி னிலைக்குப்பை யேற்றி
னார்மற் றியார்கொல்லோ, வறியே னன்றே வெனவிரங்கி
யமலற் பூசித் தகன்றதுவே. (௧௩)

பின்னே நெடுங்கைக் களிறலடந்து பெருமான் முடியி
ற் பன்மணிகண், டென்று ருயிரின் றிருமுடிமே லிட்ட பசு
மென றளிரகற்றிக், கொனனே பலகல் விட்டுவைத்த கொடி
யர் யாரோ வறிகிலே, னன்றோ வன்றோ வெனவிரங்கி யன
கற் பூசித் தகன றதுவே. (கச)

மற்றை ஞான்று பாம்புவந்து வரதன் முடிமேற் பசுந்
தழைக, ளுற்ற வா காண்டலுமே யுருமே றுண்ட தென
க்கலங்கிச, சற்று மெண்ணு தொளிர்மணிக டள்ளிப் பெரு
மான் முடிமேலென், பற்ற லாரோ யிதுசெய்தார் பாவி யே
ன்மேற் பகைமையினுல். (கரு)

இதுசெய் தகனரூர் தமைக்காணி னிலங்கு கடுமுள் ளெ
யிறழுந்தக், கதழ்வெஞ் சினத்தா லுறக்கவ்விக் கவ்வி யாவி
குடியேனு, வதுலன் றனக்கிப் பிழைசெய்து மாவா வுய்ந்
து போயினரோ, முதல்வன் றனக்கீ துடம்பாடோ வெனப்
பற் பலவு மொழிந்திரங்கி. (கசு)

நாளை யெல்லாங் காண்டுமென நம்பி ரானைப் பூசித்து
க், காள மகன்ற தொருத்தல்வந்து கடவுண் முடிமேற் கற்
கள்கண்டு, நீளஞ் சனவெற் பெனவீழ்ந்து நிலத்து நெடுங்
கை புறவடித்து, மூளுந் துயரா லலைபுரட்டு முந்நீ ரொன்ன
வரற்றியதே. (கஎ)

எந்தாய் நினக்குத் திருவுளமோ விதுபன் னிறத்த கற்
கடமைச், செந்தா மரையுங் குவளையுமென் செழுங்கூ விள
த்தின் றளிருமா, நந்தாச் சுடரோ கொண்டனையோ நறுமா
மலருஞ் செழுந்தளிரு, மந்தோ வகற்றிக் கற்கடமை யையயா
யாங்வன் பொறுத்திருந்தாய். (கஅ)

ஆவா விறையும் பகைவர்பா லாறற் றணையா ரினியெ னக்கு, மேவார் தமையுங் காண்கிலேன் வினையே னென்று பலவிரங்கித், தாவாப் பகையை நாளைநான் சாய்த்த லொன்று சாதலொன்றென், றோவா வன்பிற் பிராற்பூசித் துவாப்போ யிற்றூற் றன்னுழையே. (கக)

கலித்துறை.

பிறங்கு செங்கதிர் மண்டல மத்தமாம் பெயரிற்
சிறந்த மால்வரை மருங்கடை தரலினச் சிலம்பிற்
செறிந்த செம்மணிச் சேயொளி பாய்ந்தெனச் சிவந்து
கறங்க லைக்குட கடற்குளித் தனனொளி கரப்ப. (உ௦)

விரவு மேற்கடல் செங்கட லாகவெற் பேறிப்
பரிதி வானவன் விழுதலுந் துளும்பிமேற் பரந்த
குருதி யேயிது வெனக்குட கடல்கிழித் தெழுந்த
வெரிம டங்கலந் தீயென வெழுந்தது செக்கர். (உக)

துணைவ ரைப்பிரிந் துறையிளந் தோகையர் முகமு
மணம்வி ரித்தசெந் தாமரை மலர்களு மொத்த
கணவ ரைப்புணர் மடந்தையர் கருநெடுங் கண்ணு
மணிம லர்ச்செழுங் குவளையு மொத்தன வன்றே. (உஉ)

இரவி நாயக னிறத்தலுஞ் செய்யமெல் லிதழிற்
கருமை கூரரி திகழ்மலைழக் கட்செழுங் கமல
வரிவை யன்னமு நீத்தணி வண்டினே மகற்றி
யுருவொ டுங்கினள் கட்புன லிடையறு தொழுக்கி. (உ௩)

அண்டர் நாடுதோய் செக்கர்மால் யானையி னழகு [மூக்கை
கொண்ட வொற்றைவெண் மருப்பென வெழுபிறைக் கொ

வெண்டி ரைத்தடங் குவளையங் கண்மலர் விழித்துக்
கண்டு வப்பொடு முகிழ்த்தன தாமரைக் கைகள். (௨௪)

மீனி னந்திகழ் நீனிற வானமிவ் விரிநீர்
ஞானி லத்தினுந் தனதுபே ராணையே நடத்தும்
வேனில் வேந்தனுக் கிரவெனு மொருவன்மேல் விரித்த
நீனி றத்தவெண் முத்தணி மேற்கட்டி நிகர்க்கும். (௨௫)

சாலு நல்லருட் சங்கரன் றிருவடி தரியா
மாலு நெஞ்சென விருண்டது மலர்தலை வான
மாலு மன்புடைத் துணைபிரிந் தவருமா குலத்த
தோலு ளாகமு மனநிமற் றுயிரெலாந் துயின்ற. (௨௬)

உண்ணு மூணுமா ருயிரினுங் காதலித் தொழுகும்
பெண்ணின் போகமு மறந்துநம் பெரும்பகை பெயர்க்கும்
வண்ண மிவ்விருள் புலர்வதெப் போதென மனத்தி
னெண்ணி யெண்ணிநொந் திருந்தவவ் விடத்திலவ் விரண்டும்.

உலக மெங்குமோர் திகிரியை யுருட்டுபு விளக்கு
மிலகு சேயொளி மன்னவன் வருதலை யெழிற்பூத்
தலைய வாரண வொற்றரா லுணர்ந்துளந் தருக்கு
மிலைகு லைந்தது கருமைகூர் நீடிருட் குறும்பு. (௨௮)

அடர்தி ரைக்கடற் றலைமகன் சென்னியி லணிந்த
சுடர்வி ரிந்தெளிர் செம்மணி முடியெனத் தொன்னீர்க்
கடலெ லாஞ்செழுந் தீகிர்க்கொடி படர்ந்தெனக் கதிர்கள்
படர வந்தெழுந் தன்றுசே யொளியிளம் பரிதி. (௨௯)

வளைக்கு லந்தரு முத்தெறி மறிதிரைக் கடலின்
முளைத்த சேயொளி ஞாயிறு மணிநிற முகுந்த

னிளைத்த நுண்ணிடைத் திருமக ளேரிள முலைக்கட்
டிளைக்கு மார்பிடைக் கவுத்துவ மணியினைச் சிவனும். (கூ0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஓங்குபே ராசை மாறு வுறுசுடர்த் தலைவன் றன்னை
நீங்கலின் வாட்ட முற்று நின்றசெங் கமல வல்லி
வீங்கெழில் சிறந்து வாட்டம் வீடியுள் ளலர்ந்து வாழப்
பூங்கதிர்க் கைக ளாரப் புல்லிமெல் லெனத்தை வந்தான்.

இன்னண மச்செஞ் ஞாயி றெழுவதன் முன்ன மெய்தித்
தன்னமர் கடவுட் பூசை தனக்கிகல் செய்வார்க் காண
வுன்னியோர் சிற்று ருக்கொண் டுமாபதி முடிமே லிட்ட
மென்னறுந் துணரிற் புக்கு வெவ்வர வொளித்த தன்றே.

ஒருத்தனு மவ்வா றெண்ணி யொய்யென வெய்தி யண்ண
லிருத்தகு முடிமே லிட்ட தேமலர் தளிர்க ளிட்டாங் [குக்
கிருத்தல்கண் டுள்ளந் துண்ணென் றெம்பிரா னென்பூ சைக்
கருத்துவந் தான்கொ லென்று கரையில்பே ருவகைமூழ்கி.

பின்னருச் சனைசெய் வான்போய்ப் பிறங்குபொன் முகரி யென்னு, நன்னதிப் புனன்மு கந்து நனிவிரைந் தெ ய்தி யையன், றன்னெழின் முடியிற் போதுந் தளிருந்தன் கையாற் றள்ளப், பன்னக வேந்து சீறிப் பணைக்கையின் பு ழைபுக் கன்றே. (கூச)

விடமொடுங் கெயிற்று வெய்ய வியாளமத் தகம்பு குந்து
குடையமும் மதத்து நால்வாய்க் குஞ்சர மூழி நாளி
விடியெனப் பிளிறி யோடி யின்புனன் மொண்டு மொண்டு
கடுவிசை வீசி வீசிக் கையயர்ந் ததன்பின் மாதோ. (கூரு)

நிலத்திடைக் கைய டித்து நிறைசெழுங் குருதி சோர
வுலத்தொடு மத்த கத்தை யுரிஞ்சியும் வான்றோய்கோட்டுப்
பிலத்துற வேர்ம ரங்கள் பெயர்ந்திடத் தலையிற்பாய்ந்துங்
குலக்கட்டு வெகுளி நாகங் குடைதநீ ராமை தன்னால்.

நம்முடைப் பகையுங் கொன்ற நாமுமிங் கிறந்து மென்று
மும்மதக் களிநல் யானை முன்னுபு வெகுளி பொங்கிக்
கொம்மெனப் பின்பெ யர்ந்து குழனெடுங் கைமு டக்கி
யம்மவெற் போடு ஞால மதிர்தரப் பாய்ந்த தன்றே. (ஙஎ)

பாய்தலு முழக்கங் கேட்டுப் பண்ணவர் மனந்துண்
ணென்றார், தாதுறு பூவுங் காயு முகுத்தன தருக்க ளெல்
லாஞ், சீதநீ ருருவி யெல்லாஞ் சிதறின பறவை யீட்ட
மீதெழுந் தும்பர் தாரு வியன்சினை புக்க வன்றே. (ஙஅ)

முழையிடை யிருந்து நோற்கு முனிவரு நனிம ருண்டார்
குழன்மொழி மடவா ரஞ்சிக் கொண்டதம் புலவி நீங்கி
யிழைபுரா நுசுப்பு வாட்டு மிளமுலை முகட மூழ்ந்தத்
தழுவநல் விஞ்சை வேந்தர் தணிப்பரு மகிழ்ச்சி கொண்டார்.

தரளவொண் மணிகள் சிந்தத் தலைபிளந் தும்பல் வீழ்ந்த
தரவுமெய் நுறுங்கிற் றங்க ணழறிரித் தன்ன வேணிப்
பெரியவன்றேவியோடும்பெருந்திறல்விடைமேற்றோன்றிப்
பொருவிறன் னுருவநல்கிப் புரிந்துடன்கொண்டுசென்றான்.

பாயலை நெடுநீர் வேணிப் பண்ணவன் கயிலா யக்குச்
சீயொடு கான மத்தி யெனும்பெயர்ச் சிலந்தி பாம்பு
மாயிருங் களிறும் மூன்றும் பரகதி பெற்ற வாற்றா
லாயது சீகா ளத்தி யெனும்பெய ரன்று தொட்டே. (சுக)

கலிவிருத்தம்.

என்னமதி யங்குலவு மீர்ஞ்சடை மறைத்தோன்
சொன்னவகை கேட்டுமகிழ் தூங்கியடல் வெள்வேன்
மன்னவ னருட்கடலின் மாணடி பணிந்தா
னின்னுமொரு நன்கதை யிசைத்தருள்க வென்றே. (சஉ)

மேற்படி வேறு.

ஓதினஞ் சிலந்திபாம் பொருத்த வின்கதை
காதுவில் வேட்டுவன் கதைவி ளம்புதும்
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான். (சரு)

சிகாளத்திச்சருக்க முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - சஎஎ.

---

கருணைப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

---

முற்சென்ற கிரேதாயுகத்திலே, ஒரு சிலந்தி பூர்வ ஜன்ம உணர்ச்சியால் பொன்முகரியிலே ஸ்நானஞ்செய்து தென்கைலாயப்பெருமானை வழிபடச்சிந்தித்து, அன்பினலுமுதிர்ச்சியால் வயிற்றிலிருந்து வளர்கின்ற நூல்களையெல்லாம் வாயினாலே இழைத்து இழைத்து அவற்றினால் மதில் கோபுரம் மண்டபம் மாளிகை கருப்பக்கிருக முதலியவைகள்செய்து, நாடோறும் இளைப்பாறுதற்குத் தினைப்பொழுதுமில்லாமல், அறுபட்ட இடங்களை முன்போலவே புதுக்கிக்கொண்டிருந்தது. அப்பொழுது பெருமான் அதனுடைய அன்பைச்சோதித்தற்குத் திருவுளங்கொண்டு, முன்னெரியும் தீபத்தைச் சுடர்விட்டெழும்படிசெய்து, ஒருகொடியினு

ள்ளே அவ்வாலயத்தைத் தகித்தருள; அதைநோக்கிய அச் சிலம்பியானது "அந்தோ! அந்தோ!! இத்திருக்கோயிலா னது அக்கினிபற்றி யழிந்தது யான் முற்செய்ததீவினையோ! எனதுயிர்த்துணைவராகிய எம்பெருமானுக்கு இப்புல்லிய ஆலயத்திலே விருப்பமில்லாமையோ! யானறியேன். இவ் வாறழிதற்கோ அனேகநாளாக வருந்தி அர்த்தயாமத்தி லும் நித்திரையின்றிச்செய்தேன். இப்பெருமான் எளியேனி டத்துவைத்த திருவருளும் இவ்வளவுதானோ!" என்றுபுல ம்பி, எம்பெருமான்கோயிலழிந்தும் யான் உயிரோடிருப் பது தகுதியன்றெனக்கருதி, விளக்கிலே வீழ்ந்திறக்கும்ப டித் துணிந்தெழுந்தது. அதையுணர்ந்த அருட்பெருமான வெளிப்பட்டு,விளக்கில்விழாவண்ணம் விலக்கி, "சிலந்தியே, நினதுவிருப்பம்யாது?" எனவினவி, அதன்வேண்டுகோளின் படியே வேதமுடிவையுணர்ந்த மெய்த்தவர்களுக்கும் கி டைத்தற்கரிய திருவடியிலே கலப்பித்தருளினார்.

பின்பு திரேதாயுகத்தினது முடிவிலே ஒருபாம்பு நா டோறும் அரிய இரத்தினங்களைக்கொண்டு அப்பரம்பொரு ளைவழிபட்டுவர; துவாபரயுகத்தின்முதலிலே ஒருயானையும் பரிவோடு பொன்முகரியிலே ஸ்நானஞ்செய்து, துளைக்கை யினால் திருமஞ்சனமுகந்துவந்து, அப்பாம்பணிந்த மணிக ளனைத்தையும் சிதறத்தள்ளிவிட்டு, அபிஷேகஞ்செய்து, வி ல்வத்தளிர்களைச்சூட்டிச்சென்றது. மறுநாள் சூரியோதய த்திலே பாம்புவந்து அத்தளிர்களைக்கண்டு "அன்னோ! அன் னோ!! திருமுடியிலே ஒளிபெற்றமணிகளைச்சிதறச்செய்து இலைக்குப்பையை ஏற்றினவர் யாவரோ அறியேன்." என இர

ங்கிப் பூசித்துநீங்க; பின்னே யானையடைந்து, அம்மணிக ளைக்கண்டு, "ஐயோ! யான்சூட்டிய பசிய மெல்லிய தளிர்க ளையும் மலர்களையும் அகற்றி பலகற்களையிட்டுவைத்த கொ டியவர் யாவரோ உணரேன்." என்றுகலங்கி, அப்பரமனைப் பூசித்தகன்றது. மற்றைநாளிலேபாம்புவந்து, அவ்விறைவன து திருமுடியிலே பத்திரபுஷ்பங்களைக் கண்டவுடனே மிக அயர்ந்து, ஆ! ஆ! சிறிதுமெண்ணாது இம்மணிகளைச்சிதறி இக் கொடுஞ்செய்கைபுரிந்தோர் எனதுபகைவரே. இதுசெய்தும் பிழைத்துச்சென்றனரோ! அவரைக்காண்பேனாயின் விஷப்ப ற்க ளழுந்தும்படிக் கவ்விக்கவ்வி உயிர்குடியேனோ! இது மு தல்வனுக்குடன்பாடோ!" என்றேங்கி, நாளை யெல்லாங் காண்பேமென்று நம்பிரானைப் பூசித்துச்செல்ல; யானை வந்து அவ்வரவமணிகளைக்கண்டு, பூமியிலே நெடியகையைமோதி க்கொண்டு வீழ்ந்துபுலம்பி, "எந்தாய், இது நினக்குத் திருவு ளமோ? இக்கற்களை எல்லாம் தாமரை குவளை வில்வமாகத் தரித்திரோ? இவற்றை எவ்வாறு பொறுத்திருந்தீர்? ஆ! ஆ! தேவரீரும் பகைவர்பக்ஷமாக இருந்தால், எனக்குத் துணை யாவார் யாவர்? பகைவரையுங்கண்டேனில்லை:" எனத்துக்கி த்து, "யான் எவ்விதத்திலும் நாளை என்பகைவரைக் கொ ல்வேன்; அல்லது சாவேன்." என்று நிச்சயித்துக்கொண்டு அண்ணலைப் பூசித்தகன்று, அன்றிரவு முழுதும் நித்திரையி ன்றி விடியற்காலவரவை நோக்கியிருந்தது.

அரவமும் இவ்வாறே சிந்தித்துக்கொண்டு நித்திரை யின்றியிருந்து, சூரியனுதிக்குமுன்னமே சந்நிதியை யடை ந்து, அப்பரமன் முடியிலே சூட்டப்பட்டிருக்கும் பூங்கொ

த்திலே உடலைச்சுருக்கிக்கொண்டு, பகைவரைக்காணவேண்டுமென்று எண்ணியிருந்தது. யானையும் விரையவந்து, பத்திரபுஷ்பங்கள் தான்சூட்டியபடியே யிருத்தல்கண்டு மனங்குளிர்ந்து, "சிவபெருமான் என்பூசைக்கு இன்றுதான் திருவுளமகிழ்ந்தார்போலும்." என்று களிப்படைந்து, பின்பு பொன்முகரியிலே மூழ்கி திருமஞ்சனமுகந்துவந்து, விமலரது திருமுடியிலிருக்கும் பத்திரபுஷ்பங்களைக்கையாற்றள்ள; அவற்றில் மறைந்திருந்த அரவஞ்சீறி, அக்கையினுள்ள துவாரத்தின்வழியாக மத்தகத்திற் புகுந்து குடைந்தது. யானைசகியாது ஊழிக்காலத் திடிபோலமுழங்கி, நீரை முகந்துமுகந்து விசையாக வீசிவீசிக் கைசோர்ந்து, அதன்பின்னர் பூமியிலே புழைக்கையை மோதியும், உதிரஞ்சோர மத்தகத்தையுரிஞ்சியும், மரங்கள்பெயரத் தலையிற்பாய்ந்தும், அக்குடைவு தீராமையால், "நம்முடைய பகையையுங்கொன்று நாமும் இறப்பேம்" எனச்சிந்தித்துச் சினம்பெருகி, துளைக்கையை மடக்கிக்கொண்டு, பூமியுமதிரும்படி பின்பெயர்ந்துபாய்ந்து, தலைபிளந்து வீழ்ந்தது. அரவமும் மெய்நுறுங்கியது. அவ்விடத்திலே உமாபதியார் தேவியாரோடு விடைமேற்றோன்றி, தரிசனந்தந்து, அவ்விரண்டற்கும் சாரூபமளித்து, உடன்கொண்டுசென்றனர். இம்மூன்றும் முத்தியடைந்தமையால், அத்தலத்திற்குச் * சீகாளத்தியென்னும் திருநாமமுண்டாகியதுவென்றருளிச்செய்து, அவ்வரசர் வேண்டுகோளின்படியே கண்ணப்பநாயனார்சரித்திரத்தைக் கூறத்தொடங்கினார்.

---

* சீ - சிலந்தி; காளம் - பாம்பு; அத்தி - யானை.

உ

சிவசண்முகன் றுணை.

# சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தது.

## கண்ணப்பசருக்கம்.

### கலித்துறை.

மதியின் மானிளங் கன்றினை வரிசிலைக் குறவர்க்
குதலை மென்மொழிப் பேதையர் பச்சிளங் கொடிப்புல்
பதும மென்கையா னீட்டுபு பரிவுட னழைக்கும்
புதுமை கொண்டவெற் புடுத்தது பொத்தப்பி நாடு. (௧)

தாவி லத்திரு நாட்டசீ ரூர்களிற் றலைமை
மேவி நீணறுஞ் சந்தன நிரைத்துவெண் கவரி
மாவின் மென்மயிர்க் கற்றைவேய் சிற்றில்கள் வயங்கி
யோவில் சீருடுப் பூரெனக் குறிச்சியொன் றுண்டால். (௨)

வேடர் மங்கையர் முன்றிலி னின்றபூ வேங்கை
யாடு கொம்பரிற் றொடுத்தபூந் தொட்டிலி னமர்ந்த
தேட ரும்பசுங் குழவிதா லாட்டுசெவ் வழியின்
பாடல் கேட்டுமா மயிலுறங் குவமலைப் பக்கம். (௩)

இரும்பிற் செய்தன திண்புயத் திறவுளர் மைந்தர்
விரும்பப் பின்றிரிந் திளம்புலி கற்குமால் வீரம்
பெருங்கைச் செம்புகர் முகத்திளம் பிடியினம் பிணைபோற்
கருங்கட் செய்யவாய்க் குறத்திய ரணிநடை கற்கும். (௪)

வென்றிக் குஞ்சர மத்தக முத்தமும் வேயிற்
பன்றிக் கோட்டிடை வருமொளி முத்தமும் பரப்பி
முன்றிற் பற்பல சிற்றில்கள் செய்யுமான் முனியாக்
குன்றிச் செம்மணி யணியுடைப் பேதையர் குலமே. (௫)

நெடிய சந்தனக் காற்கரி மருப்பித ணின்று
கடிகொள் பைந்தினை கவர்பசுங் கிளியினங் கடியு
மடநல் லாரிசை கேட்டது மாடக நல்யாழ்
தடவல் விட்டுவிச் சாதரர் செவித்துணை தாழ்ப்பார். (௬)

இனைய பற்பல பெருவள மெய்துமவ் வூரிற்
குனியு நோன்சிலைக் குறவர்தங் குஞ்சிதோய் கழற்கால்
வனச ராதிப னுகனென் பானிகல் வாட்கண்
மனைவி தத்தையென் பாளொடு வாழ்ந்தினி திருந்தான். ()

வாழு நாளின்மென் மழலையஞ் சொன்மக வின்மைத்
தாழ்வி னுனனி மனங்கவன் றிறவுளர் தலைவன்
வீழி வாய்க்கய லரிமதர் நெடுங்கண்வேய் மென்றோ
ளேழை நுண்ணிடை மனைவியோ டின்னண மெண்ணும். ()

கண்ணில் யாக்கையுந் திங்களில் கங்குலுங் கண்போ
லண்ணன் மந்திரி யில்லர சாட்சியு மருளி
திண்ணெ னெஞ்சமும் புலவரி லவையுமொண் டீம்பால்
வண்ண வாயிள மக்களில் வாழ்வுமொப் பாமால். (௯)

சேற ளைந்தமென் சீறடித் தளிரொடு தீம்பாற்
சோற ளைந்தகைத் தாமரை யோடுசெந் துகிர்வா
யூறு நீர்கலை மார்பினோ டிளமகா ருந்தி
யேறு மின்பமுள் ளதனையே யுடம்பென விசைப்பார். (௧௦)

அரிகொள் பொன்புனை கிண்கிணி தண்டையோ டணிந்த
தருண மென்றளிர்ச் சீறடித் தளர்நடைச் சிறுவர்
மருவ ரூதசெவ் வாம்பல்வாய் மழலையா ரமுதம்
பருகி லார்ச்செவி பாவையின் செவியெனப் படுமால். (கக)

இம்மை யின்பொடு மறுமையி னின்பமென் றிரண்டு
மம்மென் மைந்தரை யில்லவர்க் கில்லைமற் றதனு
லெம்மை யாளுடை முருகவே ளடிமல ரிறைஞ்சிச்
செம்மை நன்மகற் பெறுகுவ மெனச்சிந்தை செய்தான். ()

சிந்தை செய்தவன் வரைபக வெறிசுடர்ச் செவ்வே
லெந்தை வாழ்வதற் கேற்றதோர் சினகர மியற்றி
நந்து பூசனை நடத்துபு நடிக்குமா மயிலும்
வெந்தி றற்கொழுஞ் சூட்டுவா ரணங்களும் விடுத்தான். ()

இரலை தொண்டகந் துடிமுதற் பறையொலி யீண்டத்
திருவி ழாவயர்ந் திலங்குசெங் காந்தளந் தெரிய
லுருவ வேலனைக் கூயகன் களனணி புறத்து
வெருவ ருந்தகை வெறியயர் வித்தனன் விழைவால். (கச)

கடிகொ ளவ்வெறி யாட்டிடை யாவருங் காணச்
சுடர்செய் வேற்படைக் குரிசிலவ் வேலன்மேற் றோன்றி
யொடிவி லன்பொடு செய்தவிச் சிறப்பினுக் குவந்தேம்
படியெ லாம்புகழ் மகற்றரு குவமெனப் பகர்ந்தான். (கரு)

பகர்ந்த சொல்லமு தந்துணைச் செவிகளாற் பருகி
யுகந்த மாமகிழ் வெய்திய தத்தையு முவகை
மிகுந்த நாகனுந் திருவடி மலர்மிசை வீழ்ந்து
புகழ்ந்து நின்றனர் மறைந்தன னருட்கடற் புனிதன். (கசு)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பின்னரவ் வெறியாட் டாளன் பெறப்பெருஞ் சிறப்புச்
செய்து, தன்னினின் றகலாச் சுற்றத் தொகைக்கெலா மகி
ழ்ச்சி செய்து, தன்னமர் மனையுந் தானுந் தனித்துள மினி
திருந்தா, னன்னமன னவள்சின் னாளி லரும்பெறற் கரு
ப்ப முற்றாள். (கஎ)

உண்டுகொலென்னு மைய மொழிந்தது மருங்குல் கோ
ங்கின், வண்டுறு முகுள மென்ன வனமுலை முகங்க று
த்த, பண்டுவ மைக்கு டைந்த பசியவேய்க் குலமு வப்பத்,
துண்டவெண் மதிநு தற்குத் தோட்டுணை மெலிந்த வன்றே.

மகவுடன் வயிற்றி ருந்து வளர்புகழ் பரந்த தென்ன,
மிகவுடல் விளர்த்த துண்டி வெறுப்புவந் ததுபு ளிங்கூ, ழக
னமர்ந் துண்ணும் வேட்கை யடைந்தது கடையோய்ந் தன
று, தலைமலர் மென்பூங் கோதை தான்பெருஞ் சுமையா
யிற்றால். (ககூ)

### கலிவிருத்தம்.

இன்ன வாறு வயாகலி வெய்திய
கன்ன லின்மொழிக் காரிகை பெற்றனள்
மன்னு தங்குல மாசு துடைத்திடும்
பொன்னி னன்ன புதல்வனை யென்பவே. (உ0)

பெறல ருஞ்சேய் பிறந்தெனக் கானவ
ரிறைம கிழ்ச்சி யிருங்கடன் மூழ்கினன்
பொறையு யிர்த்தவப் பொற்றொடி யெய்திய
வுறும கிழ்ச்சி யுரைப்பவர் யாவரோ. (உக)

கண்ணு மோகையி ைகன் பெருஞ்சிறப்
பண்ணல் வேற்படை யையனுக் காற்றினன்
பெண்ணு மாணும் பெருமகிழ் வெய்தலா
னெண்ணெ யாட்டணி யெய்ந்து நிகழ்ந்ததே. (உஉ)

தரவுகொச்சகக்கலிப்பா.

மணியினைமன் னுறுத்தாங்கு வாசவான் புனலாட்டிப்
பணிகொள்குவி முலைபிலிற்றம் பால்பெய்து நிலந்தேய்த்த
வணிதிலகஞ் சிறுநுதலி லணிந்துமுலைப் பாலூட்டி
யிணையில்கரி மருப்பினிய லெழிற்றொட்டிலேற்றினர். (உங)

பூங்குழல்வே னெடுங்கண்ணாள் புனலாட்டிப் புனைந்துதர
வாங்குசிலை மறவர்கோன் மணிமகனைத் தடக்கையாற்
றாங்குபுதின் னென்றிருந்த தன்மையாற் றிண்ணனெனத்
தேங்கியபே ருவகையொடுந் திருநாமஞ் சாத்தினன். (உச)

திண்வள்ருங் கரிமருப்பாற் செய்தலைபூந் தொட்டிலின்மேல், விண்வளரும் புனிற்றுநிலா வெண்மதியின் வளர்மைந்தன், றண்வளரும் பாலாழித் தரங்கமிசை கரகணையிற், கண்வளருந் துழாயலங்கற் கதிர்மணிவண் ணனைப்போனும். (உரு)

மலயமா ருதம்புகுந்த மடுக்கமல மெனநீரிற்
கலைகெழுமா மதியமெனக் கவின்கொடிரு முகமசைய
விலவிதழ்வா யமுதொழுக வெழின்மார்ப மிசையெடுத்துச்
சிலைமறவர் குலதிலகஞ் செங்கீரை யாடிற்றே. (உசு)

தருணமதி நிலத்திடைத் தவழ்வதெனத் தவழ்தந்து, பொருதிரைவார் கடலாடைப் புவிமகள்செய் புண்ணியத்தாற், றிருவடிமா மலர்சுமப்பச் சேர்த்திளமென் னடையயி

ன்றான், குருதிவடி யிலங்கிலைவேற் குகனருளாற் பெற லமைந்தன். (உஎ)

குன்றிவட மரைதயங்கக் கொடுவரிவள் ளுகிர்க்கோவை
நன்றுக்கூழ்த் தினிலிலங்க நனந்தலைச்சீ ரார்முழுது
மொன்றசிறு ரொடுசிறுதே ருருட்டியும்பே தையரிழைத்த
துன்றுமணிச் சிற்றில்லந் துடைத்தும்விளை யாட்டயர்ந்தான்.

ஆர்நாரின் றிண்கயிற்று லமைச்சிறுகோல் வளைத்தவி ல்லுங், கூர்வாய்முண் ணுனிபதித்த கோற்கோலுங் கைக் கொண்டு, கார்மேனி மைந்தரொடு கான்புகுந்து கொடுவி லங்கி, னேர்வாய்மென் குருளைபல வெய்தல்செய்தான் வி ளையாட்டால். (உகூ)

வாமிளமான் கன்றுகளும் வள்ளுகிர்கோன் றுட்புலியின்
கோமளக்ற் குருளைகளுங் குடாவடியின் குட்டிகளுந்
தாமிழைத்த முற்றவத்தாற் சவரர்குலா திபன்பயந்த
மாமகனார் கைப்பட்டு வளர்ந்தவற்றிற் களவில்லை. (கூo)

இவ்வகைய விளையாட்டோ டிளமைந்தன் வளருநாட்
கைவ்வலிய சிலைவிஞ்சை கற்பிக்கும் பருவம்வரத்
தெவ்வடுதோட் குன்றவர்கோன் றேயத்து மறவொலா
மவ்வழிவந் துறக்கூட்டி யடர்சிலையின் விழாநடத்தி. (கூக)

பின்புசிலை யாசாற்குப் பெருஞ்சிறப்புச் செய்தடிக
ளென்பழைய குடிசிறத்திவ் விளையோற்குச் சிலைக்கல்வி
யன்பினொடு கொடுக்கவென்று வைத்திசைதொல் லாசிரிய
னன்பகலில் வரன்முறையே கற்பிக்கப் பிடிப்பித்தான்.

முற்பிறப்பிற் பல்பெரும்போர் முடித்தசிலை விஞ்சையெலா
மற்பழுத்த குலவுத்தோள் வனசரர்தம் பெருமாற்கு
விற்பிடித்த காலத்தே விளங்கியதஞ் சனம்விழியிற் [போல்.
பொற்பவிட்ட பொழுதேகீழ்ப் பொருள்வைப்புக் காண்பது

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொள்வலிச் சிலையின் விஞ்சை குறைவற நிரம்பிக் காளை, முள்ளெயிற் றரவு யர்த்தோன் முரட்படை முழுதுமீ கொன்ற, வெள்வயப் புரவித் திண்டேர் விசயன்வேட் டுவக்கு லத்தி, னுள்ளவ தரித்தான் கொல்லென் றுரைதர வொழுகு நாளில். (கூ௪)

சேட்டிளஞ் சிங்க மன்ன செம்மலைத் தந்தை கன்னி
வேட்டமா டுவித்த லாற்ற விழைந்தன னதனை நன்கு
கூட்டிட வனதெய் வங்கள் கொள்பலி கொடுப்ப வுன்னிக்
கோட்டுறு வரிவில் வேடர் குழுவொடு வனத்திற் புக்கான்.

கலிவிருத்தம்.

புக்கவன் குழைசிலைப் புளினர் யாரையு
மைக்கருங் கயல்புரை வாட்கண் ணாரொடு
தொக்கிருஞ் சுனைப்புன றோய்ந்து வம்மெனு
வக்கணந் தானுநீ ராடப் போயினான். (கூ௬)

குரைகட லின்னுமக் குறிய மாதவன்
பருகினும் பருகுமென் றஞ்சிப் பாழிமால்
வரையரண் புகுந்தென வயங்கு பூஞ்சுனை
தெரிவையு ரொடுமறச் செல்வ ரெய்தினார். (கூ௭)

ஒல்வலைக் கையினு ருற்ற போதிரி
பல்விதப் பறவையின் * பறையின் காற்றினுன்
மலிசுனைக் குவளைக ளசைதன் மாதர்கண்
ணலிபுகைக் குடனனி நடுங்கல் போலுமே. (ருஎ)

மற்றவர் புகுதலின் மணங்கொள் பூவினுட்
டுற்றவண் டிரிதர ஞாய நீர்ச்சுனை
யற்றைநாள் வரையும்புக் காடு வார்ப்பெரு
துற்றநீள் பழிவிடுத் தோடல் போலுமே. (ருகூ)

மேற்படி வேறு.

செய்ய தாமரைத் தேமல ரன்னலா
ரைய வாண்முகத் தோடுற வாடின
மொய்ய ரும்புகண் முத்தர் துயல்வரும்
வெய்ய கொங்கை விருந்தெதிர் கொண்டவே. (சo)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாமரை முகத்தர் குவளையங் கண்ணர் சைவலக் கூந்தலர் வள்ளைக், காமரு குழைய ரன்னமென் னடையர் கமலநீள் † வளையமென் றோளர், சேமியம் பறவைக் குவிமுலைத் தடத்தர் திறையித ழாம்பலம் வாய, ராமட மகளிர் நீரைவிட் டகலா தகனமர்ந் தாடின ரன்றே. (சக)

இவ்வுழி மூழ்கி வேறிடத் தெழுவ லென்னைநீர் காண்கென மூழ்கி, யவ்வகை யெழுந்த சிற்றிடைப் பெருந்தோளணியிழை யளகவாண் முகத்தைச், சைவலத் தருகு மலர்ந்தசெங் கமலத் தனிமல ரெனமனத் தெண்ணிக், கொவ்

* பறை - சிறை. † வளையம் - தாமரையுட்சுருள்.

வையாய் மகளி ரெழுந்தில ளென்று குளிர்புனற் பரப்பெ
லாம் பார்ப்பார். (சுஉ)

கலிவிருத்தம்.

மூரிதி ரைப்புனன் மூழ்கி யெழுதரு
மரிம தர்க்கண ளங்க ளும் வாண்முக
மிரைதி ரைக்கட லின்கண் ணெழுதல்செய்
விரிக திர்க்கலை வெண்மதி யொத்ததே. (சுங)

அன்ன மென்னவந் தீம்புன லாடிய
பொன்னி னன்ன பொறிசுணங் கம்முலைக்
கன்ன லின்மொழி யார்கரை யேறினார்
துன்னு பைந்தழைத் தூசுடுத் தாரரோ. (சச)

அங்கு நின்றக லங்கயற் கண்ணினார்
மங்குல் கண்படு மாமலர்ச் சோலையுட்
பொங்கு மோனகயிற் போய்க்கட வுட்கலர்
கொங்கு நாண்மலர் கொய்யத் தொடங்கினார். (சரு)

தம்மை மஞ்ஞை தழைசிறை மென்குயி
லம்மென் பூவை கிளியென் றறைந்திடன்
மெய்ம்மை யாக விளங்கிழை யார்விரை
விம்மு பூந்தரு மீமிசை யேறினார். (சசு)

கொங்கு தங்கிய கோங்கலர் கொய்யுமோர்
மங்கை கொம்பின் மறைந்துநின் றுளெழில்
பொங்கு வெம்முலை பூமுகி ழாமென
வங்கை கொண்டுதொட் டன்மையின் வெள்கினாள். (சஎ)

கிராதர் தங்குலக் கிஞ்சுக வாய்மலர்
விராய வேதியர் வேங்கைமே னின்றனர்

குராவ லாமற் குடைந்தளி பாடுபூம்
பராரை வேங்கையும் பாலைகள் பூத்தன. (௪௮)

மைய கண்ணியொர் மங்கையொ ராடவன்
கையு டிக்கவின் காணிய மாதுநீ
செய்ய விச்சினைத் தேமல ரொட்டுபு
கொய்ய வல்லைகொ லென்றலுங் கூசினாள். (௪௯)

வீவி லாற்றலோர் மீளி யொருநடை
யோவ மன்னா னுயர்சினைப் பூப்பெறத்
தாவல் கண்டதைத் தாழ்வித் தனனவ
ளாவி யன்னவ ளாய்மலர் சிந்தினாள். (௫௦)

மாதர் தம்மடி வைத்தலிற் பற்பல
* வீத லைந்தவி தமறிந் தாரல
ரீத சோகமா மேறிய பின்மிகப்
போது கொண்ட புதுமையென் னென்றனர். (௫௧)

வடுவ கிர்க்கணாற் றம்மொடு மாறுகொள்
படியி னாலிடம் பார்த்து வளைந்தெனக்
கடிகொள் வண்டின் கணங்கண் மணங்கமழ்
துடிகொ ளுண்ணிடைத் தோகையர்ச் சூழ்ந்தவே. (௫௨)

தாத லைந்தளி தாழிசை பாடுதண்
போது கொய்த புதுத்தளிர் மேனியார்
காத லன்பிற் கணவரொ டெய்தினார்
தீது தீர்க்குமத் தெய்வ நிலயமே. (௫௩)

---

* வீ - மலர்.

கந்த மாருக் கடிமலர்ப் பைஞ்சுனை
யந்த ணீர்படிந் தவ்வுழி யெய்தினான்
மந்த ராசல மென்ன வளர்ந்ததோ
ணந்து பேரிசை நாகன் கிராதர்கோன். (௫௪)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரிமலர்த் தொடைக ளானும் விளங்குவெண் கவரி யானும்
வெருவரு தெய்வம் வாழும் வீழுடை விலங்கு நீள்கோட்
டிருள்படத் தழைந்த கோளி யெழில்பெற வணிந்து பூசை
புரிபவற் கூவிப் பூசை புரிவித்தான் வரிவி லூகன். (௫௫)

கானக முழுதும் வாசங் கமழ்தரக் * குக்கு லத்தி
னீனறும் புகையெ ழுப்பி நெடுகிலங் குருதி பாய
நானெடுஞ் செவிய கோட்ட நண்ணிய திரிம ருப்பி
னூனமொன் றுனு மில்லா வுயர் † விடை பலப டுத்தான்.()

தேன்பழங் கிழங்கு தொட்பி செறியமை யரிசி யட்ட
வான்பதந் தினையின் மாவை வனத்தின்வா லரிசி நன்மா
வான்பயம் பெய்த மைத்த வல்சிதேக் கிலையிற் பெய்து
கான்பயில் கடவுட் கேற்றிக் களித்தனன் றேவ ராளன். ()

மறவமெல் லணங்க னாரும் வனதெய்வம் பராய்வ ணங்கி
முறையறி தேவ ராளன் முழுவிடைக் குருதி தோய்செந்
நிறமுறு சேடை சாத்து நெற்றியர் தெய்வ முண்ட
வுறுசுவை யுண்டி யெல்லா முண்டுளங் களித்தா ரன்றே.()

வெடிகுரற் சிலைக்கைச் செங்கண் வேடரும் பவளச்செ
வ்வாய்த், தடமலர்க் கருங்க ணாருந் தகும்பினு ணிறைத்து

---

குக்குல்-குங்குலியம். † விடை - ஆட்டுக்கடா.

வைத்த, வடிகொள்கட் டேறலங்கை மடக்குபு நிறைய வு ண்டா, ருடைக்கடை சொற்கள் சோர வொருவர்மே லொரு வர் வீழ்ந்தார். (௫௯)

சிற்றிடை யொருத்தி தைத்த தேக்கிலைத் தேற லேந்தி
மற்றத னகந்தோன் றுந்தன் மதிமுக நோக்கி யுண்டாள்
கற்றையங் கதிர்வெண் டிங்கள் கள்ளொடென் வயிறு புக்கி
ன், நிற்றது நிலவு நம்மூர்க் கினியிலை யுண்மை யென்றாள்.()

களிதரு தேற லுண்டு களித்தியேற் பரிதிச் செல்வ
னினியின் வெம்மை யாறி வெண்ணிலாத் திங்கள் போலக்
குளிர்கதிர் பெறுவை யீவல் கொள்கெனப் பிழிய லேந்தி
யினிமொழி யொருத்தி வானத் தியல்சுடரழைத்து நின்றாள்.

செறிதொடி யொருத்தி யுண்ட தேம்பிழி மயக்கந் தன்னாற்
பிறனொரு வனைத்தன் காதற் பிரிவருங் கொழுந னென்றே
யிறுகிள முலைய ழுந்த விறுகுறத் தழுவி னாளக்
கறைகெழு வேவி னனக் கள்ளினைப் பலபு கழ்ந்தான்.(௬௨)

கருங்கண ளொருத்தி தன்வாய்க் கடைவழி நுரைவே ட் டெய்துஞ், சுரும்பினை வலைக ளார்ப்பத் * தோன்றியங் கையா னேச்சி, விரும்புநின் பெண்டிர் பாற்போய் விம்ம வாய்பருகென் றாடி, வருந்தலை மகனே டீடி வைதல்போ ல் வைது நின்றாள். (௬௩)

மணங்கமழ் மலர்து தைந்த வஞ்சியங் கொடியினைத்தன்
வணங்கிடை யவளென் றுன்பூ வாயைத்தே னொழுகலஞ்சி

---

* தோன்றி-காந்தள்.

யணங்குநீ திறந்தி டாயே லளியனே னுய்வ னேவென்
றணங்கிய மனத்தாற் றுழா வொருமகன் களிப்பு மிக்கானன்;

உண்கடுங் கண்ம யக்க மொழிந்தபிற் கணவ ராட்டப்
பண்படு கிளவி நல்லார் படர்மூலை வடம்பி ணங்கக்
கண்கொள லருநு சுப்புக் கவன்றழ றுதல்வி யர்ப்ப
விண்பொரு சிலைய வாலின் வீழூச லாடி னாரால். (௬௫)

பொரிமல ரனைய புன்கம் புதுநிழற் புளினந் தோறும் [றுந்
விரிகதிர்ச் செஞ்ஞா யிற்றின் வெயில்புகாப்பொதும்பர்தோ
தருமிடை * யடுக்கந் தோறுந் தமாலநீ ளரங்கந் தோறும்
வரிசிலை மறவர் செவ்வாய் மறத்தியர் போக மூண்டார். ()

மீமிசை நின்ற சைந்து விழுமணி யருவி பார்த்துங்
காமரு மணிக்க லாபக் களிமயி லாடல் கண்டுந்
தேமலர் வனத்து லாயுஞ் சிலம்பெதிர் கூய ழைத்து
மாமதி முகத்தி னார்தம் மகிழ்நரோ டாடி னாரே. (௬௭)

இன்னண மெங்கு மாடி யெய்திய சிலைவல் லாரு
மின்னிடை யழுதி ரங்க வீங்கிய குலவுக் கொங்கைப்
பொன்னனார் தாமுஞ் சூழ்ந்து போதர வனத்தி னீங்கித்
தன்னம ருடுப்பூர் புக்கான் றடக்கைமால் யானை யன்னான்.

மற்றைநான் றருக ழைத்து மைந்தனை யைய கேட்டி
யிற்றைநாண் முதலா நீயே யிறவுளர்க் கிறைவ னாகிப்
பற்றலர் முனைமு ருக்கிப் பகைப்புலங் கவர்ந்து கொற்றம்
பெற்றுமா வேட்டையாடிப் பெரிதுவாழ்ந்திருத்தியென்றே

---

* அடுக்கம் - பக்கமலை.

வழிவழி வந்த வெற்றி வரிசிலை கைக்கொடுத்துக்
கழிபெருங் காத றன்னாற் கன்னவி றோண்ணெ ழுங்கத்
தழுவிநங் கடவுட் செவ்வே டன்னரு டுணையாச் சென்று
* மழவிடை கன்னி வேட்டம் வாய்த்துடன் வருகவென்றான்

என்றதன் றாதை பொற்று ளிறைஞ்சுபு விடைகொண் டன்னை, தன்றிரு வடிபணிந்தான் றாயெனைப் பெற்ற தாயே, மன்றலங் களிறே யிங்கு வருகென் வெடுத்துப் புல்லிக், குன்றுறழ் முலைப்பால் சோரக் குழைந்துநெஞ் சுச்சி மோந்தாள். (௭௧)

போருகா னெறிக ளெல்லாம் புதுமலர்த் தண்ணென் சோலை, யாகவே புகுந்து வேட்ட மாடிமூட் கிழியுமின்றிச், சேகுநோன் சிலையா ரோடுந் திரும்புக கண்ணே றின்றி,மே கமே யனையா யென்று வெண்பொடி சாத்தினாளால். (௭௨)

தாயடி மறித்துத் தாழ்ந்து தரும்விடை கொண்டு நீங்கி
மேயநீ னிறங்கொள் கச்சை விசித்துடை வாளும் யாத்திட்
டாயிலந் தளிர்தொ டுத்த வலங்கலங் கண்ணி வேய்ந்து
மாயவன்றொடுதோ றொட்டுவரிசிலையெடுத்துக்கொண்டான்.

மலர்தலை யுலகில் யார்க்கும் வணங்கிலாக் கொடும ரத்தைக், குலவரை யனைய தோளான் குணங்கொளீஇ வணங்கு வித்தான், வலிகெழு சிலைகு ழைக்கும் வன்மைவான் குடிப்பி றந்தோர், சிலர்கொடு மரம்வ ணக்கஞ் செயவிரு ம் பூது கொல்லோ. (௭௪)

---

* மழவிடை - உவமையாகுபெயர்.

இருமுது குரவர் கேளா வீண்டிய மயிர்பொ டிப்பத்
தருமிசைப் பறவை யெல்லாந் தனித்தனி வெருவி யோட
வெருள்கொடு விலங்கி னீட்டம் வேறுவே றிரிதல் செய்ய
வரைபொரு தோளி னுன்றை வந்துநா ணொலிசெய்தானால்.

வில்லின ரம்பி னூர்வெவ் வெடிபடு குரலர் காலிற்
செல்பவர் மின்னு வாளர் செறிமழை மேக மன்னூர்
கொல்லடி பிடிதுரத்து குத்துவெட் டெறியெய் யென்னுஞ்
சொல்லினர் தணியாச் சீற்றத் துப்பினர் சூழச் சென்றான்.()

கணைபிற கொழிய வோடுங் கடுப்பின கொடுங்கூர்ம் பல்ல, தணிவரு சினத்த வேட்டந் தனித்தனி யாட வல்ல,வ ணியெயிற் றழல்வெஞ் சீற்றத் தரியின்மேல் விடினுஞ் செல்வ, பிணிதொடர் பாசத் தோடு பெருவலி நாய்கள் சென்ற.

வலத்தினு மிடத்து முன்னும் பின்னரு மாறி மாறிக், கொலைத்தொழிற் சுருள்வா னீணுக் கொடுஞ்செவி ஞமலி செல்ல, வுலப்பில்பே ராற்றல் வேட ரொடுவிரை துவலைக் கண்ணி, மிலைச்சிய வேடர் வேந்தன் வேட்டையங் காடு புக்கான், (எஅ)

பலபல விலங்கி னீட்டம் பயிலிட மறிந்து சுற்றும்
வலிவலை சூழ்ந்து சேணில் வழியொதுக் கியபின் வேடர்
கலிகெழு துடிகள் பம்பை கடுங்குர லிரலை யாதி
யொலியெழு வித்து மாக்க ளுறவலை புகத்து ரந்தார். ()

புக்கபிற் றூழம் புக்குப் புகுவழி * யொடியெ றிந்து
மிக்கவல் லுழுவை தேழன் மிடைமயிர்க் காடி முன்னுத்

* ஒடியெறிதல் - காடுகளைவெட்டிச்சரித்தல்.

தொக்கயல் விலங்கின் பார்வை சூழ்வலைப் பரப்புள் விட்டார்
ஓமங்கருஞ் சிலைக்கை வேடர் வயின்வயின் மறைந்துநின்றார்.

கலிவிருத்தம்.

விட்ட பார்வையின் விளியி னாலவண்
கிட்டி வந்தமான் கிளையெ லாமுடன
பட்டு வீழ்தரப் பகழி தூவினார்
மட்டி லாவலி வல்வில் வேடரே. (௮௧)

காலிற் செல்லுநாய்க் கணந்த டுத்தலாற்
சாலச் சீறுபு தடையுட் பட்டமா
நீலக் குன்றொடு நிகர்க ளிற்றினம்
வேலிற் குத்தினார் சிலவர் வேடரே. (௮௨)

மேற்படி வேறு.

மிடைசெடியிடை மறைமறவர்கள் விடுகணையுட லுருவப்
படுதலுமய லுறுகொடுவரி பாய்ந்ததென் றதனைச
சுடுதழலடு வெகுளியினொடு தொடர்குடர்சரி தரவெண்
டடமுனைவளர் பிறையெயிறுறத் தாக்கியதொரு கருமா. ()

பரியளாமர நிளாமறைவரி படுசிலைமுர ணுரவோர்
பொருவிளாசர முருவியவுடல் பொருவருமொரு கருமா
வெரிபுளாதரு பெருவெகுளியொ டெய்கணைவழி போயவ்
விருடருமா முரிதரவுரு மெனத்தாக்கிய தன்றே. (௮௪)

எழுவுடனெழின் முழுவிழிவுசெய் தெழுபெருவலி கெழுதோண், முழுமறவரி னொழுகியகணை முழுகியவுட லுழுவை, வழைகுழைகழை விழைநிழலிடு மழைதவழ்மலை யதிரத், தழைசெவிமழ வழுவைகள்விழத் தாக்கியது விசையால். (௮௫)

வெய்யவர்குல மூய்வகைவரு மெய்யருள்பெறு திண்ண
னையமிறுனை மொய்வலிகெழு மையவில்வல சில்லர்.
மையொடுநிகர் மெய்யுருவிய வையுறுமுனை முள்ளை
* யெய்புதறின வொய்யெனவெதி ரெய்யடுகணை யென்ன.

மேற்படி வேறு.

கனைமாமழை யிடிபோலதிர் கடுவாய்மரை யாமா
வினையாவலி யுடைமாகளி றெழுவாய்வளம் வாழ்மா
வனைவார்கழன் மதயானைகண் மலைவார்விடு வார்கோன்
முனைவாளிக ளுடனமூழ்கலின் † முளவாயின மாதோ. ()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இவ்வகை பலவி லங்கி னீட்டமு நூழி லாட்டித்
தெவ்வடு வரிசி லைக்கைத் திண்ணன்மா வேட்ட முற்றிக்
கௌவைகொள் கான நீங்கிக் கடுந்திறன் மறவ ரோடு
மெவ்வமி றனதூர் புக்கா னீன்றவர்க் குவகை பொங்க.

பின்னரும் பலகால் வேட்டம் பெருவலிக் காளை யாடி
யன்னையு மத்த னுங்கண் டகமகிழ் பூப்ப வைகிக் [நாட்
கொன்னுனைப் பகழி வேடர் குலத்தொடும் வாழ்த்த வோர்
டன்னுளம் வேட்ட மூக்கச் சரம்புகா வனம்பு குந்தான். ()

புகுந்தவன் கான மெங்கும் புக்குலாய் மிகவி ளைத்து
மிகுந்தழை மிடைம ரத்தின் மென்னிழ றணிந்து யின்றான்
முகுந்தனை வாளி யாக்கி முரணின ரரணம் வேவ
நகுந்தனி முதல்வ னன்றான் கனவிடை நண்ணினானே.(௧0)

---

* எய் † முளவு - முட்பன்றி.

பூசிய திருவெண் ணீறும் புலியத ளுடையுஞ் செக்கர்,
கூசிப்பொன் சடையுங் கொண்ட கோலத்தோ டெதிர்நின் றொன்று, மேசுத லிலாத மைந்த விவ்வரை வடமூ லத்திற், காசில்பொன்முகரியாற்றங் கரையிலோ ரிலிங்கமுண்டால்.

அதுதுய ரனைத்தும் வீட்டி யரும்பெற லின்ப நல்கு
* மதவலி யதைநீ சென்று வணங்குதி யென்று ரைத்துக்
கதுமென மறைந்தா னங்கே கண்விழித் திரும்பூ தெய்தி
யெதிரில்பே ராற்ற லான்றிக் கெங்கணு நோக்கிநின்றான்.

ஆயகா லையில்வில் வேட ரார்ப்பினொ லெழுந்து கான்சூழ்
போயவல் வலைப ரிந்து பொருகடுங் காலிற் பொங்கி
மாயிருங் கேழ லொன்று மலைபுகப் போதல் கண்டான்
காயழல் வெகுளி யான்பின் கையில்வில் லொடுது ரந்தான்.

துரந்துபின் செல்லச் செல்லத் துணைவிற்போ யெறும்பி யாற்கீ, ழிருந்தரு ளிலிங்கத் தின்பா லெய்தலு மறைந்த தண்ணல், வரம்பில்விம் மிதத்த னாகி மற்றிது மறைந்த † தென்னோ, தெரிந்தில மென்று நின்றான் சிவலிங்க மிருத்தல் கண்டான். (கஅ)

காண்டலுங் கடவு ளார்தங் கருணைநோக் கினிது பெற்று
மாண்டகு மிரதந் தோய்ந்த வல்லிரும் புருவ மாறி [நீ
ண்டொளி கெழுபொன் னாவ தென்னமுற் குணங்கண்மா
யாண்டகை யிறைவன் றன்பா லன்பொரு வடிவ மானான்,

* மதவலி - அன்மொழித்தொகை.
† என்னோ - அதிசயவிரக்கச்சொல்.

நாள்பல பிரிந்தி ருந்து நண்ணிய சிறுச தங்கைத்
தாளிள மகனைக் கண்ட த்தாயெனத் தாழா தோடி
நீளெழு வனைய தோள்கண் ணெழுங்குறத் தழுவி மோந்து
வாளழலரக்கி னன்ன மனத்தினான் முத்தங் கொண்டான்

செய்யகண் ணீர ரும்பச் செறிமயிர் பொடிப்ப * வாதன்
கையகப் பட்ட தெய்வக் கதிர்விடு மணியி னாயேற்
கையன்வந் தகப்பட் டானென் றணியெயி றிலங்க நக்கு
மெய்யெலா மெய்யன் பாய விடலைமற் றின்ன சொல்வான்.

யானையும் புலியு மென்றும் யாளியு முளவுங் கூர்ங்கோட்
டேனமுந் திரியுங் காட்டு ளெந்தைநீ துணையு மின்றிக்
கூனல்விற் றடக்கை வேடர் குலமென விருப்ப தென்னே
பூந்துணை வுனக்கி யாவ ருண்டெனத் தருவா ரந்தோ. (கூஅ)

தேனொடு தினையின் பிண்டி தீம்பழங் காய்கி ழங்கு,
மானொடு முயலெய் கேழல் வல்லுடும் பழுங்கி வற்றி, னூ
னுண வென்றிவ் வெல்லா முதவுவல் யானே நல்ல; கான
வர் துணையுண் டெம்மூர்க் காண்டிவா வென்று நின்றான். ()

சாமிநீ தனியே யீண்டுத் தங்குத றரித்த லாற்றே
னெமகல் லுடுப்பூர்க் கின்னே யென்றொடு வருதல் வேண்டு
மெனை மிரங்கா யெந்தா யெனப்பல நிகழ்த்தி னானக்
கார்மழை யனையா னற்புக் கடலினுக் கெல்லை யுண்டோ. ()

மறுமொழி யிறைவ னொன்றும் வழங்கல னிருப்ப மீளி
யிறைதிரு வுள்ளத்தி னெண்ண மிவ்வயி னிருத்தல் போலுஞ்

* ஆதன் - குருடன்.

சிறியனே னினியித் தெய்வ சிகாமணி தன்னை நீங்கி
னுறுவனோ வுயிரி னோடென் றுரைத்தன னின்று ழுங்கே.

அண்ணறன் முடியிற் றூய்நீ ராட்டுபு முருகு விம்மூத்
தண்ணுறு மலர் * மா லூரத் தளிர்சூட்டி யிருத்தல் காணூ
உப், பண்ணவன் றனக்கீ தேற்ற பணியெனத் தேறி யுள்ள,
மண்ணொழு வனைய தோளான் மற்றது கடைப்பி டித்தான்.

பின்புவேட் டுவர்தங் சோமான பெரும்பக லாயிற் ற
ன்றோ, வென்பெருந் துணையாய் நின்ற விறைவனார் மிக
ப்ப சித்தா, ரின்சுவை யூன்கொ ணர்ந்திங் கிடல்வேண்டு
மென்ன நீங்கிற், கொன்சின விலங்கி னீட்டங் குறுகியென்
செயுமோ கெட்டேன். (௧௦௩)

என்றுசா லவுமி ரங்கி யெரிபசி மிகாத முன்னஞ், செ
ன்றொரு கணத்துட் கொண்டு திரும்புவ மெனத்து ணிந்து,
குன்றிடை யெனக்கு வாய்த்த குலமணி விளக்கே யெந்தா,
யுன்றழூற் பசித ணிப்ப வுறுசுவை யிறைச்சி கொண்டே. ()

உழூர்துருள் பொழுதின் மீள்வே னொருகண மேனுந்
தாழேன், வழங்குறு கொடுவி லங்கு வருமென வஞ்சே லை
ய, வெழுந்துமேல்* வந்த தாயி னென்னையொய் யெனக்கூ
வென்று, குழைந்தவிற் றடக்கை கூப்பிக் குறவர்கோ னகி
தி னீங்கி. (௧௦௫)

கடிக்கடி மனையு ணின்ற கன்றகல் புனிற்றுப் போல
வடிக்கடி திரும்பி நின்றே யையர்தந் தனிமைக் கேங்கி

* மாலூரம் - வில்வம்.

வடிக்கடி யம்பு பட்டு மழைமுகி லெனக்கி டக்குங்
கிடிக்கடி வேட்டைக்கானங் கிளர்கடுங்காலிற்சென்றான்.

தொழுந்தசை மோழ லொன்று குறவர்கோன் றானே யேந்தி, முழங்கலை யெறியு நன்னீர் முகரியின் றீரஞ் சார்ந்தோர், செழுந்தரு நிழலின் வைத்துத் தீயர ணியினா லாக்கி, யெழுந்துறு மயிர்க டிந்தவ் வெறுழியை வாளி னீர்ந்தான். (௧௦௭)

ஈர்ந்துசெந் தசையுட் சால வின்சுவை யுடைய வெல்லாந்
தேர்ந்துவே றெடுத்தெ டுத்துத் தேக்கிலை யதனுட் பெய்து
கூர்ந்தவா யம்பிற் கோத்துக் கொந்தழல் பதத்திற் காய்ச்சி
யார்ந்தபேரன்பன்வாய்ப்பெய்தருஞ்சுவைபார்க்கலுற்றான்.

பல்லினான் மெல்ல மெல்லப் பன்முறை யதுக்கிப் பார்த்து
நல்லன விறைச்சி யெல்லா நவையிறேக் கிலையிற் றைத்த
† கல்லையுள் வாங்கி வைத்துக் கழிசுவை யிலாத வெல்லாம்
வல்லைவெள்ளிடையு மிழ்ந்தான் வருபவக் கடல மிழ்ந்தான்.

பூந்தளி ரோடு கொய்த புதுமலர் தலையிற் பெய்து, தாந்திர விதியென் றூட்டுந் தண்புனல் வாய்மு கந்து, தீந்தசை யமுது பெய்த தேக்கிலைத் ‡ தளிகை யோர்கை, யேந்தியம் பொருவில் லோர்கை யெடுத்துவல் விரைவிற் போந்தான். ()

மேற்படி வேறு.

என்னா ருயிர்க்குத் துணையாவா ரெரிவெம் பசியா லிளைத்தாரோ, வனறோ கொடிய விலங்கினத்தா லச்சுற் றாரோ வெனப்பதைத்துத், தன்னா தரவிற் பார்ப்பருந்தத் தா

* கிடி - பன்றி. † கல்லை ‡ தளிகை - உண்கலம்.

மூர தோடும் பறவையென, மூன்று மனமும் பின்றாக முத ல்வன் றன்பா லோடினான். (ககக)

சென்று குறுகி யெம்பெருமான் றீயேன் வரவு தாழ்த் தலினாற், கனறு பசியால் வருந்தினையே யென்று கரைந்து திருமுடிமேற், றன்று தளிருஞ் செழும்போதுந் தொடுதோ லடியான் மாற்றிவா, யொன்று நீராற பிரானுடலோ டுள் ளங் குளிர வாட்டினான். (ககஉ)

ஆட்டித் தலையி லிருந்தகம ழலருந் தளிரு * மெடுத்தி றைஞ்சிச், சூட்டித் திருமுன் னிலைக்கலத்திற் றூய விறை ச்சிப் போனகம்வைத், தீட்டற் கரிய பெரும்பொருளே யெ ந்தா யுண்கென் றினியசொலி, யூட்டிப் பிரியா தருகுநின்று னுவகைக் கடற்குக் கரைகாணான். (ககங)

கலித்துறை.

கால மங்கதில் வேடர்தந் தலைவனைக் காணார்
சால வச்சுறீஇக் காடெலாந் தேடியத் தடங்கோட்
டால மூலத்தி லிருந்தரு ளண்ணறன் னருகு
நீல மால்வரை நின்றெனை நிற்பவற் கண்டார். (ககச)

அருகு சென்றடைந் தையநீ யெங்களை யகன்றிப்
பெரிய மால்வரை யடைந்ததென் பிழைத்தனங் கொல்லோ
பரிதி வானவ னண்பகல் கடந்தனன் பசித்தாய்
முருக விவ்வழி நிற்பதென் வருகென மொழிந்தார். (ககரு)

---

* எடுத்திறைஞ்சிச்சூட்டல் - தலையையுயர்த்தி வளைத்து ச்சூட்டல், இப்பொருள் இச்சருக்கத்து நூற்றைம்பதாவது செய்யுளாலுமுணர்க.

களைந்த சொற்கெலா மெதிர்மொழி கொடாமையிற் க
வன்று, பெருந்த காயுனக் கெங்கண்மேன் முனிவென்கொ
ல் பேசாய், வருந்தி நீயிவண் வந்தமை யறிந்திலம் வள்ளா,
லிரங்கு வார்கழ லின்னடி யறியவென் றிசைத்தார். (௧௧௬)

மற்ற தற்குமொன் றுரைத்தில னிற்பவம் மறவர்
கொற்ற வில்லுடைக் குரிசினீ யுளத்திலென் கொண்டாய்
சற்று மெம்மிடத் தன்பிலை யாயினை தலைவ
குற்ற மெம்வயிற் கண்டதுண் டேற்பிற கூறாய். (௧௧௭)

என்று பற்பல திறத்தினு முரைக்கவு மினையோ
னென்றும் வாய்திறந் தானல னோவியம் போலக்
குன்ற வில்லியை நோக்கினின் றனவர் குறித்து
மன்ற வெஞ்சின மன்றிது வென்னென மருண்டார். (௧௧௮)

இங்கு நின்றவித் தெய்வத மிவனிடத் தேறித்
தங்கி நின்றதோ வென்கொலோ வறிகிலந் தமியே
மங்கு நம்மொடு வருபவ னலனிவ னந்தோ
நங்க டொல்குலத் தலைவனு நாகற்கென் னுரைப்போம். ()

தந்தை யாகிய தத்தையர் தேமொழித் தையன்
மத்த யானைபோ லென்மக னெங்கெனின் மறுசொ
லெத்தி றத்தினாற் சொல்லுது மெனப்பல விரங்கி
யெய்த்து நின்றனர் * வசிக்கவோ ருபாயமு மில்லார். ()

குழைக்கு நோன்சிலை நாகனோ டிச்செயல் கூறி
யழைத்து வந்தன மெனிலவ னெத்திறத் தானும்

* வசித்தல் - வசப்படுத்தல்.

பிழைக்கு மாறியற் றவனெனத் துணிந்தனர் பெயர்ந்தார்
தழைத்த லைப்புலா லூறும்வாய்ச் செய்யகட் சவரர். (கஉக)

அன்ன காலையி லாயிரங் கதிர்ச்சுட ரரசன்
மன்னு திண்ணனன் பப்புறத் துலகெலாம் வழங்கப்
பன்னு வேமெனப் போதல்போற் குடதிசைப் பராரைச்
சென்னி வான்றொடு மலைமறைந் தானிருள் செறிய. (கஉஉ)

அரவு மிழ்ந்தசெம் மணிக்கண மிமைத்தலி னலரி
யினாதி னாக்கடன் மூழ்கியுங் கங்குலங் கில்லை
யிருள்கெ டச்சுடர் விரிதரு விலைவரம் பில்லா
வுருவ மாமணி பலவுள விடத்திர வுண்டோ. (கஉங)

அன்ன லைக்கொடு விலங்கினங் குறுகுத லஞ்சி
வண்ணு திக்கணை தொடுத்தகூன் வில்லொடு மறந்துங்
கண்ணி மைத்தில னாகியே வைகறை காறு
மண்ணெ ழூப்புனை தோளனின் றுணிறை மருங்கு. (கஉச)

அன்ப ரன்பினுக் ககப்படு பேரரு ளாழிக்
கின்ப வூன்றிரு வமுதமாக் கியவுளத் தெண்ணி
வன்பெ ருஞ்சிலைத் தடக்கையான் வைகறைப் போது
பொன்ப ரந்தொளிர் மால்வரைச் சாரலிற் போந்தான். ()

வீட்ட வாவுடை யார்க்கரு டருமொரு விமல
னூட்ட மாகிய தான்கொள்புண் ணூற்றிடு நம்பி
வேட்ட மாடுதல் காணிய விரும்பிவந் தென்னக்
கோட்ட வார்திரைக் கடலெழுந் தான்சுடர்க் கோமான். ()

கலிவிருத்தம்.

பொங்கு வெஞ்சினப் புண்கமழ் வாளுகிர்ச்
சிங்க மன்றன் செயணிற்க மற்றினிக்

கங்கை வார்சடைக் கண்ணுத ருண்மூத
றங்கு நெஞ்சத் தவன்செயல் சாற்றுவாம். (௧௨௭)

அருளு மானுப் பொறையு மறிவொடு
தெருளு நோன்புஞ் சிவனிடத் தன்பினே
டிருளிற் றீரவா வின்மையுங் கல்வியு
மருளின் மெய்ம்மையு மாணுரு வாயினன். (௧௨௮)

வெறுப்பில் சந்தன மெய்யெலாம் பூசிமின்
றிறப்ப வின்ப மியற்றுநர் தங்களுங்
கறுத்தெ ழுந்தெதிர் காயமுற் பெய்துநுன்
புறத்து வார்களு மொத்த வுளத்தினன். (௧௨௯)

நீடுங் கார்க்குழ வீளரி வாள்விழி
வாடுஞ் சிற்றிடை மாதர்கள் புல்லினு
நாடுந் தன்னுளந் தாயென நண்ணுவா
னேடும் பொன்னு மொருநிகர் நோக்குவான். (௧௩௦)

ஈச னார்தம் மிணையடித் தாமரைப்
பூசை செய்தொழி லாப்பூண்டு செய்திடு
மாசை மேல்கொண் டருமனத் தான்சிவ
கோச னென்னுங் குணப்பெருங் குன்றனன். (௧௩௧)

இரவி வந்தெழு முன்ன மெழுந்துபோய்
முரிதி ரைப்புனன் மூழ்கி விதிமுறை
விரைசெய் போதொடு மென்புன லுங்கொடு
புரிச டைப்பிரா றபூசிப்ப வெய்தினன். (௧௩௨)

தலைமி சைத்திரு மஞ்சனந் தாங்குபு
மலர்பெய் கூடையு மேந்துபு வல்விரை

விலகு மன்னறன் ஞமம் விளம்புபு
புலை லேயன் றிருமுன்பு போயினுன்.. (கரு௩)

தேன்கு லத்தொடு செவ்வழி வண்டுளர்
கான்கடுக்கையங் கண்ணியன் முன்பெலா
மூன்கி டத்தல்கண் டுள்ள நடுங்கியே
தான்கு தித்தய லோடினன் றாழ்விலான. (கரு௪)

தரவுகொச்சகக்கலிப்பா.

மேவார்வந் தடிபணியும் விண்ணோர்கண் முடிமணிக
ளோவாது கிடந்தொளிரு முடையபிரான் றிருமுன்ன
ராவாவிக் கொடும்பாவ மார்செய்தா ரிதுசெய்யத்
தேவாதி தேவனுர் திருவுள்ள மிசைந்தாரோ. (கரு௫)

கொல்லாமை யறியாமைக் குணமாகக் கொண்டொழுகும்
பொல்லாத சிலைவேடப் புலைஞரோ யிதுசெய்வா
ரொல்லாத செயலிதையன் புடையோர்கள் கண்டக்கா
லில்லாம லிறந்திடுவர் நிற்கின்றேன் கொடுவினையேன். ()

என்றுடல பலகூறி யிணையிலா னழுதிரங்கிக்
கன்றுமிடற் றிறைபூசா காலமிகத் தாழ்க்கலா
லின்றதனுற் பயனென்னே யெனநினைந்து புலவெல்லாந்
துன்றுமல காலகலத் துடைத்தாப்பி நீர்தெளித்தான். ()

பின்னரவடந் தலைபுரட்டும் பெருந்தீர்த்தம் படிந்தாடிச், சொன்னமறை மந்திரத்தாற் றூய்தன்மை கடிந்ததற்பின், மன்னுமுருத் திரசமக நமகத்தால் வானவர்கோன், சென்னிமிசைப்புனலாட்டித்திருமலர்கொண்டருச்சித்தான். முன்னர்நின்று கைதலைமேன் முகிழ்த்திருகண் ணீர்பாயத் துன்னியமெய்ம் மயிர்பொடிப்பச்சுடுதழல்வாய்ப் பட்டவரக்

தென்னமனை நனியுருகி யிளகமிக நாத்தழும்ப
மன்னுமனை னொடுசாமி மறைக்கீதம் பாடினான். (கஙகூ)

பற்பலகால் வலஞ்செய்து பணிந்தரிது நீங்கிப்போய்ச்
சிற்பரனா ரடிமறவாச் சிந்தையன்றன் னிடத்தடைந்தான்
முற்பகல்வே டர்கணோற்ற முழுநோன்பா லவதரித்த
விற்படுகார் மழையன்ன விடலைசெயல் விளம்புவாம். (கச0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எழுவினங் கவற்று தோளா னேறுகாற் பன்றி செல்லும்
வழியறிந் தொளிநின் றெய்து மான்றுயி லிடனறிந்து
குழைநெடுஞ் சிலையிற் பூட்டு கோலுட லுருவ வெய்து [ன்,
முழுவலன் புடையான் முன்போ லுறுசுவை யமுதமைத்தா
பின்புகோற் றேனி ரம்பப் பெய்துகொண் டிறைப சிக்கு
மென்பதாற் றான்றொ டுத்த வேவென விரைவி னோடி
முன்புபோற் பூசை முற்றி முனிவிலின் னமுத ருத்தி
யன்பினாற் கடலி னன்னா னருகுநீங் காது நின்றான். (கசஉ)

அந்தவே லையில்வில் லோரா லரும்பெறற் புதல்வன்
செய்தி, தந்தையுந் தாயுங் கேட்டுத் தணிப்பருங் கலுழ்ச்சி
கொண்டு, வந்துபற் பலதி றத்தால் வசிப்பவும் வசமா கா
னாச், சிந்தைநொந் தினியென் னென்று சென்றனர் மகனிற்
றீர்ந்தே. (கசங)

அன்னவ ரடைந்தவா று மகன்றது மறியா தண்ண, ற
ன்னொடு பிணித்த நெஞ்சிற் சுவரர்கோன் பகற்போ தெல்
லாம், கொன்னவில் விலங்கி னீட்டங் கொன்றிறைக் கமுத
ருத்தித், துன்னிருட் காலந் துஞ்சான் றொண்டுசெய் தொழு
கா நிற்ப, (கசச)

வழுவறு முனியும் வந்து வைகலுந் திருமு னூன்கண்
டழுதழு திரங்கி யேங்கி யகற்றுபு புனிதஞ் செய்து
மழவிடை யவற்பூ சித்து மனந்துயர்க் கடலி னாழ்த்தி
யொழுகிட மற்றவன்பா லுறுதுய ரொழித்தல் வேண்டி.

கங்குலிந் தாவ தனகண் கனவிடைத் திருக்கா ளத்திச்
சங்கரன் வந்து சொல்லுந் தவத்துறை பயின்ற மேலோ
யிங்குநீ நம்முன் கண்ட திறைச்சியென் றினையல் வாழி
யங்கது நாம ருந்து மரும்பெற லமுதங் கண்டாய். (௧௭௬)

அதுநமக் கிடுவோன செய்தி யறைகுது மம்ம தெய்வ
நதிபல படிந்து நோற்று நவையிரு ணங்கள் செய்தும்
விதிபுறங் கண்டு பெற்ற மெல்லெழின் மகன்மேற் றுய்க்குப்
புதியவன் பெனைத்த னைத்தப் பண்ணியற் கௌமே லனபு.

மற்றவன் செருப்புக் காலான் மணங்கமழ் நமது சௌனி
யுற்றபூ மாற்றுங் காலத் துடமபெலா மயிர்பொ டிப்பச்
சிற்றிள மகன்பூங் கையாற் றிருமுலை வருடப் பட்ட
பெற்றதா யென்ன நெஞ்சம் பெரிதுரு குதுமா லன்ப. ()

ஐந்தடர் முனிவ நம்மே லவனுமிழ் கிளற தியாற்றுட்
டந்தநீ ராயி னன்றே தாழ்சடை முனிவ ராட்டு
நந்துமந் திரநன் னீரி னனியினி தெனலா முன்னின்
றுந்திமே லெழுந்து பொங்கி யொழுகிய பேரன் பாமால்.

வள்ளுகி ருழுவை தோன்றுண் மாதவக் கிழவன் முன்னோ
ரொள்ளிய வாழ்த்து நாம மொராயிரமுவாத்துச் சாத்துங்
கள்ளவிழ் மலரி னன்றுன் கழுத்துற வளைந்து சூட்டு
மெள்ளுறு மயிர்கள் சூழ்ந்த வீர்ம்மலொமக்குநல்ல. (௧௮௦)

இந்திரன் முதலோர் செம்பொ னரிமணிக் கலத்தி
லேந்து, மந்தர வரையி னாழி மதித்தவா ரமுத மெல்லா,
மூந்துதன் வாய்ப்பெய் தாய்ந்த முழுச்சுவைச் சூட்டி றைச்
சி, *வெந்திற றந்த பின்னர் வேம்பொடு கடுவு மான, ()

ஏசுத லிலாவ றத்தோ யெமக்கவ னெம்மு னின்று, மா
சில்பே ரன்பி னோடு வாய்திறந் துரைக்குஞ் சொற்போ, லா
சக லறிவின் மிக்க வைம்புலப் பகைவர் பாடுங், காசறு சாம
வேத கானமு மினிய தன்றே. (கருஉ)

அவனமன நமக்குக் கோயி லவனுரை பலவு †மோத்தா
மவனமுய றொழில்க ளெல்லா மறத்தொழி லைய மில்லை
யவனியல் காட்டு கின்ற மன்பனீ நாளை யேவந்
தவனறி யாத வண்ண மயலொளித் திருத்தி யென்றான். ()

இன்னணம் பலவுங் கூறி யினித்துய ரொழிதி யென்று,
பொன்னிறம் பழுத்த கொன்றைப் புதுநறுங் கண்ணி வேய்
ந்த, சென்னியந் தணன்ம றைந்தான் சிவகோச முனியெ
ழுந்து, முன்னவன் கருணை யாற்சொன் மொழிநினைந் ததிச
யித்தே. (கருச)

ஞாயிறு குணத்து குன்ற நண்ணுதன் முன்னே மபோய்
ப், பாயலை முகரி நன்னீர்ப் படிந்துநித் தியநி ரப்பி, யா
யிரம் பெயரி னான்ற னருச்சனை முடித்து மற்றத், தூயநல்
லிலிங்கத் தின்பின் றோன்றிடா தொளித்தி ருந்தான். (கருரு)

---

* வெந்திறல்-அன்மொழித்தொகை. திண்ணன் என்னும்
பொருட்டு. முன்னர் மதவலி என்றதும் இது.

† ஓத்து-வேதம்.

முனிவரு முன்னம் வேட்ட முன்னுபு சென்ற வென்றிக்
குனிசிலை மறவர்த் தாங்குங் கோமகன் வேட்ட மாடிப்
புனிதனுக் கமுதங் கொண்டு பொருக்கென மீண்டா னங்கட்
பனிதரு துன்பங் காட்டும் பற்பல நிமித்தங் கண்டான். ()

வழியிடை நிமித்த மென்ன மற்றியான் கண்ட வெல்லாம், பழிபடு நிமித்த மென்னை பாவஞ்சேர் குருதி காட்டுங், கழிசுவை யமுத முத்தங் கண்மணி யுயிரெ னக்கா, மழகனெம் பெருமா னென்னும் றனன்கொலோ வதித றேற்றேன். (கருஎ)

எனமனங் கலங்கி யொய்யென் றெறுழ்வலிக் காலை செல்லச்,சினவிடை வலனு யர்த்த செக்கரீர்ஞ் சடைநூ தற்கட், புனிதன்மற் றவனன் பெல்லாம் புண்ணிய முனிக்குக் காட்ட, நினைபுதன் வலக்கண் செம்புண் ணீருற நின்றான் கண்டான். (கருஅ)

காண்டலும் வாய்நீர் சிந்தக் கையிலூன் சிதற வம்புங்
கோண்டரு சிலையும் வீழக் குஞ்சிப்பூ விறைய வாட்டு
நாண்டொட ரற்ற காலை நாடகப் பாவை போலத் [ன்.
தூண்டரு தடந்தோட் காளை துண்ணென நிலத்து வீழ்ந்தா

கெடும்பொழு துள்ளு யிர்ப்பு நின்றுயி ருலந்தா ரென்னக்
கிடந்துபின் கையா றெய்தக் கெடுமினை வடைந்தெ ழுந்தே
யொடுங்கலி றுயரா னெஞ்ச முண்ணப்பட் டுருமே றுண்ட
மடங்கலே றென்ன நம்பி வாய்விட்டான் கண்ணீர் வார. ()

முழுவலித் தடக்கை யாற்றன் முகமெலாங் குருதி பொங்கி, யொழுகிய வடித்துக் கொண்டா னுறகண்ணீர்

வெள்ளம் போர்த்த, வெழில்கனி மார்பு வீங்க வெற்றினான்
றலைபி ளக்கக்,கழிதுயர்க் கடலி னாழ்ந்தான் கல்லொடு மோத
தி னானால். (ககக)

ஓடுவன் மீள்வன் வீழ்வ னுருள்குவ னெழுந்து விம்ம
வீடுவ னந்தோ வென்ப னெட்டுயிர்ப் பெறிவ னெஞ்சம் [ன்
வாடுவன் பொங்கிப் பொங்கி வாய்விட்டு முகத்தைக் கையா
மூடுவ னழுவன் கைகண் மோதுவன் கற்க ளோடே.(ககஉ)

எவ்வமி லெந்தை யார்க்கிங் கிதுவந்த தெனக்கொன் றாரம்
வெவ்வலி யழற்சீற் றத்து வேட்டுவ ரானோ வன்றி
யிவ்வனா விலங்கி னானோ யாதென வறித றேற்றே
னவ்வுறு தெவ்வைக் காணி லாவிகூட் டுண்கி லேனோ. ()

மலையிடை யெனக்கு வாய்த்த மரகத மணியே செம்பொ
னிலகொளிக் குன்றே யெந்தா யெம்பிரா னின்கண் புண்ணீர்
கலுழ்தரற் கென்னை கொல்லோ காரணந் திருவாய் சற்று
மலர்கிலை யென்கொ லென்றா னாவிசோர்ந் தருகு சென்றான்.

கையினிற் றுடைத்தான் பல்காற் காலுத றவிரா தாக
வையனைத் தழுவிக் கொண்டா னலறினா னெடும்போ தெல்
லையென விடுத்துப் பின்பு பச்சிலை மருந்து தந்து [லாம்
பெய்யினோய் தீரு மென்று பெயர்ந்தனன் மருந்து கொய்ய.

சானெல்லாம் புகுந்து சென்று கண்டன வெல்லாங் கொய்து
கூனுலாஞ் சிலைக்கை வேடர் கோமகன் றனைவிற் போந்து
வேனிலாற் றாய்ந்த தேவின் விழியிடைப் பெய்தான் சோரி
றாவிலா வன்னங் கண்டான் றலையன்ப னாவி சோர்ந்தான்

யானினி யிதற்கென் செய்வே னெனவெண்ணி நிற்ப வூனுக்
கூனிடல் வேண்டு மென்னு முலாகண்டு தன்கண் வாங்கி
வானவன் றடங்க ணிட்டான் மாறமென் றுளம்வ லித்துக்
கானவர் பெருமான் றன்கண் கணையினா லிடந்திட் டானால்.

இடந்ததன் கண்ணை யன்ன விறைகண்ணி லப்பக் சோரி, மடந்தையோர் பங்கனுக்கே மாற்றினா னதனைக் கண்டா, னடங்கரு மகிழ்ச்சி யென்னு மாழ்கட லதனுட் டாழ்ந்து, முடங்குளை மடங்க லனையான் முழவுத்தோள் கொட்டியார்த்தான். (கசுஅ)

ஓடினான் றிசைக ளெல்லா முடம்பெலாங் குலுங்க நக்கான்
பாடினான் வாயில் வந்த படியெலாங் கைகள் கொட்டி
யாடினான் றுள்ளித் துள்ளி யாரவா ரித்தா னின்று
நாடினான் செய்த செய்கை நன்றுநன் றெனவி யந்தான். ()

இன்னண முவகை வெள்ளத் திடையலை னுலாவும் வேலை
முன்னவன் பின்னு மன்னான் முதிர்ந்தபே ரன்பு காட்டச்
செந்நிறக் குருதி மற்றைத் திருவிழி யினுஞ்சோர் வித்தா
னன்னது மைந்த னார்வ வார்கலி குடித்த தன்றே. (கஎ0)

எரிதிர யத்து ணின்று மேறுபு துறக்கம் புக்கா
னொருவன்மற் றதனுட் பின்னும் வீழ்ந்தென வுவகை மாறிக்
கரையிலாத் துன்ப வெள்ளக் கடலினு ளழுந்தி யேங்கினான்.
வரைபுரை தோளான் பின்னு மருந்துடை மையிற்றெளிந்தா

இன்னுமோர் கண்ணை யுக்குண் டாதலி னிதற்கஞ்சே னென், றன்னது களைந்த காலை யையர்கண் ணறிதற் கன்னத்; தன்னொரு செருப்புக் காலைத் தம்பிரான் கண்ணி னூன்

நீப், பின்னடு கணைகண் வைத்தான் பிரானது பொறுக்க லாற்றான். (கஎ௨)

மறைமொழி பிறந்த தம்வாய் மலர்திறந் தருட்பே ராழி, யிறைவர் * கண்ணப்ப நிற்க வெனமுக்கான மொழிந்து கொண்டே, கறையணற் கங்க ணத்த கையினற் பிடித்தார் செங்கை, யிறகறைப் பொலம்பூ மாரி யும்பர்மண் புதையப் பெய்தார். (கஎ௩)

குன்றவர் பெருமான் கையிற் கூர்ங்கணை விட்டெ நிந்து
கன்றிள மடமா னேக்குங் கண்ணுத லடிப்பூங் கஞ்சந்
தன்றலை மிசைபு னைந்தான் சைவவை திகனி றம்பூ
தொன்றிய வுளத்த னகி யொருதனி முதல்வற் ருழ்ந்தான்.

---

*கண்ணப்பநிற்கவென முக்கான்மொழிந்துகொண்டே கரம்பற்றியருளினமை, கடைச்சங்கத்துத் தலைமைப்புலவராகிய நக்கீரதேவநாயனார் திருக்கண்ணப்பதேவர்திருமறத்துள், "நில்லுகண் ணப்ப நில்லுகண் ணப்பவென்—னன்புடைத் தோன்ற னில்லுகண் ணப்பவென்—றின்னுரை யதனொடு மெழிற்சிவ லிங்கக்—தன்னிடைப் பிறந்த தடமலர்க்கையா—லன்னவன் றன்கையம் பொடுமகப் படப்பிடித்—தருளின னருளலும்—விண்மிசை வானவர் — மலர்மழை பொழிந்தனர் வளையொலி படகம் — துந்துபி கறங்கின தொன்முனிவரு—மேத்தின ரின்னிசை வல்லே—சிவகதி பெற்றனன் திருக்கண் ணப்பனே" என அருளியவாற்றனும் உணர்க.

மைதிகழ் மணிமி டற்று வார்சடை யெம்பி ரானக்
கைதவ மிலாரை மிக்க கருணையங் கண்ணு ணோக்கி
மெய்தழ னடுவ ணின்று விரிவற மனமொ டுக்கிச் [ன்.
செய்தவர் தமக்குங் கிட்டாத் திருவுருக் கலந்து கொண்டா

அற்றைநாண் முதலா வைய மண்ணனல்கண் ணப்ப வென்று
சொற்றதே பெயராச் சொல்லுஞ் சுடர்மதிக் காந்தம் வேடர்
சிற்றிடை நலார்மு கத்தைத் திங்களென் றொழுக்குந் தெண்
ணீ, ருற்றரு விகளாய்த் தாழு முயர்மலை காவ லற்கே. ()

கலித்துறை.

என்னத் திங்கள் வேணி மறைத்த விறைவான்றோய்
சென்னிக் குன்றம் வாழ்நர்கள் கோமான் செயல்கூற
மன்னுட் களிகொண் டைய னடித்தா மனாகுடிப்
பன்னற் கினிய தோர்கதை யின்னும் பகர்கென்றான்.(கஎஎ)

கலிவிருத்தம்.

நீதற வுரைத்தனஞ் சிலைவல் கண்ணப்பன்
காதைநக் கீரனார் கதைவி னம்புதும்
யாதவ மன்னமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான். (கஎஅ)

கண்ணப்பச்சருக்க முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-கஅடு.

---

பொத்தப்பிநாட்டிலே, உடுப்பூரிலே, வேடர்களுக்கரச னுகிய நாகனென்பவனொருவனிருந்தான். அவன் தத்தையெ ன்னு மனைவியோடு வாழ்ந்திருக்குநாளிலே, புத்திரப்பேறி

ன்மையால் நற்கதியின்றென மனைவியோடுவருந்தி, அது காரணமாக, குறிஞ்சிநிலத்திற்குரிமைபூண்டு தமது வழிபடு தெய்வமாய்விளங்கும் முருகக்கடவுளுக்கு இயைந்த ஆலயமொன்றியற்றி, நித்தியநைமித்திகங்களை நியமித்து,மயில்களையும் சேவல்களையும்விடுத்து, திருவிழாச்செய்வித்து,*வேலன்மேற் சன்னதங்கொள்விக்க; முருகக்கடவுள் அவனிடத்தேதோன்றி, “அன்போடுசெய்த இச்சிறப்பிற்கு மகிழ்ந்தேம்; உலகமெல்லாம்புகழும் ஓர்புத்திரனைத்தருவேம்.” என்றநுக்கிரகித்து, மறைந்தருளினார். அதுகேட்டநாகன் மனைவியோடு நனிமகிழ்ந்து,அவ்வேலனுக்கும் சுற்றத்தாருக்கும் மிகுசிறப்பியற்றி வாழ்ந்திருந்தனன். அந்நாளிலே,அக்கடவுளருளியபடி ஒரு அரியபுதல்வருதிக்க; நாகன் தத்தையோடு சாலவுவந்து,முருகக்கடவுளுக்கு விசேஷபூசையாதி நடத்துவித்தனன். அப்பொழுது நகரமுழுமையும் எண்ணெயாட்டணிநிகழத் தத்தையென்பவள் அப்புதல்வருக்கு வாசநீராட்டி, முலைப்பால்பெய்து நிலத்தேய்த்து நுதற்பொட்டணிந்து, பாலூட்டி, அலங்கரித்துக்கொடுக்க; நாகன் கையிலேதாங்கி, திண்ணென இருந்தமையால் அப்புதல்வருக்குத் திண்ணனெனத் திருநாமந்தரித்தனன்.

திண்ணனார் தொட்டிலுதைந்து தவழ்ந்து, குறநடைபயின்று, தெருவிலே சிறுதேருருட்டிவிளையாடியும், சிறிய வில்லம்புகைக்கொண்டு, சிறார்களோடு காட்டிற்புகுந்து, மான் புலி கரடி முதலிய விலங்கின்குட்டிகளுள்ளே சிலவற்றையெய்தும், சிலவற்றைக்கைக்கொண்டுவளர்த்தும்,வள

* வேலன் - வேல்கொண்டுதிரியும் வெறியாட்டாளன்.

ர்ந்துவந்தனர். அக்காலத்திலே, நாகன் வில்வித்தைகற்பிக்கும் பருவம்வரக்கண்டு, அத்தேசத்து வேடர்களையெல்லாம் அழைப்பித்து, வில்விழாநடாத்தி, பூர்வாசிரியனுக்கு வேண்டியவைகளை வெறுக்கக்கொடுத்து, "இவ்விளையோனுக்கு வில்வித்தையை அன்போடு கற்பிக்கவேண்டும்." எனப்பிரார்த்திக்க; அவன் நல்லமுகூர்த்தத்திலே, கிரமப்படி நற்சிலை பிடிப்பித்தனன். திண்ணனார் பிடித்தவுடனே வில்வித்தையனைத்து நிரம்பி, "வில்விஜயனே வேடர்குலத்தி லவதரித்தானோ!" என்று யாவருங்கூறும்படி அதிவல்லவராகியிருக்க; நாகன் இளவேட்டஞ் செய்விக்கவிரும்பி, அதனை இடையூறின்றி முடித்தற்பொருட்டு வனதேவதைகளுக்குப் பலி கொடுக்கவேண்டுமெனக்கருதி, வேடர்களோடு வனத்தை யடைந்து, நீராடி பூக்கொய்துசென்று, அவ்வனதேவதைகளிருக்கும் ஆலமரத்தை யலங்கரிப்பித்து பூசைசெய்வித்து; குங்குலியதூபத்தைக் கானகமுழுமையுங் கமழ்வித்து, கடாக்களைப்பலியீந்து, பிரசாதம்பெற்று உடுப்பூரையடைந்தான்.

மற்றைநாளிலே, மைந்தனையழைத்து, "ஐயனே, இன்றுமுதலாக நீயே மறவர்களுக்குத் தலைவனாகி, பகைவரை யழித்து அவர்நிலங்கவர்ந்து, வெற்றிபெற்று, பெரிதுவாழ்வாயாக." எனவாசீர்வதித்து, வழிவழிவந்த வெற்றிவில்லைக்கொடுத்து, வழிபெருங்காதலால் தோள்குலுங்கத்தழுவி, "நமது முருகக்கடவுளது திருவருளே துணையாகச் சென்று இளவேட்டம் வாய்த்துவருக." எனவிடைபகர்ந்து; திண்ணனார் தந்தையைவணங்கி தாயைப்பணிந்தனர். அவர்

வடுத்துப்புல்லி, மூலைப்பால்சோர, நெஞ்சுகுழைய, உச்சி மோந்து, "மகனே, நீ கடுங்காட்டிலே நுழையாமல் தண்ணிய சோலைவழியாகவேசென்று வேட்டமாடி முட்கேறலும் திருஷ்டிதோஷமுமில்லாமல் வேடர்களோடு திரும்புக." என்று நெற்றியிலே விபூதி தரித்தனள். திண்ணனார் மீண்டும் வணங்கி, அநுமதிபெற்று நீங்கி, கச்சிறுக்கி, உடைவாளுங் கட்டி, வில்லம்புகைக்கொண்டு, வேடர்கள்புடைசூழ வேட்டைநாய்களோடு காட்டையடைந்து, பலவிலங்குகளும் பதுங்குமிடமறிந்து, வலைகட்டி பறைமுழக்கி, அவைகளை உள்ளே நுழைவித்து, காடுகளைவெட்டிசசரித்து, பார்வை மிருகங்களினது ஓசையால் அவையணுகியவழி, மறைந்துநின்று, அம்புமுதலியவற்றாற்கொன்று, வேட்டைமுடித்து ஊரையடைந்தனர்.

இவ்வாறே பலகால்வேட்டமாடி, மாதாபிதாக்கள் மகிழ வாழுநாளிலே, ஒருநாள் ஒருநெடுங்காட்டிற்புகுந்து, வேடர்களினின்று நீங்கி, தனித்துலாவி, மிகவும் இளைத்து, ஓர் மாநிழலிலே துயின்றனர். அவ்வேளையிலே, சிவபெருமான் வெண்ணீறணிந்து புலித்தோலுடுத்து சடைமுடிபுனைந்த கோலத்தோடு, அவரது கனவிலேதோன்றி, "மைந்தனே, இம்மலையிலே, பொன்முகரியாற்றங்கரையிலே, கல்லாலின் அடித்தடியிலே, ஒருசிவலிங்கமுண்டு; அது துன்பமனைத்தையுமழித்து, பேரின்பத்தையளிக்கும்: நீசென்று அதைவணங்குவாயாக." என்றுரைத்துமறைந்தருள; உடனே கண்விழித்து ஆச்சரியமடைந்து, திக்கெங்குஞ் நோக்கினின்றனர். அச்சமயத்திலே, ஓர்பன்றி வேடர்சூழ்ப்பிலுளெழுந்து வலை

யையறுத்துக்கொண்டு அதிவேகமாக மலையிலே புகுதற்குச் செல்லுதலைநோக்கி, கடுங்கோபத்தோடு துரத்திச்சென்று, ஆலவிருக்ஷத்தடியிலே, சிவலிங்கத்தினருகே சென்றவுடன் மறையக்கண்டு, அதிவியப்புடையராகி, “அச்சோ! இப்பன்றி மறைந்தது தெரிந்தேயில்லை.” என்று குறித்துப்பார்க்குங்கால் எதிரே சிவலிங்கமிருத்தலைக்கண்டனர்.

கண்டவுடனே சீகாளத்தியப்பரது திருவருட்பார்வையை இனிதுபெற்று, தரிசனவேதியினெதிர்ப்பட்ட இரும்பானது அவ்வுருவமாறிப் பொன்னுருவமாவதுபோல் முற்குணங்கள்மாறி, அக்கடவுளிடத்துவைத்த அன்பேயுருவமாயினர். நெடுங்காலம் பிரிந்திருந்துவந்த தன்குழந்தையைக் கண்ட தாயைப்போலத் தாழாமல்விரைந்தோடி, தோள்களழுந்தத்தழுவி, மோந்து முத்தமிட்டார். அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்சநெக்குருக, கண்ணீர்சொரிய, உரோமாஞ்சங்கொள்ளநின்று, “குருடன்கையிலகப்பட்ட தெய்வமணிபோல இப்பெருமான் எனக்ககப்பட்டனர்.” என்று பேரானந்தமடைந்து களித்தார். பின்பு “எந்தையே, யானைபுலிமுதலிய விலங்குகள் திரியும் இக்காட்டிலே துணையுமில்லாமல் வேடர்கள்போலத் தனித்திருப்பதென்னே? நீர் அமுதுசெய்தற்கு இறைச்சி யாவர் கொண்டுவந்து கொடுப்பார்; எமது ஊருக்கு வருவீரேல் தேன் தினைமா காய் கனி கிழங்குமுதலியவைகளும், மான் முயல் பன்றிமுதலியவற்றின் மாமிசங்களும், யானே கொண்டுவந்துகொடுப்பேன். நல்ல வேடர் துணையுமுண்டு. நீர் இங்கே தனித்திருத்தற்கு [illegible] துணையுமில்லை. தேவரீர் திருவுளமிரங்கி இப்பொ

ழுதே என்னோடு உடுப்பூருக்கு வருதல்வேண்டும்." என்று விண்ணப்பஞ்செய்தார். இவ்வாறுரைத்தும், இறைவர் ஒன்றும் கட்டளையிடாமையால், "இத்தெய்வசிகாமணிக்கு இவ்விடத்திலிருத்தலே திருவுளம்போலும். சிறியேன் இப்பெருமானை நீங்குவனேல் உயிர்வாழ்வனோ! வாழேன்." என்று மொழிந்து, உற்றுநோக்குங்கால், அப்பெருமான்முடியிலே அபிஷேகஞ்செய்து நறுமணங்கமழுமலர்களும் வில்வத்தளிரும் சூட்டியிருத்தல்கண்டு, இச்செய்கையே ஸ்ரீகாளத்தியப்பருக்குப் பிரீதியாகும். என்று தெளிந்து, அப்பணியைக் கடைப்பிடித்தார்.

பின்பு "ஐயோ! பெரும்பகலாகியது. இறைவரோ மிகப்பசித்தார். இன்சுவையிறைச்சிகொண்டுவந்து இடல்வேண்டுமென்று நீங்கினால் தீயவிலங்குகள்வந்து யாதுவிளைக்குமோ!" எனகனியிரங்கி, "குன்றிடை எனக்குவாய்த்த குலமணிவிளக்கே, உமது தழற்பசிதணிப்ப மிகுசுவையிறைச்சி கொண்டு தாமதியாமல் ஒருகணத்தில்வருவேன். கொடிய விலங்குகள் வருமென்று அஞ்சவேண்டா. வந்தால் என்னை விரைய அழைப்பீராக." என்றுவிண்ணப்பஞ்செய்து, அரிதினீங்கி, கன்றைவிட்டுப்பிரிந்த தலையீற்றுப்பசுப்போல அடிக்கடி திரும்பிநின்று, ஐயர்தனிமைக்கேங்கி, காட்டிற்புகுந்து, ஓர்பன்றியைக்கொன்று தானேயேந்தி, பொன்முகரியின்தீரத்தைச்சார்ந்தனர். சார்ந்து, தீக்கடைகோலினாலேதீயையுண்டாக்கி, அப்பன்றியைவதக்கி, வாளினாலரிந்து, இன்சுவையுடையசெந்தசைகளையெல்லாம் வேறெடுத்து, அம்பிற்கோத்து, பதமுறக்காய்ச்சி, வாயிலிட்டு, பல்லினாலே மெல்லமெல்

லைப் பலமுறையதுக்கிப்பார்த்து,சுவையுடையஇறைச்சிகளை யெல்லாம் தேக்கிலையினுற்றைக்கப்பட்ட கல்லையிலேவைத்து,கழிசுவையில்லாதவற்றைப் புறத்திலே உமிழ்ந்தார். அதன்பின்னர் தளிர்களையும் மலர்களையுங்கொய்து தலையிற்செருகி, திருமஞ்சனத்தை வாயிலேமுகந்து, ஒருகரத்திலே அமுதிட்டகல்லையையும், மற்றொருகரத்திலே வில்லம்புகளையும் எடுத்துக்கொண்டு, "ஆகெட்டேன்! என்னுயிர்த்துணைவராகிய கடவுள் மிகுந்தபசியாலிளைத்தாரோ! கொடியவிலங்குகளால் அச்சமுற்றாரோ!" எனப் பதைபதைத்து ஏங்கி, குஞ்சுக்கு இரையையூட்டத் தாழாமலோடும் பறவைபோல மனோகதியும் பின்னிடச்சென்று, சந்நிதியையடைந்து சிவபெருமானது திருமுடியிலுள்ள பத்திரபுஷ்பங்களைச்செருப்புக்காலினாலேமாற்றி, வாயிலுள்ளநீரால் பிரானது திருமேனியும் உள்ளமுங்குளிர அபிஷேகித்து, பத்திரபுஷ்பங்களை முடிவளைந்து சூட்டி, திருவமுதையெதிர்வைத்து, இனியவார்த்தைபலசொல்லி ஊட்டி, பிரியாது அருகேநின்றனர்.

அவ்வேலையிலே வேடர்கள் திண்ணனாரைக் காணுமல் மிகுதியும் அச்சமுடையராய்க் காடெல்லாந்தேடிவந்து, அருகடைந்து, "ஐயனே, நீர் எங்களை நீங்கி இம்மலையையடைந்ததென்னை? யாங்கள் ஏதேனும் பிழைசெய்தனன்டோ! சூரியன் உச்சியடைந்தனன். பசித்திருக்கின்றீர். இங்கடைந்தது அறியேம். யாங்கள் விரைவாக வந்ததுபற்றி முனிபாது உடன்வருக." என்றபலவாறுரைத்தும் எதிரொரு மொழியாமையால் கவலையுற்று, "இவ்விருக்கும் இந்தெய்வ

ம் இவ்விடத்திலே எதிரிருக்கின்றதோ! யாதோ! உணரோம். இதை நமது தலைவருக்கு உரைப்போமாயின் அவர்வந்து தக்கவகையியற்றுவர்." என்று துணிந்துசெல்ல; சூரியனும அஸ்தமயனமாயினன். திண்ணனார் சிவபெருமானைத் தீயவிலங்குகள் அணுகுமென்றஞ்சி அம்புதொடுத்த வில்லோடு மறந்தும் கண்ணிமையாமல் நின்றுகாத்து, வைகறையிலே திருவமுதமைக்கச்சிந்தித்து, மலைச்சாரலையடைந்தனர். இது நிற்க.

அறிவு அருள் அடக்கம் சிவபத்திமுதலியவைகளே ஒரு வடிவெடுத்தாற்போன்றவரும், நல்வினை தீவினைகளால்வரும் இன்பத்துன்பங்களைச் சமமாக எண்ணுபவரும், சௌந்தரியமாதர்கள் வலிந்துதழுவினும் தாயெனநாடுந் தபோதனரும், திருக்காளத்தியப்பரைத் தினந்தோறும் சிவாகமவிதிப்படி அருச்சிப்பவருமாகிய சிவகோசரியாரென்பவர் பிராமமுகூர்த்தத்திலே, எழுந்துசென்று, பொன்முகலிலேஸ்நானஞ்செய்து, தலையிலே திருமஞ்சனமும், கரத்திலே பத்திரபுஷ்பமுந்தாங்கி, சிவநாமத்தையுச்சரித்துக்கொண்டு, சந்நிதியையடைந்து, அங்கே ஊன்கள் சிதறிக்கிடக்கக்கண்டு, உள்ளம் நடுநடுங்கி, பக்கத்திலே குதித்தோடினர். பின்பு "தேவாதிதேவரது திருமுன்னே அநுசிதமாகிய இக்கொடுஞ்செய்கையைக் கொலைத்தொழிலஞ்சாத வேட்டுவப்புலைஞரே செய்திருப்பார். அவர் இதுசெய்யத் தேவரீரான் திருவுள்ளமிசைந்தாரோ! இதை அன்புடையோர்கள் கண்டக்கால் உயிர்விடுவர். கொடுவினையேன் அதுகண்டுஞ் சாவாது உயிரோடிருக்கின்றேன்." என்றுவருந்தி, யான

பூஜாகாலந்தவற நின்றதனால் யாதுபயன்!" என்றுநினைந்து, இறைச்சிகளைத் திருவலகினாலேமாற்றி, கோமயத்தெளித்தனர். மீண்டு, பொன்முகரியிலே ஸ்நானஞ்செய்துவந்து, வேதமந்திரத்தினாலே சுத்திபுரிந்து, உருத்திர சமக நமகத்தினால் அபிஷேகஞ்செய்து, பத்திரபுஷ்பங்களாலருச்சனையியற்றி, திருமுன்னேநின்று, கரங்களைச் சிரமேற்குவித்து, கண்களினின்றும் ஆநந்தபாஷ்பஞ்சொரிய, திருமேனியெங்கும் மயிர்பொடிப்ப, அக்கினியிற்பட்டமெழுகுபோல மனம்உருகியிளக,நாத்தழும்ப, கீதநடையுள்ளதாகிய சாமவேதம்பாடி, பலமுறைபிரதக்ஷணஞ்செய்து நமஸ்கரித்து, அரிதினீங்கி, தமதாச்சிரமத்தையடைந்தார்.

இப்பால் திண்ணனார் பன்றி, மான்முதலியமிருகங்கள் பயிலுமிடமறிந்து, அம்பினாலேகொன்று, அவைகளின் இறைச்சியை முன்போலப் பக்குவப்படுத்தி, தேக்கிலையிலிட்டு, கொம்புத்தேனைநிரம்பவிட்டுக்கலந்து, முன்போலவே திருமஞ்சனமுதலியவைகொண்டு, இறைவர்பசித்திருப்பரோவென்றோடிவந்து, பூசைசெய்து, இறைச்சிக்கல்லையைத் திருமுன்னர்வைத்து, "இந்த இறைச்சி முன்கொண்டுவந்ததுபோலன்று. இவை பன்றி முயல் மான் கலை மரை கடமையென்பவைகளின் இறைச்சி. இவைகளை அடியேனும் சுவைத்துப் பார்த்திருக்கின்றேன். தேனுங்கலந்திருக்கின்றது. தித்திக்கும்." என்றுசொல்லி உண்பித்து, அவர்பக்கத்திலே, பிரியாதுநின்றார். அந்தவேளையிலே,முதனாட்சென்றவேடர்களால் இவர்செய்தியைக்கேள்வியுற்ற [illegible]றக்கமின்றியிருந்தமது தாய்பிதாக்களிருவரும்போந்து, பற்பலவுபாயங்களால் இவ

ப்படுத்தவும் வசமாகாமைகண்டு, மனம்புழுங்கி, "இனிச்செய்வதுயாது" எனத்தியங்கிச்சென்றனர். திண்ணனார் அங்கு வடைந்ததும் மீண்டுச்சென்றதும் அறியாதவராகி, கடவுளிடத்தேபிணித்த கருத்தோடு பகற்காலத்திலே மிருகங்களைக் கொன்று ஊனையருத்தியும், இராக்காலத்திலே நித்திரையில்லாமல் அருகேநின்றும், தொண்டுசெய்துவர; சிவகோசமுனிவரும் தினந்தோறும்வந்து, திருமுன்னே ஊன்கிடக்கக்கண்டு அழுதுவருந்தி, அவற்றையகற்றிச் சுத்திசெய்து, மூலலிங்கப்பெருமானைப்பூசித்து, இவ்வநுசிதத்தை ஒழித்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்து, துக்கசாகரத்திலே மூழ்கியிருந்தனர்.

சிவகோசமுனிவர்இங்ஙனமிருக்க; காளத்திநாதர் இவர்துயரை யகற்றத் திருவுளங்கொண்டு ஓர்நாளிரவிலே, சொப்பனத்திலேதோன்றி, "அன்பனே, நீ நமதுமுன்னேகண்டது இறைச்சியென்று வருந்தாதே: அது, நாம் விரும்பியருந்தும் பெறற்கரியவமுதமாகும்: அதையுண்பிப்பவனது செயலைக்கூறுகின்றேம்; கேட்பாயாக. அவன் நம்மிடத்து வைத்த அன்பு எவ்வளவென்னில், பலதெய்வநதிகளில் மூழ்கியும், விரதங்களை யநுட்டித்தும், தானங்களைப்புரிந்தும், ஊழைக்கடந்து ஓர்புதல்வனைப்பெற்றதாய்க்கு அப்புதல்வன்மேல் எவ்வளவன்பிருக்குமோ அவ்வளவேயாகும். அவன் நமது திருமுடியிலுள்ள பூக்களைச் செருப்புக்காலால் மாற்றுங்காலத்து, யாம் இளமகன்கையால் திருமுடிவருடப்பெற்ற மாதாவினது உள்ளம்போலப் பெரிதும் நெஞ்சுருகுவேம். அவன் நம்மேலுமிழ்கின்றநீர் உள்ளிருந்துபெரு

ஐய பேரன்பாக இருத்தலால், ஆராய்ந்துபார்க்கின் அது ஆற்றினின்றுங் கொண்டுவரப்பட்ட நீரன்று; முனிவரபிஷேகிக்கும் மந்திரநீரினும் மிக இனிதென்றுசொல்லலாம். அவன் எழுத்தை மிகவும் வளைத்துச்சூட்டும் மயிர்களோடு கலந்த மலர்கள், வியாக்கிரபாதமுனிவன முதலியோர் விதிப்படியெடுதது சகஸ்திரநாமங்களை யுரைத்தருச்சிக்கும் தேன்விரிந்த மலரினும் மிகநல்லவாகும். அவன முன்னே தன் வாயிலிட்டு ஆராய்ந்தெடுக்கப்பட்ட முழுச்சுவையையும் இனிஞ்சூட்டையுமுடைய இறைச்சியைத் தந்தபின்பு, தேவர்கள் இரத்தினபாத்திரங்களிலே நிவேதித்த பாற்கடலமுதமுமே வேம்பும் விடமுமாயின. அவன எமக்குமுன்னே நின்று பேரன்போடு வாய்திறந்துரைக்குஞ் சொற்கள்போல, அறிவுமுதிர்ந்த ஜிதேந்திரியர்களாலே பாடப்படும் சாமவேதகானமும் இனியதன்று. அவன்மனம் நமக்குக்கோயிலாகும். அவனுரைகளெல்லாம் வேதமாகும். அவன் செயல்களெல்லாம் அறச்செயல்களேயாகும். அவனியல்பைக் காட்டுகின்றோம். நீ நாளைவந்து அவனறியாதவண்ணம் அயலிலே ஒளித்திருப்பாயாக. இனித்துயரொழிக." என்றுகட்டளையிட்டு மறைந்தனர். அதுகேட்ட முனிவர், சொப்பனாவஸ்தையை நீங்கிச் சாக்கிராவஸ்தையையடைந்து, காளத்திநாதர் தமக்கருளிச்செய்த வார்த்தைகளை நினைந்துநினைந்து அதிசயித்து உஷத்காலையிலேபோய் பொன்முகரிநதியிலே ஸ்நானஞ்செய்து நித்தியகடனையியற்றி, அருச்சனைமுடித்து, சிவலிங்கப்பெருமானுக்குப்பின்னே தோன்றாது ஒளித்திருந்தனர்.

இவர் வருதற்குமுன்னமே சென்ற திண்ணனார் வேட்டையாடி இறைச்சியும் திருமஞ்சனமும் புஷ்பமும் முன்போல அமைத்துக்கொண்டு, அதிசீக்கிரமாகத் திரும்பிவரும்போது, பற்பல துர்ச்சகுனங்களைக்கண்டு, "இச்சகுனங்களெல்லாம் இரத்தங்காட்டுகின்றன. என் கண்மணிபோன்ற எம்பெருமானுக்கு யாது சம்பவித்ததோ! தெரியேன" என்று மனங்கலங்கி, அதிசீக்கிரமாக ஓடிவந்தார். அத்தருணத்திலே அருட்பெருமான் திண்ணனாருடைய அன்புமுழுவதையும் சிவகோசரியாருக்குக்காட்டத் திருவுளங்கொண்டு, தமது வலக்கண்ணினின்றும் உதிரஞ்சொரியப் பண்ணினார். அதை தூரத்திலேநோக்கி விரைந்தோடிவந்து, உதிரஞ்சொரிதலைக்கண்டார். காணலும், வாயிலுள்ள திருமஞ்சனஞ்சிந்த, கையிலிருந்த இறைச்சிசிதற, அம்பும்வில்லும் புறத்தே விழ, தலைமயிரிலே செருகப்பட்ட புஷ்பங்கள் அலைந்து சோர, ஆட்டுகின்ற கயிறு அற்றபொழுது வீழ்கின்ற நாடகப்பாவைபோலப் பதைபதைத்து, நிலத்திலேவீழ்ந்தார். நெடுநேரம் உள்ளுயிர்த்தலின்றி, இறந்தவர்போலக் கிடந்து, ஒருவாறுதெளிந்தெழுந்து, பலமுறை கையினாலே துடைத்து, உதிரமொழுகுதல் தவிராமைகண்டு, மீட்டும் வீழ்ந்து புரண்டெழுந்து, தமதுமுகமெல்லாம் உதிரஞ்சோரவும் மார்புவிங்கவும் கைகளாலடித்துக்கொண்டார். தலைபிளக்கவும் கைகள்சிதையவும் கற்களோடுமோதினார். "எமதுபெருமானுக்கு இத்தீங்குவிளைந்தது எனக்குப்பகைவர்களாகிய வேடுவர்களாலோ! அல்லது இம்மலையிற் சஞ்சரிக்கும் துஷ்டமிருகங்களாலோ! தெரியேன். அப்பகையைக்காண்பே

னாயின், உயிரைக் கவராதுவிடுவேனோ!" என்று நெடுந்தூரம்ஓடிப்பார்த்தார். வேடர்களையும் விலங்குகளையும் காணாமையால் வருந்திமீண்டார். "மலையிடையெழுக்குவாய்த் தமரகதமணியே, உம்முடையகண்களில் உதிரஞ்சோர்தற்குக் காரணம் யாதோ? சிறிதும் திருவாய்மலர்ந்தருளுகின்றீரில்லை! என்னைகொல்லோ!" என்று தழுவிக்கொண்டு, வாய்விட்டுப் பெரிதுமழுதார். இவ்வண்ணம் நெடுநேரங்கழித்து, பின்பு பச்சிலைமருந்து கொண்டுவந்து பிழிவோமாயின் இது தீருமென்று கருதி, காடுமுழுமையுந்திரிந்து, கண்டஇலைகளையெல்லாம்பிடுங்கி, ஓடிவந்துபிழிந்தும், உதிரம்நில்லாமையைநோக்கி, உயிர்சோர்ந்து, "இனி யான் இதற்குயாதுசெய்வேன்." என்று ஆலோசித்து நின்றார். நிற்க, "ஊனுக்குஊனிடல்வேண்டும்." என்னும்பழமொழி உள்ளத்திலே தோன்றியது.

உடனே இனி யான் என்கண்ணையிடந்து அப்பினால் இறைவர்கண்ணிலிருந்துபாயும் இரத்தம் தடைபடுமென்று தீர்மானித்து, தமதுகண்ணைக் கணையினாலேகளைந்து, இறைவர்கண்ணிலே அப்பினார். அப்பொழுதே அப்பெருமான் உதிரத்தைமாற்றியருள; அதனைக்கண்டு, அடங்குதற்கரிய சந்தோஷசாகரத்திலமிழ்ந்திக் கூத்தாடினார். "நான் செய்த செய்கை நன்றாநன்று." எனவியந்தார். இப்படி சந்தோஷசாகரத்திலே உலாவுஞ்சமயத்தில், அவரது முதிர்ந்தபேரன்பைச் சிவகோசமுனிவருக்குப் பின்னுங்காட்டுதற்குத் திருவுளங்கொண்டு, மற்ற இடக்கண்ணினின்றும் உதிரஞ்சோரவிக்க; அது திண்ணனாருடைய எல்லையிறந்த சந்தோ

ஷசாகரத்தை உறிஞ்சியது. அக்கினிகிரயத்துவீழ்ந்து கொடுந் துன்பமுற்று நீங்கி அவர்க்கஇன்பமுற்றோனொருவன் பின் னும் அக்கிரயத்திலே வீழ்ந்தாற்போலத் திண்ணனார் உவ கைமாறி, கரையில்லாததுன்பக்கடலிலேயழுந்தி ஏங்கி, ஒ ருவாறுதெளிந்து, "மருந்தைக்கைகண்டேன் எனக்கு இன் னுமொருகண் இருக்கிறது; ஆதலால், இதற்கஞ்சேன்." எ ன்று துணிந்து, தம்முடையகண்ணைக் களைந்தகாலையில், சிவ பெருமான்கண் இவ்விடத்திலிருக்கின்றது எனறுதெரிதற் காக, ஒருசெருப்புக்காலை அப்பெருமான் கண்ணினருகே ஊன்றிக்கொண்டு,அம்பைத் தமது கண்ணிலேவைத்தார்.

கிருபாசமுத்திரமாகியபெருமான் அதைச் சகிக்கலாற் றாதவராகி, வேதாகமங்கள்தோன்றிய திருவாய்மலரைத் திறந்து, "நில்லுகண்ணப்ப நில்லுகண்ணப்ப என்னன்புடைத்தோன்றல் நில்லுகண்ணப்ப." என்று மூன்றுமுறை இனி துமொழிந்துகொண்டே அவர்திருக்கரத்தைப் பிடித்துக் கொண்டனர். பிரமாதிதேவர்கள் மண்புதையும்படி கற்ப கப்பூமாரி பொழிந்தார்கள். திண்ணனார் கையிலிருந்த அம் பையெறிந்துவிட்டு, ஸ்ரீகாளத்திநாதருடைய திருவடித்தா மரைகளைச் சிரசிலே சூட்டிக்கொண்டனர். சிவகோசமுனி வரும் அத்தியந்த ஆச்சரியமுடையராகி, அம்முதல்வரை வணங்கினர். அப்பெருமான் இருவினையொப்பும் மலபரிபா கமுமுடைய அவ்விருவர்களுக்கும் கிருபாநோக்கமளித்து, அவர்களை அக்கினிமத்தியிலிருந்து அந்தக்கரணமொடுக்கிய அருந்தவர்க்கும் பெறற்கரிய தமதுதிருவுருவத்திலே கல ந்துகொண்டார். அத்தொழநாள்முதலாக ஆன்றோர் சிவபெ

ருமானருளியவாறே திண்ணனாருக்குக் கண்ணப்பரெனத் திருநாமம் வழங்குகின்றனர். என்று ஆறுநாளிலே முத்தி பெற்ற அக்நாயனார்சரித்திரத்தோடு சிவகோசரியார்சரித்திரத்தையும் உபதேசித்து, அவ்வரசர் வேண்டுகோளின் படியே, நக்கீரதேவர்சரித்திரத்தைக் கூறத்தொடங்கினார்.

---

## ௯.—நக்கீரச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அமுதுறழ் தமிழொண் முத்த மையசந் தனமெல் வாசங், கமழ்குளிர் தென்றலென்று கரையரும் பொருள்படாம, விமிழ்கடல் வரைப்பெலாந்தோன் றெண்பொருள் படுநாடெள்ளித், தமிழ்முதல் பிறக்கு நாடாய்த் தயங்குமாற் பாண்டி நாடு. (க)

மேற்படி வேறு.

தன்கால் சுமக்கு முறுப்பிலான் றன்னே வலரா னிலைகலங்கிப், பொன்கா றிதலை மூலமடவார்ப் பொருந்து துணையா மாநிலத்து, வன்கா றரியா தழல்வாளைத் தலையாற் சுமக்கு மலையைநகு, மின்கார் மழைதோய் முடிமலய விலங்க லுடைத்தத் திருநாடு.

(இதன்பொருள்.) தன்கால் சுமக்கும் உறுப்பிலான் றன்—தன்காலினுற் சுமக்கப்பட்ட அனங்கனாகிய மன்மதனது,— ஏ அலரால் நிலைகலங்கி—பாணமாகியமலர்களாற் றமது நிலைகலங்கிய சுந்தரமூர்த்திநாயனாரை,—பொன் கால் திதலை மூலை மடவார்—பொன்னொளியைவீசுகின்றதேம

ஸ்படர்ந்த தனங்களையுடைய பரவைநாச்சியார் சங்கிலிநாச்சியாரென்னு மிருவரிடத்தும், — பொருந்து துணையா— சேர்க்குந்தூதாக,—மாநிலத்து வன்கால் தரியாது உழல்வாரை—பெரியபூமியின்கண் வலியகால் தங்காமலுழன்றவராகிய சிவபெருமானை,—தலையால் சுமக்கும் மலையை நகும்—முடியினாற்சுமக்கின்ற கைலைமலையைப் பழிக்கும்,—மின் கார் மழை தோய் முடி மலயவிலங்கல்—மின்னலையுடைய கரியமேகங்கள் படிகின்ற சிகரத்தையுடைய பொதியமலையை,—அத்திருநாடு உடைத்து— அப்பாண்டிநாடுடையது. என்றவாறு.

காலென்பது தென்றலெனவும் பாதமெனவும், உறுப்பிலானென்பது மன்மதனெனவும் அங்கமில்லாதவனெனவும், ஏவலாரென்பது பாணமாகியமலரெனவும் ஏவற்றொழிலினரெனவும் பொருள்படக்கூறுதலிற் சிலேஷை. நிலைகலங்கி வினைக்குறிப்புப்பெயர். பொன் ஒளியையுணர்த்தலின் ஆகுபெயர். நகுமலயவிலங்கலென இயையும். இவ்வாறன்றி மேருவைப்பழிப்பதெனப்பொருள்கொள்ளின், நிலைகலங்கி என்பதை வினையெச்சமாகவும், பொருந்து என்பதை வலித்தல்விகாரமாகவுங்கொண்டு, உறுப்பிலான் ஏவரால் நிலைகலங்கி மடவாரைத் தமக்குப்பொருந்திய துணையாக்கொண்டு மாநிலத்துக் கால்தங்காமலுழலும் தேவர்களைத் தலையாற்சுமக்கும் மேருமலையைநகும் மலயவிலங்கலெனமுடிக்க. உழல்வார் ஈரிடத்தும் காலமயக்கம். (உ)

வானேறமுதஞ் சாபத்தான் மண்ணிற்புனலா லொழுகியது, தானேறு நிலத்தி லியல்பாற்றன் றன்மை திரியா வர

ம்பெற்ற, மானீ ரோமற் றிதுவென்ன மதுரங் குடிகொண்
டெஞ்ஞான்று, மாறு தொழுகும் பொருணையாற் றரசு மு
டைத்தத் திருநாடு. (௩)

கலிநிலைத்துறை.

கறங்கு பன்மணி யருவியைத் துளியொடு கலந்து
நிறங்கொண் மாமணி சேணிடைச் சிதறிட நெடுங்கைப்
பிறங்கு வெண்பிறைக் கோட்டியா னைகண்மதப் பெருநீ
ரிறங்கு மாமுகத் தேற்பன குறிஞ்சியி னிடங்கள். (௪)

கொன்றை பூத்துழை தன்னிடங் கொண்டுகூர்ங் கோட்டு
வென்றி யேறுபெற் றண்டலைத் தாங்குபு வீயா
தென்றும் யாறுதன் றலைக்கொடு முக்கணெம் பிறைபோற்
றுன்று பல்பசுச் சேரிட மாய்முல்லை தோன்றும். (௫)

குழலி னோசையுந் தயிர்கடை யொலியுங்கோல் வேறு
தழுவு மார்ப்புமா னிரைமணி யரவமுந் தண்ணென்
செழும லர்க்கொன்றை படுசுரும் பிசையும்வெஞ் சினத்த
மழவி டைக்குலம் வாய்விடு முழக்கமு மாறா. (௬)

போர்வி டைக்குல முயர்ந்தெழு புற்றுமண் சிதறக்
கூர்ம ருப்பினாற் குத்துபு துகளெழக் குளம்பா
லார முற்சினத் தொடுநிலந் தொட்டியி லசைய
மூரி வாய்விடு முழக்கம்விண் ணேற்றொடு முரணும். (௭)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாமரை குவளை யாம்பல் சங்குவளை வலயி னன்ன
மாமைவண் டரம்பை கன்னல் கமுகமென் றலைவி றைந்து

காமரு மருத மாதர் கவினுறப் பமைப்போ னவ்வத்[க்கும்
தோமின்மாதிரிகையெல்லாந் தொகுத்ததோரிடத்தையொ
கலித்துறை.

அன்ன மங்கலா ரணிநடை கற்கவேட் டணையர்
பின்னு ழன்றுழன் றடிசிவந் தும்பெரு மையினுன்
மன்னு மெய்விளர்த் ததுபெற வனத்தினுட் பதும
மென்னு மாதனத் திடையிருந் திருந்தவ மியற்றும். (௯)

கழனி யுட்புகுந் துறுவலிப் பகட்டினேர் கடவி
யுழுந ரோதையால் வெரீஇயெழுந் தும்பரிற் பறக்கு
மழகின மென்சிறை யோதிமத் தணிசிறை யடித்த
லொழுகு வான்கங்கை வெண்டிரை யெறிந்திட லொக்கும்.

சேல்க ளுண்டக டார்த்திய மென்சிறைச் செய்ய
கால வோதிமஞ் சிறதிரை யசைக்குமென் கமலக்
கோல நாண்மலர்ச் சேக்கையிற் பெடைதழீஇக் கொண்டு
சாலும் வண்டிசை கேட்டுறங் குவமலர்த் தடங்கள். (௧௧)

மாம லர்க்கணை யோன்சிலை யாயுயிர் வருத்து
தீமை யின்பய னுறலென மள்ளராற் செய்ய
காமர் தீங்கரும் பாலையா டப்படு கவ்வை
தாம யற்கணெற் போர்கடா விடுமொலி தாழ்க்கும். (௧௨)

யாமு ழத்தியர் காற்சிலை யாயிழி பெய்தத்
தாமு லைத்தட மிடற்றொடு பிகர்த்துயர் தருக்குச்
சாமு ருக்குது மெனத்தெங்கின் காய்விழத் தாக்கிக்
காமர் காகிளங் கமுகொடிப் பனவராற் கணங்கள். (௧௩)

வரைக ளொப்பன போரொழுங் கியபுரி வரையி
னருவி யொப்பன கற்றுபா கடுபுகை யலைவுழ்

கருமு கிற்குல மொப்பன நீங்கழைக் கரும்பின்
றிரள வற்றினைச் சூழ்ந்தகா டொப்பன் செறிந்து. (கச)

விரந்த மஞ்சள்கள் வாழையின் குலைதொடு நெடிய
வரம்பைப பாளைவாய்க் கமுகெழிற் குலையினை யடுக்கு
முரிஞ்சு மற்றவை தெங்கினெண் குலையையங் குயர்ந்த
குரும்பை கெட்டிலைத் தாழைதை வருமுகிற்குலத்தை. (கரு)

கருத்தின் கோட்டன குவிமுலைச் செய்யகட் காரா
விருந்தன் பன்மல ரிலஞ்சியுண் மேய்த்திடு மினைஞர்
பெருந்தன் மாம்பழ மெறிகரும் பின்குணில் பிறங்கு
சுரும்புண் டாமரைத் தடத்துவீழ்ந் தனக்குழாக் தாக்கும்.

குளிர்கொண் முத்தொடு முகையிற்செய் சிற்றிலிற் குழிசி
வளையு மிப்பியுங் கொண்டனத் தூவிமேல் வயங்கு
மொணிகொள் செந்துகிர்ப் பாவையை யிருத்திமற் றுள்ளம்
களிகொள் பேதைய ராடுவ புன்னையங் கானல். (கஎ)

ஒழுகு தேம்புனற் கொழுங்கய லொடுவரால் கொடுத்துக்
கழிபு துன்னிடைக் கொடிச்சியர் கொடிச்சியர் கையிற்
பழுநி லின்சுவைக் குறிஞ்சித்தேன் கடர்கெழு பசும்பொற்
குழைக டர்தகட் கடைச்சியர் கடைச்சியர் கொள்வார். (கஅ)

முருக்கெ யிற்றிய ரெயிற்றியர் கருங்குழன் முல்லை
யரும்ப விழ்ந்தபூ முடிப்பர்க ளணிமுலை யாகும்
பெருங்கு டத்தியர் குடத்தியர் பிறங்குகோங் கரும்பு
விரிந்த பூவினுட் பொற்றுகள் பூசுவர் மெய்யில். (கக)

கொம்ப ரொத்தசிற் றிடையுழத் தியர்கள்கட் கொண்டு
பம்ப ரத்திய ராடவர் மனம்படப் பரந்த

சம்ப ரத்திய மூலைப்பாத் தியர்தளர் மருங்கு
லம்ப ரத்தியர் பாத்தியர் விலைமுத்த மளப்பார். (௨௦)

இன்ன தன்மைய வளங்கெழு பாண்டிநா டென்னு
மன்ன மன்னவ டிருமுக மண்டல மாகி
மன்னும் விண்ணவர் பொன்னக ரத்தினை மறக்கும்
பொன்னி னன்மணி மாமதின் மதுரையம் புரமே. (௨௧)

தேடி நான்முகன் செங்கண்மால் காண்கிலான் றிங்கள்
சூடி னானடி யார்மனத் தான்மறைத் தொகுதி
பாடி னானரு ளாலறு பத்துநா லாட
லாடி னானதி லென்னதன் பெருமையா ரறைவார். (௨௨)

மொய்வம் பார்மலர் மிகுகனி போர்த்திசை முழுதுஞ்
செய்வண் டார்த்திட வொழுகுறம் வைகையின் செல்லு
ம்மவக் தாடொளிர் மணிசெய்பொன் மாடமா மதுரைத்
தெய்வஞ் சாத்திய பன்மலர் மாலையிற் றிகழும். (௨௩)

நிலைபெ யர்ந்தயல் செல்கலாத் தாரகை நிலாயி
னிலகி * வம்பல ரிவையியங் காவகை யென்னென்
றலகில் விம்மித முறச்செயு மந்தரத் தகடு
தலைபு ரிஞ்சியர் கோபுரத் துறுசுடர்ச் † சாலம். (௨௪)

அங்கண் மாடத்தின் மேற்பயின் மடந்தைய ரனம்வான்
கங்கை யங்கம லத்திரள் வளையலுண் கருதிப்
பொங்கு மாசையிற் புகவதி லுறுமன மிலைக
டங்க டொல்குல மன்மையிற் றனித்தனி யிரியும். (௨௫)

---

* வம்பலர் - புதியோர். † சாலம் - கூட்டம்.

மெலிநு சுப்பினுர் களிமயின் மாடத்தின் மேற்றக்
கலிழு கைப்பெரும் பாம்புகள் லைகலு கடுங்க
வுலவ லாலிரு சுடர்களு கனியுள மூவந்து
மலிபொன் மாடத்திற் றமகதிர் வேறுறு வழங்கும். (உக)

விண்டொ டர்ந்த ‡ வே ரங்கடம் மேற்புறத் தாடும்
பண்ட ருங்குத லைப்பசுங் கிளிகடம் பணைத்தோங்
டொண்டை வாயினர் விழைதலிற் பிடித்திடத் தொடரும்
வண்டில் பூங்கண்ணி விஞ்சையர் சூழ்தர வயங்கும். (உஎ)

விண்ண கட்டினைத் தொடுமுடி யேறுதல் வேட்ட
வெண்ணி றப்புறுப் பறந்தரு கேசெல விளங்கு
மண்ணு றுத்திய செம்மணி வேரமா மலகி
ஞெண்ணி றத்தனக் தேடழற் றுணுவை யொக்கும். (உஅ)

நெடிய வெண்சுதை மாடத்தின் விரிந்தவெண் ணிலவுங்
கடவுள் வான்கங்கை வெள்ளமும் வேற்றுமை காணப்
படுக லாமையிற் கங்கைவேட் டெய்திய பரிதி
வடிவ மென்கிறைப் புட்களோ டன்னங்கண் மருளும். ()

இருவி சும்புதோய் மாடமேற் சுருங்கையி விருந்து
திருவி ளங்குமா நகரணி பார்த்திடுஞ் செய்ய
வரிநெ டுங்கணுர் தோட்கிளி கொத்தலின் வளர்ந்த
வுருவி ளங்கமு கின்குலை செழும்பழ முதிர்க்கும். (௩௦)

இனைய வர்ம்பெரு வளம்பல சிறந்தவவ் விணையி
னைக மாநகர் வெண்குடைச் செய்யகோ லரசன்

‡ வேரம் - செய்குன்று.

புனித வானவன் றலைக்கொளத் திங்களம் புத்தே
டனது தொல்குல விளக்கமோர் வழுதியைந் தாரான்.(டுக)

கலிவிருத்தம்.

நடுக்குஞ்சர தனமாமுடி நாகத்திறை வனவாழ்
வெடுக்குஞ்சர வணமைந்தனொ டிணைவான்முகப் புகரா
முடுக்குஞ்சர மலையான்மலை யுறழ்தேர்பல வுடையான்
றொடுக்குஞ்சர மழையாற்பகை சுடுதீப்பல வவித்தான்.

(இதன்பொருள்.) குஞ்சம்அரதனம் நடு மா முடி—கூட்டமாகிய அரதனங்களைப்பதித்த பெரியமுடியையுடைய,—நாகத்து இறைவன வாழ்வு—விண்ணுலகத்திற்கிறைவனாகிய இந்திரனுடைய வாழ்வுகளனைத்தையும்,— எடுக்கும் சரவணமைந்தனொடு இணைவான்—காத்தருளிய முருகக்கடவுளோடு ஒப்பவன்,—முகம் புகர் ஆம் உடு குஞ்சரம் மலையான்—முகத்திலே புள்ளிகளாகிய நக்ஷத்திரங்களையுடைய யானைமலையையுடையவன்,—மலை உறழ் பல தேர் உடையான்—மலைகளையொத்த பற்பலவாகிய தேர்களையுடையவன்,—தொடுக்கும் சரம் மழையால்—பிரயோகிக்கப்படுகின்ற பாணங்களாகிய மழையினால்,—பல பகை சுடு தீ அவித்தான்—பல பகைகளாகிய சுடுகின்றநெருப்பைத் தணித்தவன். என்றவாறு.

நடு குஞ்ச அரதனமென்பது நடுக்குஞ்சரதனமெனநின்றது. இறைவன என்புழி இறுதி அகரம் ஆறும்வேற்றுமைமைப் பன்மையுருபு. (டுஉ)

மேற்படி வேறு.

வளையாகத்தான் வளர்தோளான்செவ்
வலையாகத்தான் மதிபோல் குடையா

னரிமா னனையா ரணியேந் தல்பெறு,
வரிமா னனையா ரலர்மா லையினன்.

(இ-ள்.) வரை ஆக வளர் தோளான்— மலையைப்போல வளராநின்ற புயங்களையுடையவன்,—செவ்வரை ஆகத்தான் — உத்தமஇலக்கணமாகிய சிவந்த மூன்றுவரியையுடைய மார்பையுடையவன்,—மதிபோல் குடையான்—சந்திரன்போலும் வெண்கொற்றக்குடையையுடையவன்,—அரிமான் அனையார் அணி ஏந்தல்—சிங்கவேறுபோன்ற அரசர்களுக்கு அழகியதலைவன்,— அரி மால் நனை பெறு ஆர்—வண்டுகள் மயக்கத்தைவிளைக்கும் தேனைப்பெற்று உண்கின்ற,—அலர் மாலையினன் — மலர்களாற்றொடுக்கப்பட்ட மாலையையுடையவன். என்றவாறு.

தான் அசை. மார்பின்கண்ணே மூன்றுரோகைகிடத்தல் உத்தமவிலக்கணமென்பதை "வரையகன் மார்பிடை வரியு மூன்றுளவே" என்பதனாலுமறிக. (௩௩)

தரவுகொச்சகக்கலிப்பா.

மாமாலை வண்டுபண்ணின் வகைபாடுந் துழாய்மாலை
மாமாலை வண்டுபண்ணி மதில்களொரு மூன்றுமெய்த
காமாரி யிகைப்பூங் கழன்மறவாக் கருத்தினனீங்
காமாரி யிகைப்பூங் கரதலத்தான் கடற்படையான்.

(இ-ள்.) மா வண்டு மாலை பண்ணின் வகை பாடும்—கரிய வண்டுகள் ஒழுங்குபெறநின்று பண்ணின் விகற்பங்களைப் பாடுகின்ற,—துழாய் மாலை மா மாலை வண்டு பண்ணி—துளஸிமாலையையணிந்த பெருமைபொருந்திய விட்டுணுமூர்த்தி

யை அம்பாகச்செய்து,—ஒரு மூன்று மதில்களும் எய்த கா மாரி—திரிபுரமும்மதில்களையுமழித்த சிவபெருமானது, —ஈகை பூ கழல் மறவா கருத்தினன்—பொன்மயமாகிய மலர் போலுந் திருவடிகளைமறவாத உள்ளத்தையுடையவன்,— நீங்கா மாரி ஈகை பூ கரதலத்தான்—(கைம்மாறுகருதாது) நீக்கமின்றிப் பொழிகின்ற ;மேகத்தையொத்த கொடையை யுடைய பொலிவாகிய கைத்தலத்தையுடையவன், — கடல் படையான் — சமுத்திரம்போலும் சேனைகளையுடையவன். என்றவாறு.

மூன்றும் என்னும் முற்றும்மை மதில்களென்புழிக் கூட்டப்பட்டது. எய்தல் காரணவாகுபெயர். (கூச)

கலித்துறை.

ஆட லக்கிரு வொடுகில மகள்விளை யாடு
நீடு செய்குன்ற மாக்தடக் தோளினு னிலவும்
பாட னங்கையா டரங்கமா காவினன் பதும
வாடு நுண்ணிடை மடக்தையத் தாணியா மார்பன். (கூடு)

கலச யோனியா முனிவரன் குடித்தவக் கார்கோ
ளல்பெ ரும்புனன் மறித்தும்விட் டானென்ப ரதுபொய்
புலமை யந்தணர் பெறத்தரு பொருளொடப் பொன்மா
மலைய னுன்பொழி தானநீர் நிறைந்தன் று மன்றே. (கூசு)

திரைநெ டுங்கடற் றனையவ் வரசர்கோன் செங்கா
வரிநெ டுங்கணூர் புலவியாற் பொய்ம்மையு மறியும்
பெரிய வந்தணர் மந்திர சேடையாற் பிறங்கு
மெரிம ணிப்பொலக் தொடிக்கைக ளேற்றலு மறியும்.(கூஎ)

உலவி லண்டமாம் புதூகரூ லூற்றிருந் தொழுகு
மலைவீ ஞென்வனை பொற்குட நிறைந் துமேல் வழியப்
புலவ ராமெகி னக்குழா னனிதவப் புரிபு
நிலவு தன்பெரும் புகழெனும் பாலினு னிறைத்தான். (௩௮)

திரைய கன்கட லிடத்துறுந் துகிர்க்கொடி சேண்டோய்
வரைக ளுக்கொளிர் செந்நிறத் தாதுமா திரத்தெண்
கரிக ளுக்கெழிற் சிந்துர மாகுமக் கழற்கா
லரசர் தம்பிரான் றனதடற் றோன்றொளி யன்றே. (௩௯)

வெற்றி வேற்படை யவன்பிர தாபமாம் வெய்யோ
னுற்ற வார்திரைப் பெரும்புனற் குவலய முவப்ப
மற்ற வன்றரி யார்வசை யிருளொடு வயங்கும்
பற்று தீக்கதிர்ச் சுடரொடு மறுதலைப் பட்டு. (௪0)

இத்த கைப்பெரும் பெயர்முடி வேந்தர்கோ னிலங்கு
சித்தி லத்தனிக் கவிகையா னிலமெலா நிழற்றி
மெய்த்த செய்யகோ றடையற டோய்த்திசை மேவு
மத்த வாரண முகங்களிற் கயற்பொறி வரைந்து. (௪௧)

குரும ணிக்குவால் பொற்குவை விலையில்பூண் குவவு
முரண்ம ணிப்பொலந் தேர்த்திரண் மனத்தினு முந்தும்
பரிய ணிக்குழாம் பிறைமருப் பீர்ங்கவுட் பருவத்தா
னருவ ராக்களிற் றினத்திறை யரசர்க ளளக்க. (௪௨)

வெளிறி லுண்புல மந்திரிக் கிளையொடு மேவி
யளவில் போகத்துய்த் தினிதுவீற் றிருந்தன னக்கா
ஒண்ணிதி ரைக்கட லுலகெலாந் தம்புகழ் நிறீஇய
தளர்வில் கேள்விக் கீரனார் முதலிய சான்றோர். (௪௩)

அன்ப ரெண்ணிய வெண்ணியாங் கந்நிலை யளிக்கும்
பின்பு தாழ்சடைப் பெருந்தகை யருளினாற் பெற்ற
பொன்பி றங்கிய தெய்வதப் பலகைதம் புலமை
வன்ப நீக்கிடக் தரவதி லிருந்துள மகிழ்ந்து. (சச)

யாக்கை பெற்றவர்க் குறுதியா மறம்பொரு ளின்பம்
போக்கி னுண்பொரு ளரிலறப் பகுமொழி புணர்த்துத்
தூக்கி னம்பல பலபுனைந் தெறிந்நா சுருட்டு
மாக்க ருங்கட லுலகிடைத் தமிழினை வளர்த்தே. (சரு)

வெள்ளைத் தாமரைச் செல்விதன் பெண்மையை விடுத்திட்
டெள்ளற் பாடிலா ணுருவெடுத் தெனமுடி யேந்தும்
பிள்ளைப் பான்மதி யான்றமி ழொருவனுப் பெருஞ்சீர்
வள்ளற் பாண்டியற் காருயிர்த் துணைவராய் வாழ்ந்தார். ()

இன்ன வாறவர் வாழுநா ளோர்பக லெரிகான்
மின்னு வாட்பிடைச் செல்வல னுயர்த்ததார் வேந்தன்
பொன்னின் மாடத்தின் மேனிலைக் குழையடர் பூங்க
ணன்ன மன்னவ ளோடினி தேறினை னமர்ந்தான். (சஎ)

ஆய காலையின் மந்தமா ருதத்தொடு மரிக்கன்
வேயை வென்றதோ ளணங்கின்வார் குழன்மணம் வீசச்
சேய னுன்குவி முகிழ்முலைச் செய்யவாய்த் தேவி
மாயி ருங்குழ லின்மண மாமென மதித்தான். (சஅ)

மதித்த காவல னதுமனங் கொண்டுதன் மனத்திற்
றதைத்த நுண்பொரு டரவொரு செய்யுள்செய் புலவ
ரிதைக்கொள் கென்றபொன் னுயிர மொருகிழி யியற்றி
யதைப்பொற் சங்கமண் டபத்தின்முற் றூக்கினை னன்றே.

புலவர் யாவருந் தாங்கண்ட வாறுபாப் புனைந்து
தலைவன் முன்புபோய்ச் சாற்றிய வனைத்தையுந் தண்டார்
மலைகொ டோளினன் மறுத்தலின் வறிதகன் றனரவ்
விலகு பொற்கிழி யிருந்ததங் கறப்பவ ரின்றி. (ருo)

கால மங்கதி லுரோணியிற் கரியவன் புகுத
வால வெவ்வர வடுத்தவீ ருவாவினு மழன்று
கோல வெஞ்சுடர் தண்சுட ரிரண்டும்வாய்க் கொள்ள
ஞால மைந்தனும் வெள்ளியு மிகல்பட நடந்தார். (ருக)

காலை தண்பனி சொரிதலு நண்பகற் கால
நீல வான்புதை முகிலினம் பெய்வபோ லின்று
மாலை தோன்றுமுன் மலர்தலை வான்கழு வியது
போல நீங்கலு நிகழ்ந்தன மழைவளம் பொன்ற. (ருஉ)

பெயல்வ றந்தபைங் கூழெலாம் பீளொடு கரிந்த
பயம்வ றந்தன மரங்களு மலைகளும் பனிநீர்க்
கயம்வ றந்தன கள்ளியும் பெண்ணையுங் கதிரின்
வெயிலின் வெந்துதம் பசுமைபோ யுலர்ந்தன மிகவும். ()

உண்ப தின்பன கனிமிகக் குறைந்தன வொருங்கு
வெண்க லங்களும் வெள்ளியுஞ் செம்பொனும் விளங்கு
மண்கொ ளொன்பது வகையகன் மணிகளு மலிந்த
வெண்ப தம்பெற லரியதா யிற்றுமன் யார்க்கும். (ருச)

நீடுந் தீப்பசி யாற்குடர் கொளுத்திய நிலத்தோ
ராடுந் தின்கலா வடகுதின் றனர்நில னகழ்ந்து
வாடும் பல்வகைக் கந்தமுந் தின்றனர் மக்கள்
காடுங் குன்றமு நிரம்பினர் தின்பன கருதி. (ருரு)

சிறவர் கைகயன தாயர்தாம் பறித்தனர் தின்றார்
முறகு தீப்பசி பொற்கலார் மக்களுன் முதலா
வுறப சுந்தனை யாவையுந் தின்றன ருலகத்
தறைப முஞ்சொலைப் புகுந்தினர் மானமாண் பற்றார். (ருசு)

வழியெங் கும்பிண மிடறுமில் வார்கடற் கப்பாற்
பொழிலின் கண்ணுமுற் றலாயது நாற்றகீள் போழ்வாய்
முழைவெங் கூற்றுயி ருண்டற வெறுத்தது முள்வாய்க்
கழுகுங் காக்கையு ளுமலியு நரிகளுங் களித்த. (ருஎ)

சிலர்பி ழைத்தவவ் வறகடத் திறையயர்ச் சிக்குத்
தலைமை பெற்றவன் றருமியென் பவனுட னளர்ந்திங்
கிலையு யிர்க்கர ணினிகடக் தெத்திசை யேனு
மலிவி லைத்துநா டெய்துவ மெனமனம் வலித்தான். (ருஅ)

கோயில் சென்றடைக் தருட்பெருங் கடலினைக் குறுகித்
தாயி லன்புடை யாயிவ ணுறிலினிச் சாவேன்
றேய முய்வதற் கேற்றது புகுந்துநீஇச் செழுமை
யாய பின்பிவ ணடைகுவ லெனத்தொழு தழுதான். (ருகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குழவியந் திங்கள் வேணிக் குரிசின்மற் றதனைக் கேளா, வழுதகுங் குழையல் வாழி யன்பவொன் றறைவல் கேட்டி, வழுதிநாக் கினனேர் பாத்தன் மனங்கொள வுரைத் தோர்க் கென்று, கிழியதா யிரம்பொன் சங்கக் கிளர்மணி மண்டபத்தே. (சுo)

அங்கதை யிப்பா வேந்தற் கறைந்தனை பெறுதி யென்று, வொங்குதேர் வாழ்க்கை யென்னுங் கோதிறாக் கேந்து

விட்டான், பொங்கிய களிப்பி னானும் போய்த்தொடர் பழு
தில் தன்னைத், திங்கள்வெண் சூடையி னான்றன் செவிப்புல
த் தூற்றி னனல். (சுக)

மற்றது கேட்டுத் திங்கண் மருகன்று னினைந்த வண்
ணஞ், சொற்றலி னினிது வந்து தொகுசங்கத் தவர்பாற்
போயிப், பொற்றபாட் டிசைவி யென்றான் பொருக்கெனத்
தருமி சென்று, கற்றவ ரவைமுன் சொன்னான் கவிகள்கேட்
டனுமு வந்தார். (சுஉ)

ஆங்கவர் தம்முட் கீர னரும்பெறற் கல்விச் செல்வத்,
தோங்கிய தருக்கி னலிவ் வுரைத்தபாக் குற்றமென்றான்,று
ங்கிய வுவகை சிந்தித் தருமிதான் றனைவிற் போந்து, தே
ங்கமழ் கடுக்கை வேணிச் செல்வனே டிதனைச் சொன்னான்.

கேட்டது மங்க யற்கட் கிளியுறழ் கிளவி பங்கன்
பாட்டியற் புலவ னாகிப் பாவலர் தம்பாற் போயெங்
கோட்டமில் கவிக்குக் குற்றங் கூறின ரியாவ ரென்று
ஞட்டிய புகழ்நக் கீர னனெனத் தருக்கிச் சொன்னான். ()

சொல்லனுங் குற்றம் யாது சொல்லென நெடுங்க ணல்லார்
 இல்லிருங்குழற்குநாற்றஞ்செயற்கையன்றியற்கையுண்டோ
வில்லது கூற லான்மற் றிதுகுற்ற மென்று ணன்னன்
மல்லல்விண் மகளிர்கூந்தன் மணமியல்பன்றோவென்றான்.

என்றலு மரம்பை யர்க்கு மிருங்குழ லறிய காற்ற
மின்றென வுரைத்தா னைய விறைவியென் றலைமேத்தங்
குன்றிறை பயந்த செல்வி கூந்தலெற் றென்றான் கீரன்
றன்றனித் தருக்கா லம்மை தனதுகூந் தறும்றென்றான்.

ஏற்றினா னெற்றிக் கண்ணு மெரிமருள் சடையுங் காட்
ட, மாற்றரு மருட்சி யான்கண் வடிவெலாங் காட்டி னானு
ஞ், சாற்றிய செய்யுள் குற்றஞ் சடைகொண்டு வெருட்டல்
வேண்டா, தோற்றில விதனுக் கென்றான் றொலைவிலானை
வெகுண்டு சொல்வான். (சுஎ)

எம்மொடு முரணி வான்றோ யிமயமால் வரைப்பூங்
கொம்பின், மைம்மலி மறைசொல் லானு மணங்கமழ் கு
ழல்பழித்த, செம்மைசொ ளறிவி லாய்நீ தீர்ப்பருங் குட்ட
நோய்கொண், டிம்மையி லலைக வென்று னிறப்பநக் கீர ன
ஞ்சி. (சுஅ)

முழுமெயும் பணித்தி ரங்கி முருகலர் கமலம் வென்ற
கழலடி வீழ்ந்தி றைஞ்சிக் கருணையங் கடலே யெந்தா
யிழிபுடை நாயி னன்னே னிலங்கறி விலாது செய்த [ன்
பிழைபொறுத் தருளிச் சாபப் பிணிகெட வருள்வா யென்றா

என்றலுங் கருணை வள்ள லெரிசினந் தணிந்து கீர, செ
ன்றநீ கயிலை காணிற் றீருமிக் கொடுநோ யென்று, குன்று
றழ் புரிசை விண்டோய் கோயிலிற் புகுந்தொ ளித்தான், றெ
ன்றலம் பொதிய வெற்பிற் றென்னர்கோ னிசை யித்தான்.

பொற்குலை தருமி யேற்றுப் பொலிந்தினி திருந்தான் வெ
வற்கடந் தீர வெங்கு மழைவளஞ் சுரந்த திப்பாற் [ய்ய
நிற்குணன் றந்த சாபத் தீப்பிணி யுடலம் போர்ப்ப
நற்கவி னிகந்து கீர நாவலன் சிந்தை செய்வான். (எக)

விரவினை யழுகி நைந்து வீழ்ந்துகால் குறையா முன்ன.
மிருகையும் விரல்கு றைந்திட் டெரிபுகு துறப்பொல் வாமு

னுருவினுண் புழுக்கள் சோர வொழுகுசீ நாறச் சேணில்
வருதல்கண் டவரு மிழ்ந்து வழிவிலக் கினர்செல் லாமுன். ()

பலப்பல நாடி நந்து படரொளிக் கயிலை யென்னு [தான்
முலப்பில்குன் றெய்தி யிங்கோ ரொழிக்குவ மெனத்துணிந்
விலக்கரு நண்பி னேனை விட்டக றற்கு நெஞ்சங்
கலக்கமுற் றழுதி ரங்கிக் கரையில்பே ரருளு ளாழ்ந்தான்.

தடையில்பே ரறிஞர் தம்மைத் தனித்தனி விளித்து நம்மோ
டுடனுறை வாழ்வு நீங்கு மொருபெரும் பாவி யேனை
மடனறு நமரங் காணீர் மறவன்மி னென்று தன்மெய்ப்
படுபிணி நோக்கி மார்பம் படத்தழு வாது நின்றான். (எசு)

நாவல ரதைய றிந்து கண்ணிமார் பிறகப் புல்லி
யோவில்கண் ணருவி பாய வுளங்குழைந் தழுது நல்லோய்
மேவரு நின்னை நீத்து வெருவிய மிருப்ப நின்ற
வாவல்வல் வினையு ளார்யா மல்லதிவ் வுலகத் தியாரே. ()

என்றன் ரிரங்க மேலோ னெதிர்தழீஇத் தழுவி யாறிக்
குன்றனீர் இறியற் காகக் குழைந்தழ றமியேன் செல்வல்
பொன்றலி னட்பி னுக்குப் * புணர்வொடு பழகல் வேண்டா
தின்றநல் லுணர்ச்சி தானே நிறைக்குமென் றுணர்த்தநல்லீர்.

என்றுபஃ றிறத்தாற் கூறி யினையிலா னரிதி னீங்கிச் [த்.
சென்றனன் புலவர் கண்ணுஞ் சிந்தையுந் தொடர்ந்துசெல்ல
நன்றிலாக் கையான் மோதித் தான்றியன் குலைபு திக்கு
மன்றலம் புதுநீர் வைகை வடகரை கடந்து மன்றோ. (எஎ)

* திருக்குறள், நட்பு, ரு.

என்றினி மதுரை காண்பே மெப்பகல் சவுந்த ரேசன்,
றன்றிரு வடிகள் காண்பேந் தாயையெஞ் ஞான்ற கூழ்
பேம், வென்றிவேற் றரும வேந்தர் வேந்தனை யெந்நாட்
காண்பே, மொன்றுயிர்த் துணையாஞ் சங்கத் துறைவையெப்
பொழுது காண்பேம். (எஅ)

நுணங்குமா ணறிவின் மிக்க நால்வலார் மறப்பர் கொ
ல்லோ, வணங்குதேர்த் தானை மன்னர் மணிமுடி புழுக ழற்
கா, லணங்குடை யரிமான் றப்பி னரசர்கோ னினையான்
கொல்லோ, விணங்குநூற் புலவர் நாற்பா னெழுவரொன்
றுரைக்குங் கொல்லோ. (எகூ)

இனித்தமி ழினிமை யாவர்க் கெடுத்திசைத் திடுவ மன்னோ
வெனப்பல பலவு மெண்ணி யினைந்துவெஞ் சுரமி றந்து
புனற்றிரு நாடு புக்குப் பொருந்திரைப் பெண்ணை நாடு
தனைக்கடந் தந்தண் பாலித் தண்ணடை கண்டு சென்றான்.()

அரவணைச் செல்வன் வாழு மந்தமிழ் நிலத்தி னெல்லைத்
திருமலை கண்டு † கண்டோர் செறிவினைத் தொடா றக்கும்
பெருவரை கண்டி றைஞ்சிப் பிறங்குவெள் ளருவி தாழும்
பொருவரு மேம கூடப் பொருப்பினை யினிது கண்டான்.()

அருணெடுங் கடலா கந்தி யடிகள்வந் தவத ரித்து
மூச்சூழு சமண்கு றம்பு முருக்குபு சைவ மென்னுந்
திருநில முழுது மாண்டு செல்வமோ டினிதி ருந்த [ன்.
பெருஞ்சீர்க்கல் யாண மென்னும் பொன்மதி னகரங்கண்டா

---

†கண்டோர்செறிவினைத்தொடாறக்கும்வரை - பருப்பதம்.

உரைபெயர் பலதே யங்க ளொருபொழு திருத்தல் லூரின்
றொருபொழு திராமற்சென்றே யொளிவளை மணிகொழிக்கு
மிரைதிரைக் கங்கை யாடி யிறந்தவர் பிறவா வின்பந்
தருதிரு நகரி லுறைஞ்சித் தடவரை காடு புக்கான். (அகூ)

கண்ணுத லிருக்கே தாரங் கண்டுதன் பணிபு னைத்த
விண்ணக டணவு கோட்டு வியனெடுங் குன்றத் தீறவ்
வண்ணற னருளா லுப்பே ராற்றலாற் சென்று னன்றேற்
மண்ணவர் தமக்குஞ் சேறற் பாலவோ பனிமாக் குன்றம்.()

மடங்கலென் குழுவை பன்றி வாரண முளவுள் ளிட்ட
கொடுஞ்சின மாவ ழங்கு குன்றமுஞ் செறிமுட் காடு
முடம்புற பிணிவ ருத்த வுள்ளங்கால் வெள்ளென் பாகக்
கடந்துசெல் வழிக்கண்டானற் கடல்புரை தடமொன் றம்மா.

சிறந்தவாங் கலைவி ளங்கித் தெளிநறு வொழுகச் செவ்வா
செறிந்தசெந் தாம ரைத்தண் டேமலர் மாலை தாங்கிப் [ய்ச்
பிறந்தநாட் டொடங்கி யானுப் பிறங்குநன் னீர்பு ணர்ந்திட்
டறந்தவா மறைவ லாள ரனையதத் தடந்தான் மன்னோ. ()

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மாண்டவா ரணத்தோ டரசிய லோது மந்திரி வளம்
பெரி தமைந்தே, யீண்டிமே லெழுந்து வந்தமே வலர்தம்
மினநிலை தளர்ந்திட வலைத்துக், காண்டக விளங்கி யுயிர்த்
தொகை புரந்து களியளி புளர்நறுந் தண்டார்த், தூண்டரு
தடந்தோட் புலவுவேற் றடக்கைச் சுடர்முடி வேந்தர்போ
ற் றேன்றம். (அஎ)

வளரிள வளைய வெள்ளியும் பொருட்டு மாசறு செம்
பொனுந் தும்பி, யுளர்கமழ் பதுமப் பதுமரா கமுந்தே னு
றுநறு நீலநீ லமும்பச், சிளவடை யொளிசெய் மரகத மணி
யுமெகினிழற் காற்கொழுந் துகிரு, மொளிவிளர் வளைவெ
ண் டாமரை மணியு முடைமையின் வணிகமா யொக்கும். ()

கலிவிருத்தம்.

பூமி மங்கையைப் பொற்புறுத் திப்பல
வேழ வன்னந் தருமேர் வளம்பெறுக்
காமர் பூவிளை வித்தலி னக்கயந்
தோமில் பின்னவர் போன்மெனத் தோன்றுமே. (௯)

வெளிய செய்ய கரியவொள் வீபொருட்
டிளைய பாசடை யென்றிவை துன்னிய
தெளிபு னற்றடஞ் செய்யவ டானம
ரொளிகொள் சித்திரக் கம்பல மொக்குமே. (௧0)

சால வூடிய தன்பெடை மீன்கொளற்
காறு மொண்சிறல் வீழொலி யச்சுற
மாறு மன்னமவ் வச்சமே * வாயிலாக்
கோல மென்சிற காற்றழீஇக் கொள்ளுமே. (௧௧)

மைத்த வண்டிசை வண்சிறைப் புள்ளிசை
தத்து பஃறவ ளைக்குரல் சங்கொலி
முத்த வெண்மருப் பியானைநீர் மொள்கலி
யித்தி றத்தினார்ப் பென்று முடைத்தரோ. (௧௨)

---

* வாயில் - தூது.

பொருவி லாவகன் பூந்தடத் தின்கரை
மரக தக்குவ டொப்பது வான்றிசை
விரிவ ளக்கும் வியன்சினைத் தான்றம்வீழ்த்
திரளவீ தாராற் றிருமா னிகர்க்குமால். (கங)

காற்ற ழங்கு கழற்கம லத்திறைற்
சாற்று மீரேழ் தலமு மளந்தவவ்
வாற்றன் மாய னறிதுயில் கொள்ளுதற்
கேற்ற பைந்தளி ரீட்ட முடைத்தரோ. (கச)

திசையி னின்ற தெறுசின வாரண
மசைத டக்கையி னூன்முரித் தாரழற்
பசிகெ டத்தினும் பாசிலை மென்சினை
யொசிவி னீள்பணைக் கோடு யுடையதால். (கரு)

தூங்கு வீழ்நுனித் தொத்தி வருமுலை
வாங்கு நுண்ணிடைச் சூரர மாதர்தாங்
தாங்கு மூசலி † னூழித் தடமுடி
யோங்கு வெற்பி னுதைத் துதைத் தாடுவார். (கசா)

வேட்டு மெய்குளிர் மென்னிழ னின்றமாத்
தாட்ட டக்கைத் தழைசெவி யானைமேற்
கோட்டி னம்பொற் றுடம்புனை செங்கவி
கூட்டு ளும்புட் குலங்க ளுதிர்க்குமே. (கஎ)

நீரில் வீழ்ந்தன நீர்பயின் மீன்களாம்
பாரில் வீழ்ந்த பறவைக ளாங்கதிர்த்

---

† ஊழிவெற்பு - சக்கரவாளகிரி.

தேரின் மேற்செல் சினைப்பஃ றலையரா
லூரில் வேருன் றுயரா லிலையெலாம். (௯௮)

அனைய வாற்கீ ழுருந்தமிழ் காவலன்
மனன மார்ந்து வதிந்தன னங்கொரு
சினையி னீங்கிலை பாதி திரைப்புன
லனைய வீழ்ந்தது நன்புனற் றீரமே. (௯௯)

மேற்படிவேறு.

வீழ்ந்தது பறவையு மீனு மாகியங்
காழ்ந்திடு புனலினு மகன்க ரைக்கணுஞ்
சூழ்ந்திடு முலகினுந் துறவின் பாலினுந்
தாழ்ந்திடு மனமெனத் தம்மி லீர்த்தவே. (௧௦௦)

அனையதோர் புதுமைகண் டதிச யத்தனாய்த்
தனியொரு தானவன் டரித்து வைகினு
னினைவறு குறுமுனி யிலக்க ணம்பெறப்
புனைதரு மிலக்கியப் புலவர் சிங்கமே. (௧௦௧)

பரிதியந் தகன்றனைப் பயந்த பின்னர்வல்
விருனுகர்ந் தனையவ னிளவ லாமெனக்
கருவிருந் தின்றன காட்சித் தாகிய
வொருபெரும் பூதமங் குடன்று வந்ததே. (௧௦௨)

வாரியை வயிற்றுறும் வடவை யோடொரு
பாரிய வுருவுசெய் தென்னப் பார்மிசைக்
காரினை யிடியொடு கவர்ந்து பங்கய
னேருரு வமைத்தென வுருவ மிக்கதே. (௧௦௩)

இருளறி யாதவல் லிரவி யும்பெறு
தெருளறி யாதவா ணவமுந் தீர்தலின்
மருளறி யாததோர் சிவமு மானவே
யருளறி யாதத னகமெஞ் ஞான்றுமே. (க0ச)

அடுதிற லுடையவப் பூத மாயிடை
வடநிழ லமர்தரும் வள்ளற் கீரனை
நடைதள ருழையிளங் கன்று நச்சியோர்
கொடுவரி கவாந்தெனக் கொண்டு சென்றதே. (க0ரு)

ஆங்கொரு மலைமுழை யவிர்ச டைப்பிரான்
பூங்கழ லடிநிழல் பொருந்தி னோர்தமை
நீங்கிய வாணவ சததி நித்தமா
யீங்குறு மெனநனி யிருளொ டொன்றுமால். (க0சா)

பகலிடை மெலிதலும் பரந்த வல்லிடை
மிகுதலு மிலையிருள் வெற்பி னம்முழை
மகிழ்வுசெய் வாழ்விலும் வறுமை யின்கணும்
தகுதியா மனமொரு தன்மைத் தாதல்போல். (க0

உண்ணிறை யிருண்முழை யொன்றில் பத்துநா
றெண்ணுறு தொகையரா யிருந்து ளோருட
னண்ணலை யுள்புக வடைத்துப் பூதகீர்க்
* கண்ணிய வுளமொடு கயத்திற் போயிற்றே. (க0அ)

போயின காலையிற் புலவ ரேடவண்
மேயின ரினைவுறீஇ விளம்பன் மேயினர்

---

* கண்ணுதல் - கருதல்.

நீயிவண் வருதலாற் றூறைநி ரம்பியே
யாயிர மெனுங்கணி தத்த ராயினேம். (க0௯)

இனியுயிர் செகுத்துநம் யாக்கை யால்வயிற்
றனலினை யவிக்குமாங் கதுவென் றுள்ளுடை
நினைவொடு முரைத்தனர் நிரம்பு தங்கணல்
வினைவழி புலவனவர் தமைவி ளங்கிலார். (ககo)

கீரனங் கவர்மொழி கேட்டு மாழ்கில
ஞாரூ றெய்தலு மார்வ மெய்தலு
மோருட லியற்கையென் றுள்ளி யாங்குளார்
பேரிட ரகற்றுமோர் பெற்றி யெண்ணினன். (ககக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வரைபுணர் குறிஞ்சி மன்னன் வரைபக வெறிந்த செவ்
வேண், முருகல ரலங்கற் றிண்டோண் முருகனென் றவன்
பொற் றண்டைத், திருவடி மலரி றைஞ்சிற் றீவினைச் செல்
லன் முற்றும், பரிதியங் கடவுட் கண்ட பனியென வகன்று
போமால். (ககஉ)

ஆறிரு தடந்தோ ளண்ண லாறெழுத் தினையு மோதில்
வேறொரு பிணியோ மென்னை வியப்பதோ பிறவி யென்னு
மாறரு மறுதி நோயு மாறிவே தாக மங்கள்
கூறரு மின்ப வீட்டிற் குடிபுகுந் திருப்ப ரன்றே. (ககங)

ஐம்பெரும் பூத வாயி னகப்படு முயிரை மீட்டுச்
செம்பொனஞ் சிறக தன்கைத் திருவடி நிழலில் வைக்கு
நம்பிகன் குமர வேட்கி நாளொரு சிறுபூ தத்தா
லிம்பரிங் குறுநோய் தீர்த்த லெளிதலா லரிய தன்றே. ([illegible])

இன்னன நினைந்து நீர னிலங்கிலை நெடுவேற் செம்மல்
பன்னிரு செவியு மாரப் பருகமு தாகி யோதி
லுன்னிய வுனனி யாங்கிங் குதவுவ தாகிப் பாவின்
முன்னுற வந்து நிற்கு முருகாற்றுப் படைமொ ழிந்தான்.

பொன்னவிர் சுணங்கு பூத்த புணர்முலைக் கருங்கண் வள்ளி
கனனலு மமுதுந் தேனுங் கைக்குமின் றீஞ்சொன் மாற்றித்
தன்னிகர் புலவன் கூறுந் தமிழ்செவி தாழ்த்துக் கேளா
வந்நிலை மனங்க ளிப்புற் றறுமுகம் படைத்த கோமான்.

துயின்மலி திருமால் வீழ்ந்து துணுக்கென வெழுந்து நிற்ப
வெயின்மணி யணைமு டக்கு மெய்ந்நிமிர்ந் தோட வாடு
மயின்மிசை யலையிற் றோன்றும் வளரிளம் பரிதிப் புத்தே
ளியன்மலி யுருவந் தோன்ற விவர்ந்தறு முகமி லங்க. ()

பன்னிரு கதிருந் தோன்றும் பன்னிரு மலைகள் போலு
மின்னவிர் குழைக டாழ்ந்து விளங்குறு குவவுத் திண்டோட்
பொன்னரி மாலை தாழப் பொலங்கழல் புனைந்து வந்தென்
சென்னியின் மலர்ந்த கஞ்சந் திகழ்தர வந்து தோன்றி. ()

பூதகா தனுக்கன் காமப் புலவனைப் பூத முண்ணுங்
காதலா னணுகும் போதோர் கதையினா லலைநி லண்ட
மோதினா னனையே மோதி முடிதகர்த் தத்தை வீட்டி
மேதையாம் புலவ னோடும் விடுத்தனன் முழையு ளோரார்.

பாரிடம் விழுங்கப் பட்ட பலரையும் வாய்தி றந்திங்
கோரிடம் விடுப்ப வந்த தொத்தவ ணிருந்தோ ரெல்லாம்
போரிட மிலைவேல் போற்றும் புலவனை யறுத்த வாற்றுந்
னரிட மெனும்ப ராரைக் கன்முழை [illegible]

பெரியவர் சங்க மெய்தப் பெற்றிடி னன்மை யென்ன
வுரைசெயப் பட்ட வற்று ளொன்றமெய் தாத தில்லை
புரைதரும் வினைக டம்முட் போயுகா வினையு மற்றே
வரையுறழ் குவவுத் திண்டோண் மழைமத யானை வேந்தே.

மணிமுடி யரசர் வாழ்வு மக்கட்பே றாதி நல்கிப்
பிணியிடிப் கையி டுக்கண் பேயினுக் களவு கள்வர்
பணிவிட மொழிக்கு மாற்றப் படைமொழி புலவர் திங்க
மணிகிள ரலங்கற்றிண்டோள றமுகற்றொழுதுசொல்வான்.

அடியனேன் செருக்கா லைய வாலவா யமல னென்ற
ன், வடிவெலாங் கவரு மிங்ஙோய் வரப்புகன் றனன்யா ன
ஞ்சிச், கொடியனேன் பிழைபொ றுத்தாட் கோடியென்
றனனி தின்றுங், கடிவிலாக் கயிலை காணி னென்றனன் க
ருணை வள்ளல் (கஉஈ.)

ஆதலாற் கயிலை காண்பா னடைந்திவ ணிருந்த காலைப்
பூதமா ரனுரி மைப்பப் போற்றினர்க் குதவி செய்யும்
வேதநா யகநீ யென்பால் விழுமமிங் கனைத்துந் தீர்த்தாய்
சோதிமா கயிலை காட்டித் தொலைத்தருள்பிணியு மென்றான்.

செந்தமி ழாளி யின்ன செப்பலுங் கருணை கூர்ந்து
கந்தவே டிசைபு ணர்த்திக் கயிலையென் றூல வாயி
லெல்லைகடூ றுமை யானின் றிலங்குதென் கயிலை யானு
மூந்துநோய் தீரு மென்று முன்னின னிதனைச் செய்தான்.

குறைபொரு திரைசீர்ப் பொய்கை காட்டியொன் றித
ன்னை மூழ்கில் விரைபடு கொன்றை வேணி வெற்பினைக்

காண்கை யென்றான, வளாபக வெறிந்த வைவேன் மணிம
ருள் கலாப மஞ்ஞைக், குளைகழ லறுமு கத்தெங் குடிமு
ழு தாளுங் கோமான. (கஉகு)

தன்றலை யான டந்த தாய்க்கலாற் கயிலைக் குன்ற
மினறிரு தாளா லெய்த றனக்கெளி தோகல் யானைக்
கன்றொடு பிறந்த சிங்கங் கருணையாற் பணித்த வாறு
கனைறென வுளங்கொண் டங்கணல்லிசைப்புலவனென்பான்.

முருகனைத் தொழுது சென றுமூழ்கினு னத்த டத்தி,
லிருவினைக் குறும்பு கொல்லு மிலங்குதென கயிலை தோன்
றப், பொருதிரைக் கங்கை நாணும் பொனமுக ரியினெ ழு
ந்தான், சுராகண் மொய்த் தலர்பூ மாரி சொரிந்தனர் விசும்
பு போர்ப்ப. (கஉஎ)

அருந்தமிழ்ப் புலவன் பொன்னை யாற்றிலிட் டொருஞ்
ஞ
ளத்திற், பொருந்துவித் தவன்ப யந்த புதல்வனோர் புலவ
ன றன்னைத், திருந்துறக் குளத்தின் மூழ்கச் செய்தொரு
நதியின் வந்து, விரைந்தெழப் புரிந்த தன்மை வியந்திடப்
பட்ட தன்றே. (கஉஅ)

தாழ்ந்தபொன் முகரி தன்னைச் சார்தலாற் றணந்த தெ
ன்ன, வாழ்ந்ததென் கயிலை தன்னைக் காண்கையான் மாய்ந்
த தென்னச், சூழ்ந்ததன் மேனி மாநோய் தொலைந்தெழுந்
தனன்மேல் வேலை, வீழ்ந்தவெங் கதிர்கு றைந்து வேலையூ
டெழுந்த தென்ன. (கஉ௯)

மாசுறு மணியை மாசு தீர்தர மண்ணி யாங்கு, தேசு
று முருக னுகித் திருந்துபொன் முகரி மூழ்கி, மாசுறு கவி

தொடுத்த வரும்பொருளெதிர்ந்தான் போற்கண், கூசுற்
மொளிகொண் மேனிக் குமரன்றாதையையெதிர்ந்தான்.

மேற்படி வேறு.

நெஞ்சக் குளமன் பெனும்புனலானிறைந்து கடைவி
ட்டெனவிழிநீர், விஞ்சக் கரங்கடலைகூப்பி விளங்கு திருக்
காளத்திமலை, நஞ்சக் கரிய மிடற்றமுதை ஞானக் கொழு
ந்தைத் தொழுதிறைஞ்சி, யஞ்சக் கரமு மனத்தெண்ணி ய
மையா வன்பு மயமாகி. (கசுஉ)

கயிலை வேறு காளத்தி வேறென் றெண்ணுங் கருத்தி
லனாய்க், கயிலை பாதி காளத்தி பாதி யாகக் கலந்துறழ்
ந்து, மயலில் கரும்பா மொழிபாகன் மகிழ வெண்பா வந்
தாதி, மயிலில் வருவோன் பேரருளால் வந்த புலவன் பா
டினன். (கசுகூ)

பாடும் புலவன் றனக்கொருதான் பரிசு கொடுப்பத் தி
ருவுளங்கொண், டாடும் பெருமா னெதிர்நின்றே யிறைநீ
வேண்டிற் றெனவுடம்பு, கூடும் பிணியிங் கொழித்தவருட்
குன்றே யென்றும் பேரறிவை, மூடும் பிணியுங் களைந்தனை
து மூளரித் தாட்கீழிருத்தென்றான், (கசுச)

அந்த மாதி யிலாக்கயிலை யமர்ந்த பெருமா னந்தாதிச்
சந்த மாலைப் புலவனது சத்தி பாதத் துயர்ச்சியாற்
பந்த பாச மறமாற்றிப் பனறி யுருவாய்க் காண்பதற்கு
வந்த மாது மறியாத மலர்த்தா ணிழலி லிருத்தினன். ()

என்று திருக்கா ளத்திமலை யெழுந்த ஞானச் செழுஞ்
சுடரிற், சென்று புகுந்த கீரனார் செய்தி யணைத்துங் கையி

னமரான், ஊன்று கரந்த பரன்கூறக் கழற்கால் வேந்தன் க ஷையின்னு, மொன்று கருணைப் பெருங்கடலே யுரையாய டியேற் கெனத்தாழ்ந்தான். (கடு௬)

கலிவிருத்தம்.

தீதற கவிவரன் செயலு ரைத்தனங்
கோதையர் கயிலைசேர் கொள்கை கூறுதும்
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல கூறுவான. (கூ௩எ)

நக்கீரச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - எகஉ.

---

சிவப்பிரகாசசுவாமிகள்திருவடிவாழ்க.

---

பாண்டிநாட்டிலே, சோமசுந்தரக்கடவுள் அறுபத்துநா ன்கு திருவிளையாடலியற்றிய மதுரைப்பதியிலே * சங்கவ இவந்தாரமாகவிளங்கி உலகமுழுமையும் தம்புகழைநாட் டிப் பொய்யடிமையில்லாப்புலவர் எனப்பெயர்பெற்ற நக்கீ ரதேவர், கபிலதேவர், பரணதேவர்முதலிய நாற்பத்தெண் புலவர்களும், ஒருநாள் அக்கடவுளையடைந்து, "எம்பெரு மானே, எங்களிடத்து யாவரும்வந்து வீண்வாதஞ்செய்கி ன்றார்கள்; அங்ஙனஞ்செய்யாது அவரவர் புலமையையும் அளவிடுங்கருவியாக சங்கப்பலகையொன்று தந்தருள்க." என்று பிரார்த்திக்க; கடவுள் புலவருருக்கொண்டெழுந்

---

* இச்சரித்திரவிரிவைத் திருவிளையாடற்புராணத்துட் [illegible]

ருளி, சதுரமாய் முழஅளவினதாகிய ஓர்பலகையையளித்து, "இது நம்போல்வார்க்கெல்லாம் முழம்வளர்ந்து இடங்கொடுக்கும்; இதை அளவுகோலாக வைத்துக்கொள்க." என்று கட்டளையிட்டு மறைந்தருளினார். அப்புலவர்கள் திருவுளமகிழ்ந்து, ஆலயத்தினதுவடமேற்கிலே வங்கியசேகரன் றங்கள்பொருட்டுக் கட்டுவிக்கப்பட்ட சங்கமண்டபத்திலே, அப்பலகையிலிருந்துகொண்டு, உயிர்க்குறுதியாகிய அறம்பொருளின்பம்வீடென்னும் நால்வகைப்பொருள்களையும் புதுமொழிகளுள்ளே புணர்த்தி, நவரசங்களும் யாண்டுந்துலங்க, பலபிரபந்தங்களை அருளிச்செய்ததுமன்றி, சிவபெருமானே இறையனாரென்னுந் திருநாமத்தோடு தங்களுள்ளே ஓர்புலவராய் வீற்றிருந்து ஐயந்திரிபுகளை அகற்றியருளச் செந்தமிழைத் தேசமெங்கும் பரவச்செய்தனர்.

அக்காலத்திலே, இவர்களை உயிர்த்துணைவராகக்கொண்டு வேண்டியசிறப்புக்களைநடாத்தி அத்தியந்த அன்புடையனாயொழுகும் வங்கியசூடாமணியென்னும் பாண்டியன், வசந்தகாலத்திலே, ஒருநாள் மேல்மாளிகையிலே, மனைவியோடு தனித்து இனிதிருந்தனன். அத்தருணத்திலே, சிறியதென்றலோடுகலந்து, ஒருதிவ்வியமணம்வீச; அவன் அதை தனது மனைவியினது கூந்தலின்மணமெனமதித்து, விம்மிதமடைந்து, "இவ்வாசம் கூந்தலுக்கு இயற்கையோ! செயற்கையோ!" என ஐயமுற்று, இதைப்பிறர்க்குப் புலப்படுத்தாது தன்மனத்தடக்கிக்கொண்டு, "யான் ஐயுற்றபொருள் இன்னதென் செய்யுளியற்றும் புலவர்கள் இதைக்கொள்க." என்று ஆயிரம்பொன்னை ஓர்முடிப்பாக்கி, அதைச் சங்கம

ண்டபத்தின்முன்னே தூக்கினான். புலவர்பலரும் அரசன்க ருத்துவிளங்காமையால் வெவ்வேறுபொருள்களையமைத்து பாடல்களையியற்றி, அரசன்முன்னருரைத்து, அவைகள் அ ன்றென்மறுக்கப்பட்டமையால் வறிதகன்றிருக்க; அக்கிழி அறுப்பவரின்றியிருந்தது. இருக்குநாளிலே, உரோகணி நக்ஷத்திரத்தில் சனிபிரவேசிக்க, சூரியகிரகணமும் சந்திர கிரகணமும் அமாவாசை பௌர்ணிமைகளிலே அடுத்துவர, செவ்வாய்முற்பட்டுச் சுக்கிரன் பிற்பட்டமையால், மழையி ல்லாமல், தானியவிளைவுகுன்றி, பசிப்பிணிவருத்த; அதனால் உணவின்றி மடிந்தவரொழிய, பிழைத்தவருள்ளே சிலர் நர மாமிசங்களையும் அருந்தத்துணிந்தனர்.

அந்நாளிலே, மதுரையில் சோமசுந்தரக்கடவுளை வழி படும் ஆதிசைவர்களுள்ளே ஒருவராகிய தருமியென்பவ ர் தமக்குப் பொருள்வரவின்மையால் கவலையுற்று, இனியா ம் செழிப்புடைய ஓர்தேசத்திற்சென்று ஜீவிப்பதே தகுதி யெனத்துணிந்து, ஆலயத்தையடைந்து, சோமசுந்தரக்கட வுளை வணங்கி, "தாயினுமிக்கதயாநிதியே; யான் இனி இங் கு இருப்பேனாயின் சாதலையடைவேன்: ஆதலால், தக்கதே யத்திற்போயிருந்து, ஈண்டுச் செழித்தபின்னர் வருகின்றே ன்." என்று முறையிட; சோமசுந்தரக்கடவுள் திருவருள் சுரந்து, "அன்பனே, நீவருந்தேல்; பாண்டியனானவன் தன துகருத்தைவிளக்கி ஒருசெய்யுள்செய்யும்புலவர் கைக்கொ ள்ளும்படி ஆயிரம்பொன்னையமைத்த ஓர்கிழியை சங்கம ண்டபத்திற்குமுன்னே தூக்கியிருக்கின்றான்: இப்பாட்டையு ரைத்து அதைப்பெற்றுக்கொள்வாயாக." என்று

யிட்டு, "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி—காம
ஞ் செப்பாது கண்டது மொழிமோ—பயிலியது கெழீஇய
நட்பின் மயிலியற்—செறியெயிற் றரிவை கூந்தலி—னறிய
வு முளவோநீ யறியும் பூவே." என்னும் திருப்பாசுரத்தை
அளித்தருளினார். அதுபெற்ற தருமியென்பவர் பெருமிதமு
ற்றுச்சென்று, அச்செய்யுளமுதத்தை அவ்வரசனது இரு
செவிகளிலும்புகட்ட; அரசன தனதுகருத்தைவிளக்கியிரு
த்தலால் இனிது உவந்து, "இப்பாடலை சங்கப்புலவர்கள்பா
ற்சென்று அரங்கேற்றுவீராக." என்றுரைத்தனன். தருமி
சென்று, அப்புலவர்கள்பாலுரைக்க; அவர்கள்கேட்டு மகி
ழ்ந்தருணத்திலே, நக்கீரதேவர் கல்விச்செல்வத்தினலதிக
ரித்த இறுமாப்பினல், "இப்பாடல் குற்றமுடைத்து." என்
றுரைத்தனர்.

அதுகேட்டதருமியார் வாட்டமுற்று, சோமசுந்தரக்க
டவுள் சந்நிதியையடைந்து, "ஒப்புயர்வில்லாதபெருமானே,
இவ்வாழ்நாளையும் சிற்றறிவையுமுடைய ஓர்புலவர் தேவரீர்
செய்யுட்குக் குற்றங்கூறினர்." என விண்ணப்பிக்க; அப்பெ
ருமான் புலவர்வடிவங்கொண்டு, சங்கமண்டபத்தைச்சார்ந்
து, "குற்றமற்ற நமதுசெய்யுளுக்குக் குற்றங்கூறினவர் யா
வர்?" என்று வினவினர். உடனே நக்கீரதேவர் "யானேகூ
றினேன்." என்று தருக்கிமொழிதலும், பெருமான் "குற்ற
ம்யாது?" என்றுவினவ; அவர் "கூந்தலுக்கு செயற்கையால
ல்லது இயற்கையாக மணமில்லையே? அங்ஙனமிருக்க, இய
ற்கையென இல்லாததைக்கூறினமையே குற்றம்" என்று
கூறி, மீட்டும் அப்பெருமான் "அரம்பையர்கூந்தலுக்கு ம

ணம் இயற்கையன்றோ?" என்றகூறியவழியும், "அதுவும் மந்தாரமலரொடுகலந்து மணத்தலால் செயற்கையே." என்றனர். சோமசுந்தரக்கடவுள் "நீவழிபட்டேத்தும் காளத்திநாதரது பாகத்தமர்ந்த ஞானப்பூங்கோதையம்மையினது கூந்தல் எத்தன்மையது?" எனவினவி, அதுவும் செயற்கையதேயெனச் சாதித்தல்கண்டு, நெற்றிக்கண்ணையும் சடைமுடியையுங் காட்டியருள; நக்கீரதேவர் விபரீதவுணர்ச்சியால் கடவுளைநோக்கி, "நீர் வடிவமுழுமையும் கண்களைக்காட்டினும் உமதுபாடல் குற்றமே; சடைகொண்டுமயக்கவேண்டுவதில்லை: இதற்குப்பயந்து எனதுகொள்கையைவிடேன்." என்றுரைத்தனர். கடவுள் அவரைநோக்கி, "அறிவிலாதவனே, வேதங்களாற்புகழப்படும் அம்பிகையினது கூந்தலை எம்மோடுமாறுபட்டுப் பழித்தாயாதலால் நீ குட்டநோய்கொண்டு அலைக." எனக் கட்டளையிடுதலும், நக்கீரதேவர் மிகவும் பயந்துநடுங்கி, திருவடிகளில்வீழ்ந்துபணிந்து, "கிருபாசமுத்திரமே, நாயிற்கடையேன் அறிவிலாது செய்த பிழையைப்பொறுத்தருளி இந்த சாபப்பிணிநீங்கத் திருவருள்புரிவீராக." என்றுபிரார்த்திக்க; பெருமான் திருவுளமிரங்கி, "நக்கீரனே, நீசென்று கைலையைக்காணின் இக்கொடுநோய்நீங்கும்." என்றுபணித்து, ஆலயத்துட்புகுந்து மறைந்தருளினார். தருமியார் பொற்கிழிபெற்றுக் களித்திருந்தனர். வறுமைதீர எங்கும் மழைவளஞ்சுரந்தது.

இப்பால், நக்கீரதேவர் சிவபிரான்றந்த சாபத்தீப்பிணி திருமேனியிற்கவிதலால் இனி இந்நோயுடனிருத்தற்குமுன்னமே கைலையையடைந்து தரிசித்து நிவர்த்தித்துக்கொள்ளுதல்

வேண்டும் எனத்துணிந்து, புலவர்களைத் தனித்தனியழைத்து, "நட்பினர்களே, உங்களோடு உடன்வசிக்கும் வாழ்வை யிழக்கின்ற பாபியாகிய என்னை மறவாதீர்." எனறுரைத்து, வியாதிகாரணமாக விலகிநிற்க; அவர்கள் அதையறிந்து, நெருங்கியணைத்து, கண்ணீர்பெருக உளங்குழைந்தழுது, "பெறுதற்கரிய பெருந்தகையே, நுண்ணியஉணர்சசிமிக்க நும்மையிழந்து பயனற்றேமாகிஇருக்கும் பாபமுதிர்ச்சியையுடையார் யாங்களேயனறி வேறுயாவருளர்." என்று கலங்கினர். நக்கீரதேவர் அவர்களைத் தனித்தனித்தழுவி, "நட்பிற்கு ஒருதேயத்தராய் உடன்கலந்து பழகுதல்வேண்டுவதில்லை: உணர்ச்சியொத்தலேசிறப்பு. என உணர்ந்த பெரியீர், சிறியேன்பொருட்டுத் தியங்கற்க. யான்செல்கின்றேன்." என்றுகூறி, அவர்களுடையகண்ணும் மனமும் தொடர்ந்து செல்ல; அரிதினீங்கி, இனி இம்மதுரையையும் சோமசுந்தரக்கடவுளையும் அங்கயற்கண்ணம்மையையும் பாண்டியனையும் சங்கப்புலவர்களையும் எக்காலங்காணப்பெறுவேமெனவும், தமிழினிமையை எடுத்து எடுத்து யாவர்க்குணர்த்துவேமெனவும், நினைந்துநினைந்து, வருந்தி வழிக்கொண்டு, சோழநாடு மகதநாடு தொண்டைநாடு என்பவற்றிலுள்ள தலங்களையும், பருப்பதம் விரூபாக்ஷம் கல்யாணபுரம் காசி திருக்கேதாரமுதலிய வடநாட்டுத்தலங்களையும் தரிசித்து, ஒருதினமிருந்தவூரில் மற்றொருதினந்தங்கா தலைந்து, சிவகிருபையால் மனிதர்களாலடைதற்கரிய இமையமலையையுடைந்து, திருமேனியிலே பிணியிகவும் வருந்தவும் உள்ளங்கால்கள் வெள்ளெலும்பாகத் தேயவும்

செல்லும்வழியிலே, கடலையொத்த ஓர்தடாகத்தைக்கண்டு, நீராடி நியதிமுடித்து, அதன்கரையிலே, தெய்வீகம்பெற்றதாய்ப் பணைத்துத்தழைத்திருக்கும் ஒரு ஆலவிருக்ஷத்தடியிலே, தியானத்திருந்தனர்.

அச்சமையத்திலே, அவ்வாலமரத்திலிருந்து, ஓரிலை பாதிசலத்திலும் பாதிகரையிலுமாகவீழ்ந்து, சலத்தில்விழுந்த பாகம் மீனும், கரையில்விழுந்தபாகம் பறவையுமாகி, மீன் சலத்திலும் பறவை கரையிலுமாக இழுக்க; நக்கீரதேவர் அப்புதுமையைக்கண்டு, அதிவியப்புடையராகி, தியானநிலைதவறியிருந்தனர். இருக்குங்கால், வடவாக்கினிபோலும் உதராக்கினியுடையதாய இடியைப்போலுங் கடியமுழக்கமுடையதாய் அருளென்பது சிறிதும் அணுகப்பெறாததாயுள்ள ஒரு கரியபூதம், அவ்விடத்திலே சிவபூசையாதிகளில் வழுவினவர்களாகிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரை ஒரு இருட்குகையிலே அடைத்துவைத்துக்கொண்டு, இன்னும் ஒருவன்வேண்டுமெனக் காத்திருந்து, இவரைக்கண்டவுடனே தூக்கிச்சென்று, அக்குகையினுள்ளேயடைத்து ஆயிரவராக்கி, தன்னியமப்படி நீராடுதற்குத் தடாகத்திற்செல்ல; முன்னர் அடைபட்டிருந்தவர்கள் தங்களுடைய பூர்வபுண்ணியமுதிர்ச்சியினால் நக்கீரதேவரெழுந்தருளியதை உணராது, அவரைநோக்கி, "நாங்கள் நெடுங்காலமாகச் சிறையிலகப்பட்டிருந்தும் இப்பூதத்தினால் உணவுமுதலியவைகளைப்பெற்று பிழைத்திருந்தோம்; இன்றைக்கு உம்மாலே இதற்கிரையாகுங்காலம் சமீபித்தது" என்று அழுதார்கள். நக்கீரதேவர் அவ்வாக்கியங்களைக்

கேட்டு மனஞ்சலிப்பில்லாமல், யாவர்க்கும் இன்பமெய்தலும் துன்பமெய்தலும் இயற்கையே. ஆயினும, இவர்களுடைய துக்கத்தை நிவர்த்தித்தலே நமக்குத்தகுதி எனத்துணிந்து, சிந்திப்பாராயினர்.

குறிஞ்சிநிலத்தலைவனாய் விளங்கும குமரகுருபரனை வழிபடில் துன்பமனைத்தும் சூரியனைகண்ட பனியெனத்தொலையும். அம்மட்டோ! அப்பெருமானது ஆறெழுத்தையும் உச்சரித்தோர் அநாதிதொடங்கியே அகலுதற்கரிதாய்த்தொடர்ந்த பிறவிநோயையுமகன்று வேதாகமங்களால் விளம்புதற்கரிய மெய்யின்பவீட்டிலே வீற்றிருக்கப்பெறுவர். இங்ஙனமாயின, இவ்வாறெழுத்தையும் உசசரிப்போரையணுகிய பல வேற்றுமைப்பிணிகளும் விளிந்தொழியுமென்பது ஓர்வியப்பாகுமோ! ஐந்து பெரும்பூதங்களினுடைய வாய்களிலே அகப்பட்டுமாழ்கும் ஆன்மாக்களை அவற்றினீக்கிச் செம்பொற்சிறுசதங்கையணிந்த திருவடிநீழலிலே வைக்கும் எமது குமரவேளுக்கு இப்பொழுது இங்கே இச்சிறுபூதத்தாலணுகிய இந்நோயைத்தவிர்த்தல் எளிதேயன்றி அரியதாகுமோ ! என இன்னனபலநினைந்து, அக்கடவுளுடைய பன்னிருசெவிகளும் ஆரப்பருகும் அமுதமாகியும், யாவரோதினும் சிந்தித்தபொருள்களைச் சிந்தித்தவண்ணமே அச்சணத்திற்றானே அளிப்பதாகியும், செய்யுள்களினுள்ளே பெரிதும் சிறந்தது யாதென ஆராயுங்கால் இணையின்றி எவற்றிக்கு முன்னிற்பதாகியும் விளங்கும் திருமுருகாற்றுப்படையை அருளிச்செய்தனர்.

அன்பர்துயரையகற்றும் அறுமுகக்குரிசில் வள்ளிநாச்சியாரது கன்னலுமமுதமுங்கைக்கும் இனியமொழியையுமகற்றி, தந்நிகர்பெருமான்கூறும் தமிழ்த்துதியைத் திருச்செவியிலேற்றருளி, சாலமகிழ்ந்து, பசுங்கடலினிடத்தே தோன்றிய செஞ்ஞாயிறுபோல மயில்வாகனத்திலெழுந்தருளி, புலவர்பெருமானையுண்ண அப்பூதம் அணுகுங்கால் கதையினால்மோதி, முடியைத்தகர்த்துவீட்டி, யாவரையுஞ்சிறைவிடுவித்து, திருவருள்பாலித்தனர். உடனே நக்கீரதேவர் எமதுகுலமுழுதையும் ஆளும் அக்கோமானைவணங்கி, "அடியனேன்செருக்கைநோக்கி ஆலவாயமலர்முனிந்து இப்பிணிமுதிர இசைத்தருளினர். யான்பயந்து கொடியனேன் பிழையைப் பொறுத்தாட்கொள்க. என்று பிரார்த்தித்தவழி, கைலையைத்தரிசிக்கின் இதுநீங்கும். எனத்திருவருள்புரிந்தனர். அதுகொண்டு திருக்கைலையைத்தரிசிக்கவந்து இவ்விருந்தகாலையில் இப்பூதம் இவ்வாபத்தைவிளைக்க தேவரீர் எழுந்தருளி நிவர்த்தித்தருளினீர். இனிக்கைலையையும் தரிசிப்பித்து இந்நோயையுமகற்றியருள்க." என்றுபிரார்த்திக்க; கந்தவேள்கருணைகூர்ந்து, ஆலவாயென்பது இன்னதையென்று சுட்டியுரையாமையால் தென்கைலையினாலும் இப்பிணி தீருமெனத்திருவுளங்கொண்டு, பொய்கையொன்றுகாட்டி, "இதில் மூழ்குவையேல் திருக்கைலையைக்காண்பாயெனவும், எம்மைத்துதித்த இப்பிரபந்தத்தையோதினோர் இஷ்டசித்திகளை அடைவரெனவும், கட்டளையிட்டு, மறைந்தருளினார்.

நக்கீரதேவர் அக்குழகனை வணங்கி, அப்பொய்கையிலேமூழ்கி, மேற்கடலிற்படிந்தருக்கன் கீழ்க்கடலிலெழுந்

தாற்போல தென்கைலைதோன்றப் பொன்முகரியிலெழுந்தார். தேவர்கள் விண்மறையக் கற்பகப்பூமாரிசொரிந்தனர். நக்கீரதேவர் வியாதியகன்று, கடைந்தெடுத்தமணிபோலத் திருமேனிவிளங்க, நெஞ்சிலன்புபெருக, விழிகளில் நீரசொரிய, கரங்களைச்சிரமேற்குவித்து, நாகலிங்கப்பெருமானையும் ஞானப்பூங்கோதையம்மையையும் பலமுறைபணிந்தெழுந்து, ஐந்தெழுத்தையும் அகலாதுச்சரித்து, அன்புமயமாகி, கைலைவேறு காளத்திவேறு என்னுஞ்சிந்தனையின்றி, கைலைபாதி காளத்திபாதியாகக்கலந்து, ஒற்றுமைப்படுத்தி, ஒரு வெண்பாவந்தாதியைப்பாடியருளினார். அதைத் திருச்செவியேற்றுமகிழ்ந்த காளத்திநாதர் தரிசனந்தந்தளித்து, "வேண்டியவரம்யாது?" எனவினவியவழி, "எளியேனது உடலைக்கவிந்த இப்பிணியை ஒழித்தருளியதுபோலவே அறிவைக்கவிந்த ஆணவப்பிணியையும் அகற்றியருளல்வேண்டும்." எனவேண்டிக்கொள்ள; பெருமான் சத்திநிபாதத்தால் பந்தபாசத்தை முற்றக்களைந்து, திருவடிநீழலிலே இருத்தியருளினார். என்றுரைத்தருளி, அவ்வரசர்வேண்டுகோளின்படியே, கன்னியர்கள்சரித்திரத்தைக் கூறத்தொடங்கினார்.

உ

சிவசண்முகன் றுணை.

# வேலையசுவாமிகள்

அருளிச்செய்தது.

## - கன்னியர்ச்சருக்கம்.

காப்பு. நேரிசைவெண்பா.

பின்னவனு முன்னவனும் பேசு கதைதிரப்பத்
தன்னை நிகர் காளத்தி தன்னில்வாழ்—முன்னவனென்
னெஞ்சத் தியங்காம னீயென் னுளத்திருந்தே
யஞ்சத்தி யானே யருள். (௧)

அவையடக்கம். அறசீரடியாசிரியவிருத்தம்.

கல்வியற் புலவ ராகு நவையற காட்சி யுள்ளோர்
சொல்லியதொடர்பினெடென் சொற்குறைக் கவியு மேவுஞ்
செல்லிதன் னிடத்தோர் கூராச் சேயிழை மடகல் லாரு
மெல்லிதழ்க் கமலப் போதின் மேவுபுல் லியுமே போன்ற.

கலித்துறை.

மல்லன் ஞாலமோர் முடிமிசைக் கிடத்தலை மறந்த
தொல்லை நாகமொன் றழகிய சொக்கனு ரருளா
லெல்லை காணிய சூழ்கிடந் தனையவின் சியின்மே
லல்லு லாமதி தவழ்திரு வாலவா யதன்கண். (௫)

திங்கள் வான்குடைக் கீழுல காணையிற் செலுத்துந்
துங்க மாமதன் றறவெனும் பகைகெடத் துரப்பான்

றங்கு பாசறை யெனவுல காயத சமய
மெங்கள் வாழ்பத மெனக்கணி கையர்மறு கிலங்கும். (௪)

சிற்ற ரும்புபே ரரும்புநாண் மலரொடு * செம்மல்
பெற்றி டுந்தட மெனப்பரு வங்களாற் பேத
முற்றி டுந்தெரி வையரொடு படுமறு குண்ணை
முற்றி டுங்கிளி வண்டினு டவர்குழா மொய்க்கும். (௫)

வீதி யாயிடை யரசிளங் குமரர்தம் வேழ
மாதர் ராரிள முலையெழி லிரவலில் வாங்கக்
காத லான்மனந் தளர்ந்துசோம் பொடுதலைக் கடைமுன
சேர்த லாற்பெயர் தூங்கலென் றலகுளா செய்யும். (௬)

கரிய நீலவொண் கட்பொது மாதரைக் கண்ணுற்
றரிய மாதவ வேடம்விட் டணைந்தவ ரனேக
ருரிய மாநிதி யனைத்துமீந் திரப்பதற் குன்னிப்
பரிபு மாதவ வேடமுற் றகன்றவர் பலரே. (௭)

பரிந்த வாடவர் பொன்னெலா மொருங்ககப் படுக்கப், பொருந்து † பார்வைபோ லுறப்பெலாஞ் செய்யபொன் புனைந்துட், கரந்து மான்விழி நோக்குநர் பொற்படாங் கரக்குங், குரும்பை மாமுலை மடந்தையர் குழாத்தினுஞ் சிறக்கும். (௮)

பொன்னு ளார்பெறு குவர்கழைக் கரும்பிடைப் பூந்தே
னென்ன வாடக மிலார்கலைத் தண்மதி யேந்துஞ்

---

* செம்மல் - பழம்பூ. † பார்வை-ஒன்றைக்கவர்தற் கவ்வினத்திலேயே சகாயமாயிருக்குங் கருவி.

சென்னி மால்வரை விடாகத் தமைகதயைங் கேதனபோ
லுற்ற லார்தமைப் பெறுகிலர் நோக்கிநெஞ் சழிவார். (௯)

தெளித்த வொண்கலைப் பொருளினைத் தெளிதரச சிந்தை
களித்து வந்தவர் மதியள வறைந்துமேற் காட்டா
தொளித்தி டுமகுரு பரனென விளங்குமொள் ளிழையா
ரளித்தி டும்பொரு ளளவறிந் தனபுசெய் குவரால். (௧0)

உரைத்த வத்தெரு முலைவிலை மாதரு ளொருத்தி
நிரைத்த முத்தவெண் ணகைத்துவர் வாயக்கரு நீலம
வருத்து மைக்கண்மா ணிக்கவல் லிப்பெயர் மாது
திருத்த மிக்கபெண் ணரசென வுலகவாஞ் சிறப்பாள். (௧௧)

கொங்கை மாகிரி யாலசைபோன் றவளிடை கொடுப்போர்
தங்கண் மீதுசெய் யனபுபோன் றலைினளந் தளிர்க்கைக்
கங்குல் வார்குழற் கயன்மருட் டரிமழைக் கருங்கட்
டிங்கள் வாண்முகப் பவளவாய் மடந்தையர் திலகம். (௧௨)

குனித்த விற்றிற லரசிளங் குமரராங் குடத்தை
யனிச்ச மெல்லடிக் குவியிள முலையவ ளழகாந்
தனிக்க யிற்றினிற் பூட்டிவிட் டனுதினந் தாழ்ந்த
மனைக்கி ணற்றினிற் பொருட்சலம் வறந்திட முகப்பாள். ()

இனைய ளாகிய மாணிக்க வல்லிபுண் ணியகல்
வினையி னுலின முலைமுகன் கருப்பமெய் விளர்ப்ப
நினைவெ ளைமறந் தெழுகுறி கல்லன நிகழத்
தனைய னாலினி யனையிலாக் கருப்பமுட் டித்தாள், (௧௪)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீலமக் கொலைசெய் வாளிமாதர் நீண்டச் செம்பொனு
யருபோற், காமக் கிழத்தி மெய்ஞ்ஞானக் கருபப மடைந
த தன்மையாற், றூய்மைக் குணத்தி யாயினு டொல்லை மா
போ ரெல்லோரு, மேமப் பதஞ்சென் றடைவரெனி லிவடா
னினுபம் பெறலரிதோ. (௧௫)

செல்வ மாதுங் கலைமாதுஞ் சிவமெய்ஞ் ஞான மாத
ரா, யல்ல நீர விருநிலத்தி லடைந்தா ரென்ன மாணிக்க, வ
ல்லி பூத்த விரட்டைமணி மலரோ வெனவே தாகமங்கள்,
சொல்லு ஞான மலையாமற் சொல்வா ளிவண்வந் தன
வென்ன. (௧௬)

உலகமூவப்ப மதனவே ளுள்ளத்தருக்கு நிலைகுலைய
க், கலைக விழிச்செங் குமுதவாய்க் கழைமென் றோட்பைங்
கொடிமருங்குற், றிலக நுதற்பெண் மகவிரண்டு செல்வ
நீரப் பயந்துவந்தாள், குலகு மாற்பூத் தெடுத்தவொரு
கொற்ற வேந்தன் மனையவள்போல். (௧௭)

அழகின் முளைபோன் றோரியலா வமைந்து சமைவுற்
றொருங்குதவக், குழவி யிரண்டு பயந்தான்முன் கொள்கைந்
தவத்தின் பயனுமெலன், றிழைய முகிழ்மென் முலைப்கர்வா
ரெல்லாம் வியப்ப மணிக்கொடிதான, விழைவி னிருகண் ம
ணியும்போல விழுமந் துடைத்து நனிபுரந்தாள். (௧௮)

காமங் குறியின் றுயர்ந்தசிவ ஞான முண்டயோர் த
மைக்கண்டு, காமம் புரிந்த தானுனிக் கவிழ்தல்போலச் சா
ய்ந்தமுலை, தாமங் கமழுங் குழன்மடவா டமுவி பூட்டி வ.

னர்த்தனளாற், பூமங் கையுமா ணவரவுமெழிற் புறமென் றூலிகளிரண்டையுமே. (கக)

மெள்ளக் கவிழ்ந்து நிலத்திருந்து விலங்கித் தவழ்ந்து நடந்தோடிப், பிள்ளைப் பிறைபோல் வளருமிவர் பேதைப் பருவங் கடந்துமுகி, முள்ளத் தமைப்போ லொன்றுபடு மிளமென் முலைகண் மார்பினமுகய, கொள்ளப் பெதும்பைப் பருவமுறீஇக் குழலு மவிழ முடித்தனரால். (உ0)

கலிவிருத்தம்.

கண்டு செம்மணி வல்லி கவிரிதழ்க்
கண்டு மென்மொழி யார்கல வித்தொழில்
கண்டு கொண்டது கற்கு முபாயமுட்
கண்டு நெஞ்சங் களித்திது செய்குவாள். (உக)

அன்ன லேங்கண்ண யம்பு புகக்குழீஇப்
பெண்ணி னல்லவர் பெய்வளை மேகலை
வண்ண மென்றகின் மாரனங் கழனறருள்
பண்ணு கென்ற பணிபவ ராகவும். (உஉ)

கலைக வர்க்கிடு கண்ணன் மரச்சினைத்
தலையி வர்க்குறத் தையலர் கையினு
மலையி னுக்தம தற்ற மறைத்துள
நிலைத ளர்க்தவ ணிற்பவ ராகவும். (உங)

செங்கை யொன்று செழுந்தர ளப்பெருங்
கொங்கை யொன்றைக் குழைப்ப வொருகையான

---

* அலை - நீர்.

மங்கை தனபுறம் புல்லினன் வாயமு
தங்க ருந்துறு மாண்டகை யாகவும். (உ௪)

மாறில் காதலன் வந்திசை வண்டின
மேறு நாண்மலர்த் தாண்மு னிறைஞ்சவும்
வேறு மாதை விரும்பினை யென்றுளஞ்
சீறி யேகுந் திருந்திழை யாகவும். (உரு)

இருந்து நின்றுங் கிடந்து மெதிர்தழீஇப்
பரந்த மென்மலர்ப் பஞ்சணைப் பள்ளியிற்
குரும்பை மென்முலைக் கோதையர் தங்களைப்
பொருந்து மாறு புணர்பவ ராகவும். (உ௬)

ஓவி யங்க ளொளிர்மணி மாளிகை
மேவு றும்படி தான்வரை வித்தனன்
காவி யங்கட் கதிர்மணிப் பூண்முலை
வாவி யம்புய வாண்முக வல்லியே. (உஎ)

தோகை மாமயி லாதைப் புறுமுதற்
போக வோசை பயிற்றுறு புட்களும்
பாக வாமொழிப் பாவையர் கற்பன
வாக யாழ்முத லாயவு மீட்டினள். (உஅ)

காமக் கல்வியுங் கானத் திறங்களும்
வாமச் செம்மணி வல்லி பயிற்றின
ளீமத் தாடி யிடத்தெழு மன்பினைச்
சேமித் துள்ளகற் சிந்தை மகளிரை. (உகூ)

இன்ன வாறு பயிற்றினு மேந்திழைக்
கன்னி மார்வறுங் காமம் பயின்றிலர்

துன்னு பேரிருளோடு சுடரவன்
றன்னை யாவர் பயிற்றிடத் தக்கவர். (௩0)

சிந்தை நின று சிவபெரு மானசிவ
தந்தி ரப்பெயர்த் தக்க வபரமும்
பந்த பாசம் பரியும் பரமுமா
முந்து ஞான முழுது மளித்தனன். (௩௧)

கண்ணிற் காண்பன கேட்ப கருத்தினி
லெண்ணப் பட்டன யாவுஞ் சிவமென
நண்ணப் பட்டனர் நங்கையர் மாயையாற்
பண்ணப் பட்ட பலவு மெதிர்ந்திலார். (௩௨)

தேடித் தேடித் திசைதொறு மெய்ச்சிவ
வேடத் தார்தம் விழியெதி ரப்பெறிற்
பாடிப் பாடிப் பரவிப் பதமலர்
சூடிச் சூடித் தொழுஞ்செயன் மிக்குளார். (௩௩)

விழிய றிந்தில வேட்கைக் குறிப்பினை
மொழிய றிந்தில வஞ்ச மொழியினைப்
பழிய றிந்தில நெஞ்சம் பவநடை
வழிய றிந்தில மற்றவர் கால்களே. (௩௪)

ஊமை யாவ ருலகுறாக் கங்கண
னூம வாய்மையி னூமக ளாகுவர்
காமி யாவர் கருணைக் கடலினுக்
காமை யாகுவ ரைந்து மடக்கலால். (௩௫)

பேதை யாவர் பெருமைய ராகியு
மாத ராரிவ் வுலக வழக்கினி

லாதி யாரை யறியு முறிவினி
லோது பேரிளம பெண்ணெனவோங்குவார். (௩௬)

மங்கை மாரிவர் தங்கள் வளநகர்ச
சங்க மேவு தமிழ்ப்பெரு நாவலன்
றிங்கள் வேணிதன் றென்கயி லாயமுற்
றங்கு ஞானவந் தாதிய றைந்ததும். (௩எ)

காத லாற்றிருக் காளத்தி வாழ்பரஞ்
சோதி யோடு கலந்ததுந் தொண்டராற
கீத வாய்மொழிக் கன்னியர் கேட்டுளத்
தோதொ ணாத வுவகையுற் றாரரோ. (௩அ)

சென்று வானுயர் தென்கயி லாயம்யா
மென்று காண்குவ மென்னுங் கருத்தொடு
நின்று ஞானவந் தாதி நியமமா
மன்ற நாடொறு மங்கைய ரோதுவார். (௩௯)

கண்ணிற் காணுமக் கண்ணப்ப னோன
வண்ணத் தோகையர் காளத்தி மால்கெ டங்
குண்ணப் பூச வுடுப்ப கிணைகலா
வெண்ணத் தாற்பித் தனைவுந் திருந்தனர். (௪0)

சாதி நீதி தணந்தது மாதுமை
பாதி பாலுறு பற்று மறிந்தனை
* காதி மாதரைக் கள்ளுணி கள்ளுணர்க்
கோது மாறென வோதுதன் மேயினுன் (௪௧)

---

* காதல் - கோபித்தல்.

மேற்படி வேறு.

தர்ளூழவர் கொல்லையொரு தண்மழை பொழிந்த
வேளையது கண்டுவிதை வித்திடுத லேபோற்
காளையர்கள் வந்துகவி காலைபொருள் கொள்வீர்
நாளைவரு மோவிளமை நங்கையிர் நுமக்கே. (சஉ)

என்றுவளர் வீர்முலைக ளென்றுபெறு வீர்நீ
ரென்றுபயில் வீர்கலைக ளென்றிசைகள் கற்பீ
ரென்றுதவு வீரென விருந்துகவல் வுற்றேற்
கென்றுதவு வீருதவி யிவ்வளவ தேயோ. (சங)

சீரிளைஞர் மார்புபொரு செய்கையறி யாநும்
பாரமுலை யீகையிலி பாணிலைய பொன்னும்
பேரவையை யஞ்சுமொரு பேதைபெறு நாணும்
வீரமறு பேடிகையில் வேலுமிக ராமால். (சச)

காணிலுனை வாழுமுயிர் கண்டில னெனிற்பே
ராணையுன தென்றுவிழி யாறற வொழுக்கி
நாணிநிகொ ளாடவரை நேயம்வரு விக்கு
மாணறிவி லாதொரு மரப்பொறி நிகர்த்தீர். (சரு)

வந்துகரு வுற்றெனது வாயிலடைமண் ணிட்டீர்
முந்துற வுதித்தழுது முற்றையு மழித்தீர்
மைந்தரை மயக்கியவர் மாநிதி கவர்ந்து
தந்தமை யளித்ததை தனக்குறுதி செய்யீர். (சசு)

மந்திர மருந்துமணி மற்றுமுள வாய
வெந்திர மெனப்படு மிவற்றனை மடுத்து

மைந்தர்பொருள் வவ்வில்வரு மாதவர் தமக்குந்
துந்தியத ளாடையர் தமக்குமுத வாதோ. (௪௭)

செல்வமுறி நாளுறவு செல்லலுற வாழா
நல்குரவின் வந்துகிளை நண்ணுமவ ரேபோ
லொல்குறு மருங்குலுற வொண்முலைவி ழுந்தாற்
கல்விமட வீரிளைஞர் காமுறுவ ரோதான். (௪௮)

ஓரழகி லாதவரு மொள்ளணி யணிந்து
கூரழகு செயதுசிலர் கொள்ளமயல் செய்வார்
பேரழகி னுலகு பித்தளைதல் செய்து
சீரழகி லார்களென நிற்பதறி வன்றே. (௪௯)

இல்லைபிழை யாயினு மியைத்தொர்பிழை தன்னைச்
சொல்லியணை யாதெதிர் துணித்தழு துதைத்து
மெல்லுணை வொழிந்துசிலர் வேண்டுற விருந்து
நல்லிளைஞர் கொள்ளமய னங்கையர் களிப்பார். (௫0)

ஆடவர்மு னுடையை யவிழ்த்தன ருடுத்துங்
கூடுமுலை தூசொடு குலுங்குற நடந்து
நாடக நடித்துமிசை நல்லன பயின்றும்
வீடலரி தாயமயல் வேலையு ளமிழ்ப்பார். (௫௧)

மாளரிய செல்வமத மைந்தரொனும் வேழ
மீளுமுகி ரங்குச முறுத்தினர் நிறுத்தித்
தோளொனு மிருந்தொடர் தொடக்கிநம ரொல்லா
நாளும்வளர் கொங்கையெனு நற்றறி பிணிப்பார். (௫௨)

என்றினைய தன்றரும மாய்ப்பல விசைக்குங்
கன்றுமொழி யாவுமொர் கவிழ்த்தகுட மீது

மின்றுபொழி மைம்முகிலி னீரொன திலைமற்
சென்றெழிய மாசுதபு சித்தைய ருணர்ப்பார். (௫௩)

மேற்படி வேறு.

மின்னின்மா யுடம்பினை வளர்த்தல் வேண்டியே
யன்னைநீ விழுங்கியண் ணுத்தல் செய்கலா
வினைவகூர் நிரயம்புக் கிளைக்குந் தீவினை
தன்னையாஞ் செய்திடச் சாற்ற லாகுமோ. (௫௪)

இப்பியிற் பிறந்தமுத் திப்பிக் கென்செயு
மெய்ப்படு மணியவர் தம்மை மேவியே
யப்பரி சுன்றனக் கியாமு மாயினந்
துப்புறழ் சடிலமெய்ச் சோதி சேர்துமே. (௫௫)

சந்திர மௌலியை யழைத்துத் தந்தரு
ளந்திரு வஞ்செழுத் தறையு மெங்கள்வாய்
நந்தரும் வினையுடை நரரை யுய்த்திடு
மந்திர மறைகில மறப்புந் தேனுமே. (௫௬)

ஆயிரங் கலனுடம் பனைத்துந் தாங்கினு
மாயிரும் பொறையலால் வருவ துண்டுகொ
ளுயகண் விழிமணி யொன்றொர் நாளுடன்
மீயணிந் திடில்வினை யாவும் வீயுமே. (௫௭)

புழுகுசெஞ் சாந்திவை புனைந்து புன்மல
மொழுகுமொன் பான்றுளை யுடம்பை வென்றுநீ
வழுகுசெய் திடின்மல மகலு மோபரன்
றழுகுவெண் ணீறிடின் முற்று மாயுமே. (௫௮)

இளம்பிறை தவழ்முடி யிறையி ருக்குமெம்
முளம்புகு மோவுணர் வொழிக்குங் காமநோய்
துளங்கெரி வளர்செழுஞ் சுடரி லங்குறும்
வளங்கெழு மனைபுக வல்ல தோவிருள். (ருக)

தத்துவ மகன்றதோர் தனியி டத்தினிற்
பைத்தலை யரவணி பதியைப் புல்லிய
மெய்த்துற மின்பினெம் விடய வின்பினை
பொய்த்தழி மனிதரைப் புணர்ந்து கொள்வமோ. (சுO)

சங்கர தருமமே சார்ந்து ளோமினி
யங்குல தருமமுற் றெழுகு வேங்கொலோ
வெங்களி யானையை விரும்பி யேறுந
ரிங்கொரு கரமிவர்ந் திடரி னைப்பரோ. (சுக)

இம்மையு மறுமையு மினைய நல்குறுங்
கொம்மைவெம் முலையொரு கூறற் போற்றவே
மும்மைவெந் துயர்பெறு மூட வேந்தரைப்
பொய்ம்மையம் பொருளினாற் புகழ்வ மோசொலாய். (சுஉ)

உணுஞ்சுவை யமுதையு முயர்வொ ழித்திடும்
பிணம்படு முடம்பினைப் பேணித் தீத்தொழி
லிணங்குபு திரிதரு மிழுதை மாந்தரைப்
பணிந்திடின் மக்களிற் பதடி யென்பரால். (சுந)

திருந்தற மிளமையிற் செயாம லாடவர்ப்
பொருந்தின நிலையறு பொருளை யீட்டினாற்
குரங்கென வுடலமுட் கூனு நாளினிற்
புரிந்திடு செயலெது புகறி யெங்கட்கே. (சுச)

உள்ளூற விலாவெளி யுறவு செய்துதான்
றெள்ளூறு மிளைஞர்தந் திருவெ லாங்கவர்ந்
தெள்ளூறு நரகினு மிடுத லால்வெறுங்
கள்ளரிற் கொடியவர் கணிகை மாதரோ. (௬௫)

நடிக்குறு முங்கள்பொய் நாட கத்தினை
*வடிக்குறு மொழியினை மறத்தி யுங்கள்வெங்
குடிக்குண மருவிலங் குடம்பை யொன்றில்வாழ்
கொடிக்குலம் பயிலுமோ கோகி லங்களே. (௬௬)

என்றினை யனபல விகழ்ந்து கூறலுந்
நன்றளர் மூலையெனத் தலைவ னோர்ந்துதாழ்
புன்மொழி லன்னைதன் புந்தி வெந்துயர்
தின்றிட மகளிரைச் சீறிக் கூறுவாள். (௬௭)

வந்தியு மாயிலேன் மக்கட் பேற்றினாற்
சிந்தைநன் மகிழ்வுறாஉந் திருவு மாயிலேன்
முந்துநல் வினைப்பயன் முற்றி னோரலாற்
றந்ததம் புதல்வரா லுதவி சார்வரோ. (௬௮)

மந்திர மருந்துநன் மணிக ளாலிவர்
சிந்தையைத் தெளிவுறத் தெருட்டிக் காமமேற்
புந்தியை மீட்பவர் பொருட ராமலே
செந்திரு வனையவர்ச் சேர்க வென்றனள். (௬௯)

அன்னைதன் கருத்தினை யறிந்து ஞானமாக்
கன்னிய ரென்றுதென் கயிலை காண்குறு

* வடித்தல் - வசமாக்குதல்.

மென்னவவ் வுழியிருந் தெண்ணி னைந்தனர்
பன்னக வாயிடைப் பட்ட தேரைபோல். (எ௦)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அனையதோர் காலத் *தோதி யரிவையர் திருக்கா ளத்தி
தினையொடு மீன்றுரட் டப்பி நீங்குவா னிருந்த வாறு
வினைமிகு மிகுவர் கள்வர் விளங்குற வறிந்திட் டன்னோர்
புனையிழை கவருஞ் சூழ்ச்சி யிதுவெனப் புந்தி செய்து.(எக)

நான்மறை பரவு மீச னற்றவ வேடம் புக்குப், பான்ம
றை விடமு மின்றீம் பழமறை புழுவுஞ் செய்ய, வூன்மறை
தூண்டிற் பொன்னும் விலங்கின முயிர்செ குப்பான், கான்
மறை மறவ ரும்போற் கள்வர்தா மறைந்து சென்று. ( )

கன்னிய ரமர்ந்த வில்லிற் காளத்தி காக்க நம்மை,யெ
ன்னுகன் மொழியோடெய்த வாய்மொழி கேட்ட சேய்போ
ற், பன்னரு முவகை பூத்துப் பசும்பொன்மா ளிகையி னுய்
த்துத், தன்னிகர் சிறப்புச் செய்து தையலர் சாற்ற லுற்றார்.

யாண்டுளீர் யாண்டுச் செல்வீ ரடிகணீ ரியம்பு மென்ன,
வேண்டுநர் வேண்டி யாங்கு விழைந்தருள் பரனி டங்கள்,
காண்டர வுலகிற் சூழ்வோங் காளத்தி காணும் வேட்கை,
பூண்டனஞ் செல்கின் றோமங் கென்றனர் பொருள்வி ழை
ந்தார். (எச)

என்றலு மடியில் வீழா யாங்களுங் கயிலை காண்பா,
னின்றன மெமைநும் மோடு நீவிர்கொண் டேகு வீரோ,லெ

---

* ஓதி - ஞானம்.

ன்றொரு கைம்மா றுண்டோ வுமக்கென வுரைப்ப வன்னோர், நன்றென வுளங்களித்துஞானமங் கையர்க்குச்சொல்வார். (எரு)

கதிர்மணி விளக்க லாமற் கனல்கெழு மொருவி ளக்குப்
புதிதுற மனையிற் சென்று புகினுமெய் வெதும்பி நீங்கு
மதிநுதன் மடவீர் புக்கு வருந்துநர் விழியி னன்றி
யெதிர்புன லறசு ரத்தை யெங்ஙனங் கடக்க வல்லீர்.(எசு)

அன்றியு முலகங் கூறு மவமொழி தனையு நும்மை
மூன்றவ மனைத்து மாற்றி முற்றிய பயனு லீன்றுள்
கன்றினை யிழந்த தாய்போற் கலங்குமென் பதையு மஞ்சி
நின்றன மின்னு மொன்று நிகழ்த்துவ துளது கேண்மின். ()

காளத்தி காணப் பெற்ற கண்களே கண்க ளென்றுங்
காளத்தி நகரிற் சேருங் கால்களே கால்க ளென்றுங்
காளத்தி புகுங்க ருத்தே கருத்தென்றுங் கயிலை நாமக்
காளத்தி புகழு நாவே நாவென்றுங் கற்றோர் சொல்வர். ()

நரவடி வொடுசென் றெய்தகண்ணுதென் கயிலைப்போக்கை, யொருவர்தம் மாட லின்க ணுரைப்பினுங் கயிலை சேர்வர், விரவுதம் மாட லாலச் செலவினை விலக்கி னோரு, மிரவியு மதியும் வானு ளிருப்பர்வெந் நிரய மெய்தி. (எகூ)

ஆதலா லன்னை யீர்நும் மணிகிளர் திருக்கா ளத்திக்
காதல்கூர் செலவிங் கெம்மாற் கழிந்திடப் படுவ தன்றென்
றோதினு ரவர்ம னத்தோ டுரைத்தில ரெனினு மச்சொன்
மாதரார் தமக்கு நன்கு வாய்மையா வாய்த்த வன்றே.(அ0)

அனையவர் மொழிகேட் டம்பொ னணியிழை மகளிர்
முக்கட், கனியினை யடையப் பெற்றாற் கதிரிளம் பரிதி முன்
னர்ப், பனிமிக குடலம யாது படினுமென் னுலக ரெல்லார்,
மினையவோன னிகழி லென்மற் றிகழ்ந்திலர் புகழ்ந்தா ரென்ன
கொல். (௮௧)

எம்மையெவ் வகையி னானு மிறைவன்றென கயிலை சேர்ப்பா
னும்மையின் றிரக்கின் றேமென றுவரவ ரதிரி றைஞ்ச
வம்மற வர்கணன் றென்று வனையறி யாம லல்லில்
வம்மினெம் பின்ன சென்றார் மகிழ்ந்துள மிருவர் தாமும்.()

இருவர்த மிழலும் போன்ற விருவர்குற் றேவன் மாதர்
பொருவரும் வளஞ்சு மந்து போதரக் கள்வர் தம்பா
லையிருள் யாமத் தெய்தி யதரிடை யிருகா தத்திற்
பரவையின் முகட்டெ ழுந்த பரிதிவா னவனைக் கண்டார்.()

வெயின்முதி ரளவு மேகி யயன்பதி யொன்றிற் றங்கிக்
கயன்மலி விழியார் சினனாள் செலவொரு காக மீரால்
வயன்மலி செகசெ ளோங்கி வளர்வள நாடு கண்ணுற்
றுயன்மலி தலங்க ளிற்புக் கமலனை வணங்கி யேகி. (௮௪)

சூவிரி யொழுகு வல்லி கால்களோண் கிளைய வற்றின்
மேவிய சிறகால் காம்பு விளைவய றளிர்கள் போன்ற
பூவிரி யிளந்தண் சோலைப் புகழ்வள நாட்டி னுக்கோர்
கோவென விளங்கா நின்ற குடந்தைமா நகரங் கண்டார்.()

பன்னிரு பருவத் தோர்காற் பவக்கெற கங்கை யெய்துந்
தன்னிகர் தடங்கோ றற்குச் சார்வினை யிலரோ யாயும்

பொன்னனை யவர்தா மூழ்கிப் புராரியை யிடங்க டோறுஞ்
சென்னியின் வணங்கி வைகிச் சென்றனர் தில்லை நோக்கி.()

பிறைதவழ் மவுலி யெம்மான் பிறபதி களும்வ ணங்கி
மறுவறு மதிமு கத்து மங்கைநல் லவர டைந்து
குறைவறு பரமா னந்தக் கோயில்செந் தேன டிக்கப்
பெறுநக ரொல்லை யிற்சூழ்ந் தெய்தினர் பெரிது வந்து.   ()

வேலையிற் சுருதி யார்க்கும் வீதியை வலஞ்சூழ்ந் தேகி
யாலயத் தெதிர்வ ணங்கி யணிவலம் புரிவுற் றால
மூலநற் பொருளை யேத்தி மும்முறை வணங்கிச் சென்று
மாலயற் கரியா னுடு மன்றெதிர் சென்று புக்கார்.   (அஅ)

மேற்படி வேறு.

சிறப்புலியுங் கோட்புலியுஞ் செழுமலர்தூ யருச்சனை யே செய்யா நின்ற, வறப்புலியுங் கண்டுகொளும் பெருமானைக் கண்டுமிகு மன்பா லோடி, மறப்புலியி னதண்மருங்கி னசைத்தருளும் பெருங்கருணை வள்ளால் யாங்கள், பெறப் புலியூர் மன்றினடம் புரிநதாயென் றிறைஞ்சியுளம் பெரிது வந்தார்.   (அக)

பெண்படைத்த வொருபாக னைந்தொழிலு டையமுதம் பேணித் தாங்கள், கண்படைத்த பயன்பெறக்கண் டுவந்துமீண் டந்நகரிற் களித்துச் சின்னாள், பண்படைத்த மொழிமடவா ரிருந்துசிவ கங்கையினும் படிந்து மன்றில், வண் படைத்த வரவணிவோற் றொழுதகட லாடுதற்கு வழிக் கொண் டாரால்.   (கூ0)

இந்திரனை யஞ்சிமுனம் புக்கொளித்துக் கிடந்தமலை யி
ருஞ்சு ருமீன், வந்துருகு முட்பூதைய வடிப்பமக பதிவயிர
வாட்டாங் கென்று, சிந்தைகவல் வுறவெழுந்து செந்நீர்
கண் டுதிரமெனத் தியங்கி மூழ்கு, மூந்துதிரை வாரிதிகண்
டதின்மூழ்கி மகளிர்மகிழ் வுற்று மீண்டு. (கக)

தில்லைநகர் மணிமன்றத் தெம்பெருமான் றனைமதித்து
ஞ் சென்று தாழ்ந்து, முல்லைநகை மடமாதர் தென்கயிலை
காணுமவா மூந்த வப்பாற், செல்லமிடை கருங்காட்டி னூட
ன்போது கள்வரனுர் செய்யா வண்ணந், தொல்லைமறை புக
ழ்யரம னருளினாற் பலர்வந்து சூழ்வ ரன்றே. (கஉ)

கங்குறுறாந் தங்குமிடங் களில்வந்து மாதவராய்க் க
லந்து சூழ்வன், சங்கரனின் னணமாத ருட்பலகைஞ ராந்தவ
ராற் றப்பி யேகி, மங்கையுமை தவம்புரியுங் காஞ்சிமா நக
ரிறையை வணங்கி யேத்தித், திங்கண்முடி யமர்ந்ததிருக்
* காளகிரி கண்டுவந்து சென்று சேர்ந்தார். (கங)

சத்தமுட னுயிர்பெறச்செய் தருணநதிப் புனன்மூழ்கித்
தூய நெஞ்சச், சித்தகணந் தொழுதேத்து மருட்சித்தி வடு
கனடி சென்று தாழ்ந்து, புத்தியொடு முத்திதரு சிவலிங்கந்
தனை வணங்கிப் புறத்து வந்து, மெய்த்தவொரு புராணிகனை
யத்தலத்தின் பெருமையெலாம் வினவி னின்றார். (கச)

---

* காளகிரி - வைரவக்கடவுள்மலை. காரிசைலம் காரிக
லை எனப் பிறநூல்களிற்கூறப்படுவதும் இதுவே: காளன்
காரி என்பன ஒருபொருட்சொற்கள்.

கலித்துறை.

கங்கை யாறுதன் முடியிறைக் கரந்துகொண் டதிலோ
ரங்கை நீர்சொரி பவர்க்குமே லுலகினை யளிக்கும்
பொங்கு நீர்நசை யாளியத் தடங்கரை பொருந்தி
யங்கெ ழாவுள மறிந்தனன் வாலியென் பவனே. (௧௦௬)

ஈச னாரொளி விடுத்திவ ணிருந்ததித் தடத்தி
னாசை யாலல திலையிதை யழிப்பலென் றகிர்த்துத்
தேசு லாமதி தவழ்பெருங் குடுமியஞ் சிலம்பொன்
றேசி லாமிகு வீரனங் கெடுத்தெறிந் திட்டான். (௧௦௭)

எடுத்து வாலியென் பவன்பெரு வலியினு விட்ட
வடுக்கல் வீழ்தலுந் தடத்தினி லெழுந்தபே ரரவம்
விடிக்கு மாறுபின் றொடர்ந்தென வெழுந்தொரு பிரமன்
படைக்கும் வான்முடி யளவுமுற் றனதுளி பலவும். (௧௦௮)

சென்று வான்மிசை நுண்டுளி யுடம்பெலாத் தெறிப்ப
நின்ற வான்முகில் கீழுற நீர்சொரி கின்ற
தன்றி மேல்வரப் பெய்வது முளதுகொ லறியே
மென்று வானவ ரியாவரு மருண்டன ரிருந்து. (௧௦௯)

விலங்கு வீழ்ந்தன புட்பறந் தோடின விசும்பிற்
கலங்கி வீணையர் திசைதொறு மிரிந்தனர் கடிதி
லிலங்கு மாமணி யருவிகள் சிதறின வெங்குங்
குலுங்கு பாதப மலருதிர்ந் தனகுலை குலைந்தே. (௧௧௦)

மருந்து மாமலை யுள்ளன சிதர்ந்திட மண்ணி
லாக்கை நோயினர் புண்ணினர் வடுவின ரவைதீர்க்

தொருங்கு வாழ்ந்தனர் மரித்தவ ருயிர்பெறீஇ யுய்ந்தார்
வருந்து மூப்பினர் காளைய ராயினர் மன்னோ. (௧௮௧)

இனைய வாறது வீழ்தலும் வாலிமுன் னெடுத்த
புனிதன் வாழ்வதின் றெற்குமா நதியதாய்ப் பொங்கி
யனைய வாவிவெற் பிழைத்ததீங் கரசனுக் கறைய
நினைவி னோடல்போ லோடிய திரைந்துமுங் கீரில். (௧௮௨)

வாவி தூர்த்திடப் புகுந்தொரா ரியற்றினன் வாலி
பாவை பாதியன் றிருவரு ளூற்றிடப் பட்டான்
மேவு தீத்தொழில் வழியினு நன்மையாம் விலங்கி
ருவி னற்றொழில் வழியினுந் தீமைசார் தருமால். (௧௮௩)

மண்டு நீர்த்தட மாறதாய் முற்றிய வண்ணங்
கண்டு வாலியெம் பிரானகருத் திதுவெனிற் கருதிக்
கொண்டு நான்செய்வ தென்னென மனநினை குலைவுற்
றண்டர் நாயகன றனைப்பணிந் தேகின னன்றே. (௧௮௪)

இந்த நீர்மூழ குநர்பவக் கடற்கரை யேறி
வந்து வீடடை குவருண்மை யுண்மையவ் வாலி
தந்த மாநதி யிதுபெரு மறையெலாந் தள்ளு
நிந்தை மாவினை *மயற்குநீர் வடிவமா நெருப்பு. (௧௮௫)

வாலி நாதனைக் கண்டொரு நாளடி வணங்கி
னூலி னுலொழி வுரைத்திடப் படாதன நூறு
மூலமாகிய பாதக மாயினு முருக்கிச்
சூல பாணித னுலகடைந் தின்பமே துய்ப்பார். (௧௮௬)

*மயல் - செத்தை.

கயிலை போலவிம் மலைமிசைக் கண்ணுதற் கடவுள்
அயில மாதொடு கணங்களேத் தெடுப்பவாழ் தருவன்
பயிலு மாதவர் சித்தர்வித் தியாதரர் பலரு
மயலி லாவிதன் மருங்குவிட் டகன்றிடார் மன்னோ. (௧௭)

இத்த லத்தியல் பிதுவென வந்தண னியம்ப
நித்தி லத்திரு நகைமட வாரமன னெக்குக்
கைத்த லத்தலர் கொண்டடி வணங்கினர் கண்ணன்
முத்த லைப்படை யொருவனை யெதிர்ந்தவர் முறைபோல். ()

காலை யங்கதிர் பூட்டையங் கடமதொன் றமிழ
மேலெ ழுந்துசெல் கின்றதோர் குடமென மேலை
வேலை வெங்கதி ரமிழ்ந்தற முழுமதி விண்ணின்
பாலெ ழுந்தது விரிகதி ருலகெலாம் பரப்பி. (௧௯)

குளிர்செய் கின்றசெவ் வந்திமா லையைத்தலைக் கொண்டு
களிசெய் கங்குலம் பெண்வர வாலிமுன கண்ட
வொளிசெய் நம்பனை யிறைஞ்சினர் சென்றக மொன்றிற்
றெளிசெய் நெஞ்சக மங்கையர் தங்கினர் சிறந்து. (௨௦)

திருந்து மாடக முகரியென் கினறகட் செவியின்
விரிந்த வேலையம் படத்திடை யிருளெலாம் விழுங்கிப்
பொருந்து மாமணி யென்னவந் தெழுந்தது புட்க
ளருந்து வாரிச மலர்முக மலர்ந்திட வலரி. (௨௧)

மாயை மாயிருள் கழிந்துமின் றிலகுகண் மாத
ராய காலையி லெழுந்துகா ளத்தியை யடுக்கு
நேய மோடுசென் றன்றொரு பதியிடை நின்று
பேரயி ணர்மற்றை ஞான்றுதென் கயிலையைப் பொருந்து. ()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இனிநகர் குறுகிற் றப்பா லிலைமிக் கிடனிக் காட்டிற்
றனியத ரிடையிம் மாதர் தலைமையெலா முயிர்செ குத்துப்
புனையிழை கவர்துமென் றுபொதிந் துமுன் வைத்தபொல்லா
நினைவினை வெளிப்ப டுத்து நின்றனர் தொடர்ந்த கள்வர்.()

கொடியவர் நிலைகண் டுள்ளங் குலைகுலைந் திளையாண்மை, முடிவுசெய் வதனுக் கின்னோர் முயன்றன ரென்ன மூத்தாள், கடிகமழ் மலர்த்தண் சோலைக் காளத்தி யண்ணல் காப்பன், விடுபவ னல்ல னெங்காய் வெருவனீ வெருவ லென்றாள். (௧௨௪)

துணையிலை யென்று நீயிர் துணிந்துசெல் பொழுதிற் றோன்றாத், துணையெனுந் திருக்கா ளத்தித் தோன்றலைக் கண்ட கல்லார், பணமலி யரவின் வாயிற் பட்டமென் றேரை போலக், கணைபுரை கள்வர் கைப்பட் டிருப்பினுங் கவன்று ரல்லர். (௧௨௫)

அரவின்வாய்த் தேரை தன்னை யகற்றிநின் றளிப்பான் போலக், கரவரி னின்று நீக்கிக் கன்னியர் தம்மைக் காக்கத், திருவுளங் கொண்டு மிக்க தென்கயி லாயத் தெம்பிரான், விரைவொடு மலர்கொய் தொண்டர் வேடமுற் றடைந்தா னன்றே. (௧௨௬)

கன்னியர் பொருள்வி ழைந்த கள்ளவே டத்த ரந்த
கன்னியர் தலைமவி ழைந்த கள்ளவே டத்தற் கண்டு
கன்னியர் தம்மை விட்டுக் கதுமென விரிந்து போனார்.
கன்னிய ருகு வந்தான் கறையிட னொளித்து நின்றான். ()

மாதவ வடிவங் கொண்டு வந்தருள் வள்ள றன்னை [றிப்
படிறுலர் நிதிய வைப்பை யெதிர்ந்தென வெதிர்ந்து போற்
பாதபங் கயமி றைஞ்சிப் பரிவொடு நிற்ப வையன்
கோதையீ ரெங்கு வந்தீர் கூறுமி னென்னச் சொல்வார். ()

திங்கள்வெண் கண்ணி வேய்ந்த செஞ்சடைச் சிவன மர்ந்த
மங்குறோய் மதிலு டுத்த மதுரைமா நகர்வந் தின்றோர்
கங்கைசூ டிறைவன் வாழுங் காளத்தி நகரிற் சென்றே
யுங்களை விடுப்போ மென்று வுறுதியா மொழிமொழிந்தார்.

ஆதலி னடிச்சி யேமின் னவருட னடைந்தே மிங்ஙன் [லைப்
நீதிழைத் தெமைப்பொ லங்கொண் டேகிடச் செறிந்த கா
பூதர வில்லிக் கன்பு பொருந்துநீ ரிவண்வந் தெய்தப்
போதலு மவர்ப யந்தே போயின ராய வென்றார். (௯௦)

மாதர்சொல் வினவிக் கள்ள வடிவுடை வள்ள லாருங் [ளுப்
கோதையீ ருமைக்காளத்தி கொணர்ந்துபோய்விடுதுமென்
பாதபங் கயம்வ ருத்திப் பார்மக டவத்தி னாலே
யேதமி லவரைக் கொண்டே யேகின ரெம்பி ரானார். ()

அதரிடை யவர்ந டக்க வவ்வனத் தருக்க ளெல்லா
முதிருமன் புடையர் போல முகிழ்பெறு நகைய வாகித்
ததைமலர்க் கண்ணீர் மல்கத் தாழ்ந்துபூப் பதத்திற்பெய்து
மதகரி யுடைபு னைந்த வள்ளல்பா னின்ற வன்றே. (௯௨)

புன்னை மாயவன் போன்றன பூத்தொளிர்
கன்னி காரங் கடுத்த கமலனை

மன்னு பூவை மகபதி யொத்தன
வென்னை யாளிறை செல்லு மிடத்திலே. (௩௩௩)

கரிய வின்குயில் காகள மார்த்தன
வரிய நன்மயி லாட வரிக்கணம்
பிரிய மோடிசை பெட்ப விசைத்தன
கரிய தாடைக் கடவுளைக் கண்டரோ. (௩௩௪)

நாவ லூர்வரு நம்பியோர் நாரிபா
லேவ வேகிய வெந்தை யிவணிரு
பூவை மாருடன் போந்தனன் காணெனுத்
தாவி லாக்கிளி தன்பெடைக் கோதுமால். (௩௩௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாந்தளி ரடிய தாக மற்றதன் வடுக்கண் மான, வேந்தெழிற் கொங்கை கோங்கா விணைக்கரங் காந்தள் காட்டப், பூந்துகிர் வண்ண வாடை புனைந்துபொற் புடைக்கான் மாது, தேந்துளி சிதறிப் பூத்தூய்ச் சிறப்பொடு பணிந்து நின்றாள். (௩௩௬)

வெள்ளில்பூங் கொன்றை யாத்தி விரைமலர் வேங்கை சேவால், வள்ளிலை மருதி ரத்தி வாகைபுன் னாக நாவல், கள்ளவிழ் மலர்க்கு ருந்து காசைபூங் கடம்பு கோளி, புள்ளவவ் வனத்திற்சென்றே யொப்பிறென் கயிலைக்குற்றான்.

புரத்தய லடைந்தெம் பெம்மான் பொன்னனூர் தம்மை நோக்கி, வரக்கிரி யிதுவே வெள்ளி மலையது ஞர்க்கை வெற்பு, பருத்தவம் மலைதா னீலப் பருப்பத மணிகீ ராது, தெரித்தபொன் முகரி யீது சிறந்திடு மயூர தீர்த்தம். (௩௩௮)

என்றுமற் றுளவுங் கூறி யிறைமறைந் தேக நின்ற,
பொன்றிகழ் மேனி யாரும் பொள்ளெனத் திசைக ணோக்
கி, யின்றிவண் விடுத்துச் சென்ற ரிறையெனத் தெளிந்து
சால, மன்றநன் றெமக்கி ரங்கி நணுகிய தென் றுரைந்தார்.

அமிழ்தினு மினிய மூவ ருந்தமி ழுவந்த வெம்மான்,
கமழ்குழ லரம்பை சூழிக் காளத்தி நகரி னின்று, தமிழசங்
கமராய் வந்தார் தம்மருட் பெருக்கா லென்று, குமிழ்செறி
தடங்க ணல்லார் குறைவிலா வியப்ப முற்றார். (கசூ0)

மாமணி பெற்றி ழந்த வறிஞனு மழுதைக் கையாற், பூ
மணிற் றவறி வீழ்த்த புந்தியில் லவனுந் தேனு, வேமமார் க
ற்ப கத்தை யெய்தியும் பயன்கொ ளாத, திமைகொள் ப
வரு மொத்தோ மென்றுபின் மனந்தெ ளிந்தார். (கசூக)

அருட்பெரு வாரி யாய வண்ணலார் தாமிவ் வூரிற்,
பொருட்பொருட் பெறவு ணர்த்திப் போயினர் நமக்கென்
றூழ்வென், றிருட்செறி மிடற்றோன் றம்முன் னெய்திய
தெண்ணி யெண்ணி, மருட்கொடும் பிறவி நீக்கு மாறில்பொ
ன் முகரி யுற்றார். (கசூஉ)

சீதநீர் மூழ்கிப் பின்னர்த் திருவெண்ணீ றணிந்து சால
ஈதர்கண் மணிபு னைந்து நவின்றிறை யஞ்செ ழுத்துங்
கோதிலந் தாதி தன்னைக் கொள்கையி னோதிச் சென்றார்
மாதொரு பாகன் றன்பான் மறிவிழி மடநல் லாரே. (கசூங)

களிப்பொடு நகையி லார்க்குக் களிப்பொடு நகைவந் தெய்த
வுளத்திலா னந்த முற்றி யுடலொளி யுடன்வி ளங்கக்

களத்தினஞ் சுடைய வெம்மான் சந்நிதி கடித டைந்தா
ரளப்பரு மன்பி னாலே யாடினர் பாடி னரால். (கசசு)

அன்னவர் தமக்கவ் வண்ண லவ்விலிங் கத்தின் கண்ணே
தன்னொரு பாக முற்ற சங்கரி யுடன்வி ளங்கி
யுன்னரு மொளியி ரண்டா வொன்றுபட் டிருக்கக் கண்டு
கன்னிய ரடைந்த வன்பை யிற்றெனக் கழற லாமோ. ()

வையக முழுது முள்ள மாமணி யொளிக்கும் பச்சைத், துய்யநன் மரக தத்தின் சோதியுள் ளவைக்கு மேலாம், பொய்யில்கா ரணமாய்த் தோன்றும் புகலரும் வடிவை நோக்கித், தையல ரிருவ ருந்தாழ்ந் தெழுந்தொளி தன்முன் னின்றார். (கசகூ)

நின்றிடு மணங்க ளாை நிருமல னருளி னாலே
தன்றனி யொளியி னூடே தயங்கிடத் தானுட் கொண்டான்
பொன்மிகழ் மணிமார் புள்ள புங்கவன் முதலோர் போற்றக்
* கன்றணி கரத்தெம் மன்னைக் கன்மக னாண வன்றே.

இறையொளி யுருவ டக்கி யிலிங்கமல் வடிவா யுற்றான், பிறைநுதற் றைய லார்தம் பின்வருந் தாதி மார்கள், கறைமிடற் றிறைவன் பாற்போங் கன்னியர் வந்தா ரில்லை, யுறைவிட மெங்கென் றெண்ணி யொய்யெனத் தருவி னரால். (கசஅ)

ஈசனு ரிடமு நாடி யெங்கணு நாடி நாடிக்
காசணி யல்கு லாைக் கண்டிலோ மெனக்க லங்கக்

* கன்று - கைவளை.

* கேசரத் தொலியன் னோர்கள் கிடைத்தனர் முத்தி நீவிர்
பஃறம தகற்றி லிங்கம் பதிட்டியு மவர்கள் பேரால். (கசகூ)

என்னலின் வாணி கூற வெழின்மட வார்போ யுற்றுப்
பின்னிரண் டிலிங்க நாட்டிப் பெய்வளை யினர்பே ரிட்டார்
நன்னில வேந்த வென்று நவின்றுசங் கமரி ருப்ப
வந்நிலை யாத வன்று னதிசய முடன்க ளித்தான். (கரு௦)

ஒளிமணிப் பொலம்பூண் மார்ப னொப்பில்சங் கமரைத் தாழ்ந்திங், களிபெறு மடிக ளின்னு மடியனே னுய்யு மாற்றுன், முளிபுதற் சிலந்தி † முன்ன முற்பிறப் புணர்த்து கென்னக், களிபெறு மனத்தா னெற்றிக் கண்கரந் தவனி யம்பும். (கருக)

கலிவிருத்தம்.

கோதையர் கதைநலங் கூறி ஞமினி
யேதமி லுலண்டின்முற் கதையி யம்புதும்
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான். (கருஉ)

கன்னியர்ச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கூசச.

---

மதுரைப்பதியிலே, பரத்தையர்குலத்திலே, பெண்ணியற்கைமுழுதும் அமைந்த மாணிக்கவல்லியென்பவள் ஒருத்தியிருந்தாள். அவள் அரசிளங்குமாரரென்னும் குடங்கைளை அழகென்னும் கயிற்றூற்பூட்டி, அவர்கள்மனையினுள்ளபொ

---

* கேசரம் - வண்டு. † முன்ன - முதலியன.

க்கிஷசாலையென்னும் கிணற்றிலேவிடுத்து, பொருளென்னு ம் ஜலம்வற்றும்படி நாடோறும் முகந்து முகந்து, மிக்க பொருளீட்டி, வாழுநாளிலே, பூர்வபுண்ணியமுதிர்ச்சியால் கருப்பமுடையளாகி, திருமகளும் கலைமகளுமே சிவஞான மாதர்களாகி அவதரித்தாரெனவும், வேதாகமங்களே சிவ ஞானத்தைவிளக்க ஓருருக்கொண்டு வந்தன எனவும், உல கிலுள்ளோர் உவப்பவும், மன்மதனதுசெருக்கு அழியவும், இரண்டுபுத்திரிகளைப்பெற்று, சந்தோஷசாகரத்திலே மூழ் கி, நீராட்டி, முலைப்பாலூட்டி, பற்பலஅணிகளைப்பூட்டி, தொட்டிலிலிட்டுத்தாலாட்டி, திருஷ்டிதோஷமணுகாவண் ணம் இரண்டுகண்மணியும்போல வளர்த்துவந்தனள். அந் நாளிலே அப்புதல்வியர் பெண்ணிலக்கண முழுதுமமைந்து, இலக்குமியினும் பேரழகுடையராகி, மெள்ளக்கவிழ்ந்து, நி லத்திலிருந்து, தவழ்ந்து, நடந்து, ஓடி, பிள்ளைப்பிறைபோ ல நாளுக்குநாள்வளர்ந்து,பேதைப்பருவங்கடந்து, பெதும் பைப்பருவமுடையராகி, பற்பலகலைகளையும் கற்குந்நிலை மையையடைய; அதைக்கண்ட மாணிக்கவல்லி மனங்க ளித்து, தமக்குரிய கலவித்தொழில்களை அவரறிந்துகற்கும் உபாயத்தை உள்ளேசிந்தித்து, விரகமிகுதற்கேதுவாகிய சிற்சிலலீலைகளை மாடமுழுமையும் சித்திரித்தும், போக வோசைபயிற்றுகின்ற மயில்முதலிய பறவைகளையும் யாழ் முதலிய கருவிகளையும் மிகச்சேகரித்தும், சூரியனிடத்திலே இருளைப்பழகுவித்தல்போல அவர்களுக்கு காமக்கல்விகளை யும் கானத்திறங்களையும் கற்பித்தனள்.

அவள் இவ்வாறு மிகமுயன்று கற்பித்தும், அவர்கள் உள்ளத்திலே சிவபிரான்வெளிப்பட்டுநின்று சிவாகமங்களென்னும் அபரஞானஉணர்ச்சியையும், பந்தபாசத்தைப் பற்றறக்களையும் அனுபவமாகியுள்ள பரஞானஉணர்ச்சியையும், தந்தளித்தலால், அவர்கள் வறியகாமத்திலேபயிலாது, கரணங்களுக்கு விஷயமாகிய யாவும் சிவமெனக்கண்டு, வேறு மாயாவிசித்திரத்தோற்றம் இல்லாதவராகி, இவ்வனுபவம் நிலைபெறுதற்பொருட்டு சிவனடியார்களைத் தேடித் தேடி,காணப்பெறின் துதித்துத்துதித்து, அவர்கள்திருவடிகளை சிரசிலே சூடிச்சூடிவணங்கும் தொண்டிலேமிகுந்தவராயினர். அன்றியும்,வேட்கைக்குறிப்புகள் வஞ்சமொழிகள் பழிப்புச்சிந்தனைகள் பாவச்செயல்கள் முதலியவற்றுள்ளே ஒன்றும்பற்றாதவராகி, பெதும்பைப்பருவமடைந்த அக்காலத்திற்றானே, உலகவாக்கியங்களிலே ஊமையர்போலாகி ஐந்திந்திரியங்களையும் அடக்கிப் பேதையராகியும், சிவவாக்கியங்களை உச்சரித்தலில் நாமகள்போன்ற நல்வாக்குடையராய் ஆசைமுதிர்ந்து பேரிளம்பெண்ணென ஓங்கியுமிருந்தனர். இங்ஙனமிருக்குங்கால், கடைச்சங்கத் தலைமைப்புலவராகியிருந்த நக்கீரதேவநாயனார் தென்கைலையையடைந்து, கைலைபாதி காளத்திபாதியாக ஞானவந்தாதிபாடியதையும்,சீகாளத்தியப்பரது சோதிசொரூபத்திற் கலந்ததையும் தொண்டராற்கேள்வியுற்று, பேரானந்தமுடையராய், நாடோறும் அந்த ஞானவந்தாதியைப் பாராயணஞ்செய்துகொண்டு, நாகலிங்கப்பெருமானைக் கண்ணிற்கண்ட கண்ணப்பநாயனார்போலவே கேள்வியினாலேயே பூசல் புனைதல்

உண்ணல் உடுத்தலாதிகளில் வெறுப்புடையராகி, காளத்தியைத் தரிசிக்கவேண்டுமென்னும் அவாவையேமேற்கொண்டிருந்தனர்.

அதுகண்ட மாணிக்கவல்லி மகளிரைநோக்கி, "பெண்களே, மழைபொழிந்த காலத்திலே விதைத்துப்பயன்கொள்ளும் உழவர்போலக் காளையர்கள்வந்து கவிகின்ற இளமைபெற்ற இக்காலத்திலே பொருள்பறியாது விடுத்தால் நுங்களுக்கு இளமைப்பருவம் பின்னர்வாய்க்குமா? கல்வியினும் கட்டழகினும் முதிர்ச்சியுடையராகி எக்காலம் பயன்படுவீரென்று காத்திருந்த எனக்கு, நீவிர்செய்யுமுதவி இவ்வளவுதானோ? பயன்படாத உங்களிடத்திலே பெண்ணிலக்கணமுற்றும் அமைந்திருத்தல் ஈகையில்லாதவனிடத்திலே பொன்னும், அவையையஞ்சுவோனிடத்திலே அரியகல்வியும், வீரமற்றபேடிகையிலேவேலும், வாய்த்திருத்தல்போலாம். நீவிர், இளமைப்பருவத்திலேயே என்பாலிருந்து எனது அழகுமுழுமையுங்கெடுத்ததேயன்றி, உங்கள் பொருட்டுச் செலவிட்ட திரவியத்திற்கு உதவியொன்றும் புரிந்தீரில்லை. மணிமந்திர ஔஷதங்களாலும் பலவகையந்திரங்களாலும் ஆடவரைமயக்கி அவர்பொருளைக்கவர்ந்தால் சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் உதவியாகாதா? அழகு சிறிதுமில்லாதவரும் அணிமுதலியவற்றால் அலங்கரித்துக்கொண்டு தம்மை அழகுடையர்போலக்காட்டியும், பிழையில்லாத ஆடவரையும் பிழையுடையராக்கி பொய்யன்புபாராட்டி உணவையொழிந்து அவர் பலமுறைவேண்ட இருந்தும், நாடகத்தாலும் நல்லிசைகளாலும் மயக்கியும்,

பொருளீட்டிக்களியாநிற்பர். நீவிர் எவற்றினும் சிறந்திருந்தும் இங்ஙனஞ்செய்து பொருளீட்டாது இளமையைக்கழித்துவிடின் மூப்புமுதிர்ந்தவழி உம்மை இளைஞர் விரும்புவரோ?" என்று இன்னனவாகிய தன்குலச்செயல்களை யுரைக்க; அவையாவும் கவிழ்த்தகுடமீது விடாதுபொழியும் மழைநீர்போலச் சிறிதும்நுழையாது புறங்கழியநின்ற கன்னியருரைப்பாராயினர்.

"அன்னையே, மின்னல்போலத் தோன்றியழியும் இவ்வுடம்பை வளர்க்கவிரும்பி கொடிய தீவினைகளை இயற்ற எமக்கிசைப்பது நினக்குத்தகுதியா? இப்பியிலுதித்தமுத்தானது அந்தஇப்பிக்கு ஒருதவியையும்புரியாது தம்மை அணியத்தக்கவர்மேனியை அடையும்; அதுபோலவே, நின்பாலுதித்தயாங்களும் நினக்கு ஒருதவியையும்புரியாது சிவபிரானதிருமேனியிலே கலத்தலையடைவேம்: பரமனையழைத்துத்தரும் பஞ்சாக்ஷரத்தையுச்சரிக்கும் எங்களுடைய வாய் மனிதரையழைத்துத்தரும்மந்திரங்களை மறந்தும் உச்சரியா:பற்பல அணிகளைச்சுமக்கினும் பாரமேயன்றிப் பயனுண்டோ? ஓர் உருத்திராக்கத்தை ஒருதினம் உடலிலணியில் வினையாவும் விட்டொழியுமே? கஸ்தூரி சந்தனமுதலிய கலவைகளைக் கலந்து கலந்து ஓய்வில்லாமல் உடலிற்புனைந்தாலும் சிறிது மலம் அகலுமோ? விபூதியை விரும்பியணியில் அம்மலம் யாவும் விளிந்தொழியுமே? மிக்கவொளிபடைத்த தீபத்தையுடைய வீட்டிலே இருள் நுழையுமா? அதுபோலவே, எம்பிரானிருக்கும் எங்கள் உள்ளத்தில் அறிவையொழிக்கும் காமநோயணுகுமா? தத்துவங்களுக்கு அதீதமாகிய தனியிடத்

திலே விமலனைக்கலந்து மெய்ம்மைஇன்பம் அனுபவித்தயாங்கள் மாண்டுபோகும் மனிதனைக்கலந்து பொய்ம்மைஇன்பத்தைப் பொருளெனக்கொள்வமா? களிப்படையவிளைக்கும் யானையைவிரும்பியேறுவோர் கழுதையையேற விரும்புவரோ? அதுபோல, சிவதருமங்களை மேற்கொண்டயாங்கள் உம்முடைய குலதருமங்களை மேற்கொள்வமா? இம்மைமறுமை இன்பங்களைப்பயக்கும் எம்பெருமானை வழிபடும் யாங்கள் பொய்ம்மைப்பொருளைநாடி, புல்லியவரசனைப் புகழ்வமா? இம்மையிலறங்களை இயற்றாது பொருளீட்டில் மூப்புமுதிர்ந்தக்கால் முறைப்படி அறங்களை இயற்ற முடியுமா? நீயேசொல்வாயாக. உண்டசுவையமுதையும் உடனே மலமாக்குகின்ற உடலைவளர்க்குநிமித்தம் தீயதொழில்களையியற்றித் திரிதரும் மனிதர்களை மக்களுள்ளேபதரென்று மதிவல்லோர் கூறுவர். கணிகைமாதர்கள் உள்ளுறவில்லாமல் வெளியுறவுபாராட்டி செல்வமனைத்தையுங் கவர்ந்துகொண்டு நம்பியஆடவரை நரகத்துமிடுதலால் கள்ளரினும் கொடியவரோ ஆவர். குயிலானது காக்கையோடு ஒருகூட்டிலே கலந்திருப்பினும் அக்காக்கையின்செய்கையிலே பழகாததுபோல உம்மோடுயாங்கள் ஒருங்கிருப்பினும் உமது தொழிலிற்பயிலேம்: ஆகையால், எங்களை வசப்படுத்துகின்றவை இன்றே மறப்பாயாக." எனவற்புறுத்தினர்.

அதுகேட்டகொடிய தாய் மனம்புழுங்கி, மகளிரைச்சீறி, "யான் மலடியுமாயினேனில்லை: மக்களைப்பெற்று மகிழ்ச்சியுறும் சிறப்பையுமடைந்தேனில்லை.நல்வினைபுரிந்தோரோயன்றி ஏனையோர்தம்புதல்வரா லுதவிபெறுவரோ?" என்

று துக்கித்து, பின்பு "இயங்கிக்கிடக்கும் இவர்களுடைய சித்தத்தை மணிமந்திர ஔஷதங்களாலே தெளிவித்துக் காம இச்சையிலே திருப்புவோர் பொருள்கொடாமலே இவரை அனுபவிக்கக்கடவர்." என்று யாவர்க்கும் வெளிப்படுத்த; இதையறிந்த இருவரும் இவளை நீங்கி என்று தென்கயிலையைத்தரிசிக்கப்பெறுவேமென்னும்சிந்தனையோடு பாம்பின் வாய்ப்பட்டதேரைபோல இருந்தனர். அக்காலத்திலே, இவர்கருத்தையறிந்த இரண்டுகள்வர்கள் இவரணிந்திருக்கும் ஆபரணங்களைக்கவரவேண்டுமென்னுங் கருத்துடையராய், பாலிலேமறைந்த நஞ்சுபோலவும் பழத்திலேமறைந்த புழுப்போலவும் தவவேடத்தைமேலேபூண்டு, தங்கள்நிலைமை வெளிப்பட்டாவண்ணம் கன்னியர்களிருக்கும் இல்லத்திலே வந்து, "நம்மைக் காளத்திகாக்க." என்னும் மொழியோடு நுழைய; அக்கன்னியர்கள் தாய்மொழிகேட்ட சேய்போலப் பெருங்களிப்படைந்து வணங்கி, அவரையழைத்துச்சென்று, மிகவும் உபசரித்து, "சுவாமிகாள், நீவிர் எங்குள்ளீர்? எங்குச்செல்கின்றீர்?" என்றுவினவினர். அக்கள்வர்கள் "யாங்கள் இஷ்டசித்திகளைப்பாலிக்கும் எம்பெருமான்வீற்றிருக்கின்ற தலங்களையெல்லாம் தரிசித்துவருவேம்; தற்காலம், காளத்தியைத் தரிசிக்கவேண்டுமென்னுங் காதலால் அங்குச்செல்கின்றேம்." என்றுரைக்க; அக்கன்னியர்கள் "அங்ஙனமாயின் யாங்களும் காளத்தியைத்தரிசிக்க விரும்பியுள்ளேம்; எம்மையும் உடன்கொண்டு செல்வீரேல் உமக்கியற்றும் கைம்மாறுண்டோ?" என்றுரைத்தனர்.

அக்கள்வர்கள் உள்ளங்களித்து, கன்னியர்களைநோக்

கி, "மங்கையர்களே, மெல்லியசரீரத்தினையுடைய நீங்கள் வெப்பமுதிர்ந்த பாலைநிலமுதலிய கடியநிலங்களை எவ்வாறுகடப்பீரென்பதையும், நுங்களை அழைத்துச்சென்றால் பழிமொழி மிகவிளையுமேஎன்பதையும், நும்மைப்பெற்ற தாயானவள் கன்றையிழந்த பசுப்போலக் கலங்குமேஎன்பதையும் நினைந்து, அஞ்சுகின்றேம். ஆயினும், காளத்திகாணப்பெற்ற கண்களேகண்களென்றும் காளத்திநகருக்கேகும் கால்களேகால்களென்றும் காளத்திதன்னையுன்னும் கருத்தொன்றே கருத்ததென்றும் காளத்திபுகழுநாவே நாவென்றுங்கற்றோர்சொல்வர். அன்றியும்,இச்சரீரத்தோடுஅடைதற்குரிய தென்கைலைக்கு யான்செல்கின்றேனென்று ஒருவர் விளையாட்டாலுரைப்பினும் கயிலைப்பதவியையடைவர். அங்ஙனம்செல்பவரை விளையாட்டாற்றடுப்பவரும் சூரியசந்திரர்உள்ளமட்டும் கடுநிரயமெய்தித் துன்புறுவர். ஆதலால், அன்னையர்களே, நீவிர் காளத்திக்குச் செல்லவேண்டுமென்னுங் கருத்தை விலக்குதற்கு யாம் உடன்படோம்." என்றுரைத்தனர். அவ்வார்த்தையை அக்கள்வர் மனதோடு உரைத்திலரேனும், அம்மங்கையர் வாய்மையாகவேகொண்டு, "யாங்கள் சிவபிரானை அடையப்பெறின் இச்சரீரம் யாதுபடினும் என்? உலகோர் இகழ்ந்தாலென்? புகழ்ந்தாலென்? எம்மை எவ்வகையாலேனும் தென்கயிலைசேர்ப்பீராக." என்றுவணங்கி வேண்டிக்கொள்ள; அக்கள்வர் நன்றென இசைந்து அர்த்தயாமத்திலே, அன்னையறியாமல் இன்னஇடம் வந்துசேருவீராக." என்று குறிப்பிட்டுரைத்துச் சென்றனர்.

கன்னியர்கள் தங்கள்நிழல்போன்ற இரண்டுசேடியர்கள் வேண்டியதிரவியங்களை உடன்கொண்டுவர, அர்த்தயாமத்திலே குறித்தஇடஞ்சார்ந்து, கள்வரோடு, விடியும்முன்னரே இருகாதங்கடந்து, மறுதினமுதல் இடையிலுள்ள தலங்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு, சோழநாட்டையடைந்து, கும்பகோணமுதலிய தலங்களையிறைஞ்சி, சிதம்பரத்தையடைந்தனர். அங்கே திருவெல்லையைவணங்கி, வீதிவலம்வந்து, ஆலயத்தெதிரோபணிந்து, பிரதக்ஷிணம்புரிந்து, ஸ்ரீமூலட்டானேசுரரையும் பஞ்சகிருத்தியநடனம்புரிந்தருளும் சிற்சபாநாயகரையும் சிவகாமியம்மையையும் கண்படைத்தபயன்பெறக்கண்டு, தரிசித்து, பரவசப்பட்டுத்துதித்து, அத்தலத்திலுள்ள சிவகங்கை குய்யதீர்த்தமுதலிய தசதீர்த்தங்களிலும் ஸ்நானம்செய்து, காலந்தோறும் சுவாமிதரிசனம்செய்துகொண்டு, சின்னாள்வசித்திருந்தார். பின்பு பிரியாவிடைகொண்டுநீங்கி, இடையிலிருக்கும் தலங்களை வணங்கி, காஞ்சிபுரத்தைச்சார்ந்து, திருவேகம்பநாதரைத்தரிசித்துத்துதித்து, திருக்காளகிரியென்னும் தலத்தையடைந்து, நதியிலேஸ்நானம்செய்து, சித்தகணங்கள்வழிபடும் சித்திவைரவரைவணங்கி, வலம்புரிந்து, யாவருக்கும் போகமோக்ஷங்களைப்பாலிக்கும் வாலிநாதரைத்தரிசித்துப்பரவி, புறத்தேவந்து, ஒருபுராணிகரைக்கண்டு நமஸ்கரித்து, அத்தலமான்மியத்தைவினவ; அவர் சொல்வாராயினர்.

"மங்கையர்களே, முற்காலத்திலே முழுவலிபடைத்த வாலியென்பவர் தமது ஆன்மார்த்தலிங்கத்தை இத்தடாகத்தின்கரையிலேவைத்து, திருமஞ்சனமுதலியவற்றாற்பூசித்

து, தோத்திரஞ்செய்து, அன்புமேலிட்டு ஆனந்தக்கூத்தாடி, வழக்கப்படியே பூசைப்பேடகத்தில் எழுந்தருளுவித்தற்குக் கரத்தாலெடுக்க, பெருமான் அசையாமைகண்டு, இருகையினும் இறுகப்பிடித்தெடுத்தனர். அங்ஙனம் எடுத்தும் அசையாமையால் மனங்கலங்கி, அப்பெருமானை வாலினாலே மிகவும் சுற்றிக்கொண்டு, கரங்களையூன்றி, அண்டகூடமளவும் நிமிர்ந்துபெயர்க்கவும், பெயராமைநோக்கி, வாலைவிடுவித்து, பெருமூச்செறிந்து, துதிக்கத்தொடங்கினர். "தேவாதிதேவரோ, தேவரீர் திருவருள்வைத்து வந்தாலல்லது பேயேன்வலிந்து பெறுதற்கெளியீரோ! வாலினாலே உமது திருமேனியில் தழும்புபடத் தீங்கிழைத்தேன்! நீயேன் என்செய்வேன்! என்செய்வேன்!! ஆ ஆ! இளம்புதல்வனை அன்னையானவள் கடுங்காட்டினடுவே அருளின்றிவிடுத்த தன்மைபோல அடியேனைக்காவாமல் கைவிட்டு இங்கேவீற்றிருக்கின்றீர். யான்செய்தபிழையுண்டோ! கிருபாசமுத்திரமே! என்னுயிர்நீ, என்றுணைநீ, என்னுடையவாழ்வுநீ, அன்னையுநீ, அத்தனுநீ,இங்கு எனக்கு உறவாக வேறுயாவர் உளர்? நின்னை நீங்கில் எனதுயிர் நில்லாது; நில்லாது." என்று பரிந்துவேண்ட; அப்பிரான் பிரசன்னராகி, "அன்பனே, யாம் இவ்வனத்திலே இத்தடாகக்கரையிலே வீற்றிருத்தலை விரும்பியுள்ளேம்; இதுபற்றிக் கவலையடையேல்: இன்றுமுதல் உனதுள்ளத்திலே வீற்றிருந்து நின்பூசையை அங்கீகரித்தருளுவேம்." என்று ஆஞ்ஞாபித்து, சிவலிங்கத்திலே மறைந்தருளினர்.

அதுகேட்ட வாலியென்பவர் இப்பெருமான் என்னை

விட்டு இவணிருந்தது இத்தடாகத்தினது ஆசையாலன்றி வேறில்லை. ஆகையால், இதை அழித்துவிடுவேனென அதிர்த்து, ஒருபெருமலையையெடுத்து, நீர்த்திவலைகள் 'மேனுலகமுற்றுஞ் செல்லும்படி ஓங்கியெறிந்தனர். எறிந்தவழி, அம்மலையினின்றும் சிதறிய மருந்துக்களால் அனேகர் உயிர்பிழைத்தல்முதலிய நலங்களையடைய; அத்தடாகமும்அழிவில்லாமல் யாவர்க்குமுதவியாகப் பெரியநதியாகி பெருகிச்செல்லுதலை வாலிகண்டு, இப்பிரான்றிருவுளம் இதுவேயாயின் யான்செய்வது யாதெனப்பணிந்து சென்றனர். ஆகையால், இந்நதியில் மூழ்குவோர் பவக்கடலைக்கடந்து முத்தியாகிய கரையையடைவர். இது தீவினையென்னும் சேத்தைக்கு நீர்வடிவமாயிருக்கும்நெருப்பாகும். கைலைபோலவே இம்மலையிலும் வாலிநாதர் உமாதேவியோடுவீற்றிருக்கின்றார். இப்பெருமானைவணங்குவோர் செறிந்த பாதகமனைத்தையுமொழித்துச் சிவகதியெய்தப்பெறுவர். இத்தலமானமியம் இதுவாகும்.'' என்றுரைக்க; கன்னியர்களிசிறந்து, அவரை மலர்கொண்டருச்சித்துவணங்கி, அன்றிரவிலும் வாலிநாதரைத்தரிசித்து, ஒருமனையிலே தங்கியிருந்தார். இவ்வாறு தங்குமிடந்தோறும் இவர்களுக்குக் கள்ளரால் ஆபத்துவிளையாவண்ணம் சிவபெருமான் பல அடியவர்வேடம் தாங்கிவந்து நாடோறுங் காத்தருளினர்.

தங்கியமங்கையர் அருணோதயத்திற்கு முன்னரொழுந்து, நியதிமுடித்துச்சென்று, அன்று ஒருபதியிலேதங்கி, மறுதினம் தென்கைலைக்குச் சமீபமாகச்செல்லுங்கால், கள்வர்கள் இனி நகரங்குறுகி விட்டது; இதுகடந்தால், நமக்கு

இடம்வாய்க்காது: ஆகையால், தனித்த இவ்வனத்திலே இந் நால்வரையும் உயிர்போக்கி ஆபரணுதிகளைக்கவர்வோமெ ன்று உட்கொண்டிருந்த பொல்லாநினைவை வெளிப்படுத்த; அந்நிலைகண்ட இளையவள் உள்ளம்நடுநடுங்கி, "தமக்கையே, இவர்கள் நம்மைமுடித்தற்கு முயல்கின்றனர்." என்று அறி வித்தனள். அதுகேட்டமூத்தாள் "தங்கையே, இவ்வளவுங் காத்துவந்த காளத்தியண்ணலார் இனிக்காவாதுவிடார்: நீ அஞ்சேல்; அஞ்சேல்." எனத்தேற்றி, கவலையற்று நிற்குந் தருணத்திலே, தென்கைலாயப்பெருமான் பாம்பின்வாய்த் தேரையைவிடுவித்துப் பாதுகாப்பார்போலக் கள்வரினின் றும்நீக்கிக் கன்னியரைக்காக்கத் திருவுளங்கொண்டு, மலர் கொய்துதொடுக்கும் தொண்டர்வேடந்தாங்கி அணுகினர். அவரைக்கண்டவுடனே கள்வர்கள் விரைந்தோட; பெருமா னருகுவந்து, தம்மை அன்பொடுவணங்கிநின்ற கன்னியரை நோக்கி, நீயிர், எங்கிருந்துவந்தீர்?" என்றுவினவ; அவர்நட ந்தயாவும் விண்ணப்பம்செய்தனர். பெருமான் "மங்கையீர், உம்மைக் காளத்தியிற்சேர்க்கின்றேம்; வருவீராக." என்ற ழைத்துக்கொண்டு, நிலமகள்தவத்தால் திருவடிகள் நிலந் தோயச்சென்று, தென்கைலையைச்சார்ந்து, கன்னியரை நோக்கி, "இதுவேகைலைமலை; அது துர்க்கைவெற்பு; அம்ம லை நீலப்பருப்பதம்; இந்நதி பொன்முகரி; இது மயூரதீர்த் தம்" என மற்றவைகளையும் அறிவித்து, மறைந்தருளினர்.

கன்னியர் திசைகளைநோக்கி, பெருமானைக்காணுமை யால், இங்கேவிடுத்துச்சென்றவர் இறைவனெனத்தெளிந்து, "ஆ! ஆ! தெலுங்குவழங்கும் இத்தலத்திலே நம்பெருமான்

தமிழ்ச்சங்கமராய் நணுகியது சால நன்றாநன்று." எனவியந்தும், "அந்தோ! முதல்வன் அணுகப்பெற்றும் முத்தியின்பம்பெறாமல்,மணிபெற்றிழந்த வறிஞனையும் அமுதம்பெற்றிழந்த அறிவிலாதவனையும் நிகர்த்தோமே!" என்று துன்புற்றும் மயங்கிநின்று, பின்பு "ஓகோ! இங்குள்ள சிறப்புக்களையெல்லாம் அருட்பெருமானே தனித்தனிவிளக்கி அருளப்பெற்றேம்; நமக்கு என்னகுறை." எனத்தெளிந்தனர், அதன்பின்னர் பொன்முகரியிலே ஸ்நானஞ்செய்து, திருவெண்ணீறணிந்து, உருத்திராக்கவடம் மிகப்புனைந்து,பஞ்சாக்ஷரங்களையுச்சரித்து, நியமப்படி ஞானவந்தாதியைப் பாராயணஞ்செய்துகொண்டு, சந்நிதியையடைந்து, நமஸ்கரித்து, பிரதக்ஷிணம்செய்து, அளவிடப்படாத அன்பினாலே நடனம் புரிந்து துதித்து, பரவசப்பட்டுநிற்க; பெருமான் திருவருள்கூர்ந்து, அச்சிவலிங்கத்தின்கண்ணே அரிய செவ்வொளியும் மரகதவொளியுமாக அம்பிகையோடு தரிசனந்தந்தளித்து, அவர்களது உழுவலன்பைநோக்கி, திருவுளமகிழ்ந்து, விஷ்ணுவாதிதேவர்கள் வணங்கவும், உமாதேவியார் நாணவும், அவ்விருவரையும் தம்முள்ளே கலப்பித்தருளி, முன்போல வீற்றிருந்தனர். அப்பொழுது, அவர்கள்பின்வந்த தாதிமார்களிருவரும் கடவுளிடத்துச்சென்ற கன்னியர்வந்தாரில்லையே எங்கிருக்கின்றாரென்று தேடித்தியங்கியவழி, "அவர் முத்தியையடைந்தனர். நீங்கள் அவர்கள்பேரால் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்வீராக." என்று அசரீரிவாக்கியமெழ; அது கேட்டு, அவர் கன்னியிலிங்கமென இரண்டு இலிங்கப்பிரதிஷ்டைசெய்து, நற்கதியடைந்தனர். என்று சங்கமேசர் உப

தேசித்து, அவ்வரசர் வேண்டுகோளின்படியே சிலந்திமுத லியவைகளின் பூர்வஜன்மசரித்திரங்களைப் புகலத்தொடங் கினர்.

---

## சிலந்திமுதலமுற்கதைச்சருக்கம்.

கலிவிருத்தம்.

தண்ணந் தாமரை சார்ந்துறை நான்முக
னண்ணுந் தோற்ற நவிற்றி யிருக்கவும்
விண்ணின மே * வகி லத்தொழில் வீறுளான்
கண்ணில் வந்திடு காதல்செய் கான்முளை. (௧)

உற்ற மாதவ வூற னெனப்பெயர்
பெற்ற வன்னய னோடு முரணுபு
சற்று மெண்ணில னுய்ச்சகந் தந்திடச்
செற்ற மோடயன் சிந்தையி லெண்ணினன். (௨)

அன்ன வூர்தி யழைத்த தயிர்தவன்
முன்னர் வந்துற முற்ற வெகுண்டுநீ
சின்ன நூல்செய் சிலந்திய தாகென
வின்ன லெய்தின னேத்தி யிறைஞ்சினன். (௩)

கமல நான்முகன் கண்டு வெருவனீ
விமலன் மேவிய வேழ வனத்திடை

---

* அகிலத்தொழில்வீறுளான் - விசுவகன்மன்.

யமனும் வில்ல வனத்தி லடைந்தநி
னைமவி லாவுலண் டாயவன் வைகியே. (ச)

தேவ தேவனைத் தென்கயி லாயனை
யாவ லோடு மருச்சித் தருங்கதி
மேவு வாயென வெண்ணிற வாணியை
நாவின் வைத்திடு நான்முகன் கூறினன். (ரு)

அனைய பான்மையி னன்னோன் சிலம்பியாய்த்
தனைநி கர்த்திடு தற்பரன் பூசையால்
வினைய கற்றுபு வீடடைந் தானெனு
வனைநி கர்க்கு மருந்தவ னோதினன். (சு)

பாம்பின் முற்பிறப் போதுதும் பார்த்திப
வேம்ப லோடினிக் கேளென் றிறைசொல்வான
கூம்பி லாத கொடுமுடி கொண்டுயர்ந்
தோம்பு பூத முடைத்தங் கயிலையே. (எ)

மேற்படி வேறு.

பதியெனப் படுமிறை பண்டு கொண்டிடு
மதிசய சத்துவ மகன்று யர்ந்தொளி
கதுவிட நின்றிடு காட்சி யென்னவு
மதிபல கோடியோர் வடிவுற் றென்னவும். (அ)

ஒள்ளொளி தேங்கியே வொப்பி லாதொளிர்
வெள்ளிய துருவென விளங்கித் தோன்றுமா
லெள்ளலி லிருந்தவ ரிதயத் தெய்தியே
வள்ளலோ டிருந்திடும் வளங்கொ ளம்மலை. (கூ)

ஆழியங் கிரியினை யங்கை யிட்டுயர்
பாழிமா மேருவைப் பறித்து மார்பணிந்
தாழியோர் கணமென வுன்னு வெங்கணரு
சூழ்தருங் கயிலையைத் துன்னு காவலாய். (க0)

நதிபல கோடிக ணண்ணு நண்ணுநர்
பதிபல் கோடிகள் பாங்க ருற்றிடு
மதிசய வனங்களு மனந்த கோடியாம்
புதுமதி மிலைந்தவன் பொற்றை மீதரோ. (கக)

கற்பக மரங்களுங் காம வல்லியும்
பொற்புறு புதர்களும் புணர்ந்த டைந்தவ
ருற்பவ முதலிய வோட்டு மென்றிடில்
வெற்பது வளந்தனை விளம்ப வேண்டுமோ. (கஉ)

நள்ளிடைச் சிவபுர நணுகு மன்னதைக்
கள்ளவிழ் கமலநற் கடவுள் கூறிடி
லெள்ளுத லிலையெனப் போலு மேலைய
ருள்ளினும் வகையலா லுயர்வுண் டாகுமோ. (கங)

அப்பெரும் புரமது வரத னத்தினு
லொப்பில்பொன் வெள்ளியா லுளுற்று மாடங்க
டிப்பிய மதில்கள்செய் குன்று கோபுர
மிப்படி தொகையள வின்றி யோங்குமால். (கச)

அன்னதி னடுவணெம் பிரானுக் காலய
மின்னதன் மையதென வெவருங் கூறொணு
துன்னத வுயர்ச்சியா யொப்பின் மாமணி
தன்னொடு மமைந்தொளி தங்கி யோங்குமால். (கரு)

அதின்மறை முடிவென வன்ப ருள்ளென
விதுவுரு விதுகுண மென்றென் றேதவன்
மதுமலர்க் குழலுமை மணாள னென்னவும்
பதியென வியம்பவும் பட்டி ருப்பனால். (௧௬)

அவ்வுழி யமரரு மருங்க ணங்களுந்
திவ்விய முனிவருஞ் சிறந்த பூதரு
மெவ்வமில் கருடரு மியக்கர் நாகரும்
பவ்வம தாமெனப் படர்ந்து போற்றுவார். (௧௭)

ஒன்றொரு தினந்தனி லொப்பி லாதவ
னன்றிகொ ளரியணை நணுக வெண்ணியே
தன்றிரு மேனியிற் சாத்து மாடைகள்
குன்றலி லணிபெறப் புனைந்து கொண்டபின். (௧௮)

ஆயிர மணிமுடி யனந்த னேமுறை
மாயிரும் பணிபணி யாக வைகிடக்
காய்பெருங் காமநோய் கனற்றக் காளனே
ராயணி மகளிர்பா லடைந்து வைகினான். (௧௯)

வாளணி யாவையும் வனைந்து வள்ளலுங்
காளனைக் காண்கிலன் கருதும் வேலையி
னீள்பெருங் காமநோய் நெஞ்சிற் கொண்டுபோ
யாளணி மகளிர்பா லடைந்த தன்மையை. (௨௦)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உயிர்த்தொகை யனைத்து முற்ற வொருவனு முணர்ந்த
ழைத்துச், செயிர்த்திலன் காம நோயாற் சிந்தனை கலங்கிச்

சென்றாய், கயப்பெய ரடவி மேவிக் காளநீ பாம்பா கென்
று, பெயத்துமா ரருளி னாலே பிறைமுடிக் கடவுள் கூறும்.

தென்கயி லாயந் தன்னிற் செறிந்துபாம் புருவாய் நீதான்
கொன்பயி லிலிங்கந் தன்னைக் குறுகியர்ச் சிக்கு நாளி
லன்படைந் தொருமால் யானை யதுவும்பூ சிக்க வெய்து
முன்புநீ முயனாறு கொல்ல முடிந்துபின் முத்தி சேர்வீர். ()

எனப்புகன் றிறைவ னேவ வெறுழ்வலிப் பாந்த ளேகி
வனத்தினு ளுயர்ந்த யானை வனத்திடைப் பாம்பா யிற்றான்
மனத்துயர்கொடுக்குங் காம மாற்றிடவல்லார்க்கன்றி [லோ
புனற்கரும் பிறவித் துன்ப மொழித்திடற் கெளிது கொல்

ஆனைமுற் பிறப்புக் கூறி லண்ணலார் கயிலா யத்தின்
மேனைதன் மகளுந் தாமும் வீற்றிருந் தருள வுள்ளி
லீனமில் கணத்து ளத்தி யெனும்பெயர்த் தலைவ னுற்றி
யானிறை தன்பா லேக வீடுமென வாயில் காப்போர்.(உ௬)

கலிவிருத்தம்.

பவள மேனியிற் பாவ விருடெறுந்
தவள நீறணி சங்கரன் றற்பரன்
றவளு நுண்ணிடைத் தோகையுந் தானுமா
யுவள கந்தனி லுற்றிருந் தானரோ.　　(உ௭)

அங்க ணேக லடாதுனக் கையநீ
யிங்க ணில்லென வின்மொழி கூறவுந்
துங்க மேவு கணேசன் றனுக்கெனச்
சங்க ரன்னுற தானக டந்தனன்.　　(உ௮)

நடந்த காலை நகமகள் சிறியிங்
கடைந்த வத்திரி யத்தியா னென்றனன்
மிஸ்டந்த வூழை விலக்குந ருண்டுகொ
ளுடம்புநானெனு வுத்தம ரன்றியே. (உ௭)

ஆய காலை யருங்கண நாதனும்
பாயு வெம்பய மெய்திப் பரமனோ
டாயை வந்தனை யாற்றி யருளினாற்
பேய னேன்செய் பிழைபொறுப் பீரெனு. (உ௮)

நொந்து வேண்டி நுவல விறைவனார்
தந்தி மாவனத் தநதி யுருவெடுத்
தந்த வெல்லை யமர்தரு நாள்களின்
முந்தி யோர்பணி முத்திலிங் கத்தினை. (உ௯)

அன்பு கொண்டருச் சித்திடு மவ்வயின
பின்பு நீயு மருச்சித்துப் பேதியா
வின்ப மார்கதி யேகுவிர் போவெனு
மின்பி றங்கிய வேணி விளம்பினான். (௩௦)

ஆன தாலவ் வருங்கண நாதனு
மானை யாகி யருச்சித் தடைந்தனன்
மான முத்தி யெனமகிழ்ந் தோதினான்
வான நாடு வணங்கு மகேசனே. (௩௧)

இன்ன னார்முற் பிறப்பினிச் செப்புதும்
வண்ண வேலவ கேட்டு மகிழெனாப்
பண்ண வாமொழிப் பாவையொர் பாகனு
முண்ணி லாவரு ளொண்டவ னோதுவான். (௩௨)

பாண்டு மைந்தருட் பார்த்தன் பகைஞர்மேற்
றூண்டி வென்றிடச் சூர்ப்பகைத் தாதையை
வேண்டி யோர்கணை வாங்குதும் வெய்தென
மாண்ட விந்திர நீல மலையின்மேல். (௩௩)

உற்றோர் நல்லிட மொன்றில் வதிந்ததில்
வற்றி லாப்புன லாடி மடியுடுத்
தெற்றை ஞான்று மிடுந்திரு நீறுமெய்
முற்று மேவப் புனைந்து முடிவினே. (௩௪)

அக்க மாமணி யன்பிற் றரித்தபின்
முக்க ணன்மனு வோதி முறையினின்
மிக்க வேறிடத் தெய்தி விழைந்ததிற்
றக்க வாதன மொன்றிற் றரித்தரோ. (௩௫)

இயங்கும் வாயு விடம்வல மெய்திடா
தியங்க வேநடு நாடியுள் ளோட்டியே
வியங்கொ ளாறிட மேற்றலை மீச்செல
வயங்கு மவ்வொளி யின்மன மாற்றினன். (௩௬)

இந்த வாறங் கிருந்து தனஞ்சய
னந்தி லாத்தவ மாற்றி நணுகிட
முந்து நாளின் * மூகாசுர னென்பவன்
வந்து பன்றி வடிவொடு வைகினன். (௩௭)

அனைய கானி லருந்தவர் யாவரு
மினைய வேயவ் வெறுழி யியற்றலான்

* மூகாசுரனென்பது குறுகிற்று.

மனநடுங்கி வதிந்தன ரன்னது
பின்னையு மோர்பகற் பேதுற வுந்ததால். (௩௮)

நீல்மாமலை நித்த வுயிர்பெறீஇக்
கோலமாகிக் குறுகிய தென்னவுங்
காலனவ்வுருக் கொண்டு கடத்திடைச்
சாலவேதிரிந் தென்னவுந் தக்கது. (௩௯)

வெந்நு ரிஞ்சிடும் விண்ணின் முகட்டினைத்
துன்னு யிர்ப்பிற் றுளங்குங் கிரியெலா
மின்ன கேழ லெறுழ்வலி மாற்றிடப்
பொன்னை நேர்சடைப் புங்கவன் முன்னினன். (௪0)

அருட்பெ ருங்கட லாகி யமர்ந்தவ
னிருட்செ றிந்த மிடற்றி னுருவொடா
மருட்கொ டும்பிணி மாற்று மலரடி
பொருட்பெ றுந்தொடு தோலொடு பொற்புற. (௪௧)

அரைத ணிற்றுகி லொன்றசைத் தன்னதிற்
புரையி லாமற் புலியதள் வீக்கியோர்
சுரிகை தோன்றிட வார்த்துத் துகளிலா
மரும மீது கவடிய மாலையும். (௪௨)

குன்றி வேய்ந்திடு கோதையுந் தோளள
வன்றி மேவ வணிந்து களமிசைத்
துன்று சங்க மணியுந் துலங்கிட
நன்றி பெற்ற சிகழி நலம்பெற. (௪௩)

ஆத்தி கொன்றை யவையொரு வாமலே
சாத்தி யோர்சது ரத்துகி ருழ்ந்திட

வேத்த மன்ன னெழில்புனை தங்கையின்
மூத்த மூங்கின் முனியும் பிடித்தனன். (௪௪)

* மண்டி ஞாத மணிக்கணை மன்னிடும்
பண்டி லாவொரு தூணி பரித்துவெந்
நண்டர் நாயக னம்பு வலக்கரங்
கொண்டு கோலமிவ் வாறுகொண் டானரோ. (௪௫)

இமைய மீன்றரு ளன்னையு மெம்பிரான்
சமையும் வேட வடிவு தனக்குநே
ரமைவு பெற்றிட் டதற்கியை பாகவே
யிமையொ டுஞ்சூழ்ன் னெய்தின ளென்பவே. (௪௬)

இயன்ற கோல மிருவரு மெய்தியே
முயன்று முன்னவன் முன்செல நம்மனை
வியன்ற கானில் விரைந்துபின் போயினாள்
பயன்ற ரும்பர மேசன் பணிப்பவே. (௪௭)

இத்தி றத்தி னிறைவனக் கேழலை
யத்தி ரத்தி னகனிலஞ் சாய்த்திடச்
சித்த மீதுனிச் சென்றிடக் கண்டவஃ
தத்த ஞாெதி ரார்த்தங் கடைந்ததே. (௪௮)

மாலெ டுத்த வெறுழி வடிவன
கோல முற்றிடக் கோபமி லாதரன்
சால வெய்கிலன் றுனொரு லீலையா
னேல வெய்தன னின்கணை யொன்றினால். (௪௯)

---

* மண்டிஞாதமணிக்கணை - விட்டுணுவல்லாதகணை.

வைகொ ளுங்கணை வந்து படுதலும்
பெய்யு மாமுகி லென்னப் பெரிதுகூ
வையனை வெரீஇ யாரனார்ப் பின்றிதா
னெய்யெ னுமறிந் தோடி யொளித்ததே. (௫௰)

ஒப்பி லாதவ னேடியக் கேழலைத்
தப்பு றுமறற் றொடர்தரச் சாய்ந்தது
வெய்ப்பி லாத முனிவ ரிடத்தெய்த
வொப்ப வோடின ரொய்யென யாருமே. (௫௧)

மெய்வெ யர்த்து விசய னிருந்துழி
யையர் யாரு மடைய வவனெழீஇக்
கைவில் லேந்திக் கணைகொடு போயினான்
சைய மாமெனச் சார்ந்த வெறுழிமேல். (௫௨)

வெய்ய கோலம் விழிகள் சிவந்திட
யெய்யில் வன்மயி ரொங்கு நிமிர்ந்துற
வைய மீதிடி வந்தென வந்திட
மையில் வீரன் வடவையி னேர்ந்தனன். (௫௩)

வாங்கி வில்லினை வல்லை கணைதொடுத்
தோங்கி வீழ்தர வெய்தன னென்னலா
ரேங்கி யோட விருஞ்சமர் முற்றிடுந்
தீங்கி லாத விசயன் றிறலினான். (௫௪)

பன்றி வீழப் பரமனும் வந்துநான்
கொன்ற னன்னிதை யென்றலா கூறலு
முன்றன் வாளி யுருவுவ தோவிதை
நன்றி கூறினை நன்றியில் வேடனே. (௫௫)

நான்விடுத்திடு மம்பு நணுகவுங்
கான டுத்த கடுந்தொழில் வேட்டுவ
னூன முற்றிடு முன்னுமை யாடினை
கூனல் விற்கொடு போவுன் குறிச்சியில். (௫௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்று மாதவம் புரிந்திடும் விசயனு மிறைவனு மிகலெ
ய்தி, நன்று வீரமா திருந்திடு தனுவினை நாரியின் கொளைநீக்
கிச், சென்று மோதின ரிருவருஞ் செருச்செயத் தனஞ்சய
னதுகாலைக், குன்ற வில்லிதன் முடிமிசைத் தாக்கினன் கு
ழகனு மதுகொண்டான். (௫௭)

உலகனைத்தையு மாக்கிடு மொருவனு மோதிம வடி
வெய்தி, யலகி றந்துள நாளெலாந் தேடியு மறிவதற் கரிதா
கி, யிலகு றந்திரு ,முடியினி லேற்றனன் விற்றழும் பினை
யென்று, னலமு றம்மடி யவர்களுக் கெளியவ னழிற்றிலை
ம் முகன்றனே. (௫௮)

மீண்டு மற்றெருழில் விளைத்தனர் விமலனும் விசயனும்
விளையாட்டாற், பாண்டு மைந்தனும் பாலனைக் கிரீடியைப்
பரிவொடு நலமாகத், தீண்டி யாடினன் சிவனருட் செயலி
னை யாவரோ தெரிகிற்பா, ராண்டு தன்னுருக் காட்டின னம
ரரு மரகர வெனமாதோ. (௫௯)

முக்க ணெம்பிரான் முதல்வியுந் தானுமாய் மூரிவெள்
விடையேறிச், சக்க ரத்தரி முதலிய தேவர்க டனித்தனி புக
ழ்ந்தேத்த, மிக்க பேரருட் டன்மையி னிற்பதை விசயனு மீ

கக்கண்டா, னக்க ணத்தினி லவன்செயு லிதுவென வறைந் திடு வார்வல்லார். (௬0)

மெய்ந டுங்கினன் வெயர்த்தன னயர்த்தனன் மிக்கவ ன் புளநீங்கிச், செய்ய கண்வழி பாய்ந்தன வானந்தச் செழு ம்புன லாறொக்க, வைய மேல்விழுந் தெழுந்தனன் மயங்கி ன, னுயங்கினன் மனந்தேறி, ஐய னேயடி யேன்பிழை பொ றுப்ப துன் னருளினுக் கணியென்றான். (௬௧)

மேற்படி வேறு.

கார்முக வுழவன் சொன்ன கட்டுரை யனைத்துங் கேட்டுக்
கூர்முக வயில்வேற் பிள்ளை கூறிய தொத்த தஞ்சேல்
பார்முக வரச வேண்டும் பரிசுசொற் றருது மென்று
வார்மிகு கொன்றை வேய்ந்த வண்ணலா ரருளிச் செய்தார். (௬௨)

கலிவிருத்தம்.

பத்தியிற் பணிந்துபின் பாண்டு மைந்தனு
மெத்தவம் பவத்தினுன் மிகவு நொந்தன
னத்தநின் னருளினு லடிய னேனுய்ய
முத்தியை யருளென முதல்வன் கூறிடும். (௬௩)

வாங்குவிற் றடக்கையாய் வாரி சூழ்நிலத்
தோங்கிய பகைஞரை யொறுக்கு மாற்றினாற்
றீங்கறு கலைபெறச் சிந்தை செய்துநீ
யோங்கிய தவமிக வுஞற்றி வைகினாய். (௬௪)

முன்னிய பகழிநீ கோடி முன்னெனத்
தன்னிகர் சங்கரன் றுன ளித்தமை

பின்னல்செய் வேடனென் றிகழ்ந்து கூறினை
யன்னதால் வேட்டுவ வரச னாகியே. (௬௫)

தென்றிசைக் கயிலையைச் சென்று சேர்ந்துநீ
குன்றலி லன்புருக் கொண்டு நம்மய
னன்றிகொ ளிலிங்கபூ சனைநற் பத்தியா
லொன்றையு முணர்ந்திடா துவந்து செய்தரோ. (௬௬)

கோலமே முதலிய விலங்கு கொன்றுநீ
சாலவே தசையமு தருத்திச் சாருநா
ளேலவே முத்தியு மீதும் போவென
நீலமார் களத்திறை நீங்கி னானரோ. (௬௭)

அன்னதன் மையினருச் சுனனும் வேடனாய்
முன்னவன் பூசனை முயன்று செய்துபின்
கன்னிபங் குடையகா ளத்தி நாதனார்
தனனரு ளாலுயர் முத்தி சார்ந்தனன். (௬௮)

கட்செவிப் பணிகொள்கா ளத்தி நாதனா
ருட்செறி கருணையா லொப்பில் சங்கமக்
கட்செறி வடிவொடு கழறு மிக்கதை
புட்செறி வேலிறை புந்தி தாங்கினான். (௬௯)

என்னையோர் பொருளென வெண்ணி யெம்பிரா
னன்னபோ லருளினா லருளிச் செய்தனை
முன்னையான் முயறவ மூள வென்றிறை
பொன்னனேர் சேவடி புனைந்து சென்னிமேல். (௭0)

கைபிணைத் தெதிருற நின்ற காலையின்
மைமிடற் றிறையமர் மாசில் காளத்தி

யெய்தியப் பிறைமுடிக் கியன்ற கோயின்முன்
செய்வியென் றியம்பியத் தேவன் போயினான். (௭௧)

மறைந்திட மன்னவன் மண்ணிற் றாழ்ந்தெழுந்
தறைந்திட வரியவா மதிசயத்துடன்
பிறந்திடு பயன்மிகப் பேசி யின்பமே
சிறந்தன னவன்செய னிகழ்த்தற் பாலதோ. (௭௨)

தென்பெருங் கயிலையிற் றேவ னேயிவண்
மன்பெருஞ் சங்கம வடிவந் தாங்கினா
னென்பதை யுணர்ந்திடு மிறைவன் சாலவுங்
கொன்புனை தவமுள கொம்பைக் கும்பிடா. (௭௩)

ஆடையு மணிகளு மனைத்து நல்கினான்
றேடரு மன்னனீ செல்வ மோடுநீஇ
நீடிய பணியினை நீக்கென் றோதினா
னாடக மலையன வருந்த வத்தினான். (௭௪)

எல்லையில் களிப்புட னெழுந்து மற்றைநாள்
வல்லையிற் சேனைகள் வருக வென்றனன்
வில்லயி றோமரம் விரைவிற் றாங்கியே
பல்லிய முழங்கிடப் பரந்த சேனையே. (௭௫)

சிவிகையி லேறினன் செல்வ மன்னவன்
கவிகையும் பிச்சமுங் கதலி வர்க்கமுஞ்
சவிதிக ழாதவன் றனைமறைத்தன
புவியுயிர் மன்னவன் போது மெல்லையில். (௭௬)

மேற்படிவேறு.

மேரு மொத்து விளங்கிடு தேர்களுங்
காலா யொத்த கடுந்திறல் யானையும்
பாலா முற்றிடும் வாசிப் பரிகளும்
வீரர் யாவரும் வேலைசென் றுலென. (எஎ)

எழுந்து சென்றிட வேந்தனு மேகிவான்
குழைந்த வெண்பிறை சூடுங் குழகனு
ரொழுங்கின் ஞான மலருமை யோடுவாழ்
தழைந்த சோலைத் தனிநகர்ச் சார்ந்தனன். (எஅ)

பாச வேரை யறுக்கும் பராபரன்
வாச மாமிடம் வந்து வணங்கினு
னேச நெஞ்ச னிசரி றலத்திடை
யேசி லாவிடத் தெய்தி யிருந்தனன். (எகூ)

பொன்பெய் மாரி யனைய புரவலன்
மின்செய் செஞ்சடை வேதியன் மேவிட
மன்செ யுங்கரு விற்கரை மண்டப
முன்செய் மண்டப முற்று மியற்றினன். (அ௦)

அருளு மம்பிகைக் கோயிலு மைக்கரத்
தொருப ரஞ்சுட ருற்றிடு மாலயங்
குருப ரன்குகன் செவ்வேள் குமரன்றன்
னரிவை மாரொ டமரு நிலயமும். (அக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாலய னிரவி யிந்து வயிரவன் றுர்க்கை சண்டி
கோலமார் நந்தி யின்னோர் கோயில்கள் பிறவு மாற்றிப்

பாலினேங் கெயிலே கம்பம் பலியிடும் பீடஞ் செய்து
தூலமா யிலிங்க மென்னுந் துகளில்கோ புரமு மாக்கி. ()

வையக வையங் கொண்ட வானவன் றனக்குத் தேருஞ்
சையமா மகளுக் கேற்ற சயந்தனம் பிள்ளை யார்க்கு
மையறு மிரத மெங்கள் வள்ளிநா யகற்குச் சீர்சால்
செய்யபொற் சகடஞ் சண்டி சேர்சிறு தேருஞ் செய்தான்.()

உந்தியை யொதுக்கி யூரு மொப்பில தெனவி யற்றிச்
செந்திரு வமரங் காடித் தெருவொடு தேரு லாவு
மந்தமில் வளமு டைத்தாம் வீதியு மணியி னாக்கி
யிந்திர நகரு நாண வியற்றின னிணையி லாதான். (அச)

நித்திய நைமித் யத்தா னிகழ்தரு பூசை யாற்றி
யத்தனுக் கணிவி ழாவு மன்புட னியற்றி மிக்க
பத்திசெய் யாத வன்றான் பரிவொடு முலகை மாண்டு
முத்தியங் கயிலை யிற்போய் முதலுடன் வீற்றி ருந்தான். ()

மேற்படி வேறு.

இனைய தாகிய தென்கயி லாயம்வா ழிறைபெரும் புரா ணத்தை, மனம கிழ்ந்துநன் றோதினர் கேட்டவர் மாறில்வ ண் பொருள்சொன்னோர், மனையு மைந்தரு மாகிநி வளத் தொடு மாநிலந் தனில்வாழ்ந்து, தனைநி கர்த்திடு மிறைவன் வாழ் கயிலையிற் சார்ந்தினி திருப்பாரால். (அரு)

மேற்படி வேறு.

வையக முழுதும் வாழ்க மாதமும் மாரி பெய்க
செய்யகோ லரசன் செய்க திருவறஞ் செய்வோ ரோங்க

மைதயலோர் பாகனன்பர் தரணியின் மிகவு மோங்க
வையனு கமநூல் கூறு மருந்தவர் வாழ்க மிக்கே. (அ௲எ)

சிலந்திமுதலமுற்கதைச்சருக்கமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - க௦௲௧.

---

வேலையசுவாமிகள் திருவடிவாழ்க.

---

சிலந்தி.

பிரமதேவர் படைத்தற்றொழிலை நடத்திக்கொண்டிருக்கவும், விசுவகன்மனது கண்ணினுதித்த மாதவவூறனென்பவன, அப்பிரமதேவரைமதியாது, தானும் உலகங்களைப்படைக்க; அவர் அவன்வரும்படிசிந்தித்து, அக்கணமேவந்தினற அவனைநோக்கிக் கடுங்கோபங்கொண்டு, "நீ, சிறிய நூலினையுண்டுபண்ணும் சிலந்தியாகுக." என்றுசபித்தனர். பின்னர் அவன்வணங்கிப் பெரிதும் பிரார்த்தித்தனில், உளங்கனிந்து, "பிள்ளாய், நீ அஞ்சேல்; விமலர்வீற்றிருக்கும் கயாரணியத்திலுள்ள வில்வவனத்தையடைந்து, சிலந்தியாகித் தென்கைலாயப்பெருமானைப்பூசித்து, அருங்கதியடைவாயாக." என்று அநுக்கிரகிக்க; அம்மாதவவூறன் அவ்வண்ணமே சிலந்தியாகி, ஆலயமமைத்து வழிபட்டு, வினையையொழித்து வீட்டையடைந்தனன்.

பாம்பு.

பதிப்பெருளின் சத்துவகுணங்களும் பற்பலகோடிசந்திரர்களும் உருவெடுத்தாலொத்த திருக்கைலையிலே, அ

நேகவிம்பிதங்களோடு நிகரின்றிவிளங்கும் சிவபுரத்திலே, ஒருதினம் எம்பெருமான் சிங்காதனத்திலெழுந்தருளித் திருவோலங்கொண்டு, திருமேனியிலே புலித்தோலாடைமுதலிய புனைந்து, ஆதிசேடன்முதலிய பாம்புகளை ஆபரணமாக அணியும்போது, காளனெனனும்பாம்பைக் கண்டு, சிந்தித்து நோக்குங்கால், அது விரகங்கொண்டு மகளிர்பாலடைக் திருத்தலையறிந்து, அதையழைத்து, "காளனே, நீ கயாரணியத்தையடைந்து பாம்பாகுக." என்றுபணித்தனர். பின்னரும் கருணையோடுநோக்கி, நீ பாம்பாகியிருக்குங்கால், ஒரு யானையும் பூசிக்கவெய்தும். அப்பொழுது நீ பகைகொண்டு கொல்ல, இருவரும்மடிந்து முத்தியையடைவீர்." என்று கட்டளையிட; அங்ஙனமேஉதித்து, எம்பெருமானை இராத்தினங்களினால் வழிபட்டுக்கொண்டிருந்தது.

## யானை.

இருக்குநாளிலே, திருக்கைலையில் அத்தியென்னும் கணத்தலைவன சிவபெருமான சந்நிதிவாயிலையடைந்து, "யான் பிரானைவணங்க விடுவீராக." என்றுரைக்குங்கால், வாயிற்காவலர், "பெருமான் உமாதேவியும்தானுமாகத் தனித்து வீற்றிருக்கின்றார்; அங்கே செல்லுதலடாது: இங்கேநிற்க." என உரைக்கவும், கேளாது உட்சென்றனன். அம்பிகை சீறினந்து, "அத்தியே, நீ யானையாகுக." என்று கட்டளையிட்டு, பின்னரும் அக்கணத்தனது பிரார்த்தனைக்கிரங்கி, "நீ கயாரணியத்திலே, யானையுருக்கொண்டு தென்கைலையெம்பெருமானை வழிபடுங்காலத்திலே, நின்னோடு அப்பாம்பு வழிபடும் [illegible] இருவரும்மடிந்து, மு

த்தியையடைவீர்: செல்க." என்று ஆஞ்ஞாபிக்க; அக்கணநாதன் அவ்வாறே யானையாகித் திருமஞ்சன பத்திரபுஷ்பாதிகளாற் பெருமானைவழிபட்டு, பாம்போடு முத்தியையடைந்தனன்.

## கண்ணப்பநாயனார்.

பாண்டவர்களுக்குள்ளே அருச்சுனனென்பவன, துரியோதனன்முதலிய பகைவரைவெல்லும்பொருட்டு, பரமனைவேண்டிப் பாசுபதாஸ்திரம்பெறவிரும்பி, இந்திரகீலமலையையடைந்து, சுனைநீராடி, மடியுடுத்து, வெண்ணீறணிந்து, உருத்திராக்கமணிபூண்டு ஐந்தெழுத்தையுச்சரித்து, நியதிமுடித்து, வேறுதனியிடத்தையடைந்து, உரிய ஒரு ஆசனத்திலேதங்கி, பிராணவாயுவை இடைகலைபிங்கலையின்வழிச்செல்லாது சுழுமுனைவழியாகச்செலுத்தி, ஆறுதாரங்களையுங் கடந்த பிரமரந்திரத்திலேவிளங்கும் ஜோதிசொரூபத்தில் மனத்தையலயப்படுத்தி அருந்தவம் புரிந்துகொண்டிருந்தனன். இங்ஙனமிருக்குங்கால, இவனைக்கொல்லுதற்பொருட்டுத் துரியோதனனாலேவப்பட்ட மூகாசுரனென்பவன், கொடிய பன்றியுருக்கொண்டு, அக்காட்டிலே முனிவர்முதலியோர்க்குக் கடுந்துயர்விளைத்துக்கொண்டிருக்க; சிவபெருமான் அர்ச்சுனனுக்கு ஆபத்துவிளையாவண்ணம் அதனையடிக்கத் திருவுளத்திலெண்ணி, ஒரு வேடவுருக்கொண்டு, புலித்தோலிறுக்கி, உடைவாள்செருகி, கவடி குன்றி சங்குமணி ஆத்தி கொன்றைமுதலிய மாலைகள்புனைந்து, அம்புத்தூணியை முதுகிலேகட்டி, வில்[illegible]க்கொண்டு, தழு [illegible]

டையடைந்து, அப்பன்றியைநெருங்கி, ஒரு திருவிளையாட லாக ஒரு கூரியகணையை மெல்லவிடுத்தனர். அதுபடுதலும், அப்பன்றியஞ்சி, மேகம்போலப் பெரிதுமுழங்கி மறைந்து, முனிவரிருக்குமிடத்தையணுக; அவர்கள்பயந்து, மெய் வெயர்க்கவோடி, விஜயனையடைந்தனர். அவனெழுந்து வில்லம்புகைக்கொண்டுசென்று, தனையெதிர்த்த அப்பன்றி மீது கடுங்கணையொன்று தூண்டி, பூமியிலே வீழ்விக்க; அத்தருணத்திலே, அதைத்தொடர்ந்துவந்த சிவபிரான சமீபித்து, இப்பன்றியை "யானமடித்தனன்" என்றுகூறினர். அருச்சுனன் பிரானைநோக்கி, "வேடனே, நின்பாணம் இதையுருவும் ஆற்றலுடையதோ? யானவிடுத்தபாணம் உருவி மடியச்செய்ததுகண்டும், பயனற்றவார்த்தை பேசுகின்றாய்; இனி வில்லைக்கைக்கொண்டு விரையச் செல்வாயாக." எனறுரைக்க; இவ்வண்ணம் வாதிடுதலால கலகம்விளைந்தது.

இருவரும் கணைகளைப்பொழிந்து யுத்தஞ்செய்யுங்கால் அருச்சுனன்சினந்து, தனது நாணற்ற வில்லைக்கொண்டு அடித்துத்தாக்க, அவ்வடி சராசரங்களெல்லாம் படும்படி அடியவர்களுக்கெளியராகிய பெருமானும் திருமுடியிலேற்றருளி, உடனே விஷ்ணுவாதிதேவர்கள் அரகரவென்று கரங்குவித்துவணங்க, உமாதேவியாரோடு இடபவாகனரூடராய்க்காக்ஷிதந்தருளினர். அர்ச்சுனன்கண்களிக்கக்கண்டு, மெய் நடுங்கி வெயர்த்துச்சோரவும், உள்ளுருகிநெகிழ்ந்த அன்பின் பெருக்கம்போலக் கண்ணீர் பெருகவும், பலமுறை வீழ்ந்து, வணங்கியெழுந்து, மயங்கிநின்று, பின்னர்த்தெளிந்து, "ஐயனே, சிறியேன்செய்த பிழையைப்பொறுப்பது தேவரீ

திருவருளுக்கு உடைமையாகும்." என்று பிரார்த்தித்தனன். பெருமான் திருவருள்சுரந்து, "மைந்தனே, அஞ்சேல்; நீ கூறியமொழியனைத்தும் நமது குமாரனதுமொழிபோல அங்கீகரித்தனம்: உனக்கு வேண்டும்வரம் யாது? விண்ணப்பிக்கையேல், தந்தருளுவோம்." எனவினவ; பார்த்தன் பத்தியிற்பணிந்து, "அத்தனே, வெந்துயர்ப்பிறவியால மிகவு மெலிந்தனன்; இனி வீட்டினையருள்க." எனவேண்டிக்கொண்டனன். முதல்வனார் தனஞ்சயனே, நீ பகைவலாயழிக்கப் பாசுபதாஸ்திரத்தைவிரும்பித் தவம்புரிந்தாயாதலின் முன்னர் அதனைப் பெற்றுக்கொள்வாயாக." என்று கைக்கொடுத்து, பின்பு "நம்மை வேடனென்று இகழ்ந்துகூறினையாதலால் நீ வேட்டுவஅரசனாகி, தென்கைலையைச்சார்ந்து, அன்பே உருவமாகி, வேறுசிந்தனையின்றி, காகலிங்கத்தை நன்குபூசித்து, பன்றிமுதலிய விலங்குகளினதசையைப் பரிசுதுஉணப்பித்து, வாழ்நாளிலே, முத்தியைத்தந்திடுவோம்." எனவுரைத்து, மறைந்தருளினார். அவ்வாறே அர்ச்சுனனும் திண்ணனாராக அவதரித்து, திருக்காளத்தியப்பனைப் பூசித்து, சிவகதியடைந்தனன்.

ஆதலால், இத்தலம் யாவர்க்கும் இகபரமோக்ஷங்களையளித்து, எத்தலங்களிலும் சிறந்ததாகி, உலகிற் சிவபுரமெனவிளங்காநின்றது. என்று சங்கமேசருபதேசித்தருள; யாதவமஹாராஜர்கேட்டு, பேரானந்தமடைந்து, "எம்பெருமானே, தேவரீர் என்னையொருபொருளாகக்கருதி இவ்வற்புதசரித்திரங்களையெல்லாம் இசைத்தருளினீர்; யான் எத்தவம்புரிந்தேன்." என்று திருவடிகளைச் சிரமேற்கொ

டிக்கொண்டு, கைகட்டி எதிரேநிற்க; சங்கமேசர் அரசனை நோக்கி, "நீ காளத்தியையடைந்து, நமபெருமானுக்குத் தக்கபடி ஓராலயமியற்றுவாயாக." என ஆஞ்ஞாபித்து, மறைந்தருளினார். அதுகண்ட அரசர்பெருந்தகை அத்தியந்த ஆச்சரியத்துடன திசைநோக்கிப் பலமுறைநமஸ்கரித்து, இச்சனனமே நற்சனனமெனக் களிகூர்ந்து, பினபு "ஆ ஆ! எம்பெருமானே, சங்கமவுருவந்தாங்கி எழுந்தருள இம்மங்கை என்னதவம்புரிந்தாள்." எனறுவியந்து, அக்கலந்திருந்தும் பெண்ணை வணங்கி, ஆடையணிமுதலிய அனைத்தையுதவ்கி, "அன்னையே, நீ இன்றுமுதல் முந்தியருற்றேவலைவிந்து அரியசெல்வங்களை அனுபவித்துக்கொண்டு வாழ்வாயாக." என்று வருத்தனர். மறுதினத்திலே, நால்வகைச்சேனைகளும புடைசூழநதுவர சிவிகையிலேறி, சுயாரணியத்தையடைந்து, காளலிங்கப்பெருமானைத் தரிசித்து, அப்பெருமானுக்கும், ஞானப்பூங்கோதையம்மைமுதலிய மூர்த்திகளுக்கும, கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம் மஹாமண்டபம் மதில் கோபுரம் துஜஸ்தம்பம் பலிபீடமுதலியவைகளைத் தக்கபடியமைத்து, பஞ்சமூர்த்திகளுக்கும் இரதம் வாகனம் ஆபரணதிகளையும்வகுத்து, பொன்முகரிநதியையொதுக்கி, நகரமும் நிகரில்லாமலுண்டாக்கி, ஆலயத்திற்கு நித்தியநைமித்திகங்களையும் திருவிழாவையும் நியமித்துநடாத்தி, பலநாளரசாண்டிருந்து, திருக்காளத்தீசுரருடைய திருவடிநிழலையடைந்தனர்.

திருச்சிற்றம்பலம்.

சீகாளத்திபுராணமுற்றுப்பெற்றது

## யாதவமன்னர்வணக்கம்.

*கதிரிவிபொற் கல்லாலின் கீழ்வதிந்த கண்ணுதற்கு*
*மதிதவழ்பொற் கோபுரமு மணிமதிலு மண்டபமு*
*முதுசுடர்மா மாளிகையு முதலாய மற்றெவையும்*
*விதிமுறையே யமைத்தளித்த யாதவவேந் தினைப்பணிவாம்*

இத்துதி திருக்காளத்திபுராணத்துள்ளது. அப்புராணம் சொற்சுவைபொருட்சுவைகளும் இலக்கணவமைதிகளும் நிரம்பப் பல அற்புதசரித்திரங்களோடு (கஎகூஎ) செய்யுட்களால் பாடப்பட்டிருத்தலின் (க00) புத்தகத்திற்குக்குறையாமல் கையொப்பமாகுமேல் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

## பரிசோதனபத்திரம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ஙஎ | சஎ | க | தான்று | வதான்று |
| ருக | கசா | உ | பணிஇ | பணீஇ |
| ருஅ | கஅ | ச | திலுட் | திவட் |
| ருகூ | உஅ | க | வடு | வண்டு |
| சாஉ | எகூ | ச | தொடை | தோடை |
| எக | கூ | க | வெழி | வெழில் |
| எஅ | கூஅ | உ | தகுவர்க் | தகுவற் |
| அஉ | சா0 | கூ | சேனவி [தொ | கெளவி |
| அரு | எச | உ | யெங்குற்றாய் | குற்றேவற்றொ |
| கூ0 | க0கூ | க | பட்டகற் | பட்டன |
| கூ0அ | உகூ | உ | தெளிர் | தொளிர் |
| கஉச | கூஉ | ச | வேவி | வேலி |

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௧௨௯ | ௭௫ | ௩ | னிட்டம் | னீட்டம் |
| ஷை | ஷை | [illegible] | விளா | விளாத் |
| ௧௩௪ | ௧௦௩ | ௫ | கெட்டென் | கெட்டேன் |
| ௧௪௩ | ௧௫௫ | ௧ | முன்னேம | முன்னமே |
| ௧௫௮ | ௦ | ௧௧ | தளிஞர் | தருளிஞர் |
| ௧௬௦ | ௦ | ௫ | கரரணம் | காரணம் |
| ௧௬௩ | ௨ | ௧௩ | எலரா | எவலரா |
| ஷை | ஷை | ௧௧ | எவரா | எவலரா |
| ௧௬௪ | ௬ | ௧ | கோல் | கொல் |
| ௧௬௬ | ௧௫ | ௨ | வாய்க் | வாய் |
| ௧௭௩ | ௪௧ | ௪ | யைதப் | யதைப் |
| * ௧௮௦ | ௮௬ | ௧ | வாய்ச்செறி | வாய்திற |
| ௧௯௬ | ௦ | ௧௪ | வழிவி | விழுவி |
| ஷை | ௦ | ௨௧ | ர்ழுதருளி | ழுந்தருளி |
| ௧௯௮ | ௦ | ௨௪ | குழகளே | குழகனே |
| ௨௦௧ | ௦ | ௨௨ | கவர்தற் . | கவர்தற்கு |
| ௨௩௦ | ௫௪ | ௪ | தன்ணே | தன்னே |
| ௨௧௩ | ௭௧ | ௩ | மிகுவர் | மிருவர் |
| ஷை | ௭௨ | ௩ | விலவ்கி | விலங்கி |
| ௨௨௧ | ௧[illegible] | ௧ | நீர்ழுழு | நீர்முழு |
| ௨௩௨ | ௦ | ௧௭ | களைக் | களைச் |
| * ௨௪௬ | ௩௦ | ௩ | யேகுவிர் | யெய்துவிர் |
| ௨௫௩ | ௬௬ | ௧ | சோந்து | சேர்ந்து |
| ௨௫௫ | ௭௭ | ௧ | மொத்து . | வொத்து |

* இக்குறியிட்டவை அச்சிட்டபின்னர்க்கிடைத்த பிரதிபேதங்கள்.